# சுவடிப் பதிப்பாசிரியர்களின் வரலாறும் பதிப்புப் பணியும்





முனைவர் த. கலாஸ்ரீதர்

T. 21676

# சுவடிப் பதிப்பாசிரியர்களின் வரலாறும் பதிப்புப் பணியும்

பதிப்பாசிரியர்
முனைவர் த. கலாஸ்ரீதர்
உதவிப்பேராசிரியர்

ஓலைச்சுவடித்துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர் – 613 010

# நூல் விவரக் குறிப்பு


| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | **சுவடிப் பதிப்பாசிரியர்களின் வரலாறும் பதிப்புப் பணியும்** |
| ஆசிரியர் | : | முனைவர் **த. கலாஸ்ரீதர்** |
| கைபேசி | : | 94422 07782 |
| பதிப்பு ஆண்டு | : | முதற் பதிப்பு, மார்ச் 2017 |
| தாளின் தன்மை | : | 18.6 கி.கி. |
| நூலின் அளவு | : | 1×8 டெம்மி |
| எழுத்தின் அளவு | : | 13 புள்ளி |
| மொத்தப் பக்கங்கள் | : | xvi + 174 |
| நூலின் விலை | : | ₹ 250 |
| ISBN | : | 978-93-0132-03-7 |
| வெளியீடு | : | **TiSSL Publication**<br>Balaji Nagar, Katur, Trichy - 19 |
| அச்சிட்டோர் | : | **திருவள்ளுவர் ஆப்செட்,**<br>141, ஜே.டி. காம்ப்ளக்ஸ்,<br>மெடிக்கல் காலேஜ் ரோடு,<br>ஈஸ்வரி நகர், தஞ்சாவூர்-7.<br>போன் : 98424 91204 |

முனைவர் க. பாஸ்கரன்
துணைவேந்தர்
மின் அஞ்சல்: rg.bhaskaran@gmail.com
இணையதளம் : www.tamiluniversity.ac.in

தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்-613010 – தமிழ்நாடு, இந்தியா
அலுவலகம் : 04362-227040
இல்லம் : 04362-226741
தொலைநகல் : 04362 226159

## அணிந்துரை

துறைதோறும் தமிழைப் பரப்ப வேண்டுமென்ற தலையாயக் கொள்கையில் தளராது நாளும் தமிழ்ப் பல்கலைக்கழகம் செயற்பட்டு வருகிறது. துறைகள் பலவும் பல்வேறு பொருண்மைகளில் கருத்தரங்கம் நடத்தி அவற்றைச் சமுதாயத்திற்கு எடுத்துரைப்பதில் முனைப்புக் காட்டி வருவது குறிப்பிடத்தக்கது. அந்த வகையில் ஓலைச்சுவடித்துறையின் தொடர்பணிகளில் ஒன்றாக சுவடிப் பதிப்பாசிரியர்களின் வரலாறும் பதிப்புப்பணியும் என்னும் பொருண்மையில் 2017 – மார்ச் திங்கள் ஒன்பதாம் நாளில் கருத்தரங்கம் நடைபெறவுள்ளமை மகிழ்ச்சிக்குரியதாகும். இக்கருத்தரங்கில் வழங்கப்படவுள்ள இருபத்தைந்துக்கும் மேற்பட்ட கட்டுரைகள் தமிழ் வளர்ச்சிக்குக் கிடைத்தப் புதுவரவாக அமையும் என நம்புகிறேன்.

சுவடிப் பதிப்பாசியர்கள் கடைபிடித்த நெறிமுறைகள் தொடர்பான கருத்துக்களை மையப்படுத்தி பல்வேறு பரிமாணங்களில் ஆய்வு மேற்கொண்டு பேராசிரியர்களும் ஆய்வாளர்களும் அளித்துள்ள கட்டுரைகள் அனைத்தும் தொகுப்பட்டு கருத்தரங்க நாளிலேயே செம்மையான நூலாக வெளியிடப்பெறுவது இத்துறையினரின் செயல்பாடுகளை வெகுவாக எடுத்துக்காட்டுவதாய் அமைந்திருக்கின்றது.

பல்வேறு துறை பதிப்பாசிரியர்களின் நெறிமுறைகள் தொடர்பான பொருண்மையில் அமைந்த இக்கட்டுரைகளால் தமிழாய்வு மென்மேலும் ஒளிரும் என்பதற்கு ஏற்றதோர் எடுத்துக்காட்டாக இந்நூல் திகழ்கிறது என்பது திண்ணம்.

ஆய்வுக்கட்டுரைகளை வெளியிட்ட பேராசிரியர்களுக்கும் ஆய்வாளர்களுக்கும் இவ்வரிய முயற்சியில் ஈடுபட்டுவரும் ஓலைச்சுவடித்துறையின் உதவிப்பேராசிரியர் முனைவர் த. கலாஸ்ரீதர் மற்றும் துறையினர் அனைவருக்கும் என் மனமார்ந்த பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ் கூறும் நல்லுலகம் இந்நூலினை ஏற்றுப் போற்றி வரவேற்று மகிழும்.

வாழ்த்துக்கள்

க. பாஸ்கரன் 3/3/17

# பதிப்புரை

நம்மிடையே வாழ்ந்து மறைந்த தமிழ்ப் புலவர் பெருமக்களைப் பற்றி தெரிந்தவர்களும், ஆராய்ச்சி அறிஞர்களைப் பற்றி அறிந்தவர்களும் அப்பெருமக்களுடைய வாழ்க்கை வரலாறுகளை நூல்களாக வெளியிட்டுத் தமிழகத்திற்குத் தொண்டு புரியலாம் என்பது பைந்தமிழ்ப் பாவலர் அ.கி.பரந்தாமனர் கருத்தாகும். வாழ்க்கை வரலாறுகளை கற்றுப் புலமை பெற வேண்டும். அவ்வகையில் புலமையும் புகழும் பெற்றவர் மனோன்மணீயம் பல்கலைக்கழக முன்னைத் துணைவேந்தர் பேரா.முனைவர் க.ப. அறவாணன் அவர்கள் என்பதை “அவர்” எனும் அவர்தம் வாழ்க்கை வரலாற்று நூலைக் கற்பார் உணரலாம்.

## வாழ்க்கை வரலாற்று நூல்கள்

ஏறத்தாழ 2500க்கு மேற்பட்ட வாழ்க்கை வரலாற்று நூல்கள் இருப்பதாக ஆய்வுகள் கூறுகின்றன. சோழமண்டல சதகம், பாண்டி மண்டல சதகம், புலவர் புராணம், விநோதரச மஞ்சரி போன்றவை செய்யுள் நடையில் அமைந்த வாழ்க்கை வரலாற்று நூல்களாகும். கற்பனை கலவாத வாழ்க்கை வரலாற்று நூலினைத் தந்தவர் மகாத்மா காந்தியடிகள். தமிழுணர்வூட்டும் வாழ்க்கை வரலாற்றினை எழுத உதவியவர் தமிழ்த்தாத்தா டாக்டர் உ.வே. சாமிநாதையர் அவர்கள். வாழ்க்கை வரலாற்றுக் கல்வி நாட்டிற்கு மிகவும் தேவையானதாகும்.

## பண்டைய ஆராய்ச்சியாளர்கள்

படைப்பு, பதிப்பு, உரைவரைவு எனும் முப்பெரும் நிலைகளில் தம்மை ஈடுபடுத்திக்கொண்ட சான்றோர் பெருமக்கள் பண்டைய ஆராய்ச்சியாளர்களாகக் கருதத்தக்கவராவர். தமிழ் இலக்கிய உலகில் இரண்டு வகையான ஆராய்ச்சியாளர்களைக் காணலாம். அவர்களுள் பண்டைய சான்றோர் பெருமக்கள் முதல் வகையைச் சார்ந்தவராவர்.

படைப்பிலக்கியங்களையும், நூற்பதிப்புகளையும் உரைகளையும் ஆய்வு செய்வோர். மற்றொரு வகையினராவர். ஆராய்ச்சிப் பணிகளில் தம்மை ஈடுபடுத்திக் கொண்ட அனைவரும் ஆராய்ச்சி அறிஞர்கள் என்பதில் கருத்து வேறுபாடில்லை.

## படைப்பிலக்கிய அறிஞர்கள்

படைப்பிலக்கியங்களை உருவாக்கித் தருவோரும் ஆராய்ச்சி அறிஞர்களாகக் கருதத்தக்கவராவர். இவர்கள் சமுதாயத்தையோ. வாழ்வியல் அனுபவங்களையோ ஆராய்ந்து தத்தம் துறைகளில் புத்தம் புதுப்படைப்புகளைக் கொண்டு வருகின்றனர். இப்பெருமக்கள் பண்டிதர். புலவர், கவிஞர், எழுத்தாளர் எனப் பல்வேறு பெயர்களில் சுட்டப்படுகின்றனர். இவ் அறிஞர்கள் நூலுருவாக்க நிலையிலும். பொதுநிலையிலுமாக நூலாசிரியர்கள் என அழைக்கப்படுகின்றனர். நூலாசிரியர்கள் எனும் நிலையில் ஆயிரக்கணக்கான அறிஞர் பெருமக்களின் வாழ்க்கை வரலாறுகள் ஆவணப்படுத்த வேண்டிய நிலையில் உள்ளன.

## இலக்கண இலக்கிய உரையாசிரியர்கள்

பண்டைய உரையாசிரியர்கள் மிகச்சிறந்த ஆராய்ச்சி அறிஞர்களாவர். அவர்தம் ஆராய்ச்சி நெறிமுறைகள் அனைத்தும் ஆய்வு மாணவர்கள் பின்பற்றத்தக்கதாகும். தொல்காப்பிய உரையாசிரியர் இளம்பூரணர் முதல் இன்றைய இலக்கிய உரையாசிரியர்கள் வரை ஒவ்வொருவரும் ஆராய்ச்சி அறிஞர்களாகச் சுட்டதக்கவராவர். அப்பெருமக்களின் வாழ்வியலும் ஆய்வியலும் வெளிப்படுத்தத்தக்கனவாகும். ஏறத்தாழ 200க்கு மேற்பட்ட இலக்கிய இலக்கண உரையாசிரியர்களின் வாழ்க்கை வரலாறுகள் ஆவணப்படுத்த வேண்டிய நிலையிலுள்ளன.

### பழந்தமிழ் நூற் பதிப்பாசிரியர்கள்

உரையாசிரியர்களை அடுத்து நூற்பதிப்புப் பணியில் ஈடுபட்ட ஒவ்வொரு பதிப்பாசிரியரும் ஆய்வியல் அறிஞர்களாவர். பாடவேறுபாடுகளை ஆராய்ச்சி செய்வதில் இவர்கள் மிகச்சிறந்த வல்லுநர்களாக விளங்கியுள்ளனர். பதிப்புப்பணியில் ஈடுபட்ட பெருமக்களின் வாழ்வும் அவர்தம் பதிப்பு நெறிமுறைகளும் பயன்கொள்ளத்தக்கதாகும். இருநூறு ஆண்டு கால இடைவெளியில் நூற்பதிப்புப் பணியில் ஈடுபட்டு வந்தோரும் வருவோருமாக ஏறத்தாழ 300க்கு மேற்பட்டோர் பதிப்பாசிரியர்களாகத் திகழ்கின்றனர். இப்பெருமக்களின் வாழ்க்கை வரலாறுகள் ஆவணப்படுத்த வேண்டியவையாகும்.

### தமிழ் இலக்கியப் பரப்பு

படைப்பு, பதிப்பு, ஆய்வு என்பன தமிழ் இலக்கியப் பரப்பாகும். இப்பரப்பில் பணியாற்றிய நூலாசிரியர்கள், பதிப்பாசிரியர், உரையாசிரியர் என அழைக்கப்பட்டனர். இப்பெருமக்களெல்லாம் அடிப்படையில் தமிழாசிரியர்கள் என விரித்துக் கூறலாம். ஆசிரியப் பணியோடு நூற்பதிப்புப் பணிகளிலும், உரை எழுதும் பணிகளிலும், படைப்பிலக்கியப் பணிகளிலும் ஈடுபட்டு வந்துள்ளனர். இவ்வகையில் ஏறத்தாழ 1500 தமிழறிஞர்களின் வாழ்க்கை வரலாறுகள் ஆவணப்படுத்தத்தக்க நிலையில் உள்ளன.

### தமிழில் ஆராய்ச்சி அறிஞர்கள்

ஆராய்ச்சியெனத் தனியொரு துறை தோன்றும் முன்னே ஆராய்ச்சிப் பணிகளில் ஆயிரக்கணக்கான தமிழறிஞர்கள் ஈடுபட்டு வந்துள்ளனர் என்பதும் அவர்கள் பல்வேறு பெயர்களில் அழைக்கப்பட்டு வருகின்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். அவ்வகையில் தமிழியல் ஆராய்ச்சி அறிஞர்களை தமிழியல் வரலாற்றறிஞர்கள், தமிழியல் இலக்கியத் திறனாய்வாளர்கள், தமிழியல் ஆராய்ச்சி மூதறிஞர்கள்,

தற்காலத் தமிழியல் ஆராய்ச்சி மூதறிஞர்கள் என்றெல்லாம் வகைப்படுத்திக் காட்டலாம்.

### வரலாற்றறிஞர்கள்

இலக்கிய இலக்கண நூல்களை ஆய்வு செய்து வரலாற்றுக்கு வளம் சேர்த்து வருவோர் தமிழியல் வரலாற்றறிஞர்களாகக் கருதப்படுகின்றனர். வரலாற்று வரைவிற்கு வளம் சேர்த்த பெருமக்களின் ஆராய்ச்சி நெறிமுறைகள் ஆய்வுப் பணிகளில் ஈடுபட்டு வருவோர்க்கு பயன் விளைவிக்கத்தக்கதாகும். தமிழியல் வரலாற்றறிஞர்கள் என்றும் தமிழக வரலாற்றறிஞர்கள் என்றும் கருதத் தக்க அறிஞர் பெருமக்களின் வாழ்க்கை வரலாறுகள் ஆவணப்படுத்தப்பட வேண்டியதாகும். பேராசிரியப் பெருமக்கள் கெ.என். சிவராஜபிள்ளை, மனோன்மணியம் பெ.சுந்தரம்பிள்ளை, மயிலை சீனி.வேங்கடசாமி, ஔவை துரைசாமி, வி.கனகசபைப் பிள்ளை, சதாசிவப் பண்டாரத்தார், பேரா. வையாபுரிப் பிள்ளை, கோவைக்கிழார், மு. இராகவையங்கார், தி.நா. சுப்பிரமணியம் என ஏறத்தாழ, நூற்றுக்கு மேற்பட்டோர் வரலாற்றறிஞர்களாகத் திகழ்கின்றனர்.

### இலக்கியத் திறனாய்வாளர்கள்

ஆராய்ச்சித் துறை என தனியொரு துறை தொடங்குவதற்கு முன்னால் ஆய்வுப் பணிகளில் ஈடுபட்டு வந்தோர் இலக்கியத் திறனாய்வாளர்கள் என குறிக்கப்பட்டனர். இவ்வகையில் பேராசிரியப் பெருமக்கள் அ.ச. ஞானசம்பந்தம், க.கைலாசபதி, தா.ஏ. ஞானமூர்த்தி, வீ.பா.கா.சுந்தரம், வ.சுப. மாணிக்கம், கா.சு.பிள்ளை, தனிநாயகம் அடிகளார், மு.வரதராசனார், தெ.பொ.மீனாட்சி சுந்தரனார், ஏ.வி.சுப்பிரமணிய ஐயர், தேவநேயப் பாவாணர், மறைமலையடிகள், நா.வானமாமலை,ந.சஞ்சீவி, க.வெள்ளைவாரணனார், மு.அருணாசலம், ஔவை. துரைசாமிப் பிள்ளை, சி.வை.தாமோதரம்பிள்ளை, பேரா.வையாபுரிப் பிள்ளை, விபுலானந்த அடிகள், ஆபிரகாம் பண்டிதர்,

மா.சு.சம்பந்தன் போன்றோர் தமிழியல் இலக்கியத் திறனாய்வாளர்களுக்குச் சான்றாவர். இருநூறுக்கும் மேற்பட்ட பண்டைய தமிழறிஞர்கள் இலக்கியத் திறனாய்வாளர்களாக விளங்குகின்றனர்.

## ஆராய்ச்சி மூதறிஞர்கள்

கல்லூரி மற்றும் பல்கலைக்கழகங்களில் ஆய்வியல் நிறைஞர், முனைவர் பட்ட ஆய்வுகள் தொடங்கப்பட்ட காலத்தில், ஆய்வு நெறியாளர்களாக விளங்கியவர்கள் இன்று ஆராய்ச்சி மூதறிஞர்களாகத் திகழ்கின்றனர். இப்பெருமக்கள் ஆய்வுலகில் தொட்டு துலங்கிய இடங்கள் பல உண்டு. இப்பெருமக்களின் நெறிகாட்டலில் ஆய்வியல் பட்டங்கள் பெற்றோரும் பலருண்டு. இவ்வகையில் பேராசிரியப் பெருமக்கள் வ.ஐ.சுப்பிரமணியன், ச.வே.சுப்பிரமணியன், சி.பாலசுப்பிரமணியன், கி.கருணாகரன், ச.அகத்தியலிங்கம், ஔவை து.நடராஜன், கதிர் மகாதேவன், இ. சுந்தரமூர்த்தி, மா. இராமலிங்கம், இளையபெருமாள், சூ.இன்னாசி, பொன், கோதண்டராமன், தா.ஏ.ஞானமூர்த்தி, சௌரிராஜன், கி.நாச்சிமுத்து, பாலுசாமி, ஏ.என்.பெருமாள், முருகரத்தினம், தா.வே.வீராசாமி, முத்துச்சண்முகன், தமிழண்ணல் அடிகளாசிரியர் எனப் பட்டியலிட்டால் ஏறத்தாழ முந்நூறு பேரை எட்டிவிடும். இப்பெருமைக்குரிய பேரறிஞர்களின் வாழ்க்கை வரலாறுகள் தமிழியல் ஆய்வு வளர்ச்சியிலும் வரலாற்றிலும் சுட்டத்தக்கனவாகும்.

## தற்கால ஆராய்ச்சி அறிஞர்கள்

ஆய்வியல் நிறைஞர், முனைவர் பட்டம் மற்றும் டி.லிட். பட்ட ஆய்வுகளில் ஈடுபடுவோர் ஆராய்ச்சி அறிஞர்கள் என அழைக்கப்படுகின்றனர். ஆய்வியல் பட்டங்கள் பெற்றோர். அத்தோடு ஆய்வுப் பணிகளை முடித்துவிடாமல் வேறு வழிகளில் தங்கள் ஆய்வுப் பணிகளைத் தொடர்ந்து வருகின்றனர். இவர்தம் ஆர்வத்தை வெளிப்படுத்துகின்ற நிலையிலும் பல்வேறு அமைப்புகளின் சார்பில் ஆய்வுக் கட்டுரைகள் எழுதி வருகின்றனர்.

அனைத்திந்திய தமிழாசிரியர் மன்றம், ஞாலத் தமிழ் பண்பாட்டு மன்றம், கனியன் பூங்குன்றனார் ஆய்வு மையம், ஔவை கோட்டம், தொல்காப்பியர் மன்றம், தமிழியல் ஆய்வுகள் பதிவு மையம் போன்ற பல்வேறு அமைப்புகள், சமய நிறுவனங்களும், கல்வி நிறுவனங்களும் நடத்தும் கருத்தரங்குகளில் ஆர்வமோடு பங்கேற்று வருகின்றார்கள். இப்பெருமக்களின் ஆய்வுப் பணிகள் பயன்கொள்ளத்தக்கது மட்டுமல்ல பாராட்டத்தக்கதாகும். இவ்வகையில் ஆண்டுதோறும் ஆய்வுக் கட்டுரைகள் வழங்கிவரும் அறிஞர் பெருமக்களின் எண்ணிக்கையை வரையறுத்துக் காட்டுவது எளிதல்ல. ஆயிரத்துக்கு மேற்பட்டோர் ஆய்வுக் கட்டுரைகள் வழங்கி வருகின்றார்கள் என்பதற்கு ஆண்டுதோறும் வெளியாகும் ஆய்வுக் கோவைகளும் கருத்தரங்க நிகழ்ச்சிகளும் சான்றாகும்.

## வாழ்க்கை வரலாற்றுக் கட்டுரைகள்

விளக்க கட்டுரைகள் எழுதுவதற்கும், ஆய்வுக் கட்டுரைகள் எழுதுவதற்கும் வேறுபாடு உண்டு. அதுபோல ஆய்வுக் கட்டுரைகள் எழுதுவதற்கும் வாழ்க்கை வரலாற்றுக் கட்டுரைகள் எழுதுவதற்கும் வேறுபாடு உண்டு. ஆய்வு கட்டுரைகளை எழுதுவதற்கு உரிய முயற்சியும் பயிற்சியும் தேவையாகும்.

## வரலாற்றுக் கட்டுரையின் உள்ளடக்கம்

ஆராய்ச்சி அறிஞரின் பெயர் அவர் பிறந்த ஊரின் அமைவிடம், பெற்றோரும் அவர்தம் பெருமையும், பயின்ற பள்ளி, கல்லூரி, பல்கலைக்கழகம், ஆய்வியல் பட்டங்கள், துறை, ஆய்வுத்தலைப்பு, பணி நிலைகள், ஆய்வு நூல்கள், கட்டுரைகள், சிறப்பு ஈடுபாடு போன்றவற்றைச் சுருக்கமாகவும், சுவையாகவும் தருதல் வேண்டும் என்பது பொதுவான செய்தியாகும்.

## வரலாற்றுக் கட்டுரைகள் வரையும் நெறிமுறைகள்

வாழ்க்கை வரலாற்றுக் கட்டுரைகள் வரையும் நெறிமுறைகளை 7 நிலைகளில் வகுத்துக் கூறலாம்.

1. அறிமுகம்

2. முக்கியத் தகவல்கள்

3. வாழ்வியல் நிகழ்ச்சிகள்

4. வாழ்வியல் திருப்புமுனைகள்

5. பண்பு நலன்களும் பழக்க வழக்கங்களும்

6. வாழ்வியல் அனுபவங்கள்

7. புலமை நலம் சுட்டல்

### 1. அறிமுகம்

தமிழியல் ஆராய்ச்சி அறிஞரின் சிறப்புகளுள் ஏதேனும் ஒன்றை சுட்டிக்காட்டி அறிமுகம் செய்து வைத்தல் வேண்டும். அறிஞரின் பெருமைகளும், சாதனைகளும் புலப்படுமாறு அவ் அறிமுகம் அமைதல் வேண்டும். சான்றாக,

1. அறிஞரின் உருவ அமைப்பினை சொல்லால் வரைந்து காட்டி அறிமுகம் செய்து வைக்கலாம்.

2. அறிஞரின் வாழ்க்கையில் நடந்த முக்கியமான, மறக்க முடியாத நிகழ்ச்சிகளுள் ஏதேனும் ஒன்றை முதற்கண் கூறி அறிமுகம் செய்யலாம்.

3. ஆராய்ச்சி அறிஞரின் பணிநிலைகள், பண்பு நலன்கள், சாதனைகள், சிறப்புத் தன்மைகள் போன்றவை தோன்றும் வண்ணம் புகழுரைகள் தந்து அறிமுகம் செய்து வைக்கலாம்.

4.ஆரவாரச் சொற்கள் இல்லாமல் அறிஞரின் இயல்புகளை கற்பனை கலவாமல் இயல்பாகச் சுட்டிக்காட்டி அறிமுகம் செய்து வைக்கலாம்.

### 2.முக்கியத் தகவல்கள்

ஆராய்ச்சி அறிஞரைப் பற்றிய அடிப்படை செய்திகளை முதற்கண் தருதல் வேண்டும்.

1. அறிஞரின் பெயர் – இயற்பெயர் – புனைபெயர் – சிறப்புப்பெயர்

2. பிறந்த ஆண்டு – (தமிழ், ஆங்கிலம்) மாதம், நாள்

3. பிறந்த ஊர் அண்மை நகரம் - வட்டம் - மாவட்டம் ஊரின் அமைவிடம், அவர்தம் பெருமை விளங்கக் கூறலாம்.
4. பெற்றோர் - தந்தையார் - தாயார் பெயர்கள்

**3. வாழ்வியல் நிகழ்ச்சிகள்**

ஆராய்ச்சி அறிஞரின் துறைசார்ந்த வெற்றிகளையும் வாழ்வியல் வெற்றிகளையும் தரலாம். அவர்தம் கொள்கை, விடாமுயற்சி அதன் பயனாய் அவர் பெற்ற வெற்றி ஆகியவை கட்டுரையின் உயிர்நிலையாக அமைவதே சிறப்பாகும்.

ஆராய்ச்சி அறிஞரின் இளமைக்கால மனநிலை, பருவ வயதில் மற்றும் முதுமைக்கால மனநிலை அவர்தம் உள்ளத்து உணர்வுகள் போன்றவை வெளிப்படுமாறு எழுதுவதே பயனுடையதாகும். வாழ்க்கையின் நோக்கம், வெற்றி, தோல்வி இவற்றின் இடையே நிகழ்ந்த வாழ்க்கைப் போராட்டம் போன்றவற்றை வாழ்ந்து முடித்தவர்களின் வாழ்க்கை வரலாற்றில் வரைந்து காட்டலாம்.

**I. வாழ்வியல் திருப்பு முனைகள்**

தனிமனித வாழ்வில், வாழ்வியல் திருப்பு முனைகள் அவற்றை எதிர்கொண்ட முறைகள், அதனால் ஏற்பட்ட விளைவுகள் ஆகியவை கட்டுரையில் சுட்டிக்காட்டத் தக்கனவாகும். அதுமட்டுமல்லாமல் அறிஞரின் மனநிலை, பொருளாதார நிலை குடும்ப நிலை சமுதாயச் சூழல் ஆகியவையும் மிகச் சுருக்கமாகச் சுட்டிக்காட்டத் தக்கனவாகும்.

**5. பண்பு நலன்களும் பழக்க வழக்கங்களும்**

ஆராய்ச்சி அறிஞரின் இல்பான பண்பு நலன்களும் மற்றவர்களோடு பழகும் இயல்புகளும் குறிப்பிடத்தக்கனவாகும். அதைவிட முக்கியம் அவர்தம் பழக்க வழக்கங்களாகும். வாழ்க்கை வரலாற்று தலைவரின் அன்றாட செயல்முறைகளே அவர்தம்

பழக்கவழக்கங்களாகும். அவையாவும் அவர்தம் காலச் செலவுகளைக் கற்பார்க்கு காட்டும் கணக்குப் புத்தகமாக விளங்கும். தனிமனித வாழ்க்கையில் பழக்க வழக்கங்களே வாழ்க்கையின் வெற்றிக்கு அடிப்படையாகவும் அடையாளமாகவும் அமையும். வாழ்க்கையில் முன்னேற்றமடைய விரும்புவோர்க்கு அறிஞர் பெருமக்களின் பழக்க வழக்கங்களே கலங்கரை விளக்கம் போல் வழிகாட்டும்.

### 6. வாழ்வியல் அனுபவங்கள்

பல்வேறு அனுபவங்களின் தொகுப்பே வாழ்க்கை என்பது வாழக்கையின் வரையறைகளுள் ஒன்றாகும். மனித நேயமுடையோர் தங்கள் அனுபவங்களை அறிவுரைகளாக மனம் திறந்து மற்றவர்க்கு வாரி வாரி வழங்குவர். வாழ்க்கையின் இன்ப துன்பம், வெற்றி தோல்வி ஆகியவற்றை அனுபவங்களே காட்டுகின்றன. ஆராய்ச்சி அறிஞரின் வெற்றிப் பாதையில் வெற்றிமேல் வெற்றி பெற அவர் மேற்கொண்ட நெறிமுறைகள், வாழ்க்கைப் பயணத்தில் அவர் சந்தித்த இன்னல்கள், அவ் இன்னல்களிலிருந்து மீண்டு வந்த நிகழ்வுகள், துணையாக அமைந்த பெருமககள், போன்றவற்றை கற்போர் பயனுறும் வண்ணம் தெளிவாகவும், சுருக்கமாகவும் கூறுவதே பயனுடையதாகும்.

### 7. புலமை நலம் பாராட்டல்

படைப்பு, பதிப்பு, ஆய்வு, உரை, மொழிபெயர்ப்பு போன்ற பல்வேறு துறைகளில் ஆராய்ச்சி அறிஞர் அடைந்த உயர்நிலைகள் உரைக்கத்தக்கனவாகும். அவர் பணியாற்றி வரும் துறையும் அவர்தம் வாழ்க்கை வரலாறும் பின்னிப் பிணைந்தே காணப்படும். அவ் அறிஞர் பணியாற்றிய துறையில் பணியாற்ற விரும்புவோர்க்கு அவர்தம் புலமை நலமும் வாழ்க்கையின் வளர்ச்சி நிலைகளும் வழிகாட்டுவதாய் அமையும். வாழ்க்கை வரலாற்றுக் கட்டுரையில், குறிப்பாக இலக்கியப் புலமை பெற்றோர் வரலாற்றில் அவர்தம் ஆய்வுப் புலமை நலம் விளங்க கட்டுரை வரைவதே பயன் நல்கும்.

ஆராய்ச்சி அறிஞரின் பண்புநலன்களையும், ஆராய்ச்சித் திறன்களையும் குறித்து மற்றவர்கள் வழங்கிய மதிப்பீடுகளையும், பாராட்டுகளையும், வாழ்த்துரைகளையும் கட்டுரையில் சுருக்கமாகச் சுட்டிக்காட்டலாம்.

தமிழ்ப் பல்கலைக்கழக ஓலைச்சுவடித்துறை சுவடிப்பதிப்புகளுக்கு முன்னுரிமை கொடுத்து வருகின்றது. தமிழ்ச்சுவடிகள், மற்றும் ஆவணங்கள் தொடர்பான ஆய்வுகள் செய்துவரும் மாணவர்களுக்கு இருக்கும் ஈடுபாட்டினை மேலும் வளப்படுத்தும் நோக்கில் **"சுவடிப்பதிப்பாசிரியர்களின் வரலாறும் பதிப்புப்பணியும்"** என்னும் தலைப்பிலான கருத்தரங்கம் நடத்தப்பெறுகின்றது. இக்கருத்தரங்கம் தொடர்பாகச் சுற்றறிக்கை அனுப்பியவுடன் பல்துறை பேராசிரியர்கள், ஆய்வாளர்கள் ஆகியோரிடமிருந்து நன்பெறும் ஆதரவுக் கிட்டியது. பதிப்புத் தொடர்பான ஆய்வுக்கட்டுரைகள் வரப்பெற்றன. அவற்றைத் தொகுத்து நூலாக வெளியிட்டால் அனைவருக்கும் சிறப்புறப் பயன்படும் என்ற சிந்தனையின் விளைவாகத் தோன்றியதே இந்நூலக்கத்திற்கான காரணமாகும். இந்நூலில் கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன. கல்வி மற்றும் ஆய்வுப் பணிகளையும் கருத்தில் கொண்டு தமிழ்ப்பல்கலைக்கழக வளர்ச்சிக்குப் பல்லாற்றானும் உழைத்துவரும் எம் தமிழ்ப்பல்கலைக்கழக மாண்பமை துணைவேந்தர் பேராசிரியர் முனைவர் க.பாஸ்கரன் அவர்கள் இக்கருத்தரங்கம் நன்முறையில் நடைபெற ஆக்கமும் ஊக்கமும் அளித்ததோடு மட்டுமின்றி இக்கருத்தரங்கக் கட்டுரைகள் நூலாக வருவதற்கு இசைவளித்து சிறந்ததொரு அணிந்துரையையும் அளித்து சிறப்பித்துள்ளார்கள். அவர்களுக்கு மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இக்கருத்தரங்கம் சிறப்புற நடைபெற அனைத்து வகையிலும் உதவிய மதிப்புயர் பதிவாளர் முனைவர் ச. முத்துக்குமார் அவர்களுக்கும் உரிய நேரத்தில் இந்நூல் கிடைக்க வழிவகை செய்த மரியாதைக்குரிய

எங்கள் புலத்தலைவர் பேராசிரியர் முனைவர்.ந.அதியமான் மற்றும் எங்கள் துறைத்தலைவர் முனைவர் மோ.கோ.கோவைமணி அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இக்கருத்தரங்கம் இனிதே நடைபெற ஆய்வுக்கட்டுரைகள் வழங்கிய பேராசிரியப் பெருமக்களுக்கும் ஆய்வாளர்களுக்கும் எனது நன்றியை உரித்தாக்குகிறேன். இக்கட்டுரைகளை நன்முறையில்அச்சிட்டு உதவிய திருவள்ளுவர் அச்சகத்தாருக்கும் மெய்ப்புத்திருத்தத்திற்கு உதவிய எம்துறை முனைவர் பட்ட ஆய்வாளர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பதிப்பாசிரியர்
முனைவர் த. கலாஸ்ரீதர்

# பொருளடக்கம்


1. தனித்தமிழ்த் தந்தை மறைமலையடிகள் வாழ்வும் பணியும் –1

2. ஆ.கா. பிச்சை இபுராகீம் புலவர் வரலாறும் பதிப்புப் பணியும் –12

3. மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் வாழ்வும் பதிப்புப்பணியும் –14

4. பேராசிரியர் முனைவர் த.கோ.பரமசிவம் அவர்களின் வாழ்க்கை வரலாறும், பதிப்புப் பணியும் –23

5. ச. சாம்பசிவனாரின் படைப்பும் பதிப்பும் –34

6. சொக்கலிங்க சுவாமிகளின் வாழ்க்கை வரலாறும், பதிப்புப் பணியும் –37

7. பூண்டி அரங்கநாத முதலியாரின் வாழ்வும் தமிழ்ப் பணியும் –46

8. சோ. கோவிந்தராஜு அவர்களின் வாழ்க்கை வரலாறும் கல்விப் பணியும் –51

9. மணி. மாறன் அவர்களின் பதிப்பு வரலாறு –58

10. மே.வி.வேணுகோபாலப் பிள்ளையின் வரலாறும் பதிப்புப் பணியும் –66

11. தலபுராணப் பதிப்புச் செம்மல் உ.வே.சா –69

12. முனைவர் பூ. சுப்பிரமணியம் அவர்களின் வாழ்க்கை வரலாறும் பதிப்பு நெறிமுறைகளும் –75

13. திரு.வை. சதாசிவப்பண்டாரத்தாரின் வரலாறும் ஆராய்ச்சிப் பணியும் –86

14. அடிகளாசிரியரின் வரலாறும் பதிப்புப்பணியும் –94

15. ஔவை சு.துரைசாமிப் பிள்ளையின் வாழ்வும்
பதிப்புப் பணியும் –101

16. செல்லரிக்கும் செப்பேடுகளும் காலத்தைக்
காட்டும் கல்வெட்டுகளும் –108

17. மழவை மகாலிங்கர் வாழ்வும் பணியும் –115

18. பாரி காதையில் காணப்படும் திறம் –119

19. முத்து சண்முகனாரின் வாழ்வும் பதிப்புப் பணியும் –130

20. எச்.ஏ.கிருஷ்ண பிள்ளையின் பதிப்புப் பணிகள் –136

21. ச. மெய்யப்பனாரின் வரலாறும் பதிப்பும் பணியும் –138

22. சரஸ்வதி மகால் நூலகப் பதிப்பில்
நாலடியார் உரைவளம் –144

23. கோ. வடிவேலு செட்டியாரின் வாழ்க்கை
வரலாறும் பதிப்புப் பணியும் –154

24. சுவாமிநாத பண்டிதரின் வரலாறும்
பதிப்புப் பணியும் –157

25. வேதநாயகம் பிள்ளையின் வாழ்வும் பணியும் –161

26. கதைப்பாடல் பதிப்பாசிரியர் த.நடராஜனின்
வரலாறும் பதிப்புப் பணியும் –168

27. கா.ர.கோவிந்தராச முதலியாரின் பதிப்புப் பணிகள் –173

# தனித்தமிழ்த் தந்தை மறைமலையடிகள் வாழ்வும் பணியும்

**பொ. அறிவழகன்**
முனைவர் பட்ட ஆய்வாளர்
ஓலைச்சுவடித் துறை,
தமிழ்ப் பல்கலைக்கழகம்,
தஞ்சாவூர்.

## முன்னுரை

அன்னைத் தமிழே! உன்னை
நாள் தோறும் நினைத்திருப்பேன்
ஒரு நாள் மறந்திருப்பேன்
அன்று நான் இறந்திருப்பேன்

என்ற வரிகளுக்கு ஏற்ப தன் வாழ்நாள் முழுவதும் தமிழை உயிர் மூச்சாகக் கொண்டு வாழ்ந்தவர் தனித்தமிழ் தந்தை, தமிழ் நிலவு, தமிழ்க் கடல், செந்தமிழ் உரைநடையாளர், பெரும் அறிவுச்சுடர் என்றெல்லாம் போற்றப்படும் அடிகளார்.

தமிழ் உணர்வுகளை ஊட்டி தமிழர்களைத் தட்டியெழுப்பியவர். தமிழில் கலந்துள்ள பிறமொழிச் சொற்களை நீக்கிவிட்டு செம்மையான தமிழில் எழுதும் முறையைக் கொண்டு வந்தார்; தமிழ், ஆங்கிலம், சமஸ்கிருதம் என மூன்று மொழிகளிலும் மிகுந்த புலமை பெற்றவர்; தமிழ் மொழி, தமிழ் மக்கள், தமிழ்நாடு உயர அரும்பாடுபட்டவர். தமிழில் எல்லாரும் பேசுகிறோம் ஆனால் தனித்தமிழில் பேசுகிறோமா? அது நடக்குமா? என்ற கேள்விக்கு அது நடக்கும் முடியும் என்று நிரூபித்துக் காட்டியவர். தமிழால் முடியும் எனத் தமிழ்ப் படைப்பாளிகளிடையேயும் தன்னம்பிக்கையே விளைத்தவர் அடிகளார்.

## இளமை வாழ்க்கை

மறைமலையடிகள் தஞ்சை மாவட்டம் நாகப்பட்டினத்தின் அருகிலுள்ள "காடம்பாடி" என்ற சிற்றூரில் சொக்கநாதர் பிள்ளை

சின்னம்மாள் இவர்களுக்கு 15.07.1876 -ஆம் ஆண்டு பிறந்தார். பெற்றோர் இவருக்கு இட்டப்பெயர் வேதாசலம். நாகப்பட்டினத்திலுள்ள வெஸ்லியன் மிஷன் பள்ளியில் தனது பள்ளிப்படிப்பை தொடங்கினார். இவர் நான்காவது படிக்கும் போது இவரது தந்தை இறந்தார். ஒன்பதாம் வகுப்புக்கு மேல் படிக்கும் சூழல் அமையவில்லை. ஆனால் புத்தகக்கடை வைத்திருந்த நாராயணசாமிப் பிள்ளை என்ற அறிஞர் உதவியுடன் பதினைந்தாம் வயது முதல் தமிழில் ஆழ்ந்த பயிற்சி பெற்றுக் குறுகிய காலத்தில் சிறந்த புலமை பெற்றார்.

மறைமலையடிகள் தனது 18-வது வயதில் தன்னோடு பழகிய சௌந்திரவல்லியை 1893-ல் திருமணம் செய்து கொண்டார்.

**அடிகளாரின் படைப்புகள்**

**ஆய்வு நூல்கள்**

**முல்லைப் பாட்டு ஆராய்ச்சி (1903)**
**பட்டினப்பாலை ஆராய்ச்சி (1906)**
**சிவஞான போத ஆராய்ச்சி (1908)**
**திருவாசக விரிவுரை (1922)**
**வேளாளர் நாகரீகம் (1927)**
**மாணிக்கவாசகர் வரலாறும் காலமும் (1930)**
**திருக்குறள் ஆராய்ச்சி (1959)**

**மொழிபெயர்ப்பு நூல்கள்**

**காளிதாசரின் சாகுந்தல நாடக ஆராய்ச்சி (1933)**
**குமுதவல்லி அல்லது நாகநாட்டரசி (ஆங்கில மொழி பெயர்ப்பு) (1911)**

**செய்யுள் நூல்கள்**

**திருவொற்றியூர் முருகர் மும்மணிக்கோவை (1900)**
**சோமசுந்தரக் காஞ்சி (1901)**

**சமய நூல்கள்**

சைவ சித்தாந்த ஞானபோதம் (1906)
அம்பலவாணர் திருக்கூத்தின் உண்மை
சைவ சமயத்தின் நெருக்கடியான நிலை (1930)
பழந்தமிழ் கொள்கையே சைவ சமயம் (1930)

**ஆராய்ச்சி நூல்கள்**

பண்டையத் தமிழரும் ஆரியரும் (1906)
கடவுள் நிலைக்கு மாறான கொள்கைகள் சைவம் ஆகா (1929)
சாதி வேற்றுமையும் போலிச் சைவரும் (1911)
தமிழர் மதம்

**பாட நூல்கள்**

சிறுவருக்கான செந்தமிழ் (1934)
அறிவுரைக்கொத்து (1935)

**நாவல்கள்**

கோகிலாம்பாள் கடிதங்கள் (1921)
நாகநாட்டரசி
அம்பிகாபதி (நாடகநூல்) (1950)

**பிற நூல்கள்**

முதற்குறள் வாத நிராகரணம் (1898), மரணத்தின் பின் மனிதர் நிலை (1918), யோக நித்திரை (1922), மக்கள் நூறாண்டு உயிர் வாழ்தல் எப்படி (1933), இந்தி பொது மொழியா (1939), சிந்தனை கட்டுரைகள், முற்காலப் பிற்காலத் தமிழ்ப் புலவோர் (1936), தமிழ் நாட்டவரும் மேல்நாட்டவரும், பொருந்தும் உணவு பொருந்தா உணவு (1921), சைவ சித்தாந்தம் ஒரு நடைமுறை அறிவுக் கோட்பாட்டுக் கொள்கை, இளைஞர்க்கான இன்றமிழ், உண்மை விளக்கம் தமிழர் மதம் (1941), மறைமலையடிகளார் அறிவுரைக்கோவை, தமிழர் நாகரிகம் அல்லது

வேளாளர் யார்? (1923), மனிதவசியம் அல்லது மனக் கவர்ச்சி (1927), தொலைவிலுணர்தல் (1935) போன்ற 50-க்கும் மேற்பட்ட நூல்களை எழுதியுள்ளார். "The Ocean of wisdom" என்ற ஆங்கில இதழின் ஆசிரியராகவும் ஆங்கில மொழியில் "Ancient and modern Tamil Poets" என்ற நூலை எழுதியுள்ளார் ஆங்கில அறிஞர் அடிகளைப் பின்பற்றிச் சிந்தனைக் கட்டுரைகளைப் புனைந்துள்ளார்.

**அடிகளார் ஆற்றிய பணிகள்**

1894-ஆம் ஆண்டு திருவனந்தபுரத்தில் மார்த்தாண்டன் நம்பி பள்ளியில் தமிழாசிரியர் பணி

1898-ஆம் ஆண்டு சென்னை தாம்பரம் கிறித்தவக் கல்லூரியில் தமிழ் பேராசிரியர் பணி

1902-ஆம் ஆண்டில் ஞான சாகரம் என்ற இதழை தொடங்கினார் பின்னர் அறிவுக்கடல் என்று தூய தமிழில் மாற்றினார்.

1905-ஆம் ஆண்டு சித்தாந்த மகா சமாஜம் என்ற அமைப்பை நிறுவினார்.

1911-ஆம் ஆண்டு சென்னைப் பல்கலைக்கழகம் கல்லூரிகளில் தமிழ் முதலான உள்நாட்டு மொழிகளை விரும்பியவர் மட்டும் படிக்கலாம். அனைவரும் படிக்க வேண்டிய கட்டாயம் இல்லை என்ற புதிய விதியைக் கொண்டு வந்தனர் "தமிழ்நாட்டில் தமிழுக்கு முக்கியத்துவம் இல்லாத காரணத்தால் நான் இனிமேல் இங்கு பணிபுரிவதில் அர்த்தமில்லை" என்று அடிகள் தம் பேராசிரியர் பதவியிலிருந்து விலகினார்.

**தனித்தமிழ் இயக்கம்**

1916-இல் பல்லாவரம் மாளிகைத் தோட்டத்தில் அடிகளார் தம் மகள் நீலாம்பிகையுடன் உலவி வரும் போது, இராமலிங்க அடிகளாரின் பாடல்

"வெற்ற தாய்தனை மகமறந் தாலும்
பிள்ளை யைப்பெறுந் தாய்மறந் தாலும்
உற்ற தேகத்தை உயிர்மறந் தாலும்
உயிரை மேவிய உடல்மறந் தாலும்
நமச்சி வாயத்தை நான்மற வேன்"

இப்பாடலில் அமைந்திருந்த "தேகம்" என்ற சொல்லுக்கு மாற்றாக "யாக்கை" என்னும் தமிழ் சொல்லைப் பயன்படுத்தியிருக்கலாமே என்று எண்ணினார். அன்று முதல் இருவரும் தனித்தமிழிலேயே பேசுவதற்கும் எழுதுவதற்கும் உறுதி பூண்டனர். இதுவே "தனித்தமிழ் இயக்கம்" தோன்ற அடிப்படைக் காரணமாகும்.

## திருவள்ளுவர் ஆண்டு

தமிழர்களுக்கென்று தனி ஆண்டு பயன்படுத்தாமல் கிருத்துவ ஆண்டு அல்லது ஆங்கில ஆண்டு நம் தமிழ் மன்னர்கள் கூட கொல்லம் ஆண்டு, பசலி ஆண்டு, விக்கிரம ஆண்டு சக ஆண்டு என பல ஆண்டு முறைகளை கையாண்டுள்ளனர். இதனை கல்வெட்டு, செப்புப் பட்டயம், ஓலைச்சுவடி போன்ற ஆவணங்கள் மூலம் அறியலாம். ஆனால் தமிழர்களுக்கென்று தனியான ஒரு ஆண்டு முறை இல்லை இதனை போக்க அடிகளார் ஆராய்ந்து வள்ளுவர் ஆண்டை உருவாக்கினார். அதனால் "**திருவள்ளுவர் திருநாள் கழகம்**" என்ற அமைப்பு உருவானது முதலில் இந்த ஆண்டை இலங்கை தமிழ் மக்கள் பின்பற்றினர். அதன் பின் கலைஞர் கருணாநிதி அவர்களின் ஆட்சிக்காலத்தில் தமிழகத்தில் நடைமுறைப் படுத்தப்பட்டு இன்று தமிழர்களின் ஆண்டாக கடைப்பிடித்து வருகிறோம்.

## தமிழ்மொழிப் பற்றி பிற அறிஞர்களின் கருத்து

**டாக்டர் குண்டாட்டு என்பவர்** "வடமொழியில் திராவிடக் கூறுகள்" (Dravidian Element is Sanskrit) என்ற கட்டுரையை 1869-இல் செருமன் கீழ் நாட்டுக் கலைக் கழகத்தின் பத்திரிகையில் வெளியிட்டார்.

டாக்டர் கிட்டல் 1872-இல் "வடமொழி அகராதிகளில் திராவிடச் சொற்கள்" 420 சொற்கள் கடன் வாங்கியதாக குறிப்பிட்டுள்ளார்.

**கால்டுவெல்** 1838-ல் மொழியாராய்ச்சியில் திராவிடம் ஆரியத்திற்கு முந்தியதென்றும் திராவிடச் சுட்டெழுத்துக்களினின்றே ஆரியச் சுட்டுச் சொற்களெல்லாம் தோன்றியுள்ளனவென்றும் திராவிடத்திற்குள் முந்தியதும் முதன்மையானதும் தமிழேயென்றும், தக்க சான்று கொண்டு தெள்ளத் தெளிவாக உலகிற்கு முதன்முதல் எடுத்துக் காட்டியுள்ளார்.

**டாக்டர் மக்களீன்** வடமொழியை விட திராவிட மொழி தொன்மையானது என்பதில் ஐயமில்லை என்றார்.

**சிகன்பால்கு** ஜெர்மன் நாட்டை சேர்ந்த இவர் தமிழர்கள் காட்டுமிராண்டிகள் என்று நினைத்த ஐரோப்பியர்களுக்கு தமிழ் அனைத்து சிறப்பும் நிறைந்த மொழி என்று குறிப்பிட்டுள்ளார்.

மேலும் பெப்ரிஷியஸ், எப்.டபிள்யூ. எல்லிஸ், ஹென்றிபவர் ஜான்மர்டாக், ஜி.யு.போப், பெஸ்கி (வீரமாமுனிவர்) போன்ற மொழி வல்லுநர்கள் தமிழ் மொழியின் சிறப்பை உலகறிய செய்துள்ளனர்.

**தமிழில் பிறமொழி கலப்பு**

பன்னெடுங்காலமாகப் பிறநாட்டாருடன் தமிழர் வாணிகத் தொடர்பு கொண்டிருந்தனர். அந்நாட்டினரின் பழக்கங்களும் பண்பாடுகளும் தமிழரிடையே கலந்தன. ஒருவர் நாகரிகத்தை மற்றொருவர் பின்பற்றும்போது மொழியிலும் கலப்பேற்படல் இயற்கையே என்பார் அடிகளார்.

தமிழ் நாட்டில் படையெடுத்து வெற்றி பெற்று தங்கள் ஆட்சியை ஏற்படுத்திய நாயக்கர், முகமதியர், டச்சுக்காரர், போர்ச்சுக்காரர், பிரெஞ்சுக்காரர், ஆங்கிலேயர் என்ற ஐரோப்பியர் உட்பட ஆட்சி செய்த காலத்திற்கு ஏற்ப அவர்களின் மொழியும் மிகுதியாக கலந்தன. உருது,

பாரசீகம், அரபு, ஆங்கிலம் இந்தி என பல மொழிகலப்பு என பல மொழி கலந்துள்ளது.

தொடக்க காலத்தில் தமிழகத்தை ஆண்ட அதியமான், அந்துவன் நெடுஞ்செழியன், இளம்பெரும்வழுதி, கரிகாலன், இளந்தத்தன், செங்குட்டுவன் என்ற மன்னர்களின் பெயர்களும் பூங்குன்றன், நக்கீரன், கோவூர்கிழார், பெருஞ்சித்திரனார் போன்ற புலவர்களின் பெயர்களும் தனித்தமிழ்ப் பெயர்களாக இருந்தன. இந்து சமயம் வடமொழி செல்வாக்கு பெற்றபோது பல மன்னர்கள் பெயரும் வடமொழிப் பெயர்களாயின. பௌத்தம், சமணம், கிருத்தவம், இஸ்லாமியம் என பல சமயம் பரப்பும் நோக்கில் மொழியும் பரப்பினர்.

தமிழ்மொழி வழிபாட்டிற்கும் சடங்கிற்கும் தகாத மொழியென்று தள்ளப்பட்ட போதே தமிழின் தாழ்வு தொடங்கிவிட்டது.

தூய தமிழ்ப் பெயர்களாக இருந்த பல திருக்கோயில்களின் பெயர்களும் இறைவன் இறைவியர் பெயர்களும் மாற்றப்பட்டன.

| **தமிழ் பெயர்** | **வடப் பெயர்** |
|---|---|
| முதுகுன்றம் | விருத்தாசலம் |
| மறைக்காடு | வேதாரண்யம் |
| மயிலாடுதுறை | மயூரம் |
| குடமூக்கு | கும்பகோணம் |
| தில்லை | சிதம்பரம் |
| குரங்காடுதுறை | கபிஸ்தலம் |
| பெரும்புலியூர் | வியாக்ரபுரி |
| சிங்கவேள்குன்றம் | அகோபிலம் |

**இறைவன் பெயர்கள்**

| **தமிழ்** | **வடமொழி** |
|---|---|
| பழமலைநாதர் | விருத்தகீரிசுவரர் |
| கேடிலியப்பர் | அட்சயநாதர் |

| | |
|---|---|
| தான்றொன்றியப்பர் | சுயம்பு நாதேஸ்வரர் |
| மங்கைபங்கர் | உமா மகேஸ்வரர் |
| தாயுமானவர் | மாத்ருபூதம் |
| பெருவுடையார் | பிரகதீஸ்வரர் |
| மாதொருபாகன் | அர்த்தநாரீசுவரன் |
| கறைமிடற்றோன் | நீலகண்டன் |
| ஐயாற்றப்பர் | பஞ்சநதீசுரர் |
| அங்கயற்கண்ணி | மீனாட்சி |
| அஞ்சொல்நாயகி | அஞ்சலை நாயகி |
| அழகம்மை | சௌந்தர நாயகி |
| உலகம்மை | புவனேஸ்வரி |
| மைக்கண்ணி | அஞ்சனாட்சி |
| அறம் வளர்த்த நாயகி | தர்ம சமவர்த்தினி |

இவை போன்ற பலப்பெயர்கள் மாற்றம் பெற்றுள்ளது.

**பாரதியார்**

தமிழ்நாட்டில் முழுவதும் தமிழ் நடையை விட்டு ஆங்கில நடையில் தமிழை எழுதும் விநோதமான பழக்கம் நமது பத்திரிகையாசிரியர்களிடம் காணப்படுகிறது.

முதலாவது நீ எழுதப்போகிற விஷயத்தை ஆங்கிலம் தெரியாத ஒரு தமிழனிடம் சொல்லிக்காட்டு அவனுக்கு நன்றாக விளங்குகிறதா என்று பார்த்துக் கொண்டு பிறகு எழுது. அப்போது தான் நீ எழுதுகின்ற எழுத்து தமிழ்நாட்டுக்கு பயன்படும். இல்லாது போனால் நீயும் சிரமப்பட்டு மற்றவர்களுக்கும் பயனில்லாமல் போகிறது என்று ஆங்கில கலப்பற்ற நடையை எழுதத் தூண்டினார்.

**பாரதிதாசன்**

தமிழ்ப் பற்றில்லாவர்களை தமிழ் ஏட்டில் ஆசிரியனாக்குவது தலையனை அடியில் நெருப்பை இட்டுத் தலைவைத்துத் தூங்குவதற்கு ஒப்பானது என்றார்.

**திரு.வி.க.**

நாளிதழ்கள், வார இதழ்கள் திங்கள் இதழ்கள் அனைத்திலும் வடமொழி ஆங்கிலக் கலப்பு மிகுதியும் காணப்பட்டது. இக்குறைபாடுகளைப் பார்த்துத் தமிழைப் போல் உயர்ந்த மொழி தரணியெங்கும் கண்டதில்லை தமிழரைப் போல் மொழிக்கொலையில் தலைசிறந்தோர் ஒருவருமிலர் எனக் குறிப்பிட்டுள்ளார்.

**அடிகளாரின் தமிழ்ப் பற்று**

தமிழைத் தூய்மையாக போற்றவேண்டுமென்பது வடமொழியின்பால் ஏற்பட்ட வேறுப்பாலன்று. வடசொற்களை இப்போதே நாம் தடை செய்யாவிடின் தமிழ் தன்னிலை கெட்டு வேறுமொழி போலாகிவிடக் கூடும். தமிழில் பிறமொழிச் சொற்களைச் சேர்ப்பதால் தமிழ் தன் இனிமை இழந்து போவதோடு பல தமிழ்ச் சொற்களும் வழக்கில் இல்லாது இறந்து போகின்றன.

தூய தமிழில் பேசு அல்லது தூய ஆங்கிலத்தில் பேசு இரண்டையும் கலந்து அத்துடன் நில்லாது இதில் சமஸ்கிருதம் இந்தி என பலவற்றையும் கலக்க வேண்டாம்.

தமிழை தூய்மைப்படுத்த நினைத்ததால் முதலில் தன்னையும் தன் குடும்பத்தையும் மாற்றினார். வேதாசலம் என்னும் தம் பெயரை மறைமலையடிகள் என்றும் "ஞானசாகரம்" என்ற தன் இதழை அறிவுக்கடல் என்றும் "சமரச சன்மார்க்க நிலையம்" என்ற தம் அமைப்பை பொதுநிலைக்கழகம் என்றும் மாற்றினார்.

இவரது தங்கை தன் குடும்பத்திலுள்ள பெயர்களை தமிழாக்கினார்.

| **வடமொழி** | **தமிழ்** |
| --- | --- |
| மாணிக்கவாசகம் | மணிமொழி |
| சுந்தரமூர்த்தி | அழகுரு |
| திரிபுரசுந்தரி | முந்நாட்டழகி |

| | |
|---|---|
| நடராசன் | அம்பலவாணன் |
| ஞானம் | அறிவு |

என மாற்றியமைத்தார்.

தமிழில் கலந்துள்ள வடசொற்களை நீக்கி பதினைந்து ஆண்டுகள் உழைத்து ஏழாயிரம் வடச்சொற்களுக்கு உரிய தமிழ் பெயரைக் கண்டு வடசொற்றமிழ் அகரவரிசை என்னும் நூலை வெளியிட்டார்.

அடிகளார் தமிழில் ஒரு பொருளுக்கு பலப்பெயர்கள் உண்டு வடமொழி பெயரை எழுத வேண்டிய தேவையில்லை.

எ.கா: சந்திரன் (வடமொழி)
தமிழ்: நிலவு, அம்புலி, பிறை, திங்கள், தன்கதிர்.
கலையோன், இரவோன், அலவன், அல்லோன். மதி, களங்கன், குரங்கி, முயற்கூடு,

எல்லா உறுப்புகளும் அமைந்த அழகிய உடம்பை தமிழுடன் ஒப்பிட்டார் அடிகளார். உடம்பின் உள்ளும், புறமும் உள்ள உறுப்புகள் எல்லாவற்றின் தொகுதியே அவ்வுடம்பாதல் போல ஒரு மொழியில் உள்ள எல்லாச் சொற்களின் தொகுதியே அம்மொழியை உருவாக்குகிறது. இயற்கையில் பழுதுபட்ட உடம்புகள் செயற்கை உறுப்புகளை அமைத்துக்கொள்ளுதல் போல இயற்கையில் குறைபாடுடைய ஆங்கிலம், மலையாளம், கன்னடம், தெலுங்கு, வங்காளி, இந்து முதலான மொழிகளுக்குப் பிறமொழிச் சொற்களின் உதவி தேவை. ஆனால் சொல்வளமிக்க தமிழுக்கோ அங்கனம் பிறமொழிச் சொற்களின் உதவி சிறிதும் தேவையில்லை எனவும் "இயற்கைச் சொற்களால் அமைந்தாகிய தமிழிற் பிறமொழிச் சொற்களைப் புகுத்தல் எது போலிருக்கிறது என்றால் எல்லா உறுப்புக்களும் அமைந்த அழகியதோர் உடம்பில் உள்ள உறுப்புக்களை வெட்டி எறிந்துவிட்டு வேறு மண்ணாலும் மரத்தாலும் செயற்கையாக அவ்வுறுப்புக்கள் போற்செய்து அவற்றை அதன்கண் ஒட்டவைத்துப் பார்த்தலுக்கே ஒப்பாயிருக்கின்றது" என்றும் அடிகள் கருதினார்.

## முடிவுரை

தொல்காப்பியத்திலும் சங்ககால இலக்கியங்களிலும் நூற்றுக்கு இரண்டு (அல்லது) மூன்று சொல் கலப்பு அமைந்திருந்தது. சங்கம் மருவிய காலத்தில் நான்கு அல்லது ஐந்தாக பெருகிப் பல்லவர் காலத்தில் பத்து பதினைந்தாகியது. பல்லவர் மற்றும் சோழர்காலத்தில் பிராமணர் தமிழகத்திற்கு மிகுதியாக வரவழைக்கப்பட்டு அவர்களுக்கு பிரமதேயம் என்ற முறையில் பெரும் நிலத்தைக் கொடையாக கொடுத்து கோயிலில் முக்கிய பொருப்பு பல வழங்கப்பட்டது. அவர்கள் குடியமர்த்திய பகுதி ஊர் சபா என்றும் அதில் முடிவெடுக்கும் உரிமையும் வழங்கப்பட்டது. கோயில் சுவர்களில் வடமொழியே எழுதவேண்டும் அது தெய்விக மொழியென்று பிரமணர் கூறியபோது சோழர்கள் தமிழில் எழுதவேண்டும் என விரும்பினர். எனவே வடமொழியும் தமிழும் கலந்து கிரந்தம் என்ற புதுவரிவடிவை அமைத்தனர். இதை மணிப்பிரவாள நடை என்றும் அழைத்தனர். இப்படி தமிழில் கலந்த வடச்சொல் இன்று தமிழா? வடச்சொல்லா? என்று இனம்காண முடியாத நிலையில் கலந்துள்ளது. அதனை பிரித்து தமிழை தூய்மைப்படுத்தும் வேலையை அடிகளார் மேற்கொண்டார் அதில் வெற்றியும் கண்டார். 15.09.1950-ல் மறைமலையடிகள் மறைந்தாலும் தமிழ் மொழியுள்ள வரை அடிகளார் பெயர் நிலைத்திருக்கும்.

# ஆ.கா. பிச்சை இபுராகீம் புலவர் வரலாறும் பதிப்புப் பணியும்

**எஸ்.ஆயிஷாகனி**
அயல்நாட்டுத் தமிழ்க் கல்வித்துறை,
தமிழ்ப் பல்கலைக்கழகம்,
தஞ்சாவூர்.

இவர் காலம் 1863-1908 ஆகும், திருச்சிராப்பள்ளி கல்லணையாருகே உள்ள அரசங்குடியில் சாதிர்ஷா இராவுத்தருக்கும் மதார் பீபீ அம்மைக்கும் மகனாய்ப் பிறந்தவர். இவர் மூன்றாம் வயதில் தந்தையாரை இழந்ததால் தயாருடன் திருச்சி வரகனேரிக்கு வந்து சேர்ந்தார். கருவாட்டு மண்டிக்காரர் ஆஜியார் இராவுத்தரால் ஆதரிக்கப்பட்டார். இளமையில் முரட்டுத் தனமாகவும் சுட்டிப் பிள்ளையாகவும் இருந்ததால் பொல்லாதபிள்ளையாகக் கருதப்பட்டார். என்றாலும் தம் 5-15 ஆம் வயது வரை உறையூர் வித்துவான் முத்துவீர ஆச்சாரியிடம் முறையாகவும் ஒழுங்காகவும் தமிழ் இலக்கிய இலக்கணங்களைக் கற்றுத் தேர்ந்தார். மதுரைத் தமிழ் சங்கப் புலவரானார். பிறகு நாம் நிறுவிய பள்ளியிலே இலக்கணம் போதகாசிரியராக 15 ஆண்டுகள் இருந்தார். பிறகு திருச்சி எஸ்.பி.ஜி கல்லூரியில் தமது 36 ஆம் வயதில் சேர்ந்து 9 ஆண்டுவரை தமிழ் பணிபுரிந்து தமது 145 ஆம் வயதில் 1908 இல் மறைவுற்றார்.

இவருடைய புலமையை அறிந்து இவரிடம் நெருங்கிப் பழகித் தமிழறிவைப் பெருக்கிக்கொண்டவர். பலராவர். அவர்களில் கம்பம் பீர்முகம்மது அமிர்த சுந்தரநாதப்பிள்ளை, ந.மு. மீனாட்சி சுந்தரம்பிள்ளை ஆகியோர்குறிப்பிடத் தகுந்தவராவர். திருச்சி பா.இரத்தினவேல் தேவரும் இவர்தம் மாணவர்களில் சிறப்பாகச் சொல்லத் தகுந்தவர். நாகூர் குலாம் காதிறு நாவலர், புலவர் இபுராகீம் அவர்களின் உற்ற நண்பராவர்.

திரு பிச்சை இபுராகீம் புலவர் இயற்றியுள்ள செய்யுள் நூல்கள் பலவாகும். அவற்றுள் சில நாகூர்ப்பிள்ளைத் தமிழ், நாயகத் திருமதீனத்து மாலை, திருமதீனத்து யமக வந்தாதி, பகுதாது பாமாலை, ஆதமலைத் திருப்புகழ், திரு மதீனத்துக் கலம்பகம், இவர் இன்பத் தமிழ் இலக்கண விளக்கம் என்றதொரு பெருநூலையும் தன் சுயமரியாதையையும் பல ஆயிரம் கவிதைகளையும் எழுதிவைத்திருந்தாராம். ஆனால் அவை அச்சாகவில்லை.

இவர் வாணிகம் செய்து கொண்டே தமிழ் கற்பித்து வந்தவர். திரண்ட செல்வத்தைச் சேர்த்து வைக்காது, இவரை நாடிவந்த கவிவாணர்களுக்கு வாரி வழங்கி வந்தார். இதனால் இவர் இறக்கும்போது ரூ.4000 கடன்காரராக இருந்திருக்கிறார்.

ஆறடி உயரமும் காட்டறபியின் சாயலும் கட்டாண உடலும், மாநிறமும் அகலக் கண் பார்வையும், மொட்டைத்தலையும் அதை மூடி மறைக்கும் தலைப்பாகையும் வெள்ளை அரைக்கால் சட்டையும் மல்வேட்டியும் தரித்து தாம்பூலம் தரித்து வாயுடன் இலக்கண ஏடுகன் ஏந்தியிருக்கும் கைகளுடன் அறிவின் சிகரமாய்ப் பிச்சை இபுராகீம் புலவர் காட்சியளிப்பாராம். இவரது வாழ்க்கைக் குறிப்பு இஸ்லாமியத் தமிழ்ப் புலவர் 1952 என்ற பெயரில் மதனி எழுதி, அறிவு மலர்ப் பதிப்பகம் வெளியீட்டில் தரப்பட்டுள்ளது.

# மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் வாழ்வு பதிப்புப்பணியும்

**முனைவர் கோ. உத்திராடம்**
காப்பாட்சியர்
டாக்டர் உ.வே.சா. நூல்நிலையம்
சென்னை.

கலியுகக்கம்பர், கவிக்காவேரி, தலபுராணவேந்தர், நவீன கம்பர், புராணம் பாடும் புலவன் என்று பல பெயர்களில் அழைக்கப்டும் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் மதுரை சோமசுந்தரேசுவர் திருக்கோயில் முத்திரைக் கணக்கராக இருந்த, சைவ வேளாளர் திரு சிதம்பரம்பிள்ளை - அன்னத்தாச்சி அம்மையாருக்கு மகனாக 6.4.1815 ஆம் ஆண்டின் திருச்சிராப்பள்ளிக்கு அருகில் உள்ள அதவத்தூரில் பிறந்தார்.

பிள்ளையவர்கள் தம் தந்தையாரரிடத்தில் இளமையில் கல்வி பயின்றார். இப்பருவத்திலேயே கவிகளை இயற்றும் திறனைப் பெற்றிந்த பிள்ளையவர்கள் பின்னர் திரிசிபுரத்தில் இருந்த வேலாயுதமுனிவரிடம் கல்வி கற்றார். அப்போது இவருடன்கல்வி பயின்றவர் திரிசிபுரம் வித்துவான் கோவிந்தப்பிள்ளை. பிள்ளையவர்களின் சென்னையில் இருந்த போது மகாவித்தவான் காஞ்சிபுரம் சபாபதி முதலியாரிடத்தில் தமிழ் பயின்றார். அப்போது அவருடன் தமிழ் பயின்றவர்கள் புரசை அஷ்டாவதானம் சபாபதி முதலியாரும் தாண்டவராயரும் ஆவர். சென்னையில் இருந்த திருவம்பலத்தின்னமுதம்பிள்ளை, எழும்பூர் திருவேங்கடாசல முதலியாரிடத்திலும் கல்வி பயின்றார். மகாவித்துவான்களாகிய இராமாநுசகவிராயர், அவர் மாணவர்களாகிய திருத்தணிகை விசாகப்பெருமாளையர், சரவணப்பெருமாளையர் இவர்களின் மாணவராகிய மழவை மகாலிங்யைர் முதலியவர்களிடம் பிள்ளையவர்கள் பழகினார்கள்.

பிள்ளையவர்கள் ஆசு முதலிய நால்வகைக் கவிஞராகவும், நூலாசிரியர், உரையாசிரியர், பதிப்பாசிரியர், போதகாசிரியர் எனும் ஆசிரியராகவும் வித்தியா வீரராகவும் விளங்கினார். பாடஞ்சொல்லுதலையே விரதமாகவுடையவர். மாணாக்கர்பால் தாயினும் அன்புடையவர். பொருளை மதியாமல் கல்வியறிவையே மதிக்கும் கொள்கையுடையவர். கல்வியிலும் கவியியற்றுவதிலும் இவர் ஈடுபட்டுடன் விளங்கியதால் இவருடைய வீடு ஒரு கலைமகள் நிலையமாகத் திகழ்ந்தது.

**மாணவர்கள்**

பிள்ளையவர்கள் திருவாடுதுறை ஆதீன வித்துவானாக விளங்கினார்கள். இவர்களிடம்தமிழ் பயின்ற மாணவர்கள் பற்பலர். சோடவாவதானம் சுப்பராயசெட்டியார், பூவாளூர் தியாகராசசெட்டியார், திருவீழிமிழலைச் சாமிநாதக்கவிராயர், பங்களூர் தேவராசப்பிள்ளை, புதுச்சேரி சவரிராயலு நாயகர், வேதநாயகம்பிள்ளை, சவேரிநாதப்பிள்ளை, ஆரியங்காவற்பிள்ளை, இராமநாதபுரம் அழகிரி ராஜு, திருமங்கலக்குடி வேஷையங்கார், வெண்பாப்புலி வேலுச்சாமிப்பிள்ளை, உ.வே.சாமிநாதையார் முதலியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

**படைத்த பனுவல்கள்**

பிள்ளையவர்கள் எந்த ஊருக்குச் சென்றாலும் அங்குள்ள சிவன் கோயில்களைக் கண்டு வழிபடுவதும் அவற்றைப் பற்றிய செய்திகளை அறிவதிலும் ஆர்வம் காட்டியுள்ளார். ஆலய நிர்வாகிகள், கொடை வள்ளல்கள், பிரபுக்கள், புலவர்கள் ஆகியோர்கள் தங்கள் ஊர் கோயில் பற்றிய தொன்மை கதைகளைப் புராணங்கள், சிற்றிலக்கியங்கள் வடிவங்களில் பிள்ளையவர்களைக் கொண்டு பாட விரும்பினர். இதனால் பிள்ளையவரவர்கள் இயற்றிய புராணங்களும் பிரபந்தகளும் மிகப் பலவாகப் பெருகின. அவை, தலபுராணங்கள்-22, பிள்ளைத்தமிழ்-10, மாலைகள் -7, அந்தாதிகள்-14, கலம்பகங்க்ள-2, கோவைகள்-2, உலா-1, சரித்திரம்-3, ஆகியன பிள்ளையவர்கள் படைத்துள்ளநூல்களாகும். குசேலேபாக்கியானம், சூத சங்கீதை என்ற

இரு காப்பியங்களையும் இயற்றியுள்ளார். இவர் படைத்த அனைத்து நூல்களும் சிறப்புமிக்கவை என்றாலும் தலபுராணத்தில் திருநாகைக் காரோணப் புராணமும் பிள்ளைத்தமிழில் சேக்கிழார் பிள்ளைத்தமிழும் மாலையில் திருவானைக்கா இரட்டைமணி மாலையும் அந்தாதியில் தில்லை யமக அந்தாதியும் தமிழ்ப்புலவர்களாலும் ஆன்மிக அன்பர்பகளாலும் பாராட்டப்பட்டவை. இப்பிள்ளையவர்கள் தமது கைப்பட எழுதிய இலக்கியங்கள் ஓலைச்சுவடிகளாக உ.வே.சாமிநாதையார் நூல்நிலையத்தில் பாதுக்காக்கப்பட்டு வருகின்றன.

### சிறப்புப்பாயிரம் வழங்கியோர்

பிள்ளையவர்கள் இயற்றிய நூல்களுக்கும் அவர் பதிப்பித்த நூல்களுக்கும் ஆதினத் தலைவர், புலவர், மாணவர் எனப் பலரும் சிறப்புப்பாயிரம் வழங்கியுள்ளனர். உ.வே.சாமிநாதையர் அவர்களால் தொகுக்கப்பட்ட மீனாட்சிசுந்தரம்பிள்ளையவர்கள் பிரபந்தத்திரட்டில் மூலம் தெய்வநாயகம்பிள்ளை. திரிசிரபுரம் தியாகராச செட்டியார்,குளத்தூர் ச.வேதநாயகம்பிள்ளை, சோடசாவதானம் சுப்பராயசெட்டியார், சதாவதானம் சுப்பிரமணி ஐயர், திருவாவடுதுறை ஆதீனம் ஆறுமுகசுவாமிகள், காஞ்சிபுரம் சபாபதி முதலியார், வல்லூர் தேவராசபிள்ளை, வீரராகவசெட்டியார், சுந்தரம்பிள்ளை, மழவை. மகாலிங்கையர் தாண்டவராயசுவாமிகள், திருநெல்வேலி திருச்சிற்றம்பலத்தின்னமுதம்பிள்ளை, அஷ்டாவதானம் வேலாயுதக்கவிராயர், விருத்தாசலம் பொன்னம்பலசுவாமிகள், காரரைக்கால் முத்துசாமிக்கவிராயர், காயாறு சின்னையா உபாத்தியாயர், திரிசிரபுரம்சோமசுந்தர முதலியார் உறையூர் முத்துவீர உபாத்தியாயர், திரிசிபுரம் வீரராகவசெட்டியார், புரசைப்பாக்கம் பொன்னம்பல முதலியார், பென்னெலூர் நாராயணசாமி நாயகர், திரிசிரபுரம் நாராயணபிள்ளை உ.வே.சாமிநாதையர் ஆகியோர் சிறப்புப்பாயிரம் வழங்கியுள்ளதைக் காணமுடிகிறது.

### ஆதரித்த பிரபுக்கள்

பழனியாண்டியா பிள்ளை, லட்சுமணபிள்ளை, ஆண்டார் தெரு சிதம்பரம்பிள்ளை,, சிரஸ்தேததார் செல்லப்ப முதலியார், வரகனேரி

நாராயண பிள்ளை, சொக்கலிங்க முதலியார், உறையூர் அருணாசல முதலியார், உறையூர்த் தியாகராச முதலியார், உறையூர்க் சம்புலிங்க முதலியார் ஆகியோர் பிள்ளையவர்களை ஆதரித்து வந்துள்ளனர். மேலும் ஆதினங்களும் தமிழையும் சைவத்தையும் வளர்ப்பதற்காகப் பிள்ளையவர்களை ஆதரித்தனர்.

**பதிப்புப் பணிகள்**

பிள்ளையவர்கள் புராணங்கள், சிற்றிலக்கியங்கள் பல நூல்களைப் படைத்தவர் என்றாலும் மக்களின் வேண்டுகளை ஏற்று செவ்வந்திப்புராணம், காஞ்சிப்புராணம், திருவானைக்காய் புராணம், கல்லாடம் ஆகிய இலக்கியங்களை ஓலைச்சுவடியிலிருந்து பதிப்பித்து வெளியிட்டுள்ளார்.

**செவ்வந்திப்புராணம்**

சைவ.எல்லப்ப நாவலரால் இயற்றப்பட்ட திரிசிராமலைப் புராணமாகிய செவ்வந்திப்புராணத்தை முதன்முதலில் கி.பி.1851 இல் பிள்ளையவர்கள் பதிப்பித்துள்ளார். இதனை முன்னமே இத்தலத்திற்கு எல்லப்ப நாவலராற் செய்யற்பெற்ற புராணம் ஒன்று உண்டு. அது நல்லநடையுள்ளது என்று சொல்லி அதிலுள்ள சில பகுதிகளைப் படித்துக்காட்டினார். கேட்ட திரிசிரபுர வாசிகள், அதையேனும்அச்சிட்டு வெளிப்படுத்தவேண்டும் என்று இவரை வேண்டிக் கொள்ள, அவ்வாறே அவர் அதனை எழுதுவோரால் தேர்ந்த பிழைகளறப் பரிசோதித்து விரோதிகிருது(1851) வருஷத்தில் அச்சிட்டு வெளியிட்டார் என்ற குறிப்பு பிள்ளையவர்கள் சரித்திரத்தில் (ப.145-46) உ.வே.சா.பதிவு செய்துள்ளார். இப்புராணத்தில் முதற்தபதிப்பு இன்று காணக்கிடைக்கவில்லை.

இப்புராணத்தில்இரண்டாம்பதிப்புமீனாட்சிசுந்தரம்பிள்ளையவர்களால் பரிசோதிக்கப்பட்ட பிரதிக்கிணங்க திருமயிலை. வித்துவான் சண்முகம்பிள்ளையவர்கள் கி.பி. 1887-இல் பதிப்பித்த நூலே இன்று கிடைக்கிறது. இப்பதிப்பில் ஆளுடையப்பிள்ளையார் தேவாரம், திருச்சிராப்பள்ளி திருக்குறுந்தொகை, ஐயடிகள் காடவர்கோனாயனார்

சேத்திரத்திருவெண்பா ஆகியன நூல் தொடக்கத்தில் அமைந்துள்ளன. 550 பாடல்களைக் கொண்ட இந்நூல் பாயிரம், திருமலைச் சருக்கம், பிரமதேவம் அசத்தியந்தீர்த்த சருக்கம், அகத்தியச் சருக்கம், இந்திரச் சருக்கம், திருநகரச் சருக்கம், நினைத்தது கொடுத்த சருக்கம், சாரமாமுனிச் சருக்கம், சூரவாதித்தச் சருக்கம், உறையூரழிந்த சருக்கம், தாயான சருக்கம் ஆகிய சருக்கங்கள் இடம்பெற்றுள்ளன. இப்பதிப்பில் முகவுரை, சிறப்புப்பாயிரம், குறிப்புரை ஆகியவை காணப்படவில்லை.

## காஞ்சிப்புராணம்

திருவாவடுதுறை ஆதினச் சிவஞானயோகியின் அருளிய காஞ்சிப்புராணத்தின் முதற் காண்டத்தை கி.பி. 1868இல் மீனாட்சிசுந்தரம்பிள்ளையவர்கள் பதிப்பித்துள்ளதாக அச்சும் பதிப்பும் நூலில் மா.சு.சம்பந்தம் குறிப்பிடுகிறார். சிவஞானயோகிகளுடைய மாணவர் கச்சியப்பமுனிவர் காஞ்சிபுராணத்தின் இரண்டாம் பாகத்தை அருளியுள்ளார். பிள்ளையவர்கள் பதிப்பித்த முதற்காண்டத்தையும், இரண்டாம் பாகத்தையும் சேர்த்து இராமநாதபுரம் இராமசுவாமிப்பிள்ளையவர்கள் பல பிரதிரூபங்களைக் கொண்டு பரிசோதித்து கி.பி.1878-ஆம் ஆண்டில் பதிப்பித்துள்ளார். இப்பதிப்பை வெளியிடுவதற்கு தேவகோட்டை வீர.ரா.வே. இலட்சுமணச்செட்டியார் சகாயம் பெற்று புங்கத்தூர் கந்தசுவாமி முதலியார் அவர்களால் சென்னப்பட்டணம் பா.சோமையரவர்களது ஆதிகலாநதி அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டது என்ற விவரம் காணப்படுகின்றன. இதில் 4831 பாடல்கள் உள்ளன. இப்பதிப்பின் மூலம் பிள்ளையவர்கள் காஞ்சிபுராணத்தை அச்சிட்ட விவரம் தெரியவருகிறது.

## திருவானைக்காப் புராணம்

ஸ்ரீகச்சியப்பசுவாமிகள் இயற்றிய திருவானைக்காப் புராணத்தைக் குமாரசுவாமிபிள்ளையைவர்களின் வேண்டுகோளின்படி மீனாட்சிசுந்தரம்பிள்ளையவர்கள் பல பிரதிகளைக் கொண்டு பரிசோதித்து கி.பி. 1869-இல் பதிப்பித்துள்ளார். இந்நூலுக்கு கும்பகோணம் வயித்தியநாத தேசிகம், கும்பகோணம் புரோவின்சியல் கல்லீஜ் தமிழ்ப்புலவர் தியாகராசசெட்டியார், திரிசிரபுரம் சோமசுந்தரம்பிள்ளை,

திரிதிரபுரம் சதாசிவம்பிள்ளை ஆகியோர் சிறப்புப்பாயிரம் வழங்கியுள்ளனர்.

திருவானைக்காப் புராணத்தில் 1555 பாடல்கள் உள்ளன. சூசீபத்திரம், சோதனபத்திரம் (பிழைத்திருத்தம்), கடவுள் வாழ்த்து, அவையடக்கம்,திருநாட்டுச்சிறப்பு, நைமிசப்படலம், புராண வரலாற்றுப்படலம், தல விசேடம், தீர்த்த விசேடம், நானவிதிப்படலம், மூர்த்தி விசேடம், சம்புமுனிதவம் புரிபடலம், அகிலாண்ட நாகியாராதனைப்படலம், வரங்கொள்படலம், ஞானவுபதேசப்படலம், திருவிழாப்படலம், நீலவிண்டு வீச்சரப்படலம், பராசன் வழிபடுபடலம், திருமால் வழிபடுபடலம், ஆரஞ்சாத்து படலம், கௌசாரணியப்படலம், கோச்செயங்கணார் வழிபடுபடலம், கவுதமப்படலம், குபேரன் வழிபடுபடலம்,திருநீற்றுத்திருமதில் படலம், அமுதலிங்கேசரருண்முறை செய்த படலம் ஆகியன இடம்பெற்றுள்ளன. இதில் நூல் பதிப்புரை, குறிப்புரை, புராணக்கதைச் சுருக்கம் ஆகியன காணப்படவில்லை. இந்நூலின் மறுபதிப்பு 1906 ஆம் ஆண்டில் வெளிவந்துள்ளன.

**கல்லாடம்**

பிள்ளையவர்கள் கல்லாடத்தை கி.பி.1868-இல் முதல்முதலில் பிழைகளறப் பரிசோதித்து திருத்தப்பாடமாகப் பதிப்பித்துள்ளார். இப்பதிப்பே கல்லாடத்திற்கு வந்த முதல்பதிப்பாகக் கருதப்படுகிறது. இவ்வரிய நூலை ஏறக்குறைய ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னர் ஸ்ரீமாந்-திரிசிரபுரம் மீனாக்ஷிசுந்தரம்பிள்ளையவர்கள் மூலபாடமாகப் பதிப்பித்தனர். இதற்குப் புலவர் பெருமான் ஸ்ரீமாந்-மயிலேறும்பெருமாள் பிள்ளையவர்கள் முன்னரே இந்நூலின் முதல் முப்பத்தேழு அகவல்களுக்கு விரிவுரையொன்று வரைந்திருந்தனர்....
(கல்லாடனர், கல்லாடம் முகவுரை,ப.8,1911) என்று குறிப்பிடுவதன் மூலம் இந்நூலை முதன்முதலில் பதிப்பித்தவர் பிள்ளையாவர்.

**கடிதங்கள்**

மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம்பிள்ளையவர்கள் எழுதிய கடிதங்கள் ஐந்து கிடைத்துள்ளன. இவை, திருவாவடுதுறை ஆதினம்-2,

கலியாணசோழபுரம் சிதம்பரம்பிள்ளை-1, சவரிமுத்தா பிள்ளை-1, குமாரசாமி பிள்ளை-1 ஆகியோர்களுக்கு எழுதப்பட்டுள்ளன. திருவாவடுதுறை ஆதினத்திற்கு எழுதிய கடிதத்தின் மூலம் இங்கு தரப்படுகிறது.

4.5.1870

சிவமயம்

கருணைப் பிழம்பாகிய மகாசந்நிதானத் திருவடித் தாமரைகளுக்கு அடியேன் தெண்டனிட்டு விண்ணப்பம்.

மாயூர முன்சீப மகா.ராஜ.ஸ்ரீ பிள்ளையவர்களுடைய தமையன் குமாரர் சாமிநாதப்பிள்ளை திருவாளூர் முன்சீப் கோர்டில் வைக்கீலாக விருக்கிறார். அந்த முன்சீபில் நடக்கிற நம்முடைய நம்பர்களை அவர் மாரிபத்தில் நடத்தும்படி கேட்டக்கொள்ளுகிறார். அவ்வாறவர் மாரிபத்தில் செய்தாற் கவனித்துப் பார்த்து முடிவு செய்வார்.

சந்நிதானத்தி லடியேன் விண்ணப்பஞ் செய்திருந்தேனே அதைக் குறித்து மாயூரம் முன்சீப் கோர்ட்டு இரண்டாவது குமாஸ்தா நாரணப்பய்யரசர்களிக் கடிதங் கொண்டுவருகிறார்கள். ம.ள.ள பிள்ளையவர்களைமொரு தின மழைத்துவரப் பிரியமுடையவனாயிருக்கிறேன்.

இங்ஙனம்
அடியேன்
மீனாட்சிசுந்தரம்

பிரமோதூத வருஷம்
சித்திரை மீ 20 உ

இஃது திருவாவடுதுறை மகா சந்நிதானத் திருக்கண் பார்வையிடப்படுவது.

**காவேரியாச்சி கடிதங்கள்**

மகாவித்துவான் அவர்களின் துணைவியர் காவேரியாச்சி பற்றிய செய்திகள் பிள்ளையவர்கள் சரித்திரத்திலும் என் சரித்திரத்திலும் உ.வே.சா. பதிவுசெய்துள்ளார். பிள்ளையவர்கள் இறந்த பிறகு காவேரியாச்சிக்கு பல நிலைகளில் பொருளுதவி செய்ததையுள்ளதை ஸ்ரீ மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களுடைய மனைவியாராகிய காவேரியாச்சி மாயூரத்தில் இருந்துவந்தார். அவரைக் கவனித்துப் போஷிப்பவர் ஒருவரும் இல்லை. அவர் அடிக்கடி தமக்குப் பொருள் வேண்டுமென்று கடிதம் எழுதுவார். நான் அவ்வப்போது பொருளுதவி செய்து வருவேன் (என் சரித்திரம்,ப.732) பதிவுசெய்துள்ளார்.

இவ்வம்மையார் ஐயர் அவர்களுக்கு எழுதிய மூன்று கடிதங்கள் கிடைத்துள்ளன. காவேரியாச்சி எழுதிய இக்கடிதங்களில் தான் வறுமையில் இருப்பதைக் கூறி பணம் அனுப்பும்படியும், தான் உடுத்திக்கொள்வதற்கு திருநாககேசுவரம் வெள்ளைப்புடவையும் செலவுக்குப் பணமும் கேட்டும் எழுதியுள்ளார். இவற்றை நோக்கும் விதவையானவர்கள் வெள்ளைப்புடை அணியும் வழக்கம் இருந்துள்ளதை அறியமுடிகிறது.

2.4.89
மாயவரம்

மகாகனம்பொருந்திய மகா.ராஜராஜஸ்ரீ அய்யர் அவர்கள் சமூகத்துக்கு மாயவரம் தெற்குவீதியிலிருக்கும் காவேரியம்மாள் யெழுதி அநேக நமஸ்காரம். இப்பவும் க்ஷேமம். அவிடம் சேக்ஷமத்தை கேட்க மிகுந்த ஆசை உள்ளவளாயிருக்கிறேன். இப்பவும் சிலவுக்கு முடையாயிருப்பதால் தாங்கள் தயவுசெய்து ஏதாவது கொஞ்சம் பணம் அனுப்பினால் நலமாயிருக்கும். ஆதலால் யென்பேரில் கிருபை செய்து பணம் அனுப்ப கேட்டுக்கொள்கிறேன். யெனக்கு அப்பா இருந்ததுபோல எப்படி நடந்ததோ அதுபோல தாங்கள் நடத்த வேண்டியது. யென் மேல் விலாசம் மாயவரம் அய்யாரப்பா கோவில் தெற்குவீதி உபாத்தியாயர்

அய்யாசாமிபிள்ளைக்கு கொடுப்பது யென்று எழுதுக் கோருகிறேன். பதில் கடிதம் எழுத வேண்டியது.

கும்பகோணம் காலேஜ் தமிழ் பண்டிட் வே.சாமிநாதய்யர் அவர்கள் சமுகம் கொடுப்பது kumbakonam.

**உருவ அமைப்பு**

பிள்ளையவர்கள் மாநிறம், உயர்ந்த தோற்றம், அகலமாக நெற்றியைக் கொண்டவர். காட்சிக்கு எளிமையும் பணிவும், சாந்தமும் உடையவர். "அவருடைய நடையில் ஓர் அமைதியும் வாழ்க்கையில் புண்பட்டுப் பண்பட்ட தளர்ச்சியும் இருந்தன. அவருடைய தோற்றத்தில் உத்ஸாகம் இல்லை; சோம்பலும் இல்லை; படபடப்பில்லை சோர்வும் இல்லை; அவர் மார்பிலே ருத்திராட்ச கண்டி விளங்கியது. பல காலமாகத் தவம் புரிந்து ஒரு தெய்வதரிசனத்திற்குக் காத்திருக்கும் உபாஸகளைப்போல நான் இருந்தேன். அவனுக்குக் காட்சியளிக்கும் அத்தெய்வம்போல அவர் வந்தார்" என்று பிள்ளையவர்களின் உருவத்தோற்றத்தினை உ.வே.சா. என் சரித்திரத்தில் (ப.159) பதிவுசெய்துள்ளார்.

கி.பி.19ஆம் நூற்றாண்டில் வாழ்ந்து அளபரிய பல பணிகளைச் செய்த மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் தமிழையும் சைவத்தையும் இரு கண்களாகப் போற்றி பல இலக்கியங்கள் படைத்தார். ஆனால் இன்று அவர் படைத்த பெரும்பான்மையான புராணங்களும் சிற்றிலக்கியங்களும் மறுபதிப்பு செய்யபடாமல் உள்ளன. பிள்ளையவர்கள் 31.1.1876 மறைவிற்குப் பிறகு அவருடைய மனைவி காவேரியாச்சியும் மகன் சிதம்பரம்பிள்ளையும் வறுமையில் வாடியதை சரித்திரமும் கடிதங்களும் வெளிப்படுத்துகின்றன.

# பேராசிரியர் முனைவர் த.கோ.பரமசிவம் அவர்களின் வாழ்க்கை வரலாறும், பதிப்புப் பணியும்

**முனைவர் த.கலாஸ்ரீதர்**
உதவிப்பேராசிரியர்
ஓலைச்சுவடித்துறை,
தமிழ்ப் பல்கலைக்கழகம்.

பேராசிரியர் முனைவர் த.கோ.பரமசிவம் அவர்கள் 11.10.1949 இல் திருவண்ணாமலை மாவட்டம் களம்பூர் எனும் சிற்றூரில் சிவத்திரு. கோவிந்தசாமி அடிகளாருக்கும், திருமதி.கன்னியம்மாள் அவர்களுக்கும் நான்காவது திருமகனாக இம்மண்ணில் உதித்தார்.

அன்னாரின் குழந்தைப் பருவமும், பள்ளிப் பருவமும் களம்பூரிலேயே கழிந்தது. 1967 ஆம் ஆண்டு எஸ்.எஸ்.எல்.சி.யைக் களம்பூர் உயர்நிலைப் பள்ளியில் முடித்தார். பள்ளிப் பருவம் நிறைவுற்றதும் வேலூர் ஊரீஸ் கல்லூரியில் PUC சேர்ந்து முதல் மாணவராக 1968 ஆம் ஆண்டு தேர்ச்சி பெற்றார். அதன் பின்னர் சென்னை பச்சையப்பன் கல்லூரியில் தமிழ் இளங்கலை (1969-1972) மற்றும் முதுகலை (1972-1974) பயின்றதோடு. முதுகலை பயின்ற காலத்தில் கல்லூரித் தமிழ்மன்றத் தலைவராகவும் விளங்கினார்.

தமிழ் மன்றத் தலைவராக இருந்த காலத்தில் இயல், இசை, நாடகம் எனும் முத்தமிழ் விழாக்களை ஆண்டுதோறும் நடத்தி, திருமுருக கிருபானந்தவாரியார் சுவாமிகள், பேரறிஞர் அண்ணா, மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். கலைஞர், மு.கருணாநிதி போன்றோரை இயல் தமிழ் விழாவிற்கும், காஞ்சிபுரம் விநாயக முதலியார், தருமபுரம் சுவாமிநாதன் போன்றோரை இசைத்தமிழ் விழாவிற்கும் அழைத்துப் பெருமைப்படுத்தி அனைவரின் பாராட்டுதல்களையும் பெற்றார்.

தமிழ் முதுகலை நிறைவுற்றதும் தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறையில் அகழ்வாராய்ச்சியியல் (1973), தொல்லியல் மற்றும் கல்வெட்டியல் (1975); இந்திய ஹோமியோபதி கழகத்தில் ஹோமியோபதி (1976); தில்லி பல்கலைக்கழகத்தில் இந்தி (1979); மைசூர் பல்கலைக்கழக ஒரியண்டல் ரிசர்ச் இன்ஸ்ட்டிடியூட்டில் ORI சுவடியில் (1983); தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் மொழியியல் (1989) போன்ற பட்டயங்களும் Diploma INTACH இல் சுவடிகளைப் பாதுகாத்தலும் நன்னிலைப்படுத்தலும் எனும் சான்றிதழும் (1991) பெற்றுச் சிறந்தார்.

பணிக்கு முயற்சி செய்யும் காலங்களில் வீட்டில் இருந்தபடியே அருள் மருத்துவமனை என்ற பெயரில் ஹோமியோபதி மருத்துவம் பார்த்தார். சிறிது காலம் ஒரு தனியார் பேருந்தில் நடத்துநராகவும் பணியாற்றிய அனுபவமும் பேராசிரியருக்கு உண்டு.

இந்தி மொழியில் தேர்ச்சிப் பெற்றிருந்த நேரத்தில் 24.11.1975 அன்று தில்லியில் ஜவகர்லால் நேரு பல்கலைக்கழக School of Social Sciences இல் ஆய்வு உதவியாளராகப் பணியில் சேர்ந்து 23.11.1976 வரை ஓராண்டு காலம் சிறப்பாகப் பணியாற்றினார்.

அதன் பின்னர், தில்லி பல்கலைக்கழகத் தொலைதூரக் கல்வியில் பகுதிநேர விரிவுரையாளராக 07.02.1976 முதல் 23.01.1977 வரை பணியாற்றினார்.

இக்கால கட்டத்தில் தில்லிப் பல்கலைக்கழகத்தில் சிறப்பாகப் பணியாற்றி வந்த பேராசிரியர் முனைவர்.க.ஆறுமுகனாரின் நட்பு கிடைக்கப் பெற்றார். அவரிடம் தன்னுடைய முனைவர் பட்ட ஆய்வைத் தொடங்கினார்.

24.01.1977 முதல் கல்வி தில்லி பல்கலைக்கழத் தமிழ்த்துறையில் முழுநேர விரிவுரையாளராக பணிநியமனம் செய்யப்பெற்று 04.11.1983 வரை ஏழாண்டுகள் சிறப்பாகப்

பணியாற்றினார். தில்லி பல்கலைக்கழகத் தமிழ்த்துறையில் பணியாற்றிய கால கட்டத்தில் தமிழ்த்துறைத் தலைவராகவும், தில்லி பல்கலைக்கழக பாடத்திட்டக்குழு உறுப்பினராகவும் தில்லி பல்கலைக்கழக தேர்வுக்குழு உறுப்பினராகவும், தில்லி மேனிலைப்பள்ளி தேர்வுக்குழு உறுப்பினாரகவும், சென்னைப் பல்கலைக்கழகத்தின் பேரவைக்குழு மற்றும் பாடத்திட்டக்குழு உறுப்பினராகவும் இருந்து சிறப்பாகப் பணியாற்றினார்.

ஆய்வுக் காலத்தில் ஆய்வு நெறியாளருடன் நட்பு அதிகமாகவே இவரது நன்னடத்தையைப் பாராட்டிய பேராசிரியர் முனைவர் க.ஆறுமுகனார் அவர்கள் 1978 ஆம் ஆண்டு தன்னுடைய மூன்றாவது மகள் நல்லநாயகியை மணம் முடித்து வைத்தார்.

இத்தம்பதியினர்க்கு 1979 ஆம் ஆண்டு ஒரு மகன் பிறந்தார். அவருக்குத் தம் மனைவி பெயரில் உள்ள நல்ல என்ற பகுதியையும், தம்பெயரில் உள்ள சிவம் என்ற விகுதியையும் இணைத்துப் புதுமையான நல்லசிவம் எனப் பெயரிட்டு மகிழ்ந்தார்.

தில்லிப் பல்கலைக்கழகத்தில் மார்ச் 1982 ஆம் ஆண்டு இவரின் "A study of Placenames in Tamil of Tanjore District between 600AD - 1300AD" என்னும் ஆய்வுக்காக முனைவர் பட்டம் பெற்றார்.

1981 ஆம் ஆண்டு தஞ்சையில் தமிழ்ப் பல்கலைக்கழகம் தொடங்கப்பெற்ற சூழலில் அப்போதைய துணைவேந்தர் முதுமுனைவர் மாண்பமை வ.அய்.சுப்பிரமணியம் அவர்களின் அழைப்பின் பேரில் பேராசிரியர் மு. சண்முகம்பிள்ளை அவர்கள் ஓலைச்சுவடித்துறைத் தலைவராக இருந்த காலத்தில் 07.11.1983 முதல் தமிழ்ப் பல்கலைக்கழகச் சுவடிப்புல ஓலைச்சுவடித்துறையில் இணைப்பேராசிரியராகப் பணிநியமனம் செய்யப்பெற்றார். அதுமுதல் தம் கல்விப் பணியைத் தமிழ்ப் பல்கலைக்கழக ஓலைச்சுவடித்துறையிலேயே தொடர்ந்தார்.

பேராசிரியர் மு. சண்முகப்பிள்ளை அவர்கள் ஒய்வு பெற்றதும் 19.06.1987 முதல் ஓலைச்சுவடித்துறை இணைப்பேராசிரியர் நிலையிலேயே துறைத்தலைமையையும் பெற்றார். அதுமுதல் சிவபதம் அடையும் நாள் வரை தொடர்ந்து இருபது ஆண்டுகள் துறைத்தலைமை வகித்த சிறப்புக்குரியவர். 01.10.1996 முதல் இணைப்பேராசிரியர் நிலையில் இருந்து பேராசிரியராகப் பதவி உயர்வு பெற்றார்.

பேராசிரியர் என்ற உயரிய நிலையை அடைந்த பிறகு பேராசிரியரை நாடி தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் பல பொறுப்புகள் வந்தன. புலத்தலைவர், தேர்வுக் கட்டுப்பாட்டாளர், பதிவாளர், பேரவை மற்றும் ஆட்சிக்குழு உறுப்பினர், நிதிக்குழு உறுப்பினர், பாடத்திட்டக்குழு உறுப்பினர், திட்டக்குழு உறுப்பினர் போன்ற பல உயரிய பதவிகள் தேடி வந்தன. தம் விடாமுயற்சியாலும், உழைப்பாலும் அறிவாலும் திறமையாலும் அப்பணிகளுக்கும் பல்கலைக்கழகத்திற்கும் பெருமை தேடித் தந்தார்.

ஆய்வியல் நிறைஞர் மற்றும் முனைவர் பட்டத் தேர்வாளராக இந்தியாவில் உள்ள சென்னை, மதுரை, கோவை, திருச்சி, திருவனந்தபுரம் ஆகிய ஊர்களில் உள்ள பல பல்கலைக்கழத்தில் இருந்தார்.

தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் முதல் துணைவேந்தர் பேராசிரியர் முதுமுனைவர் வ.அய்.சுப்பிரமணியம் அவர்களின் நல்லாசியுடன் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் பணிநியமனம் பெற்ற பேராசிரியர் அவர்கள் பேராசிரியர் முனைவர் ச. அகத்தியலிங்கம், பேராசிரியர் முனைவர் சி.பாலச்சுப்பிரமணியம், பேராசிரியர் முனைவர் ஔவை து.நடராஜன் பேராசிரியர் முனைவர் க.கருணாகரன், பேராசிரியர் முனைவர் கதிர். மகாதேவன், பேராசிரியர் முனைவர் இ.சுந்தரமூர்த்தி, பேராசிரியர் முனைவர் சி.சுப்பிரமணியம் ஆகிய மாண்பமை துணைவேந்தர்களின் காலத்தில் பணியாற்றி அவர்களின் அன்பையும் நீங்கா ஆதரவையும் பெற்றார்.

நீண்ட காலமாக நீரழிவு நோயின் பாதிப்பிற்கு ஆட்பட்டிருந்த பேராசிரியர் அவர்கள் தன்னுடைய உடல் தளர்ச்சியின் காரணமாக பதிவாளர் பொறுப்பிலிருந்து விலகினார். 1996 ஆம் ஆண்டு தன்னுடைய காலில் ஏற்பட்ட கொப்புளம் வெடித்ததின் விளைவாக தஞ்சாவூரில் உள்ள கீர்த்தனா மருத்துவமனையில் சேர்ந்து சிகிச்சை பெற்றார். இதுவே அவர் பெற்றுக்கொண்ட முதல் அலோபதி மருத்துவம். ஹோமியோபதி மற்றும் சித்த மருத்துவங்களில் மிகுந்த ஈடுபாடு கொண்ட பேராசிரியர் அவர்களுக்கு இம்மருத்துவம் மன நிம்மதியைத் தரவில்லை. அது முதற்கொண்டு பேராசிரியர் உடல்நிலை தளர்வாகவே காணப்பட்டது. இத்தளர்வின் காரணமாக தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் தாம் வகித்து வந்த தேர்வுக் கட்டுப்பாளர் பொறுப்பிலிருந்தும் விலகினார்.

தம் இறுதி மூச்சு வரை தில்லி பல்கலைக்கழகப் பணி தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் தாம் வகித்து வந்த தேர்வுக் கட்டுப்பாட்டாளர் பொறுப்பிலிருந்தும் விலகினார்.

தம் இறுதி மூச்சு வரை தில்லி பல்கலைக்கழகப் பணி தமிழ்ப் பல்கலைக்கழகப் பணி, சமூகப் பணி, ஆன்மீகப் பணி ஆகிய இந்நான்கையும் தம் உயிராகவே எண்ணி வாழ்ந்தவர் பேராசிரியர் முனைவர். த.கோ.பரமசிவம் அவர்கள்.

**பேராசிரியரின் கொள்கைகளுள் சில**

- ❖ திருமுறையே இவ்வுலகில் அனைத்து செல்வங்களையும் வழங்கும்
- ❖ நால்வரின் வழியே நலமிகு வழி
- ❖ தீதும் நன்றும் பிறர் தர வாரா
- ❖ அன்பே சிவம் அறிவே ஆண்டவன்
- ❖ எளிமையாக வாழ வேண்டும்.
- ❖ கடன் வாங்குதல் கூடாது.
- ❖ வருமானத்தில் மூன்றில் ஒரு பங்கு திருமுறைக்குச் செலவிடுதல்
- ❖ மக்கள் சேவையே மகேசன் சேவை

- தம்மால் இயன்றளவு பிறருக்குத் தம் உடல் பொருள் ஆவி மூன்றாலும் உதவுதல்
- தம்மை வருத்தி பிறரை உயர்த்துதல்
- தன்னிலை தாழாமல் வாழ்தல்
- கொள்கைப் பிடிப்புடன் வாழ்தல்
- இன்பமும் துன்பமும் ஒன்றென வாழ்தல்

போன்ற பல கொள்கைகளைத் தமக்குள் வகுத்துக் கொண்டு கடைசிவரை வாழ்ந்து காட்டியவர் பேராசிரியர் த.கோ. பரமசிவம் அவர்கள்.

பேராசிரியரின் கல்விப் பணிகள்

**1. நூல் வெளியீடுகள்**

- நற்றிணை எடுத்துக்காட்டுப் படிவம்
- தமிழ்ச்சுவடி விளக்க அட்டவணை 1(பதி.)
- தமிழ்ச்சுவடி விளக்க அட்டவணை 2(பதி.)
- தமிழ்ச்சுவடி விளக்க அட்டவணை 3பதி.)
- தமிழ்ச்சுவடி விளக்க அட்டவணை 4பதி.)
- தமிழ்ச்சுவடி விளக்க அட்டவணை 5(பதி.)
- தமிழ்ச்சுவடி விளக்க அட்டவணை 6(பதி.)
- சுவடிப்பதிப்பு நெறிமுறைகள்
- இலக்கணச் சூடாமணி(பொ.பதி.)
- நோயும் மருந்தும்
- தண்டபாணி சுவாமிகள் ஆய்வு மாலை- இரண்டு தொகுதிகள்(பதி)
- குமரகுருபரர் ஆய்வு மாலை- மூன்று தொகுதிகள்(பதி.)
- பெரியபுராண ஆய்வு மாலை-இரண்டு தொகுதிகள்(பதி.)
- திருப்போரூர் மற்றும் வடக்குப்பட்டு -18 ஆம் நூற்றாண்டு ஆவணங்கள்
- Tirupporur & Vadakkuppattu : The 18th Century Accounts
- சிவப்பிரகாசர் ஆய்வு மாலை (பதி.)

- திருஞானசம்பந்தர் ஆய்வு மாலை-இரண்டு தொகுதிகள் (ப.தி)
- திருநாவுக்கரசர் ஆய்வு மாலை-இரண்டு தொகுதிகள்(ப.தி)
- சாந்தாதி அசுவமகம்(பதி.)
- தமிழ் உணர்த்தும் பக்தி-மூன்று தொகுதிகள்(ப.தி)
- மாணிக்கவாசகர் ஆய்வு மாலை-இரண்டு தொகுதிகள்(ப.தி)

## 2.பணிப்பட்டறைகள்

- பேரூர் தவத்திரு சாந்தலிங்க அடிகளார் தமிழ்க் கல்லூரியும் கோவை சக்தி அறக்கட்டளையும், தமிழ்ப பல்கலைக்கழக ஓலைச்சுவடித்துறையும் இணைந்து 23.3.1984-30.3.1984 வரை ஓலைச்சுவடிப் பயிற்சிப் பண்ணை நடத்தினார்.

- பல்கலைக்கழக நல்கைக்குழு உதவியுடன் சுவடிகளைத் தேடித் தொகுத்தல், அறிவியல் முறைப்படி, பாதுகாத்தல், பட்டியலிடுதல், பதிப்பித்தல் என்ற பொருளில் தமிழகம் முழுவதிலிருந்து 50 பள்ளி ஆசிரியர்கள் மற்றும் கல்லூரி மாணவர்களுக்காக 9.5.1998 -30.5.1998 ஆகிய 21 நாட்கள் சுவடியில் கோடைப்பள்ளி நடத்தினார்.

## 3. நடத்திய அறக்கட்டளை நிகழ்ச்சிகள்

- 1989 முதல் தஞ்சாவூர் சீ.நா.மீ. உபயதுல்லா அவர்களின் அறக்கட்டளை மூலம் ஆண்டு தோறும் சொற்பொழிவுகள் நிகழ்த்தச்செய்தார். இவ்வறக்கட்டளை வழி அன்னாரது கால கட்டத்தில் 19 சொற்பொழிவுகள் நிகழ்த்தச் செய்தார்.

- 2002 ஆம் ஆண்டு காசி குமரகுருபரர் மாநாட்டு நினைவு அறக்கட்டளையின் மூலம் இரண்டு சொற்பொழிவுகளையும் ஐந்து திருமுறை இசை நிகழ்ச்சியையும் நடத்தினார்.

## 4. நடத்திய கருத்தரங்குகள்

- சுவடிப்பதிப்பு நெறிமுறைகள் -1988
- மொழி வளர்ச்சியில் சுவடிப் பதிப்பித்தலின் தேவை-1989
- சுவடிப்பதிப்பு வரலாறு1-1990

- வையாபுரிப்பிள்ளை நூற்றாண்டு விழா-கருத்தரங்கு-1991
- சுவடிப்பதிப்பு வரலாறு2 -1994
- சுவடிப்பதிப்பு வரலாறு3 -1996
- நாவலர் ந.மு.வேங்கடசாமி நாட்டார்-2002

**5. கட்டுரைகள்**

நூற்றுக்கும் மேற்பட்ட ஆய்வுக் கட்டுரைகள் எழுதி இதழ்கள் குடமுழுக்கு மலர்கள், கருத்தரங்க மலர்கள், ஆய்விதழ்கள் போன்றவற்றில் வெளியிட்டுள்ளார்.

**6. ஆய்வு நெறியாளர்**

- ஆய்வியல் நிறைஞர் பட்டம்-6
- முனைவர் பட்டம்-4

**பேராசிரியரின் சமயப் பணிகள்**

**1. நடத்திய மாநாடுகள்**

- 1998இல் கோவை கௌமார மடாலயத்துடன் தமிழ்ப்பல்கலைக்கழக ஓலைச்சுவடித்துறை இணைந்து கோவை கௌமார மடாலயத்தில் வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகளின் நூற்றாண்டு விழா மாநாடு.

- 1999இல் திருப்பனந்தாள் காசி மடத்துடன் தமிழ்ப் பல்கலைக்கழக ஓலைச்சுவடித்துறை இணைந்து வாரணாசியில் ஸ்ரீகுமரகுருபரர் ஆய்வு மாநாடு.

- 2002இல் பேரூர் (கோவை) ஆதீனத்துடன் தமிழ்ப் பல்கலைக்கழக ஓலைச்சுவடித்துறை இணைந்து பேரூர் ஆதீனத்தில் சிவப்பிரகாசர் ஆய்வு மாநாடு.

- 2002இல் திருப்பனந்தாள் காசி மடத்துடன் களம்பூர் கோவிந்தசாமி அடிகளார் அறக்கட்டளை இணைந்து வாரணாசியில் திருநாவுக்கரசர் ஆய்வு மாநாடு.

❖ 2003இல் திருப்பனந்தாள் காசி மடத்துடன் களம்பூர் கோவிந்தசாமி அடிகளார் அறக்கட்டளை இணைந்து வாரணாசியில் திருநாவுக்கரசர் ஆய்வு மாநாடு.

❖ 2005 இல் திருப்பனந்தாள் காசி மடத்துடன் களம்பூர் கோவிந்தசாமி அடிகளார் அறக்கட்டளை இணைந்து ரிஷிகேஷத்தில் தமிழ் உணர்த்தும் பக்தி மாநாடு.

❖ 2005 இல் திருப்பனந்தாள் காசி மடத்துடன் களம்பூர் கோவிந்தசாமி அடிகளார் அறக்கட்டளை இணைந்து வாரணாசியில் சுந்தரர் ஆய்வு மாநாடு.

❖ 2006 திருப்பனந்தாள் காசி மடத்துடன் களம்பூர் கோவிந்தசாமி அடிகளார் அறக்கட்டளை இணைந்து வாரணாசியில் மாணிக்கவாசகர் ஆய்வு மாநாடு.

**தொண்டுகள்**

❖ ஆண்டுதோறும் தம் இல்லத்தில் சமயக்குரவர் நால்வரின் திருநட்சத்திரங்களில் அவரவர்கள் திருமுறை இசை விழாவும், தம் தமையனார் ஐப்பசி சதயத்தில் திருமுறை விழாவும் தஞ்சையில் விடாது நடத்தி வந்தார்.

❖ 1999 ஆம் ஆண்டு நடந்த ஸ்ரீகுமரகுருபரர் ஆய்வு மாநாட்டு மீதப் பணத்தில் தமிழ்ப் பல்கலைக்கழக ஓலைச்சுவடித்துறையில் ஸ்ரீகுமரகுருபரர்பெயரில் அறக்கட்டளை ஒன்றை நிறுவி ஆண்டு தோறும். இயல், இசை, நாடக நிகழ்ச்சிகளை நடத்தி வந்தார்.

❖ தம் தந்தையார் களம்பூர் கோவிந்தசாமி அடிகளார் பெயரில் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் அறக்கட்டளை ஒன்றை நிறுவி தாமே அவ்வறக்கட்டளை சார்பாக திருமுறை இயல், இசை, நிகழ்ச்சிகளை நடத்தி வந்தார்.

❖ திருமுறை இசை நிகழ்ச்சிகள் தமிழ் ஆய்வரங்குகள் மாநாடுகள் பலவற்றுக்கும் நிதியும் அறிவுரையும் வழங்கினார்.

❖ ஆண்டுதோறும் வாரணாசியில் திருமுறை மாநாடுகளை நடத்தி 5000 க்கும் மேற்பட்டோர் காசி யாத்திரை மேற்கொள்ளத் தூண்டினார்.

❖ திருமுறை மாநாடுகளில் திருஞானசம்பந்தர் நினைவாக 500 பேருக்கு வெண்கலத் தாளமும், திருநாவுக்கரசர் நினைவாக 500 பேருக்கு உழவாரமும், சுந்தரர் நினைவாக 500 பேருக்கு ஊன்றுகோலும், மாணிக்கவாசகர் மற்றும் ஸ்ரீகுமரகுருபரர் நினைவாக இவர்களின் திருவுருவம் பொறித்த செப்பு டாலர் 500 பேருக்கு தம் சொந்த செலவில் வழங்கியவர்.

❖ திருமுறை அன்பர்கள், அடியார்கள், ஆர்வலர்கள், போன்றோர் எவரும் உருத்திராக்கம், கங்கை சொம்பு, திருமுறை நூல்கள் என எது கேட்டாலும் இலவசமாக வழங்கும் தன்மையுடையவர்.

❖ தம்மால் இயன்ற அளவு அன்னதானம் பல இடங்களில் நடத்தியும் தண்ணீர்ப்பந்தல் முதலான பல அறங்களை நிறுவியும் நிர்வகித்து வந்தவர்.

❖ தம் வருமானத்தில் மூன்றில் இரண்டு பங்கு பொது நிகழ்ச்சிகளுக்காகவும் சமயப் பணிகளுக்காகவும் தம் வாழ்நாள் முழுவதும் செலவிட்டவர்.

### 3. ஐம்பொன் திருமேனிகள் அன்பளிப்பு

களம்பூர் கோவிந்தசாமி அடிகளார் அறக்கட்டளையின் காணிக்கை என்ற பெயரில் கீழ்க்கண்ட இடங்களில் தம் சொந்த செலவில் ஐம்பொன் திருமேனிகளை நிறுவியவர்.

❖ ரூ. 25,000 செலவில் திருஞானசம்பந்தர் திருமேனி திருநல்லூர்ப் பெருமணம் (ஆச்சாள்புரம்) திருஞானசம்பந்தர் மடம்.

❖ ரூ 25,000 செலவில் திருநாவுக்கரசர் திருமேனி -களிமேடு அப்பர் திருக்கோயில்

❖ ரூ 1,00,000 செலவில் ஸ்ரீகுமரகுருபரர் திருமேனி -காசித் திருமடம் திருப்பனந்தாள்.

❖ திருமுறை அன்பர்களின் பொருளுதவியோடு சொந்தப் பணத்தில் ரூ 40,000 ஐ இணைந்து ஸ்ரீகுமரகுருபரர் திருமேனி - காசி மடம் (3.11.2006) அன்று வாரணாசி.

## திருமுறை இல்லம்

தஞ்சை, கீழவீதி மணிகர்னீசர் கோயில் தெருவில் கதவிலக்கம் எண். 926இல் உள்ள தம்முடைய இல்லத்தைத் திருமுறை இல்லமாக மாற்றி வாழ்ந்தவர் பேராசிரியர் முனைவர் த.கோ. பரமசிவம் அவர்களே. தம் இல்லச் சுவர்களில் எல்லாம்(குளியலறை உட்பட) திருமுறைப் பாடல்களை எழுதி வைத்தவர். மேலும். இல்ல முகப்பிலேயே திருக்கேதார கங்கைநாதர் திருக்கோயிலைத் தாமே (கட்டிட வேலைகள், ஆசாரி வேலைகள், மின்சார, டைப் வேலைகள் அனைத்தும் அறிந்தவர் கட்டிக் குடமுழுக்கை தமிழ் முறைப்படி செய்து தினசரி வழிபட்டு வந்தவர் பேராசிரியர். எங்கும் திருமுறை, எதிலும் திருமுறை என வாழ்ந்து காட்டியவர்.

# ச. சாம்பசிவனாரின் படைப்பும் பதிப்பும்

**மு. கண்ணையன்**
உதவிப்பேராசிரியர்
மன்னர் சரபோஜிக் கல்லூரி.

தேனி மாவட்டத்தைச் சார்ந்த வள்ளல்நதி என்று கண்டமநாயக்கனூரில் க.ச. சங்கரலிங்கம், தில்லை என்ற மீனாட்சி ஆகியோருக்கு மகனாக 29-09-1929 இல் பிறந்தார். படிப்படியாக வாழ்விலும் பணிநிலையிலும் உயர்ந்தார். பல தமிழறிஞர்களின் நட்பும் ஆதரவும் இவருக்குண்டு. மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றியுள்ளார். இவரிடம் பயின்ற மாணவர்கள் பல நிலைகளில் உயர்ந்து சிறப்புடன் வாழ்ந்து வருகின்றனர். தமிழ் இலக்கண, இலக்கியம், சைவ சமயம், சைவ சித்தாந்தம் ஆகியவற்றில் ஆழங்காற் புலமை பெற்றவர்.

மாணவர்களுக்குப் பாடங்களை நடத்துவதில் நகைச்சுவை உணர்வுடன் நடத்துபவர். நூற்றுக்கும் மேற்பட்ட நூல்களை எழுதியுள்ளார். நூலாசிரியர், உரையாசிரியர், பதிப்பாசிரியர், சிறுகதை ஆசிரியர், இதழாசிரியர், புலவர், பண்டிதர், நாடகாசிரியர் என்றிப்படிப் பன்முக ஆற்றல் பெற்றவர். திருக்குறளுக்கு உரை எழுதித் திருக்குறள் வழி நடந்து வருபவர்.

குறள்மணிகள் அறுநூறு(1969), வள்ளுவர் தெள்ளுரை (1970) , கந்தபுராணம்: வள்ளியம்மை திருமணப்படலம் உரை (1970), கண்ணன் பிள்ளைத்தமிழ் மூலமும் பொழிப்புரையும்(1971), அப்பர் குறுந்தொகை ஐம்பது மூலமும் பொழிப்புரையும்(1972), தண்டலையார் சதகம் மூலமும் பொழிப்புரையும்(1972), மாமறை முனிவர் (1973), திருக்குற்றாலக் குறவஞ்சி மூலமும் குறிப்புரையும் (1977), தொல்காப்பியம் எழுத்ததிகாரம் மூலமும் குறிப்புரையும் (1978), தொல்காப்பியம் பொருளதிகாரம் மூலமும் பகுதி 2 மூலமும் குறிப்புரையும்

(1978), தொல்காப்பியம் பொருளதிகாரம் பகுதி 1 மூலமும் குறிப்புரையும் (1980), சிவனாரின் வள்ளுவர் தெள்ளுரையும் சொல்லடைவும் (1998) ஆகிய நூல்களைப் பதிப்பித்துள்ளார். தொல்காப்பியம் முழுவதற்கும் விரிவான முறையில் கருத்துரை வழங்கியுள்ளார்.

திருக்குறளுக்குப் பல உரைகள் வெளிவந்திருந்தாலும் சொல்லடைவுடன் கூடிய சிவனாரின் வள்ளுவர் தெள்ளுரையும் சொல்லடைவும் என்ற நூல் முதல் பதிப்பாகும். திருக்குறளுக்கு இதற்குமுன் சொல்லடைவுடன் கூடிய பதிப்பை யாரும் வெளியிடவில்லை. இந்நூற்பதிப்பு முறை வருமாறு:

1. அதிகாரத் தலைப்புடன், அதற்கு நேராக அதன் பொருளும் குறித்தல்.
2. மூலபாடத்தை மாற்றமின்றி அப்படியே வெளியிடல்.
3. அதனையடுத்து, அனைவரும் எளிதில் படிப்பதற்கு ஏதுவாகச் சீர்களைப் பிரித்து வெளியிடல்.
4. காமத்துபாலில், 'தலைவன் கூற்று, தலைவி கூற்று, தோழி கூற்று' எனப் பிரித்துக் காட்டல்.

நூலின் இறுதியில் 'சொல்லடைவு' இடம்பெற்றுள்ளது.

இடப்பக்கத்தில் அதிகார எண்ணும் தலைப்பும் உள்ளன. வலப்பக்கத்தில் பிறை வளைவிற்குள் அந்த அதிகாரத்தின் பொருள் உள்ளது. சான்று: 45 பெரியாரைத் துணைக்கோடல் (பேரறிவுடையாரைத் துணையாகக் கொள்ளல்)

ஒவ்வொரு அதிகாரத்திலும் அமைந்துள்ள குறள் அமைப்பு முறையில் சான்றுக்கு ஒரு குறள் வருமாறு:

**611. அருமை யுடைத்தென் றசாவாமை வேண்டும்**
**பெருமை முயற்சி தரும்.**

**அருமை உடைத்துஎன்று அசாவாமை வேண்டும்**
**பெருமை முயற்சி தரும்.**

தமது சிறுமை நோக்கி 'நாம் இச்செயலைச் செய்து முடித்தல் இயலாது' என்று கருதித் தவிராமல் இருக்க வேண்டும் அதைச் செய்வதற்கு ஏற்ற பெருமையைத் தமக்கு முயற்சி உண்டாக்கும்.

இப்பதிப்பில் முன்னுரை, அதிகாரவகராதி, அறத்துப் பால், பொருட்பால், காமத்துப்பால், சொல்லடைலவு, பாட்டு முதற்குறிப்பு அகராதி ஆகியன உள்ளன.

# சொக்கலிங்க சுவாமிகளின் வாழ்க்கை வரலாறும், பதிப்புப் பணியும்

**முனைவர் செ. கற்பகம்**
உதவிப்பேராசிரியர்
இசைத்துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

பிறவிகளில் சிறந்த பிறவி மனிதப்பிறவி. அதிலும் மனிதனாகப் பிறந்தவர்கள் தன்னலம் மட்டும் பாராமல் பிற ஜீவன்களும் நலமுடன் வளமுடன் வாழவேண்டும் என்ற உயரிய எண்ணம் கொண்டு வாழும்போது மனிதன் என்ற நிலையில் இருந்து மாமனிதன் என்ற பெருநிலைக்கு உயருகிறான். அப்படி ஒவ்வொரு மனிதனும் அன்பு, தயை, கருணை, இரக்கம், தர்மம், பணிவு போன்ற நற்பண்புகளுடன் வாழ்வதற்கு வழிகாட்டி அருளுகின்ற குரு பீடங்களாக ஆதினங்களும், மடாலயங்களும், பீடங்களும் விளங்கி வருகின்றன. இத்தகு அருள்நிறைந்த எண்ணற்ற நற்பணிகளையும், சமுதாய சேவைகளையும், ஆன்மீக அருட்பணிகளையும் தொய்வின்றி தளராது செய்து வந்தவர் தஞ்சாவூர் அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருமடத்தின் மடாபதி பொறுப்பில் இருந்த சொக்கலிங்க சுவாமிகள் அவர்களின் வரலாற்றையும், அவர் பதிப்பித்த நூற்களைப் பற்றியும் காண்போம்.

## கோவிந்தம்மையார் தோற்றம்

தஞ்சை அரண்மனையில் சித்த மருத்துவராகப் பணிபுரிந்த சிவத்திரு நாராயணசாமி அவர்கட்கும், பரிபரணத்தம்மையாருக்கும் சற்றேறக்குறைய 1847 ஆம் ஆண்டு கோவிந்தம்மையார் என்னும் மெய்ஞ்ஞானியார் தோன்றினார். இவர் தொடக்கப்பள்ளியில் பயிலும்போதே இவர்தம் 8வது வயதில் திருமணம் செய்தனர். திருமணமான 8ஆம் திங்களில் அவர்தம் கணவர் சிவபதம் அடைந்தார். அதுமுதல் அவருக்கு மெய்ஞ்ஞான நாட்டம் தோன்றியது. இவர் காசி

இராமேச்சுரம் போன்ற திருத்தலங்களுக்குத் தலயாத்திரை மேற்கொள்ள விரும்பினார்.

இவரது தந்தையார் நாராயணசாமி பிள்ளையும், சொக்கலிங்க சுவாமிகளின் பாட்டனாருமாகிய சிவத்திரு இராமசாமிப் பிள்ளையும் அம்மையாரை அழைத்துக்கொண்டு காசி, இராமேச்சுரம் சென்று தரிசித்து மதுரையை அடைந்தனர். சொக்கலிங்க சுவாமிகளின் பாட்டனார் தஞ்சை அரண்மனையில் பண்டங்கள் பாதுகாப்பு மேலாளராகப் பணிபுரிந்து வந்தார்.

### கோவிந்தம்மையாருக்குச் சிவதீட்சை

கோவிந்தம்மையாரும், அவர்தம் தகப்பனாரும், இராமசாமிப் பிள்ளையும் திருஆலவாயை அடைந்து, சொக்கேசப் பெருமானை வணங்கி, பெருமான் திருமுன் அமர்ந்திருந்தனர். அப்பொழுது அங்கே சிவயோகியார் ஒருவர் வந்தார். அவரைக் கண்டதும் அம்மையார் எழுந்து, விழுந்து வணங்கியதும் நமச்சிவாய என்று திருநீற்றினைப் புருவ நடுவில் பூசிவிட்டு, சிரசில் கை வைத்து சிவஞானம் பெறுக என்று கூறி சற்றுநேரத்தில் மறைந்தருளினார். இவ்வாறு வந்த சிவயோகியார் சொக்கலிங்கப் பெருமானே என்றுணர்ந்தார்கள். அப்பெருமான், கோவிந்தம்மையாரைப் பார்த்த அளவில் திருட்டி தீக்கையும், சிரசில் கை வைத்த அளவில் (ஸ்பார்ச்) தொடல் தீக்கையும், ஐந்தெழுத்தோதியதனால் பஞ்சாட்சர உபதேசமும், புருவ நடுவினைத் தொட்டதால் சிவஞானத் தோற்றமும், திருநீறு தரித்ததால் மெய்யுணர்வும் பெற்றார். உடனே அங்கேயே அமர்ந்தார். நிட்டை கூடியது. அரைமணி நேரம் சலனமற்றிருந்ததைக் கண்ட, தந்தையாரும், இராமசாமிப் பிள்ளையும், அலறி அழுது பெருமானிடம் முறையிடவே நிட்டை தெளிந்தே அம்மையார், இந்த மீனாட்சி சொக்கநாதரை விட்டுவிட்டுத் தஞ்சை வரமாட்டேன் என்றார். இராமசாமிப் பிள்ளை, ஒரு மீனாட்சி சொக்கேசர் படத்தினை வாங்கி, "இதோ நீங்கள் கேட்ட மீனாட்சி சொக்கநாதர் இவர்களையும் அழைத்துக்கொண்டு நாம் ஐவரும் தஞ்சை செல்வோம்" என்றதும் சம்மதித்து புறப்பட்டுத் தஞ்சை வந்து

சேர்ந்தார்கள். வீடுவந்து சேர்ந்தது முதல் தெருவாயில் கடந்து வெளியில் செல்வதில்லை என்று உறுதி பூண்டார்கள்.

## மீனாட்சி சுந்தரேசுவரர் திருமடத்தோற்றம்

அதுமுதல் அம்மையார் வசித்து வந்த தஞ்சை தத்தோஜியப்பா சந்து 811 ஆம் எண்ணுள்ள வீடு "அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருமடம் ஆனது வீட்டின் தென்மேற்கு மூலையில் உள்ள ஒரு அறையில் தாம் தனித்து தவம் செய்யவேண்டும்" என்று கூறி, அதில் அமர்ந்து, தியானமும் தவமும் செய்து 12 திருமுறைகளையும், திருவருட்பா 6 திருமுறைகளையும் படித்தின்புறுவார். கல்லாமலே கலைஞானம் கூடி, சைவசித்தாந்த சாத்திரங்கள் பதினான்கையும் தாமே பயின்றார்.

ஒருநாள் இவர் தவம் செய்த வீட்டறை இடிந்து விழுந்துவிட்டது. இடிபாடுகளை அகற்றியபின், இவர்கள் அமர்ந்து தவம் செய்த இடத்தில் அரசமரமும், விளக்கெரிந்த இடத்தில் வேப்பமரமும் முளைத்தெழுந்தன. தானே முளைத்தெழுந்த இவைகள் அதிசய அமைப்புடன் விளங்கின. அரசமரம் ஓங்கி வளர்ந்ததால் அரசுக்கு இடுப்பில் பரிவட்டம் கட்டி மேலாடை அணிவித்தார். வேம்பு இரு கைகளையும் நீட்டியவாறு வளர்ந்து நிற்கவே, அதற்கு ரவிக்கையும் சேலையும் கட்டி அழகுபடுத்தி மகிழ்ந்தார்.

23.05.1927ல் சிறந்த முறையில் அரச வேம்பிற்கு திருமணம் செய்தார். பின்னர் அதற்கு குடமுழுக்கு செய்ததோடு, மீனாட்சி சொக்கநாதருக்கும் (படத்திற்கும்) பூசனைகள் நிகழ்த்தி வந்தார். நாள்தோறும் திருவிளையாடற்புராணம் படிப்பதும், தாம் உணர்ந்தவற்றை எல்லாம் மற்றவர்களுக்கு எடுத்துச் சொல்லி, யாருமற்ற நிலையில் தனியாக இருந்தார்.

## சொக்கலிங்கம் சுவாமிகள் தோற்றம்

கோவிந்தம்மையாரின் பக்கத்து வீட்டில் இராமசாமிப்பிள்ளை வசித்து வந்தார். அவர் தம் மகன் வீரப்பிள்ளை. இவருக்கு ஒரே பெண்குழந்தை மட்டும் இருந்தது. 8 ஆண்டுகள் வரை ஆண் குழந்தை

இல்லாததால், இராமசாமிப்பிள்ளை தஞ்சை, குறிச்சித் தெருவில் உள்ள ஒரு பெண்ணைப் பேசி வந்து, அம்மையாரிடம் கூறினார். அதுகேட்ட அம்மையார், இராமசாமிப் பிள்ளையிடம் "ஒரு ஆண்மகன் பிறப்பான், அவனே இம்மடத்தின் வாரிசாகவும் வருவான். சிறந்து விளங்குவான், நீங்கள் இப்பொழுதே போய் பெண் வேண்டாமென்று சொல்லி வாருங்கள்" என்று அனுப்பவே அவர்களும் அவ்விரவில் சென்று தெரிவித்து வந்தனர்.

வீரப்பிள்ளை அவர்களின் துணைவியார் அம்மாக்கண்ணு அம்மையார் வீட்டுக்கு விலக்கான 4 ஆம் நாள் விடியலில் நீராடி, இருதெருவுக்கும் அலகிட்டு மெழுக்கும் இட்டு தூய்மை செய்யும்போது அழைத்து, ஒரு மிளகினைத் தந்து, இதே முழுக்காக இருந்து ஒரு ஆண் மகவினைப் பெறுவாய் என்று கூறவே அனைவரும் மகிழ்ந்தனர். இராமசாமிப்பிள்ளையவர்கள், ஆண்மகன் பிறந்தால் 108 பெரிய லட்டு வழங்குவதாக கூறி வேண்டினார்.

அவ்வாறே 11.12.1923இல் 862 ஆம் வீட்டில் சொக்கலிங்க சுவாமிகள் தோன்றினார். அக்குழந்தையை மேள தாளத்துடன் தூக்கிச்சென்று அம்மையாரிடம் காண்பித்தனர். அம்மையார் குழந்தையை அரசவேம்பு திருவடிகளில் இடச்சொன்னார். பின்னர் அக்குழந்தையின்னை எடுத்து தன் பரிவட்டத்தால் துடைத்து, திருநீறு சாத்தி, கழுத்தில் உருத்திராக்கம் அணிவித்து காதில் ஐந்தெழுத்தோதி "சொக்கலிங்கம்" என்று திருநாமம் சூட்டினார். அதனைக் கேட்டு அனைவரும் மகிழ்ந்தனர். இனிப்பு கொடுத்து தன் சந்தோஷத்தைப் பகிர்ந்து கொண்டார்.

**தீச்சை பெறல்**

சொக்கலிங்க சுவாமிகள் வளர்ந்து சமயம், விசேடம் ஆகிய தீட்சை பெற்றார். 1933 ஆம் ஆண்டு சிவபூசையுடன் திருமடத்தின் இளவரசரானார். கரந்தை தமிழ்ப்புலவர் கல்லூரியில் 4 ஆண்டுகள் பயின்று 1955 ஆம் ஆண்டு தேர்ந்து புலவர் பட்டம் பெற்றார்.

இவர் வளரும் போதே பெரியபுராணம், திருவிளையாடற் புராணம், திருமுறைகள், சைவ சித்தாந்தம் மற்றும் சில கலைகளைக் கற்றுத் தேர்ந்தார். திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகளிடம் கௌமார தீக்கைப் பெற்றார்.

## அம்மையார் மறைவும் மடாதிபதி பொறுப்பும்

அம்மையார் தனது 95வது வயதில் 1.4.1955இல் இறையடி கலந்தார். அவர் இறப்பதற்கு நான்கு நாட்கள் முன்பு நான் விளம்பி ஆண்டு, பங்குனித் திங்கள் 19ஆம் நாள் உத்திராட விண்மீன் கூடிய நன்னாளில் இரவு 9 மணிக்கு முக்தியடைவோம் என்று கூறினார். உடனே, சொக்கலிங்க சுவாமிகட்கு ஆச்சார்யகபிடேகம் செய்து பீடத்தில் அமர்த்திப் பெருவிழாச் செய்தனர். இவர் பீடமேற்ற நான்காம் நாள் அம்மையார் சிவன் முக்தியடைந்தார். அதுமுதல் திருமடத்தின் அதிபராக விளங்கினார்.

## திருமடப்பணிகள்

திருமடத்தின் அதிபராகப் பொறுப்பேற்றவுடன் அருள்மிகு அங்கயற்கண்ணிக்கும் சொக்கேசருக்கும் படிவம் (கற்சிலைகளை) நிறுவிக் குடமுழுக்குச் செய்தார். பல தெய்வங்கட்கு ஐம்பொன் சிலைகள் அமைத்து, திருக்கல்யாணம், பிட்டுக்கு மண் சுமந்த கோலம் முதலானவைகளைச் செய்து மகிழ்ந்தார்கள்.

## பணிகள்

சொக்கலிங்க சுவாமிகள் 1960 முதல் தஞ்சை சரஸ்வதி மகாலில் தமிழ்த்துறைத் தலைவராகப் பணியேற்று ஓலைச்சுவடிகளிலிருந்து 40க்கும் மேற்பட்ட நூல்களை வெளியிட்டுள்ளார். அவர் சரஸ்வதி மகால் நூலகத்தில் வெளியிட்டுள்ள நூல்கள்

1. ஆசிரிய நிகண்டு பாகம் 1 மற்றும் 2
2. சீவக சிந்தாமணி அம்மானை
3. தர்மநெறி நீதிகள்
4. ததீசிப்புராணம் வினாவிடைப் புராணம்

5. ஞானக்குறவஞ்சி
6. கமலாலய அம்மன் பிள்ளைத்தமிழ்
7. பரசமயகோளரியார் பிள்ளைத்தமிழ்
8. ஸ்ரீ பார்சுவநாதர் அம்மானை
9. சமாதிலிங்கப் பிரதிட்டை
10. சோமயாகப் பெருங்காவியம்
11. சுமிருதி நிகண்டு
12. துரோபதை அம்மானை
13. தஞ்சை வெள்ளை பிள்ளையார் குறவஞ்சி
14. திருவிளையாடற்புராணம் பாகம் 1, 2
15. வடிவேல் சதகம்
16. வைகுண்ட அம்மானை
17. வலைவீசு புராணம்

போன்றவையாகும்.

1985 ஆம் ஆண்டு சரசுவதி மகாலில் ஓய்வு பெற்றதும் தஞ்சை, தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் 10 ஆண்டுகள் ஓலைச்சுவடித்துறையில் பணிபுரிந்தார். இறக்கும் தருவாய்வரை தமிழ்ப் பல்கலைக்கழக ஓலைச்சுவடித்துறையில் நடைபெற்று வரும் நிகழ்வுகளில் பங்குகொண்டு ஓலைச்சுவடி பயிற்சி முறையை அனைவருக்கும் இலவசமாக அளித்து வந்தார்.

### முத்தமிழ் வித்தகர்

தஞ்சையை ஆண்ட இராஜஸ்ரீ சத்ரபதி மகாராஜா அவர்களிடம் அளவு கடந்த அன்புடையவர். சரபோஜி மன்னரின் 200வது பிறந்தநாள் விழா தஞ்சை சங்கீத மகாலில் நிகழ்ந்தது. முன்னாள் மதுரை ஆதினம் சோமசுந்தர தேசிகஞானசம்பந்த பராமாசரிய சுவாமிகள் தலைமை வகித்தார். அப்பொழுது, கொட்டையூர் சிவக்கொழுந்து தேசிகர் இயற்றிய சரபோஜி பூபால குறவஞ்சி நாடகத்தினை, தானே சரபோஜி மன்னராகவும், குறத்தியாகவும் நடித்து மதுரை ஆதீனத்திடம் முத்தமிழ் வித்தகர் என்ற பட்டம் பெற்றார்.

**சரபோஜி பிள்ளைத்தமிழ்**

மாமன்னர் சரபோஜி மன்னர் மீது கொண்ட ஈடுபாட்டினை வெளிகாட்ட மன்னர் சரபோஜி பிள்ளைத்தமிழ் என்ற நூலை 100 பாடல்களுடன், அரண்மனை சிறப்புகளுடன் இயற்றியுள்ளார். மாமன்னர் சத்ரபதி இராஜா ராம் சாகேப் சத்ரபதி அவர்களிடம் வரலாற்று செய்திகளைப் பேசி அளவளாவி, அவர்களின் அன்பையும், பாசத்தையும் பெற்றவர். தஞ்சை அரசப் பரம்பரையின் அன்பையும் பாராட்டையும் பெற்றவர்.

சத்ரபதி துளஜேந்திர ராஜா சாகேப் அவர்களின் மணிவிழாவில் தம் திறமையினால், இராசராசன் கல்வெட்டுப் போலவே வாழ்ந்து தயாரித்து வாசித்தளித்து அனைவரின் பாராட்டினையும் பெற்றவர்.

**தமிழ்வழி வழிபாட்டு முறைகள்**

சிவபூஜை திருமணம், குடமுழுக்கு, புதுமனை புகுவிழா அனைத்தையும் தமிழ்வழி நடத்தியவர். ஓலைச்சுவடிகளில் மறைந்து கிடக்கும் நூல்களைப் படியெடுத்துப் பதிப்பித்து வெளியிடும் பணியோடு, சரசுவதி மகாலின் சுவடிகளுக்கு முழுமையும் விளக்கப்பட்டியல் தயாரித்த சிறப்பு இவருக்கு உண்டு. இவர் தஞ்சை பெருவுடையார் திருக்கோயிலில் நிகழும் இராசராசனின் ஐப்பசி சதயவிழாவில் பங்கேற்று தேவார திருமுறை விண்ணப்பத்துடன் நகர்வலம் வருவார். பெருவுடையார் விழாக்களிலும், 108 குத்துவிளக்கு பூசையினையும் சிறப்பாக நடத்தித்தந்தார்.

சுவாமிகள் சுறுசுறுப்பு, மலர்ந்த முகம், தெளிவான சொல் ஆகியனவும் நெறி பிறழாத வாழ்க்கையை வாழ்ந்தவர். சுவாமிகள் வாழ்வு சைவ சித்தாந்த வாழ்வாகவே இருந்தது. வருகின்ற அன்பர்கட்கு தீட்சை வழங்கினார். மன்னை சிவனடியார் திருக்கூட்டத்தின் சார்பிலும், பூசாரிகள் பேரவை சார்பிலும் ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்களுக்கு

தீட்சைகளும், சிவபூசைகளும் வழங்கியுள்ளார். தமிழில் 232 குடமுழுக்குகள் செய்துள்ளார். பல்வேறு ஆதீனங்களுடன் தொடர்புடையவர். ஆதீன மடாதிபதிகளால் நன்கு மதிக்கப்படுபவர்.

சரஸ்வதி மகால் நூலகத்தில் உள்ள திவாகர நிகண்டுகளை பேராசிரியர் மு.சண்முகம் பிள்ளை ஆய்வு செய்வதற்கு உள்ள துணையாக இருந்தார் என தமிழ்ப் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் இ.சுந்தரமூர்த்தி அவர்கள் சுவாமிகளின் மரகத விழா மலரில் குறிப்பிட்டுள்ளார். மேலும் அவர் சுவாமிகள் சிறந்த தமிழ்ப்புலமையும், எளிமையாகப் பழகுகின்ற பண்பு நலனும் பெற்றவர் என்று பாராட்டியுள்ளார்.

சரபோஜி மீது பிள்ளைத்தமிழும், ஆலங்குடி அந்தாதி முதலான நூற்களை இயற்றியுள்ளார்.

## இளைய பட்டம்

சொக்கலிங்க சுவாமிகளின் மூன்றாவது மகனான சொ.முத்தமிழ் வாணனாருக்குத் தீட்சை தந்து இளையபட்டத்தில் அமர்த்தினார். இவர் வாரியார் சுவாமிகளிடம் கௌமாரம் கற்றவர். இவருடைய மகனான மு.சொக்கலிங்கத்துக்கு 6வது வயதில் தீட்சை தந்து சிவபூசையும் எடுத்துக் கொடுத்தார். அவர் தினமும் இம்மடத்தில் சிவபூசை செய்து வருகிறார். அவரை அடுத்த இளையபட்டமாகவும் அங்கீகரித்தார்.

## முத்துவிழா மற்றும் மரகத விழா

இத்தகு சிறப்பு வாய்ந்த சொக்கலிங்கம் சுவாமிகளின் முத்துவிழா 26.12.204 அன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. அவர்தம் மரகதவிழா 11.12.2013 ஆம் ஆண்டு நடைபெற்றது. அவர்தம் மரகதவிழாவிற்கு மலரை ஒன்று வெளியிடப் பெற்றது. இதில் பல்வேறு ஆதீனங்கள் மற்றும் தஞ்சை அரசர்களின் வாழ்த்துரை

இடம்பெற்றுள்ளது. மேலும், பன்னிரு திருமுறைப் பாடல்களும் சைவசித்தாந்தம் பற்றிய கட்டுரைகளும் இடம்பெற்றுள்ளது. இதில் சொக்கலிங்க சுவாமிகளின் வலம்புரிச்சங்கு என்ற பொருளில் அமைந்த செய்யுளும், அதற்கான விளக்கங்களும் இடம்பெற்றுள்ளன. இவர் நானும் எனது தந்தையாரும் எழுதி வெளியிட்ட "பார்போற்றும் பழனி" என்ற நூல் வெளியீட்டு விழாவினை தலைமைத் தாங்கி நடத்தினார்.

தமிழில் பல அரிய நூற்களை பதிப்பித்து, சைவசித்தாந்த வாழ்க்கையே தன் வாழ்க்கையாக கொண்டிருந்த சுவாமிகள் 17.09.2016 அன்று தனது 93 வயதில் முக்திபேறு அடைந்தார். அன்னாரின் பணியாள் சரசுவதி மகாலும், தமிழ்ப் பல்கலைக்கழகமும் பெறும்பேறு பெற்றது.

# பூண்டி அரங்கநாத முதலியாரின் வாழ்வும் தமிழ்ப் பணியும்

**இரா. கஸ்தூரி**

ஆய்வியல் நிறைஞர் மாணவி பகுதிநேரம்,

கல்வியியல் துறை

தமிழ்ப் பல்கலைக்கழகம்

தஞ்சாவூர்.

## முன்னுரை

அரங்கநாத முதலியார் சிறந்த அறிவுடையோர்கள் போற்றும் பேரறிஞராக விளங்கியவர். திருவாவடுதுறை யாதீனத்து வித்துவான்களாகிய ஸ்ரீ சிவஞான முனிவர், கச்சியப்ப முனிவர் சுப்பிரமணிய முனிவர் முதலியவர்களை ஆதரித்து அவர்களைக் கொண்டு பல நூல்களை இயற்றுவித்த தொட்டிக்கலை கேசவமுதலியார் பரம்பறையினருக்கு நெருங்கிய உறவினரும் தமிழ்மொழியில் நல்ல பயிற்சியுள்ளவரும் பெரிய உத்தியோகத்தில் தமிழ்மொழியில் நல்ல பயிற்சியுள்ளவருமான சுப்பிராய முதலியாரென்பவருடைய தவப்புதல்வராக அரங்கநாத முதலியார் 1844 ஆம் வருடத்தில் பிறந்தார்.அவருடைய முன்னோர்கள் தொண்டை நாட்டிலுள்ள பூண்டியென்றும் ஊரினராதலின் பூண்டி அரங்கநாத முதலியாரென்றே இவர் பெயர் வழங்கலாயிற்று. இவருடைய தோற்றப் பொலிவும் தமிழனிடத்திலும் தமிழ் கற்றோரிடத்திலும் இவருக்கிருந்த பேரன்பும் இவருடைய நுண்ணறிவும், பெருந்தகைமையும் போற்றத்தக்கதாகும்.

## கல்வி

பூண்டி அரங்கநாத முதலியார் தம்முடைய தந்தையாரிடத்திலும், வேறு பலரிடத்திலும் தமிழ் கல்வியும் பள்ளிக்கூடங்களில் ஆங்கிலக் கல்வியும் கற்றார். இவர் ஒவ்வொரு பரீட்சையிலும் பரிசுகளைப் பெற்றார். எம்.ஏ.பட்டம் பெற்றவர்களில் சிறந்தவராக விளங்கியதன் காரணமாக இவரை எம்.ஏ. அரங்கநாத

முதலியார் என்றே அனைவரும் அழைத்தனர். அரங்கநாதமுதலியார் இளமைக் காலம்தொட்டே தமிழில் விருப்பமுடையவர். சென்னயையிலுள்ள வித்துவான்கள் எங்கேயாவது பிரசங்கம் செய்தால் அங்கே தவறாமல் சென்று கேட்பார். சென்னையில் இருந்த கதிர்வேல் உபாத்தியார் என்பவரிடம் அவர் பல தமிழ்நூல் பாடங்களை கேட்பதுண்டு. காஞ்சீபுரம் சபாபதி முதலியார், புரசபாக்கம் அஷ்டாவதானம் சபாபதி முதலியார் வித்துவான்களோடு அடிக்கடி பழகித் தமக்கு தமிழ் நூல்களில் உள்ள ஐயங்களைப் போக்கிக் கொள்வார். அரங்கநாத முதலியார் கலாசபையில் பயின்றுவந்த காலத்தில் ஒவ்வொரு வகுப்பிலும் முதல் மாணவனாக தேர்ச்சி பெற்று வந்தார். 1862 ஆம் ஆண்டு மெட்ரிகுலேஷன் தேர்வில் இராசதானியில் முதல் மாணவனாக தேர்ச்சி பெற்றார். அவர் பயின்று கொண்டிருந்த காலங்களில் அவர் பெறும் பரிசுப் புத்தகங்களை வீட்டிற்கு வண்டியிலே வைத்துக் கொண்டு போகும் அளவிற்கு இருக்கும்.

**கல்லூரிக் கல்வி**

முதலியார் அவர்கள் தனது கல்லூரிப் படிப்பை பிரஸிடென்ஸி கல்லூரியில் தொடங்கினார். அவர் பி.ஏ.படித்துக் கொண்டிருக்கும்போது ஆங்கிலத்திலும், கணிதத்திலும் அவர் சிறந்து விளங்கினார். அப்பொழுது கல்லூரியின் முதல்வராக இருந்த எட்மண்ட் தாம்ஸன்துரை அவருடைய அறிவின் திறத்தையறிந்து அந்த வருட தேர்வில் முதலியார் முதல் மதிப்பெண் பெற்று தனக்கும் தன் கல்லூரிக்கும் பெருமையை உண்டாக்குவார் என்று கூறினார்.

ஆனால் தேர்வின் முடிவு நேர்மாறாக இருந்தது. ஆங்கிலத்தில் முதலியார் முதல் மதிப்பெண் பெறவில்லை. எனவே அவரை முதல்வர் அழைத்து விளக்கம் கேட்டார். முதலியார் அவர்கள் தாம் அனைத்து விடைகளுக்கும் சரியான பதில் அளித்துள்ளதாக விளக்கமளித்தார். பின்னர் விடைத்தாளைத் திருத்தியவரை அணுகி விவரம் கேட்டு பின்னர் விடைத்தாளைப் பார்க்க திருத்தியவரின் பிழை அறிந்து மீண்டும் மதிப்பெண் சரியாக இடப்பட்டதன்மூலம் பி.ஏ.தேர்விலும் முதலியார் அவர்கள் முதல் மாணவனாக தேர்ச்சி பெற்றார்.

**படைப்புகள்**

செய்யுள் இயற்றும் பழக்கத்தை முதலியார் மேன்மேலும் விருத்தி செய்து கொண்டு வந்தார். பிரபந்தங்களைப் படிக்கும்போது அவற்றின் சொற்பொருளமைதிகளையும் நயங்களையும் கவனிப்பார். அதனால் தாமும் ஏதேனும் ஒரு பிரபந்தம் இயற்ற வேண்டுமென்றும் ஆவல் அவருக்கு உண்டாயிற்று. அக்காலத்தில் பிரஸிடென்சி காலேஜில் தமிழ்ப் பண்டிதராக இருந்த தொழுவூர் வேலாயுத முதலியாருடைய பழக்கத்தால் அவருக்குச் செய்யுள் செய்யும் ஆற்றல் நன்றாக உண்டாகி விருத்தியாயிற்று. இருவரும் ஒரு விஷயத்தைக் குறித்துப் போட்டிப் போட்டுக்கொண்டு பாடுவார்கள். வேலாயுத முதலியாரை அவர் ஒரு கலம்பகம் பாட வேண்டுமென்று கேட்டுக்கொண்டார். அப்படியே திருவொற்றியூர் கச்சி ஏகாம்பரநாதரையும் பாட்டுடைத் தலைவராக வைத்து "மகிழ்மாக் கலம்பகம்" என்ற நூலை அப்பண்டிதர் இயற்றினார்.

காயாறு ஞான சுந்தரரையர் என்ற வீரசைவக் கவிஞர் அந்நூலுக்கு சிறப்புப்பாயிரம் அளித்தார். அந்நூல் 1887-இல் அச்சிடப்பட்டது. அதுமுதல் அரங்கநாத முதலியாருக்கு தாமும் ஒரு கலம்பகம் பாட வேண்டும் என்ற எண்ணம் உண்டாயிற்று. எனவே ஸ்ரீ காஞ்சீபுரம் ஏகாம்பர நாதரையே தலைவராக வைத்து "கச்சிக் கலம்பகம்" என்னும் நூலைப் பாடி முடித்தார். கச்சிக்கலம்பகம் முடிவுற்று 1889-இல் அச்சிடப்பெற்றது. சென்னையில் உள்ள பல அன்பர்கள் விரும்பியபடி தொண்டை மண்டலம் துருவவேளாளர் உயர்தர கலாசாலை ஒரு பெரிய சபையில் அதன் அரங்கேற்றம் ஆரம்பமானது. கிறிஸ்டியன் கல்லூரியில் தமிழ் பண்டிதராக இருந்த சின்னசாமிப்பிள்ளை முதன்முதலில் கலம்பகத்திற்கு உரை கூறி பிரசங்கம் செய்தார். உ.வே. சாமிநாத ஐயர் இக்கலம்பகத்திற்கு பிரசங்கம் அளித்தார்.

**பணியாற்றிய இடங்கள்**

கும்பகோணம் கல்லூரியில் முதலியார் அவர்கள் சிலகாலம் ஆசிரியராகப் பணிபுரிந்து வந்தார். அப்போது அங்கே பணியாற்றிய ஆசிரியர்கள் அனைவரும் அவருடைய கல்வியாற்றலைக் கண்டு

வியந்து அவரை தமக்கு எடுத்துக்காட்டாக மேற்கொண்டனர். புதிய விஷயமென்பதே அவருக்கு இல்லை. எதையும் விரைவில் அறிந்துகொண்டு பிறருக்கு கற்பிக்கும் ஆற்றல் அவர்பால் இருந்தது. அங்கு பணியாற்றிய அவர்களிடம் தனிமதிப்பை வைத்திருந்தார். 1890-ஆம் ஆண்டு சென்னை சர்வகலா சாலையில் நடந்த பட்டமளிப்பு விழாவில் அரங்கநாத முதலியார் சொற்பொழிவு செய்தார். அதை "புதிய இந்தியர்" என்ற பத்திரிக்கை வெளியிட்டது. இதை படித்த ஸ்ரீமான் காட்டன் துறை என்ற ஆங்கிலேயர் படித்து அதனுடைய பொருட்சிறப்பை அறிந்து வலிய முதலியாருக்கு ஒரு பாராட்டு கடிதம் எழுதினார்.

## பல்துறை பணிகள்

கும்பகோணம் கல்லூரியில் பின்னர் சென்னை பிரஸிடென்சி கல்லூரியில் ஆசிரியராக பணியில் அமர்ந்தார். அந்த காலக்கட்டங்களில் உ.வே.சாமிநாத ஐயரின் சீவகசிந்தாமணி மற்றும் பத்துப்பாட்டு போன்ற நூல்கள் அச்சாவதற்கு பெரிதும் உதவியாக இருந்தார். எதையும் விரைவில் படித்து ஞாபகத்தில் வைத்து கொள்ளும் திறமை அவருக்கு இருந்தது. ஒருமுறை எழுதியதை மாற்றியெழுதுவது என்பது அவரிடமில்லை. எழுதும்போதே முடிவான கருத்துக்களாக அமைந்துவிடும். "இந்தியா இம்பீரியல் கெசட்டியா"என்னும் நூல் தொகுதி களை அரசாங்கத்தினரின் கட்டளைப்படி வெளியிட்டவராகிய ஸ்ரீமான் ஹண்டர்துறை என்பவர் அவற்றின் இரண்டாம் பதிப்பையும் பின்னும் சில செய்திகளைச் சேர்த்து எண்ணியதன் காரணமாக இந்தியாவின் பல இடங்களுக்கென்று அங்கே உள்ள மக்களின் வாழ்க்கைமுறை சரித்திர சம்மந்தமான அடையாளங்கள் முதலியனவற்றை ஆராய்ந்து தேடிப் பல செய்திகளைத் தொகுத்தார். அவர் தமிழ்நாட்டிற்கு வந்த காலத்தில் துரைக்கு துணைபுரியும்படி அரங்கநாத முதலியாரை நியமித்தனர். பின்னர் அரசாங்க தமிழ்மொழிப்பெயர்ப்பாளராக இருந்தார்.

## சிறப்பு ஈடுபாடு

தமிழ் நூல்களில் அரங்கநாத முதலியாருக்கு விருப்பம் அதிகமாக உண்டு. பழைய பாடலானாலும் புதுப்பாடலானாலும் அதன் நயத்தை அறிந்து இன்புறுவார். புதிதாக அச்சிட்ட நூலை கொடுத்தல்

அன்றிரவே அந்நூலை படித்துவிட்டு மறுநாள் அதில் இன்னதின்ன பகுதிகள் நன்றாக இருந்தன என்று சொல்லுவார். இங்கிலீஷில் பட்டம் பெற்றவர்களுக்கே தமிழ் சம்மந்தமான பதவி கிடைத்துள்ளது. பாடப்புத்தகங்களையும் அவர்களே பதிப்பித்து வந்தார்கள். அரங்கநாத முதலியார் மிக முயன்று பண்டிதர்களும் பாடப்புத்தகங்கள் பதிப்பிக்கும் பதவியை அடையும்படி செய்வித்தார். முதல்முறையாக அப்பதவியை பெற்றவர் உ.வே. சாமிநாதய்யர் ஆவார். அப்படி பதிப்பிக்கும்போது முதலியார் அவர்கள் கேட்டுக்கொண்டதன்பேரில் அரிச்சந்திர புராணம் சேர்க்கப்பட்டு அதிலும் மாயமான கண்டத்தில் உள்ள சந்திரமதி புலம்பல் பகுதியையும் சேர்த்தார்.

**தமிழ்ப் பற்று**

தமிழ்மீது அதிகம் பற்றுக் கொண்டிருந்த முதலியார் பல கல்விமான்களிடையே பேசிக்கொண்டிருந்தபோது ஆங்கில மொழியின் அருமையான விஷயங்கள் இருப்பதாகவும் சிறந்த கவிஞர்களும் அறிஞர்களும் அம்மொழியை வளப்படுத்துகிறார்கள் என்றும் கூறினார்கள். "முதலில் தமிழாகிய சூரியனைப் பற்றித் தெரிந்துக் கொண்டு பின்னர் மற்ற மொழிகளான நட்சத்திரங்களைத் தெரிந்துக் கொள்வதுதான் முறை" என்று சொன்னார். முதலியார் தம்முடைய கருத்தை சிறந்த உதாரணம் ஒன்றின் மூலமாக விளக்கிக் கூறியதைக் குறித்து மிகவும் களிப்புற்றதோடு அவரின் கருத்தையும் அனைவரும் ஏற்றனர்.

**மறைவு**

பூண்டி அரங்கநாத முதலியார் அவர்களின் ஞாபகசக்தி அதிசயிக்கத்தக்கது. சென்ற நூறுவருட காலத்தில் அவருக்கு முன்னே பின்னே அவரை போன்ற மேதாவிகள் இருந்ததே இல்லை. அவருடைய பேச்சு நடையும் விரும்பத்தக்கது. இவ்வளவுப் புகழ்பெற்ற அரங்கநாத முதலியார் அவர்கள் 1893-ஆம் ஆண்டு டிசம்பர் 10-ம் நாள் ஞாயிற்றுக்கிழமையன்று இவ்வுலக வாழ்வை நீத்தார்.

# சோ. கோவிந்தராஜு அவர்களின் வாழ்க்கை வரலாறும் கல்விப் பணியும்

**முனைவர் ஆ.கஸ்தூரி**
கௌரவ விரிவுரையாளர்,
மகளிர் கல்லூரி,
கும்பகோணம்.

நஞ்சையும், புஞ்சையும் கொஞ்சி விளையாடும் காவிரி நாடாம் தஞ்சை மாவட்டத்தில் நல்ல நிலவளங்களைக் கொண்ட நன்னிலம் தாலுகாவில் அமைந்துள்ள கடகம் என்ற கிராமத்தில் 12.09.1949 இல் சோ. கோவிந்தராஜீ அவர்கள் பிறந்தார். விவசாயத்தை முக்கியத் தொழிலாகக் கொண்ட குடும்பத்தில் வீ.சோமுபிள்ளை, திருவாட்டி காசியம்மன் ஆகியோர்க்கு இரண்டாம் மகனாக இவர் பிறந்தார். இவருடைய மூத்த சகோதரர் சோ. கலியபெருமாள் ஓய்வுபெற்ற ஆசிரியர் சகோதரி சோ. பானுமதி ஆவார். கடகம் என்னும் கிராமத்தில் இவர்தான் முதல் பட்டதாரி ஆவார்.

## குடும்பம்

இவருடைய மனைவி சரோஜினி எம்.எஸ்ஸி., எம்ஃபில் பட்டம் பெற்று பாரதிதாசன் மகளிர் கல்லூரி, புதுவையில் தாவரவியல் பேராசிரியராகப் பணியாற்றி வருகிறார். இவருடைய ஒரே மகள் கோ. சத்யபிரியா பாண்டிச்சேரி பொறியியல் கல்லூரியில் பொறியியல் பயின்றார்.

## பள்ளிக் கல்வி

நாள்தோறும் கடகத்திலுள்ள பள்ளிக் கூடத்திற்கு நடந்து சென்றே ஐந்தாம் வகுப்பு வரை தொடக்கக் கல்வியை முடித்தார். ஆறாம் வகுப்பிலிருந்து எட்டாம் வகுப்பு வரை திருக்கொட்டாரத்திலுள்ள உதவி பெறும் உயர் தொடக்கப் பள்ளிக்கு நடந்து சென்றே கல்வி பயின்றார். ஒன்பதாம் வகுப்பிலிருந்து பதினொன்றாம் வகுப்பு வரை கழக

உயர்நிலைப் பள்ளி பேரளத்தில் மேற்கொண்டார். பள்ளிப் பருவத்தில் தான் படித்த அனைத்துப் பள்ளிகளிலும் முதல் மாணாக்கராக தேர்ச்சி பெற்றார். படிக்கும்போதே தன்னுடைய ஆசிரியர்கள்மீது மிகுந்த அன்பு கொண்டிருந்தார். மாணவர் பருவத்திலே சமூக சேவையில் அக்கறை கொண்டவராகவும் திகழ்ந்தார்.

**கல்லூரிப்படிப்பு**

பள்ளி வாழ்க்கையைத் தொடர்ந்து புகுமுக வகுப்பு மயிலாடுதுறை ஏ.வி.சி. கல்லூரியில் இயற்கை அறிவியல் விருப்ப பாடத்தில் தேர்ச்சி பெற்றார். பின்னர் பூம்புகார் கலைக்கல்லூரியில் பி.ஏ. இந்தியப் பண்பாட்டில் முதல் வகுப்பில் தேர்ச்சி பெற்றார். தன்னுடைய முதுகலை பட்டப்படிப்பை சென்னை பல்கலைக்கழகத்தில் பண்டைய வரலாறு மற்றும் தொல்லியலில் மேற்கொண்டார். பேராசிரியை செண்பகலெட்சுமியின் வழிகாட்டலின்மூலம் கள ஆய்வு பற்றிய திட்டக்கட்டுரை முதுகலை பட்டத்திற்காக சமர்ப்பித்துள்ளார். முதுகலை பட்ட இறுதித் தேர்வில் சென்னைப் பல்கலைக்கழகத்திலே முதலிடம் பெற்று வெற்றியடைந்துள்ளார். மேலும் 1947ஆம் ஆண்டு திருப்பதியில் திருவேங்கடவன் பல்கலைக்கழகத்தில் பயின்று எம்.ஏ. வரலாற்றில் தேர்ச்சி பெற்றுள்ளார்.

**ஆய்வுப் பட்டங்கள்**

இவர் 1978ஆம் ஆண்டு அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் ஆய்வியல் நிறைஞர் பட்ட வகுப்பில் பயின்றார். வரலாற்றுப் பேராசிரியர் எம்.எஸ். கோவிந்தசாமி அவர்களின் வழிகாட்டலின்மூலம் "தாராசுரம் ஆலயம் - ஓர் ஆய்வு" என்ற தலைப்பில் ஆய்வுக்கட்டுரை அளித்து முதல் வகுப்பில் தேர்ச்சியடைந்தார். தொடர்ந்து முனைவர் பட்ட ஆய்வினையும் அண்ணாமலைப் பல்கலைகழகத்திலே பேராசிரியர் முனைவர் எம்.எஸ். கோவிந்தசாமி அவர்களின் நெறிகாட்டுதலில் மேற்கொண்டார். 'தென்னிந்தியாவில் வம்சங்களின் ஊடுருவல்' ஓர் ஆய்வு என்ற தலைப்பில் 1984 இல் ஆய்வேடு அளித்தார். இவர் தன்னுடைய முனைவர்பட்ட ஆய்வேட்டின் வாயிலாக தென்னிந்திய வம்சங்களின்

ஊடுருவலுக்கான காரணக்காரியத் தொடர்பினைப் புதிய பரிமாணத்தோடு அணுகி ஆராய்ந்துள்ளார். இதனிடையே அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் ஆசிரியப் பயிற்சிக்கான பி.எட்., பட்டப்படிப்பில் முதல் வகுப்பில் தேர்ச்சி பெற்றார்.

### கல்லூரிப்பணி

இவர் தமது 23-வது வயதில் கல்லூரிப் பணியில் சேர்ந்தார். 10-8-1972 அன்று பூம்புகார் கலைக்கல்லூரியில் நுண்கலை துறையில் விரிவுரையாளராகத் தமது பணியைத் தொடங்கினார்.

அக்கல்லூரியில் இரண்டு வருடங்கள் பணி செய்துவிட்டு 01.09.1974 ல் அண்ணாமலைப் பல்கலைக்கழக வரலாற்றுத்துறையில் விரிவுரையாளராகப் பணி நியமனம் பெற்றார். தன்னுடைய நற்பண்புகளின் மூலம் நன்மதிப்பையும், பாராட்டையும் பெற்ற இவர் 11.12.1984 இல் இணைப்பேராசிரியராகப் பதவி உயர்வு பெற்றார். 2.7.2001 இல் வரலாற்றுத்துறைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு தொலை தூரக் கல்வி இயக்கம் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் பணியாற்றி பின்பு பேராசிரியராகவும் பணியாற்றினார்.

### ஆய்வு நெறியாளர்

இவர் கடந்த முப்பத்திமூன்று ஆண்டுகளாக வரலாறு பயிற்றுவித்து வருகின்றார். மாணவர்களுக்கெல்லாம் இவர் ஒரு நடமாடும் வரலாற்றுப் பல்கலைக்கழகமாகத் திகழ்ந்துள்ளார். என்பது மறக்கவோ, மறைக்கவோ முடியாத உண்மையாகும். வரலாறு படிக்கும் மாணவர்கள் அனைவரும் வரலாறு படைக்க வேண்டும். பின் சந்ததியருக்கு ஒவ்வொரு வரலாறு மாணவனும் ஒரு வரலாறாக அமையவேண்டும் என்ற தத்துவத்தை மாணவர்களுக்கு உணர்த்தி வந்துள்ளார்.

தமிழக வரலாற்று ஆராய்ச்சியாளர்களைப் பொறுத்தவரை தென்னிந்திய கோயில் கட்டிடக் கலையில் மிகவும் பிரசித்திப்பெற்ற குறிப்பிடத்தக்க ஆராய்ச்சியாளர்களில் இவரும் ஒருவராவார். கட்டிடக்

கலையில் இவரின் படைப்புகள் மிகவும் வியப்பூட்டத்தக்கவை. இவர் அறுபதிற்கு மேற்பட்ட எம்ஃபில் ஆய்வு மாணவர்களுக்கு நெறியாளராக விளங்கியுள்ளார். இவரது நெறிகாட்டுதலில் ஐம்பத்து மூன்று மாணவர்கள் ஆய்வியல் நிறைஞர் பட்டம் பெற்றுள்ளனர். பனிரெண்டு மாணவர்கள் இவரது வழிகாட்டலின்கீழ் முனைவர் பட்டம் பெற்றுள்ளனர். முதுகலைப் பட்ட ஆய்விற்கு நூற்றுக்கு மேற்பட்ட மாணவர்களுக்கு வழிகாட்டியுள்ளார்.

## நூல் வெளியீடுகள்

தென்னிந்திய கோயில் கட்டிடக்கலையில் சிறந்த ஆராய்ச்சியாளராக விளங்கிய இவர் சுற்றுலாத் துறையிலும் தேர்ந்துவிளங்கினார். 1997 ஆம் ஆண்டு இந்திய சுற்றுலாவியல் என்னும் நூலை வெளியிட்டுள்ளார். இந்நூல் முதுகலை சுற்றுலாவியல் பட்டப்படிப்பு மாணவர்களுக்கு பாடநூலாக விளங்குகிறது. இவருடைய இந்திய சுற்றுலாவியல் என்ற நூல் பல்கலைக்கழக மாணவர்கள் பெரிதும் விரும்பி படிக்கும் பயனுள்ள நூலாக அமைந்துள்ளது. தென்னிந்தியாவில் வாணாதிராயர்களின் ஊடுருவல் "Drift of the Banas in South India" என்ற நூலை புதுவை சக்தி பதிப்பகத்தின் மூலம் வெளீயிட்டுள்ளார்.

## இலக்கியத்தில் ஈடுபாடு

பல்வேறு கருந்தரங்குகளில் கலந்து கொண்டு இலக்கியம் சார்ந்த பல தலைப்புகளில் ஆய்வுக்கட்டுரைகள் படைத்துள்ளார். முத்தொள்ளாயிரத்தின் காலம் பற்றிய மாநாட்டிற்குத் தலைமை தாங்கி நடத்தியுள்ளார். புதுவை பாரதி இலக்கியப் பேரவை போன்றவற்றில் உறுப்பினராக இருக்கின்றார். ஆன்மீகச் சொற்பொழிவுகள் ஆற்றுவதிலும் இலக்கியச் சொற்பொழிவுகள் ஆற்றுவதிலும் மிகுந்த ஆர்வம் கொண்டவர்.

## வானொலி சொற்பொழிவு

புதுவை வானொலி மற்றும் தொலைக்காட்சி போன்றவற்றில் சிறந்த கட்டுரைகள் வழங்கியுள்ளார். 1998 ஆம் ஆண்டு புதுவை வானொலியில் இந்திய வரலாற்றில் சிற்பக்கலை என்ற தலைப்பில்

வழங்கிய கட்டுரை சிறந்த வரவேற்பைப் பெற்றது. மேலும் புதுவை வானொலியில் 1998-ஆம் ஆண்டு வழங்கிய இந்திய விடுதலைப் போராட்டத்தில் காங்கிரஸின் பணி 2000 ஆம் ஆண்டு வழங்கிய இந்திய விடுதலைப் போராட்டத்தில் மிதவாதிகள் பங்கு இந்திய விடுதலைப் போராட்டத்தில் காந்தியடிகளின் பங்கு போன்ற வானொலி உரைகள் சுதந்திர வேட்கையுடைய உரைகளாகவும் அனைவருடைய உள்ளத்தையும் ஈர்த்த உரைகளாகவும் அவை விளங்கின.

## வரலாற்றுப் பேரவை அமைப்புகளில் நாட்டம்

இந்திய வரலாற்றுப் பேரவை, தென்னிந்திய வரலாற்றுப் பேரவை, இந்திய கலைப் பண்பாட்டு வரலாற்றுப்பேரவை, இந்திய இடப்பெயராய்வு பேரவை மற்றும் இந்திய கல்வெட்டுகள் அமைப்பு பேரவை போன்றவற்றின் நிரந்தர உறுப்பினராக இவர் இருந்து வந்தவர். தமிழ்நாட்டு வரலாற்று பேரவையிலும் செயற்குழு உறுப்பினராகவும் திகழ்ந்தவர். இந்திய தேசிய ஆவணக் காப்பகத்தின் ஆட்சிக்குழு உறுப்பினராகத் திகழ்வதற்கு இந்திய அரசின் பரிந்துரையின்பேரில் பிரதிநிதித்துவம் பெற்றவர். தென்னிந்தியாவிலே இந்த மதிப்புறு பதவியில் இருவர் மட்டுமே வகிக்கின்றனர். இவ்விருவருள் இவரும் ஒருவர் என்பதே சிறப்பாகக் குறிப்பிடத்தக்கதாகும்.

## அரசு ஆணையத்தில் மதிப்பீட்டாளர்

இவர் பல்கலைக்கழக மானியக்குழுவில் மதிப்பெண் பட்டியல் திருத்துபவராகவும், தமிழக தேர்வு ஆணைக்குழுவில் வினாத்தாள் தயாரிப்பவராகவும் திகழ்ந்தவர். தமிழகத்திலுள்ள அனைத்து பல்கலைக்கழகங்களிலும் பாடக்குழு வல்லுனராகவும், இந்திய வரலாற்று ஆராய்ச்சி குழுமத்தின் திட்ட மதிப்பீட்டாளராகவும் இந்திய ஆட்சிப் பணிகள் தேர்வாணைக் குழுவில் வினாத்தாள் தயாரிப்பவராகவும் திகழ்ந்தவர்.

## புத்தொளிப்பயிற்சி வகுப்புகளில் வளஆளர் (Resource person)

புதுவையில் 1998 ஆம் ஆண்டு நடந்த புத்தொளிப்பயிற்சியில் இரண்டு சிறப்புரைகள் நிகழ்த்தியுள்ளார். மேலும் தேசிய ஆவண

காப்பகம் பாண்டிச்சேரியில் நடத்திய பயிற்சியில் இந்திய அருங்காட்சியகம் என்ற தலைப்பில் 1999ல் சிறப்புரை நிகழ்த்தியுள்ளார்.

### ஆராய்ச்சிக் கட்டுரைகள்

இந்திய, தென்னிந்திய, தமிழக வரலாற்றுப் பேரவைகளில் முப்பத்தி மூன்று கட்டுரைகளை அளித்துள்ளார். அவை அனைத்தும் அச்சிட்டு பிரதிகளாக வெளியிடப்பட்டுள்ளன. பல கருத்தரங்குகளையும் பணிப்பட்டறைகளையும் தலைமை தாங்கி நடத்தியுள்ளார்.

### சமய சமுதாயப்பணி

கடவுள் வழிபாட்டில் ஈடுபாடு கொண்டு அதன்பால் சமய நம்பிக்கை கொண்டவர். சாதியக் கொள்கையில் இவருக்கு ஈடுபாடில்லை, தன்னுடைய பிறந்த நாட்களின்போது புதுவையில் உள்ள அனாதை குழந்தைகளுக்கு உணவு, உடை, பாடநூல்கள், கல்விக்கட்டணம், போன்றவற்றை தானமாக வழங்கி வருகின்றார். தான் பயிற்றுவிக்கும் பல்வேறு ஏழை மாணவர்களுக்கு உதவி செய்து அவர்கள் வரலாற்றுக் கல்வியை திறம்பட கற்க வழிவகை செய்துள்ளார். இல்லையென்று வருபவர்க்கு இன்முகம் மலர்ந்து வரவேற்கும் இவருடைய பண்பு நலன் பாராட்டத்தக்கதாகும், ஏழையாகப் பிறந்து இன்றைய சமுதாயத்தில் உயரிய நிலையில் விளங்குவதோடு சிறந்த ஒழுக்க நெறியாளராகவும் திகழ்கின்றார். மறந்தும் பிறன்கேடு சூழற்க என்பதற்கு இலக்கணமாக வாழ்ந்து வருபவர்.

அன்பில் நெகிழ்வுள்ளவர்; அறிவில் தெளிவானவர்; வாழ்வில் எளிமையான கொள்கையில் உறுதியுள்ளவர்; பண்பில் சால்புடையவர் ; புகழில் மயங்காதவர். விளம்பரத்தில் விருப்பமில்லாதவர் செய்வதைத் திருந்தச் செய்பவர்.

### புதிய திட்டம்

வருங்காலத்தில் கோயில் கட்டிடக்கலைக்கான வரலாற்றுப் பேரவையை உருவாக்கி தமிழகக் கோயில் கட்டிடக் கலைக்கான சிறப்பியல்புகளை வெளிக்கொணரச் செய்தல் வேண்டும் என்பதில்

உறுதியான உள்ளம் கொண்டுள்ளார். தென்னிந்திய கோயில் கட்டிடக் கலையின் பிரிவுகளான கட்டிடக்கலை, சிற்பக்கலை, இசைக்கலை, ஓவியக்கலை, நடனம் மற்றும் படிமக் கலைப் பற்றி ஆய்வுக் கட்டுரை மற்றும் நூல்களை வெளியிடும் நோக்கத்தை கொண்டுள்ளார். தற்போது அண்ணாமலைப் பல்கலைக்கழக வரலாற்றுப் பிரிவில் தன்னுடைய புதிய யுக்தியின் மூலமாக விரிவுரையாளர்களுக்கு என்ற அமைப்பை உருவாக்கி அவர்கள் திறமையாக வகுப்புகளை நடத்துவதற்கும், புதிய கல்வியியல் நுட்ப கொள்கையை சமுதாயத்தின் முன்னேற்றத்திற்கு ஏற்றவாறு கையாள்வதற்கும் வழிசெய்துள்ளார். மேலும் ஆய்வு பட்டறை என்ற அமைப்பினை ஏற்படுத்தி ஆராய்ச்சி நிறைந்த கட்டுரைகள் அளித்து விவாதம் செய்து கொள்ள வரலாற்றுப்பிரிவிலே சிறப்பான ஏற்பாடு.

**தொடரும் பணி**

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் தொலைதூரக் கல்வித்துறையில் வரலாற்றுப் பிரிவின் தலைவராக விளங்கியுள்ளார். இவ்வரலாற்றுப் பேராசிரியர் மாணவர்கள் மனங்கொள்ளும் வரலாற்றுக் கருவூலமாக வாழ்ந்து வருகின்றார். பல்கலைக்கழக நிலையில் முதன்மையராகத் தேர்ச்சி பெற்று உழைப்பால் உயரந்தவராக வரலாற்று மாணவர்களுக்கு வழிகாட்டும் கலங்கரை விளக்கமாகத் திகழ்ந்தார், தொடரட்டும் இவர்தம் தூய பணி, துலங்கட்டும் புதிய ஒளி. கோயிற் கட்டடக் கலை ஆய்வுகளில் மலரட்டும் புதுவழி, உருவாகட்டும் வரலாற்றுப்பேரவை, இவர்தம் புகழ் உலகமெலாம் பரவிட வேண்டும். வரலாற்று அன்னை மகிழ்ந்திட வேண்டும்.

# மணி. மாறன் அவர்களின் பதிப்பு வரலாறு

**த. கவிதா**
முனைவர்பட்ட ஆய்வாளர்
ஓலைச்சுவடித்துறை
தமிழ்ப்பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

தமிழர் பண்பாடு, வாழ்க்கை, இலக்கியம் ஏனையவைகளைப் பற்றியெல்லாம் நமக்கு எடுத்துரைப்பது ஆவணங்களே. அதில் தமிழர்களின் பழக்கவழக்கங்கள், ஆடைகள், உணவுமுறைகள் போன்றவற்றை ஆவணங்கள் மூலம் அறியலாம். ஆவணங்கள் எனப்படுவது கல், ஓலை, செப்பேடு, கல்வெட்டு, சிற்பங்கள், கோவில்கள், நினைவுச்சின்னங்கள், தூண்கள் போன்றவைகளாகும். இவ் ஆவணங்களின் மூலம் கூறப்பட்டிருக்கும் செய்திகளை நமக்கு எடுத்துரைப்பவர்கள் ஆராய்ச்சியாளர்கள், அறிஞர்கள், கல்வெட்டு ஆய்வாளர்கள், சுவடிப்பதிப்பு ஆசிரியர்கள் போன்றோர் ஆவர். இவர்கள் தான் ஆவணங்களின் கூறப்பட்டுள்ள செய்திகளை நமக்கு எடுத்துரைக்கின்றார்கள். அந்த வகையில் பதிப்பாசிரியர்களின் பதிப்பு வரலாறு பற்றி இக்கட்டுரை விளக்குகிறது.

ஓலைச்சுவடிகளில் இருந்த பழந்தமிழ் இலக்கியங்களை படித்தறிந்து அவற்றைப் பதிப்பித்து நூலாக அச்சுக்குக் கொண்டு வந்த பெருமை பதிப்பாசிரியர்களுக்கும் பதிப்பித்த நிறுவனங்களுக்கும் உண்டு. அந்த வகையில் சுவடி பதிப்பிப்பது என்பது பதிப்பாசிரியரின் முதல் பணி. அவற்றைத் தொடர்ந்து நூலை முறைப்படுத்தி முழுமையாக்கும் அனைத்துப் பணிகளும் பதிப்பாசிரியர்களுக்கு உரியனவாகவே அமைகின்றது.

தமிழ் நூல்களை ஓலைச்சுவடியிலிருந்து அச்சுக்கு வரவழைத்தவர்கள் பதிப்பாசிரியர்கள். அப்பதிப்புப்பணியில் தம்மை

அர்பணித்துக் கொண்டவர்களின் பெரும் முயற்சியில் இன்று பல்வேறு இலக்கிய இலக்கணங்கள் மற்றும் வரலாற்றுச் செய்திகள் அச்சுருவம் பெற்றுள்ளன. அவ்வாறு அச்சுக்குக் கொண்டுவந்த பதிப்பே செம்பதிப்புகளாகத் திகழ்கின்றது.

அப்பதிப்பிற்க்குக் கால் கொண்டவர் யாழ்ப்பாணம் நல்லூரைச் சார்ந்த ஆறுமுக நாவலர் ஆவார். சுவடி எடுப்பில் சி. வை. தாமோதரம்பிள்ளை, கூரைமேய்ந்தவர் உ.வே.சா. ஐயர் என்று தமிழ்த்தென்றல் திரு.வி.க. கூறுகின்றார். இவர்களைத் தொடர்ந்து பல பதிப்பாசிரியர்கள் தங்களது பதிப்புப்பணியைச் செவ்வனே செய்து வந்துள்ளார்கள். அவ்வாறு சிறப்பானதொரு பதிப்பைத் தற்காலத்தில் சிறந்த முறையில் செய்துக் கொண்டு இருப்பவர் தஞ்சை சரசுவதிமகால் நூலக தமிழ்ப்பண்டிதர் மணி.மாறன் ஆவார். அவரின் பதிப்பு வரலாறு பற்றி இக்கட்டுரை விளக்குகிறது.

**ஆசிரியர் பற்றிய குறிப்பு**

| | | |
|---|---|---|
| பெயர் | - | மணி. மாறன்<br>த.ம.சரபோஜி (மற்றொரு பெயர்) |
| பணி | - | தமிழ்ப்பண்டிதர்,<br>தமிழ் ஓலைச்சுவடிகள் பிரிவு,<br>சரசுவதிமகால் நூலகம்,<br>தஞ்சாவூர். |
| கல்வித்தகுதி | - | இவர் எம்.ஏ(தமிழ்) (எம்.ஏ) வரலாறு<br>நூலக அறிவியல் (B.LIS)<br>சமஸ்கிருதத்தில் பட்டயம்<br>போன்றவைகளும் முனைவர்<br>பட்டமும் (Ph.D) ஆய்வில்<br>தமிழிலக்கியத்தில் நீர்மேலாண்மை<br>என்ற தலைப்பில் மேற்கொண்டு<br>வருகிறார். |

| | | |
|---|---|---|
| கூடுதல் தகுதி | - | கூடுதலாக தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழக பாடத்திட்டக்குழுவில் உறுப்பினராக இருந்து வருகிறார். |

**தஞ்சை சரசுவதி மகால் நூலகம்**

மணி.மாறன் தஞ்சை சரசுவதி மகால் நூலகத்தில் தமிழ்ப்பண்டிதராகப் பணியாற்றி வருகிறார். தொல்லியல் ஆய்வில் தன்னை ஈடுபடுத்தி இருப்பவர். ஓலை, செப்பேடு, கல்வெட்டு எனத் தேடித்தேடி தமிழர்தம் தொன்மையினை உலகுக்கு எடுத்துச் சொல்கிறவர்களில் இவரும் ஒருவர். இவர் பன்முகத் தோற்றம் கொண்டவர். பதிப்புப்பணி, கல்வெட்டு ஆராய்ச்சி, தொல்பொருள் ஆராய்ச்சி போன்ற பல்வேறு நிலைகளில் தன்னை ஈடுபடுத்தி உண்மையை வெளிப்படுத்துகிறவர்.

**தமிழ்ச்சொல்**

தமிழ்நாட்டின் ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரே தமிழ்ச்சொல் வெவ்வேறு பொருள்களில் வெவ்வேறு புரிதல்களில் எப்படியெல்லாம் பயன்படுகின்றன, வழக்கில் உள்ளன என்பதைச் சுவைபட ஆராய்ந்து வெளிப்படுத்தியுள்ளார்.

எ.கா.

| | | |
|---|---|---|
| பரிசம்போடுதல் | - | தஞ்சைப் பகுதியில் பரிசம்போடுதல் |
| | - | நெல்லை மாவட்டத்தில் வெற்றிலை கைமாறுதல் |
| | - | பட்டுக்கோட்டை - பூ வைத்தல் |
| | - | கோவை - உப்பு ஜவுளி |
| | - | செட்டிநாடு - மஞ்சள் மாட்டுதல் |
| அரிசி சாதம் | - | நாஞ்சில் நாட்டுப் பகுதியில் பால்சோறு என்று கூறப்படுகிறது. |
| பேய்த்தேர் | - | காணல் நீர் போன்றவைகள் சுவடிகளில் காணப்படுகின்றது. |
| திருநங்கைகள் | - | கஜோடா, மொண்ணச்சிகள் என்றும் கூறப்பட்டுள்ளன |

| | | |
|---|---|---|
| நரமனை | - | திருச்செங்கோட்டுப் பகுதியில் சாமி ஊர்வலத்திற்குப் பெயர் |
| திண்ணக்கம் | - | நெஞ்சமுதம் |
| தொத்தம் எடுத்தல் | - | குடலேற்றம் |
| கைத்திலா | - | செட்டிச்சியம்மாள் கதைச்சுவடி செட்டியார் தர்மங்கள் |
| வங்குசம் | - | வம்சம் |
| நாமகளமிசமாய | - | நாமகள் அம்சமாகிய என்ற சொற்கள் சுவடிகளில் காணப்படுகின்றன. |

**நேரிமலை: கள ஆய்வு**

தஞ்சாவூர் மாவட்டம், பூதலூரிலிருந்து திருக்காட்டுப்பள்ளி செல்லும் சாலையில் ஒரத்தூர், கச்சமங்கலம், மாரனேரி முதலிய ஊர்களை உள்ளடக்கிய பகுதிகளே நேரிமலை இருந்த இடம் என்பதை கள ஆய்வில் கண்டு வெளிப்படுத்தியுள்ளார். நேரிமலை பிளக்கப்பட்டுத்தான் வெண்ணாறு, வெட்டாறு வெட்டப்பட்டுள்ளது. என்பதை கண்டறிந்துள்ளார். உடையாளூரில் இருப்பது இராஜராஜன் சமாதிதானா? என்பது ஆய்வுக்குரியது என சுட்டுவிரல் நீட்டியிருப்பவரும் இவரே.

**அவ்வையார் எழுதிய விநாயகர் அகவல்**

பழந்தமிழ் நூல்கள் அனைத்தும் ஓலைச்சுவடிகளிலிருந்து பதிப்பிக்கப்பெற்று அச்சு நூலாக மலர்ந்தன. அச்சு வடிவில் நூல் வெளியான பின் சில விடுபாடுகளோடு பிழைகள் இருப்பின் அவை அடுத்த பதிப்பில் சரிசெய்யப்பெற்று வெளியிடப்படும். ஆனால் 150 ஆண்டுகள் கடந்தும் அச்சில் வெளிவந்த விநாயகர் அகவல் நூலின் முதல் பாடலிலேயே 2 அடிகள் விடுபட்டே இன்னும் தொடர்ந்து வெளிவந்து கொண்டு இருக்கிறது. காரணம் முதல் பதிப்பை தொடர்ந்து அடுத்தடுத்த பதிப்புகள் மூலச்சுவடியினை ஒப்பு நோக்கி பார்க்காததேயாகும்.

அந்த வகையில் நல்லூர் ஆறுமுக நாவலர் அவர்கள் பதிப்பித்த விநாயகர் அகவலும் (கி.பி.1822- 1879), 1939ல் டி.ஆர். பாலகிருஷ்ணன் முதல்பதிப்பு, 1938ல் வெளிவந்த திருவாவடுதுறை ஆதின பதிப்புகளில் வரும் முதல் பாடல்.

**"சீதக்களபச் செந்தா மரைப்பூம்**
**பாதச் சிலம்பு பல்விசை பாடப்**
**பொன்னரை ஞானும் பூந்துகிலாடையும்**
**வன்ன மருங்கில் வளர்ந்தும் கெறிப்ப்"**

என்றே உள்ளது.

ஆனால் தஞ்சையில் திகழும் உலகப்புகழ்பெற்ற சரசுவதி மகால் நூலகத்தின் தமிழ்த்துறையில் உள்ள இருநூறு ஆண்டுகளுக்கு முன் எழுதப்பெற்ற பிள்ளையார் அகவல் என்ற ஏட்டுச்சுவடியில்

**"சீதக்களபச் செந்தா மரைப்பூம்**
**பாதச் சிலம்பு பல்விசை பாடப்**
**காரணத் தண்டை கணைங்கால் சிலம்பும்**
**பூரணக் கதலியைப் போற்றிடை யழகும்**
**பொன்னரை ஞானும் பூந்துகிலாடையும்**
**வன்ன மருங்கில் வளர்ந்தும் கெறிப்ப்"**

என்ற பாடல் உள்ளது.

முன்னர் வெளிவந்த பதிப்புகளில் இடம்பெறாத கீழ்க்கண்ட இரண்டு அடிகள்

**"காரணத் தண்டை கணைங்கால் சிலம்பும்**
**பூரணக் கதலியைப் போற்றிடை யழகும்"**

என்ற இரு வரிகள் இச்சுவடியில் இருப்பது குறிப்பிடத்தக்கதாகும். இந்த அடிகள் பாடலோடு ஒத்து இருப்பதால் இடைச்செருகல் என்று கொள்ள இயலாது. பழைய பதிப்பின் போது அவர்களுக்குக் கிடைத்த சுவடிகளில் இந்த அடிகள் இல்லாமல் இருக்கலாம். அல்லது சுவடியினை நகலாக்கம் செய்து அளித்தவர்கள் இந்த அடிகளை விட்டுவிட்டு பிரதி செய்திருக்க வேண்டும். எது எப்படி இருந்தாலும் விநாயகர் அகவல் பாடும்

பக்தர்களுக்கும் தமிழ் அறிஞர் உலகிற்கும் சுவை சேர்ப்பதாக அமையும் என்று விளக்குகிறார்.

## ஆசிரியர் பதிப்பித்த நூல்கள்

### அழகரந்தாதி

மதுரைக்கு வடகிழக்கே உள்ள அழகர் மலையில் உள்ள அழகர் கோயிலைப் பற்றிய சுவடிகளை ஆய்வு செய்து இந்நூல் வெளியிடப்பட்டுள்ளது. இந்த நூலில் மதுரை மக்களின் வாழ்வியல் நிலைப்பற்றி அறிய முடிகின்றது. அழகரந்தாதி பிள்ளைப்பெருமாள் ஐயங்கார் இயற்றிய நூலாகும்.

### அறப்பளீசுவர சதகம்

இந்நூல் சிற்றிலக்கிய வகையைச் சேர்ந்தது. இது ஒரு நீதி இலக்கியம் ஆகும். கொல்லிமலையில் கோயில் கொண்டுள்ள இறைவனை மையப்படுத்தி அம்பலவாணக்கவிராயர் இயற்றிய நூலாகும். இது திருக்கருவைப் பதிற்றுப் பத்தந்தாதி, குட்டித்திருவாசகம் எனப் போற்றப்படும் இந்நூலின் ஆசிரியர் அதிவீரராமபாண்டியர் ஆவார். இந்நூலினை நூலகத்தில் உள்ள ஏட்டுச் சுவடியினை கொண்டும் முன்னர் பதிப்பித்து வெளிவந்த நூல்களை ஒப்புநோக்கியும், மூலச்சுவடியின் வழி பாடல்களை சரிசெய்தும் பாடல் பொருள் விளக்கம் போன்றவற்றுடன் சதகம் பற்றியும் சக நூல்களின் பட்டியல் அளித்தும், இலக்கியங்களில் காணப்படும் கொல்லிமலையின் சிறப்புகளைப் பற்றியும், செய்திகளைத் தொகுத்தும் திருந்தியப் பதிப்பாகச் செவ்வனே பதிப்பித்துள்ளார் திரு.மணி.மாறன்.

### சரபேந்திர பூபால குறவஞ்சி

தஞ்சையை ஆட்சி செய்த மராத்திய, இரண்டாம் சரபோஜி மன்னர் மீது இயற்றப்பெற்றதாகும். இடையிலேயே விருத்தம், அகவல், வெண்பா முதலிய இந்நூல் அமைகின்றது. கொட்டையூர் சிவக்கொழுந்து தேசிகர் இயற்றிய நூல் ஆகும்.

**ஆசிரியர் பதிப்பித்த பிற நூல்கள்**

**பண்டிதை அசலாம்பிகை அம்மையார்**

பழம்பெரும் மிக்க நம் நாட்டில் தோன்றிய வெள்ளி வீதியார், ஔவையார், காரைக்கால் அம்மையார், ஆண்டாள் போன்ற பெண்பாற் புலவர்களின் வரிசையில் தோன்றியவர் பண்டிகை அசலாம்பிகை அம்மையார் பேச்சு, எழுத்து, கவிதை, கட்டுரை என்னும் பன்முகத்திறமை பெற்ற இவர் பெண் புலவர்கள் புலவர்கள் பற்றி எழுதியுள்ளார்.

**முனைவர். குடவாயில் பாலசுப்ரமணியன்** என்ற ஆசிரியர் எழுதிய குடவாயில் பற்றிய வாழ்க்கை வரலாறு படைப்புகள், ஆராய்ச்சி பணிகள் ஆகியவற்றில் அவரோடு இணைந்து ஆசிரியர் நடத்திய கல்வெட்டு ஆராய்ச்சி மற்றும் ஆசிரியரின் அனுபவங்கள் பற்றியும் விளக்கி கூறப்பட்டுள்ளது.

**எண்ணும் எழுத்தும்**

இது இவரது படைப்பின் சிறந்த நூல். சுவடியியல் பயிலும் மாணவர்களுக்கு ஒரு பாட நூலாக இது சுவடியியல் ஆய்வாளர்களால் கருதப்படுகிறது. நான்கு ஆண்டுகளில் நான்கு பதிப்புகள் வெளிவந்துள்ளது.

**தமிழரின் மடந்தை கதை**

இந்நூல் எளிய இலக்கியமாகவும், இனிய பொழுதுபோக்காகவும், மெய்யும், பொய்யும் அளவோடும், அளவற்றும் சுமந்து சுவையோடு தருவதுடன் மனிதனின் வாழ்க்கைக் கூறுகளைக் காட்டுவதாய் இக்கதை அமைந்துள்ளது.

**தமிழ் மருத்துவ நூல்கள்**

சித்த மருத்துவம் பற்றியும், மருத்துவக் குறிப்புகளையும் இந்நூலில் குறிப்பிட்டுள்ளார். தமிழ் மருத்துவ முறைகள் என்ற தலைப்பில் நூலக வெளியீடாக வெளிவர இருக்கும் இந்நூல் எளிய மருத்துவமுறைகளை விவரிக்கின்றது.

## முடிவுரை

மணி.மாறன் மேலும் பல ஆய்வு கட்டுரைகளை எழுதியுள்ளார். வானொலி உரையும் நடத்தியுள்ளார். உறுதி, காய்பாரத்தைக் கொடி தாங்காதா?, மீதூண் விரும்பேல், மலையின் உயரம் மலைக்கு தெரியுமா?, சோதனைகளை எதிர்கொள்ளல், எளிமை என்றால் ஏழ்மையா? வினையும் விளைவும் ஆகிய தலைப்புகளில் வானொலி நிலையத்தில் தனது உரையை நிகழ்த்தியுள்ளார். மாணவர்களின் உள்ளார்ந்த திறனை ஆசிரியர் தட்டி எழுப்பியுள்ளார். இக்கட்டுரையின் மூலமாக ஆசிரியரின் பதிப்பு வரலாறு பற்றி அறிய முடிகின்றது.

## நூற்பட்டியல்

1. மணி.மாறன் அழகரந்தாதி
அறப்பளீசுர சதகம்
தமிழ் ஆய்வுக்கட்டுரைகள் தொகுதி-1,2
தமிழ் எண்ணும் எழுத்தும்
தமிழறி மடந்தை கதை
திருக்கருவைப் பதிற்றுப்பத்தந்தாதி
சரபேந்திர பூபாலக் குறவஞ்சி
தமிழ் மருத்துவ முறைகள்
திருவேங்கடமாலை அச்சில் நூலக வெளியீடு

## இதழ்கள்

அருள்மிகு வான்மீகநாதர் சுவாமி திருக்கோவில் திருக்குடமுழுக்கு விழா மலர் 12.02.2014
மகாமகம் 2016 சிறப்பு மலர்
தமிழர் தேசிய தமிழர் கண்ணோட்டம்
தமிழரின் தொன்மை வரலாறு கூறும் கீழடி பற்றிய கட்டுரை.

# மே.வி.வேணுகோபாலப் பிள்ளையின் வரலாறும் பதிப்புப் பணியும்

**மு. கண்ணகி**
முனைவர் பட்ட ஆய்வாளர்,
ஓலைச்சுவடித் துறை.

இவரது காலம் 1696 ஆகும். இவர் சைதாப்பேட்டைக்கு மேற்கிலுள்ள மேட்டுப் பாளையம் என்னும் சிற்றூரில் வாழ்ந்த வீராசாமிப் பிள்ளை, பாக்கியம் அம்மைக்குப் பிறந்தவர். சைதை ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியைச் சார்ந்த மாதிரிப் பள்ளியில் தொடக்கத்தில் சேர்ந்து படித்தார். குடும்பநிலை காரணமாகப் பள்ளிப் படிப்பை இவர் விட்டுவிட நேர்ந்தது. சென்னை வேப்பேரியில் எஸ்.பி.சி.கே அச்சகத்தில் அச்சுத் தேய்க்கும் பணியில் சேர்ந்தார் என்றாலும் கல்வியில் இருந்த ஆர்வம் காரணமாக இரவுப் பள்ளியில் சேர்ந்து ஓய்வு நேரத்தையெல்லாம் அறிவைப் பெருக்கிக் கொள்வதிலே நாட்டஞ்செலுத்தினார். பின்னர் அஞ்சலகத்திலும் வழக்கறிஞரிடத்தும் வேலை பார்த்தார்.

சென்னையில் தமிழ் இலக்கிய இலக்கணங்களில் வல்லுநராய்த் திகழ்ந்த திரு கா.ரா. கோவிந்தராச முதலியாரிடத்தில் வேணுகோபாலன் முறையாகப் பாடங்கேட்டுப் புலமை அடைந்தார். தம் சொந்த விடாமுயற்சியால் திரு கு.வே. மாசிலாமணி முதலியார் இரவுப் பள்ளியில் ஆங்கிலத்தையும் நன்கு பயின்று தேர்ந்தார். சென்னைப் பல்கலைக்கழகம் நடத்திவந்த வித்துவான் தேர்விற்குச் சென்று வித்துவான் பட்டமும் பெற்றார்.

சென்னை முத்தியாலுப்பேட்டை உயர்நிலைப் பள்ளியில் 1920-23 தமிழாசிரியராகவும், பெப்ரீஷியஸ் உயர்நிலைப் பள்ளியில் 18 ஆண்டுகள் தலைமைத் தமிழாசிரியராகவும் இவர் பணியாற்றினார். பள்ளி மாணவர்களுக்குத் தமிழ் கற்றுக் கொடுத்ததோடு நில்லாமல், ஜெர்மானியப் பாதிரிமார்களுக்கும் சென்னைக் குருக்கள் கல்லூரி

என்னும் கிருஸ்தவ மதக் கல்லூரி மாணவர்களுக்கும் சைவ வைணவ நூல்களைப் போதிக்கும் சித்தாந்தப் பேராசிரியராகவும் இருந்து பயிற்றுவித்துள்ளார்.

இவர் ஆசிரியத் தொழிலை விட்டு ஓய்வு பெற்ற பிண்பும் விரும்பியவர்களுக்கு முறையாகத் தமிழ் நூல்களைப் பாடஞ் சொல்லிவித்தார். எழுத்து வேலையையும் பதிப்புத் தொழிலையும் மேற்கொண்டார். தொடக்கப் பள்ளிக்கும் ஏற்ற பல பாடநூல்களை இவர் எழுதிக் கொடுத்துள்ளார்.

இவர் பத்திராயு அல்லது ஆட்சிக்குரியோன் 1928 திரு கண்ணபிரானார் (1929) குணசாகரர் அல்லது இன்சொல் இயல்பு (1929) அற்புத விளக்கு, இளைஞர் தமிழ்க் கையகராதி அரிச்சந்திர புராணச் சுருக்கம் முதலான நூல்களை எழுதி வெளியிடச் செய்துள்ளார்.

திரு மே.வீ. வேணுகோபாலப் பிள்ளை அவர்கள் மகாவித்துவான் என்றும் சிந்தாமணிச் செல்வர் என்றும் சிறப்பித்துக் கூறப்பட்டார். இவர் பரிசீலனை செய்து திருத்திப் பதிப்பித்த நூல்கள் பலவாகும். அவற்றுள் குறிப்பிடத்தக்கவை இறையனார் அகப்பொருள், களவியல் - தொல்காப்பியம் சொல்லதிகாரம் நச்சினார்க்கினியர் உரை, வீரசோழியம், தஞ்சைவாணன் கோவை விளக்கம் - குறிப்புரை அட்டப்பிரபந்தம், விளக்கக் குறிப்புரை, சித்தர் ஞானக்கோவை யாப்பிலக்கணம், யசோதர காவியம் முதலியவாகும்.

சென்னை பவானந்தர் கழகச் சார்பில் வெளியான நூல்கள் பலவும் இவரது ஆசிரியர் கா.ரா.கோவிந்தராச முதலியாரின் பரிசீலனைக்குட்பட்டும் இவருடைய தனித்த பேருழைப்பினாலும், மேற்பார்வையினாலும் பிழைகளைந்து செவ்விய முறையில் அமைத்த விளக்கக் குறிப்புகளுடனும் அருஞ்சொல்லகராதி பொருட் குறிப்பகராதி, மேற்கொளகராதி முதலிய பிற்சேர்க்கையுடனும் வெளியிடப்பட்டவையாகும். இதில் யாப்பருங்கல விருத்தியுரை திருத்தப் பதிப்பாக இவரால் சித்தஞ் செய்யப்பட்டுப் பதிப்பிக்கப்பட்டதாகும்.

தமிழ் நூல்கள் சிறியவையாயினும் பெரியவையாயினும் பிழையின்றித் திருத்தமான முறையில் கண்கவர் வனப்புடன் வெளிவருதல் வேண்டும் என்பதே என் வாழ்க்கையின் குறிக்கோள்.

ஆதலால் பதிப்புத்துறையில் என்னால் இயலும் வகையில் அறிவை வளர்க்கும் ஆங்கில நூல்கள் பலவற்றை யான் பெரிதும் பயின்று வந்துள்ளேன் என்று பெரும்புலவர் அவர்களே குறிப்பிட்டுள்ளார்கள்.

இவர் பதிப்புத் துறையில் பெற்றுள்ள தேர்ச்சியைப் பயன்படுத்திக் கொண்டுள்ள பதிப்பகத்தினர், பவானந்தர் கழகம் கே.பழனியாண்டிப் பிள்ளை, எம்.ஆர்.அப்பாதுரைப் பிள்ளை ஆகியோராவர். மேலும் பல பதிப்பாளர்களும், பல பேராசிரியர்களும் நூலாசிரியர்களும் தங்கள் வெளியீடுகள் செம்மையாக அமைய இவரது துணையை நாடிச் சிறப்படைந்துள்ளனர். இப்போது வெளியாகும் பள்ளிக்கூடப் புத்தகங்களில் பெரும்பகுதி இவரால் பார்வையிடப்பட்டே வெளியிடப்படுகின்றன.

நூல் அச்சாகும் போது கவனிக்க வேண்டிய திருத்தம் முதலிய செய்யும் விதிமுறைகளை நன்கு கற்றுத் தேர்ந்து, அவைகளை உரிய முறையில் நடைமுறையில் பயன்படுத்தும் வித்தகராகத் திகழ்ந்தார்.

இவரிடம் தமிழ் பயின்று புலவர்களானோர் பலராவர் அவர்களில் கே.ஏ.பாலசுப்ரமணிய முதலியார், பி.என்.இராமச்சந்திர ஐயர், பாலூர் கண்ணப்ப முதலியார், க.வா.சச்சிதானந்தம் ஆகியோர் குறிப்பிடத் தக்கவர்களாகவர்.

முப்பது ஆண்டுகளுக்கு மேலாகத் தமிழ் நூல்களை நன்கு ஆய்ந்து பதிப்பித்து வரும் மேலோராகத் திரு பிள்ளை அவர்கள் விளங்கினார். இவரைப் பற்றித் திரு.வி.க அவர்கள் கூறியுள்ளதாவது திரு பிள்ளை நூல்களைப் பிழையின்றிப் பதிப்பதில் பேர்பெற்றவர் தமிழ்ப் பதிப்புத் துறை வேணுகோபாலரால் மேன்மையுற்றுள்ளது இவர் தமிழ்ப் பதிப்பில் சிறந்து வாழ்கிறார்.

# தலபுராணப் பதிப்பு செம்மல் உ.வே.சா

**முனைவர் வேல். கார்த்திக்கேயன்**
இணைப் பேராசிரியர் - தமிழ்த்துறை,
பாரதிதாசன் அரசு மகளிர் கல்லூரி,
புதுச்சேரி - 605 003.
09444 220 163.

ஏடு தேடி அலைந்த வூர் எத்தனை?
எழுதி யாய்ந்த குறிப்புரை எத்தனை?
பாடுபட்ட பதத்தெளிவெத்தனை?
பன்னெறிகட்பொருட்டுணிவெத்தனை? ....

என்று வினா தொடுத்துக்கொண்டே வியந்து உ.வே. சாமிநாதய்யரை வைர வரிகளால் பாராட்டியவர் பாவலர் இரா.இராகவன். மலர்தோறும் சென்று தேனைச் சேகரிக்கும் தும்பியைப் போல ஊர்தோறும் சென்று ஏட்டுச்சுவடிகளைச் சேகரித்தவர். இன்று நம் கைகளில் தவழ்ந்துகொண்டு அழகொழுக அச்சிட்ட நிலையில் படித்துக்கொண்டிருக்கும் பழந்தமிழ்நூல்கள் யாவும் அன்று உ.வே.சா, அவர்கள் வீடுவீடாக ஊர்ஊராக அலைந்து திரிந்து தேடிக் கண்டெடுத்து செல்லரித்தும் சிதைந்தும் கிடந்த ஓலைச் சுவடிகளைச் செப்பம்செய்தும் செம்மையாகப் பதிப்புப் பணி செய்தும் தந்த பெருமைக்குரியவர் ஆவார்.

பத்துப்பாட்டு எட்டுத்தொகை காப்பியங்கள், சிற்றிலக்கியங்கள், இலக்கண நூல்கள், உரைநடை நூல்கள் என்று பதிப்புத்துறையில் ஈடுபட்டு சங்ககாலத் தமிழுக்கும் பிற்கால உரைநடைத் தமிழுக்கும் பெருமை சேர்க்கும் வகையில் தம் வாழ்நாளை அர்ப்பணித்துக்கொண்டவர். அவர் இதுமட்டுமல்லாமல் தலபுராண நூல்களையும் பதிப்பு செய்துள்ளமை மிகவும் போற்றத்தக்க ஒன்றாம். அத்தகைய அரிய பணியை வெளிப்படுத்துவதே இக்கட்டுரையின் உள்ளீடாகும்.

**தலபுராணங்கள்**

தமிழ் இலக்கிய வளர்ச்சியில் புராணம் என்னும் தனி இலக்கியம் பல்கிப் பெருகியுள்ள நிலையினைக் காணலாம். இடைக்கால இலக்கிய வளர்ச்சியில் புராணங்கள் சிறப்பிடம் பெறுகின்றன. புராணம் என்ற சொல் வடசொல்லாக இருந்தாலும் தமிழில் நீண்ட நெடுங்காலமாக வழங்கப்பட்டு வந்துள்ளது என்பது நோக்கத்தக்கது.

பழங்காலத்தில் ஆலய வழிபாட்டையும் தலவரலாறுகளை அறிவதையும் எவ்வளவு அருமையாகக் கருதினர் என்பதை டாக்டர். உ.வே.சாமிநாதய்யர் அவர்கள் தம்முடைய வாழ்க்கை வரலாற்றில் குறிப்பிடுவர்.

"தலங்களைப் பற்றிய வரலாறுகளைத் தெரிந்து கொள்வதில் அக்காலத்தினருக்கு அதிக விருப்பம் இருந்தது. தலத்தின் விருட்சம், மூர்த்திகளின் திருநாமம், வழிபட்டவர்கள் வரலாறு, தீர்த்த விசேடம் முதலியவற்றை அங்கங்கே உள்ளவர்கள் நன்றாகத் தெரிந்துகொண்டு மற்றவர்களுக்குச் சொல்வார்கள். தங்கள் ஊர் சிறந்த தலமென்றும் பலவகையான மகாத்மியங்களை உடையதென்றும் சொல்லிக்கொள்வதில் அவர்களுக்கு ஒரு திருப்தி இருந்தது."

மிகச் சிறந்த தலங்களுக்குச் சென்று அங்குள்ள மூர்த்திகள்பால் ஈடுபட்டவர்கள் தங்கள் ஊரிலும் அந்தத் தலங்களைப் போன்றே அமைப்புகளை உண்டாக்கி வழிபடுதல் பழங்காலத்து வழக்கம். பெரிய புராணத்தை இயற்றிய சேக்கிழார் சோழ நாட்டிலுள்ள திருநாகேசுவரம் என்னும் சிவ தலத்தில் ஈடுபாடுடையவர். அவர் சென்னைக்கருகிலுள்ள தம் ஊராகிய குன்றத்தூரிலும் ஒரு நாகேசுவரத்தை உண்டாக்கினார். நடுநாட்டில் பெண்ணையாற்றங்கரையில் ஶ்ரீரங்கம் ஜம்புகேசுவரம், தாயுமானவர் கோயில் என்னும் மூன்று தலங்களுக்கும் பிரதியாக மூன்று தலங்கள் உள்ளன. ...

இத்தகைய அமைப்புக்களால் ஆலய வழிபாட்டைப் பழங்காலத்தில் எவ்வளவு அவசியமானதாகக் கருதினர் என்பதை

உணரலாம்........ என்று தம் நூலில் குறிப்பிடுகின்றார் உ.வே.சா அவர்கள்.

உருவ வழிபாட்டின் அளப்பரிய பயன்களை அனுபவப் பூர்வமாக உணர்ந்த இடங்களே திருத்தலங்களாகும். இவற்றின் பழமையான வரலாற்றுச் சிறப்புக்களை விவரிப்பனவே நம் தலபுராணங்களாகும். இவற்றின் அருமை பெருமை கருதியே தலபுராண நூல்களைப் பதிப்புப் பணிகளாக பலர் செய்திருந்தாலும் அவ்வரிசையில் மிகவும் குறிப்பிடத்தக்க பதிப்பாசிரியராக விளங்கும் பெருந்தகை உ.வே.சா எனில் மிகையாகாது. குறிப்பாக தமிழில் மிகுதியான நூல்களையும் மிகப் பழமையான நூல்களையும் ஒருசேரப் பதிப்பித்து அளித்து ஐயர் அவர்களே தமிழில் மிகுதியான தலபுராணங்களைப் பதிப்பித்தவர் என்னும் சிறப்புக்கும் உரியவராகத் திகழ்கின்றார். 1883 முதல் 1940 ஆம் ஆண்டு வரையில் 13 தலபுராணங்களை இவர் பதிப்பித்து அளித்துள்ளார்.

### உ.வே.சா. பதிப்பித்த தலபுராணங்கள்

1. திருக்குடந்தைப் புராணம் (1883)
2. திருப்பெருந்துறைப்புரணாம் (1892)
3. வீர வனப் புராணம் (1903)
4. சூரை மாநகர்ப் புராணம் (1904)
5. தியாகராச லீலை (1906)
6. திருவாலவாய் உடையார் திருவிளையாடற்புராணம் (1906)
7. தனியூர்ப் புராணம் (1907)
8. மண்ணிப் படிக்கரைப் புராணம் (1907)
9. திருக்காளத்திப் புராணம் (1912)
10. விளத்தொட்டிப் புராணம் (1934)
11. ஆற்றூர்ப் புராணம் (1936)
12. தணிகாசலப் புராணம் (1939)
13. வில்லைப் புராணம் (1940)

மேற்கூறிய புராணங்களில் சிலவற்றை விரிவாகக் காணலாம்.

### திருப்பெருந்துறைப் புராணம்

புதுக்கோட்டை மாவட்டத்தில் அறந்தாங்கிக்குப் பக்கத்தில் உள்ளது திருப்பெருந்துறை. இத்தலம் ஆவுடையார்கோயில் என்று இன்று வழங்குகின்றது. ஊர் பெருந்துறை கோயில் ஆவுடையார்கோயில் பெயரே இன்று ஊருக்குப் பெயராக வழங்குவதனைக் கண்டு உணரலாம்.

இங்குள்ள மூலவரை அநாதி மூர்த்த தலம், ஆதிகைலாசம், ஆவுடையார் கோயில், குருந்தவனம் யோகபீடபுரம் முதலான பல திருநாமங்கள் உள்ளன.

உருவம், அருவம், அருவுருவம் என்னும் மூவகைத்திருமேனிகளுள்ளே சிவபெருமான், அம்மையுடன் அருவத் திருமேனி கொண்டு எழுந்தருளி விளங்குவது இந்த திருப்பதியாம்.

இவ்வூரைக்குறித்த பழைய வரலாற்றைத் தெரிவிக்கும் புராணங்கள் வடமொழியில் ஸ்ரீ ஆதிகைலாச மகாத்மியம். பிருஹத் தீர்த்த மகாத்மியம். அஷ்டாத்தியாயி என மூன்று உள்ளன என்பர்.

தமிழில் இத்தலம் பற்றி மூன்று பழைய புராணங்கள் உள்ளன. சாமிநாத முனிவர், சுந்தர லிங்க முனிவர் மற்றவர் பெயர் தெரியவில்லை. இருப்பினும் நான்காவதாக எழுதியவர் உ.வே.சா. குறிப்பாக இதிலுள்ள திருவாதவூர் அடிகளின் சரித்திரப் பகுதிகளுள் ஒன்றை உ.வே.சா. அவர்கள் படித்துக்கொண்டிருக்கையில் உடனிருந்த தமிழக்கவிஞர் ஒருவர் இதன் செய்யுட்களைப் பெரிய புராணச் செய்யுட்கள் என்றே எண்ணிப் பாராட்டிப் பின்பு தெரிந்து வியந்தனர் என்பதனை ஐயர் அவர்கள் இந்நூலின் முகவுரையில் குறிப்பிட்டுப் பதிப்பித்து இருக்கக் காணலாம்.

### வீரவனப் புராணம்

திருப்பெருந்துறைக்கு மேற்றிசையில் உள்ளதொரு சிவத்தலம் வீரவனம், இத்தலம் வில்வராணியம், வீராரணியம், வீரை, வீரையூர்,

அளகை, சாக்கைக் கோட்டை, சாக்களூர் சாக்கை என்றும் இத்தலத்தைச் சிறப்பிப்பர். இத்தலம் வீர விருட்சம் என்னும் தல மரத்தினால் ஊர் சிறப்பு பெற்றது. இங்கு முன்னொரு காலத்தில் சுகுண பாண்டியன் என்னும் மன்னனுக்குண்டாசிய ஐயத்தை நீக்கும் பொருட்டு இத்தல இறைவரான வீரசேகர நாதருடைய திருவருளால் பலா மரமாகிப் பின்பு தன்னுருவம் பெற்ற சிறப்புடையது என்பர். இத்தலத்தில் வீரன், அவன் மனைவி சுமதி, கண்டன் என்னும் சோழன், அவன் தேவி சுசிலை. அவன் புதல்வன் வீரசேகரச் சோழன். குபேரன் திருமால், இராமன் முதலானோர்கள் வணங்கி பேறு பெற்றனர். தொடர்ந்து, பாண்டிய நாட்டுத் தலங்களுள் சூரைமாநகர் (சூரைக் குடி) தலத்தைச் சிறப்பித்துப் பாடிய தலபுராணம் உ.வே.சா பதிப்பித்தார்.

மேலும் சோழ நாட்டிலுள்ள பல சைவ வைணவத் தலங்களுக்குப் புராணங்கள் பாடப்பெற்றுள்ளன. அவற்றுள் ஆற்றூர்ப் புராணம் (மந்தார வனம்) தனியூர்ப் புராணம், விளத்தொட்டிப்புராணம் முதலான புராண நூல்களை உ.வே.சா. பதிப்பித்துள்ளார்.

### தியாகராச லீலை புராணப் பதிப்பு

திருவாரூர்த் தியாகராச லீலை என்னும் தலப்புராணம் பிற்காலம் எழுந்த தாயினும் அரைகுறையானது. மூல நூலில் 360 லீலைகளில் 14 லீலைகள் மட்டும் கிடைத்துள்ளது. தம் ஆசிரியராகிய மகா வித்வான் மீனாட்சி சுந்தரம்பிள்ளையவர்களின் முதல் தலபுராணப் படைப்பு என்பதால் இந்நூலினை மிகவும் பயபக்தியோடு பதிப்பிக்க விரும்பினார். 1905 ஆம் ஆண்டு பதிப்பிக்கப்பெற்ற அப்புராணப் பதிப்பில் எழுதிய ஒரு பாடலில்,

**எண்ணிய பலவும் மாணவர்க் கன்பின் ஈந்திடு நிதிதமிழ் விளங்க**
**நண்ணிய புகழ்மீ னாட்சிசுந் தரநன் னாவலன் நன்கினி தாய்ந்து**

**பண்ணிய வீதி விடங்கர்தம் ஆடற்பனுவலைப் பதிப்பிக்க**
**இயைந்த**
**புண்ணிய மதனை நினைதொறும் எனது புந்தமிக்**
**கின்புறுமாவோ**

என்று பாடியுள்ளார்.

சங்க நூல்களைப் பதிப்பித்ததைவிடத் தம்மாசிரியர் இயற்றிய முதல் தலபுராண நூலைப் பதிப்பித்ததைப் பெரும்புண்ணியமாகவே அவர் கருதினார் என்பது புலப்படும்.

சுருங்கக்கூறின் பழந்தமிழ் நூல்கள், இலக்கண இலக்கியம் மற்றும் காப்பிய நூல்கள், உரைநடை நூல்கள், சிற்றிலக்கிய நூல்கள் முதலானவற்றைப் பதிப்பித்ததோடு மட்டுமல்லாமல் தலபுராணநூல்களையும் மிகுதியாக செம்பதிப்பாக வெளியிட்டுத் தமிழ்ச் செம்மலாக விளங்கியவர் உ.வே.சா எனில் மிகையாகாது.

**பொதியமலைப் பிறந்தமொழி வாழ்வறியும்**
**காலமெலாம் புலவர் வாயில்**
**துதி அறிவாய்: அவர் நெஞ்சின் வாழ்த்து அறிவாய்:**
**இறப்பின்றித் துலங்குவாயே ..... மகாகவி பாரதியார்**

# முனைவர் பூ. சுப்பிரமணியம் அவர்களின் வாழ்க்கை வரலாறும் பதிப்பு நெறிமுறைகளும்

**முனைவர் கா. சத்தியபாமா**
எம்.ஏ.,எம்.ஃபில்.,எம்.எட்.,பி.எச்டி.,
தலைவர் & இணைப் பேராசிரியர் (ஓய்வு)
தமிழ்த்துறை,
அரசு மகளிர் கல்லூரி,
சிவகங்கை 630 562.

உயர்தரச் செம்மொழியும் தமிழ் மொழியில் காணலாகும் ஓலைச்சுவடிகள் தமிழரின் மரபுச் செல்வங்களாகும். அக்காலத்தில் நம் முன்னோர்கள் தம் எண்ணங்களையும் அறிவுச் செயல்பாடுகளையும் ஓலைச்சுவடிகளிலேயே பெரிதும் பதிவு செய்து வைத்தனர். ஆதலின், ஓலைச் சுவடிகளில் உள்ள நூல்கள் நம் முன்னோர்கள் நமக்கு விட்டுச் சென்ற அறிவுக் களஞ்சியங்கள் எனலாம். அச்சு நூல்கள் வரத் தொடங்கிய பின்னர் ஓலைச் சுவடிகளில் டதிவு செய்யும் நிலை மாறியது. தாள்களின் பயன்பாடு அதிகமானது. ஆயினும் ஓலைச்சுவடிகளில் காணலாகும் நூல்களைப் பதிப்பித்து அச்சு நூல்களாகக் கொண்டுவர வேண்டியது இன்றியமையாததாயிற்று. இந்நிலையில் தமிழ் அறிஞர் பெருமக்கள் பலரும் ஓலைச்சுவடிகளில் இருந்த நூல்கள் பலவற்றையும் அச்சு நூல்களாக வெளிக் கொணர்ந்தனர். அந்தவகையில் இருபதாம் நூற்றாண்டில் சுவடித் துறையில் பணியாற்றி சுவடிகள் தொடர்பான பணிகளை 40 ஆண்டுகள் மேற்கொண்டவர் முனைவர் பூ.சுப்பிரமணியம் அவர்கள்.

## பிறப்பும் படிப்பும்

"உ.வே.சா. அவர்களின் வழித் தோன்றல்" என்ற போற்றுதலுக்கு உரியவராக விளங்கியவர் முனைவர் பூ.சுப்பிரமணியம் அவர்கள். வட ஆற்காடு மாவட்டம் வந்தவாசி வட்டம் இரகுநாத சமுத்திரம் என்ற சிற்றூரில் 02.07.1927 ஆம் ஆண்டு திரு.பூங்காவனம்,

அங்கம்மாள் தம்பதியினரின் இரண்டாவது மகனாகப் பிறந்தார். ஆரம்பகாலக் கல்வியை இரகுநாத சமுத்திரத்திலும் சாத்தம்பாடியிலும் பயின்றார். பின்னர் 1946 ஆம் ஆண்டில் செங்கல்பட்டு ஆசிரியப் பயிற்சிப் பள்ளியில் ஆரம்ப ஆசிரியப் பயிற்சி பெற்றார். 1947 ஆம் ஆண்டுமுதல் இரகுநாத சமுத்திரத்திற்கு அருகிலமைந்த ஊர்களில் ஆரம்பப் பள்ளிகளில் ஆசிரியப் பணியை மேற்கொண்டார். மயிலம் சிவஞான சுவாமிகள் தமிழ்க் கல்லூரியில் பயின்று வித்துவான் பட்டம் பெற்றார். பின்னர் பி.ஏ.,பி.லிட்., எம்.ஏ., முதலான பட்டங்களையும் பெற்றார். அதன்பின் சமஸ்கிருதத்தில் பட்டயத்தையும் பெற்றார். 1953 ஆம் ஆண்டு முதல் மேட்டூர் அணை, கோத்தகிரி அரசினர் பள்ளிகளில் தமிழாசிரியராகப் பணியாற்றினார்.

## அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகப்பணி

முனைவர் பூ.சுப்பிரமணியம் அவர்கள் பல பள்ளிகளில் தமிழாசிரியராகப் பணியாற்றிய பின்னர், 1963 ஆம் ஆண்டில், சென்னை அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத்தில் தமிழ்ப் பண்டிட் பதவியில் அமர்ந்தார். அந்நிறுவனத்தில் பணியாற்றிய பொழுது பதிமூன்று சுவடிப்பதிப்புப் பணிகளை மேற்கொண்டார். அவர் பதிப்பித்தளித்த அந்நூல்கள் சில காரணங்களால் வெளிவரவில்லை. அவ்வாறு வெளிவராதது தமிழ் உலகுக்குப் பேரிழப்பாகும். அந்தப் பதிமூன்று சுவடிப் பதிப்புகளையும் அவர் வாழ்ந்த காலத்தில் அவராலேயே கண்டறிய இயலவில்லை. அந்நூல்களைப் பற்றிய செய்திகள் எதுவுமே இன்றுவரை கிடைக்கவில்லை என்பது வருந்தத்தக்கது.

இச்சுவடிப் பதிப்புக்களையன்றி பருவ இதழ் சுவடிப் பதிப்புகளாக ஏழு நூல்கள் வெளிவந்துள்ளன. அவை 1.கதிர்காமச் சிந்து (1965), 2.நெல்லைக் குமரன் துதி (1965), 3.பரிபூரணச் சித்தி (1965), 4.வருகைப்பத்து (1965), 5.இரிஷிவிந்தக் குறவஞ்சி (1966), 6.திருவள்ளுவர் பிள்ளைத்தமிழ் (1969), 7.அருங்கலச் செப்பு (1972) ஆகியவையாகும். இவை சென்னை அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் அரையாண்டு பருவ இதழில் வெளிவந்தவை.

மேலும் இந்நூலகத்தில் உள்ள ஓலைச்சுவடிகளின் விவரங்களைத் தொகுத்து விவர அட்டவணைகள் தயாரிக்கும் பணியில் ஈடுபட்டார். அந்த வகையில் தயாரிக்கும் பணியில் ஈடுபட்டார். அந்த வகையில் அந்நூலகத்திலிருந்து வெளிவந்த ஆறு சுவடிகள் விவர அட்டவணையின் பதிப்பாசிரியராக இருந்துள்ளார்.

**உலகத் தமிழாராய்ச்சி நிறுவனப் பணி**

சென்னை அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத்தில் தமிழ்ப் பண்டிட் பதவியில் இருந்த முனைவர் பூ.சுப்பிரமணியம் அவர்கள் 1979 ஆம் ஆண்டு சென்னை உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் ஆய்வு அலுவலராக மாற்றுப்பணியில் 1983 ஆம் ஆண்டு வரை நான்கு ஆண்டுகள் பணியாற்றினார். பின்னர் அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத்தில் இரு ஆண்டுகள் காப்பாட்சியராகப் பணியாற்றி அரசுப் பணியில் இருந்து ஓய்வு பெற்றார். அதன் பின்னர், மீண்டும் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் பணியில் சேர்ந்து 1992 ஆம் ஆண்டுவரை பணியாற்றினார். அவர் அங்குப் பணியாற்றிய 11 ஆண்டுகளில் சுவடிகள் தொடர்பான பல்வேறு பணிகளை மேற்கொண்டார்.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் பணியாற்றியபோது இவர் மேற்கொண்ட சுவடிப் பதிப்பு நூல், “மனை நூல்” என்பதாகும். இந்நூல் இந்நிறுவனத்தால் 1981 ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது. இவர் எழுதிய “மெய்க்கீர்த்திகள் என்ற ஆய்வு நூல் இந்நிறுவனத்தால் 1983 ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது. மேலும், இவருடைய சுவடியியல் தோற்றமும் வளர்ச்சியும் என்ற முனைவர் பட்ட ஆய்வேட்டை “சுவடியியல்” என்ற நூலாக 1991 ஆம் ஆண்டு இந்நிறுவனம் வெளியிட்டது. இந்த நூல் சுவடியியல் பயிலும் மாணவர்களுக்கும் சுவடி ஆய்வாளர்களுக்கும் மிகவும் பயனுள்ள சிறந்ததொரு நூலாகும். இந்நூல்களையன்றி, இங்குப் பணியாற்றிய காலத்தில் மெய்க்கீர்த்திகள், சுவடிப் பதிப்புகள், கலம்பக இலக்கியம், சுவடிப்பதிப்பு வரலாறு (1950 வரை), பதிப்பு முன்னோடிகளில் பதிப்புப் பணி முதலான பல ஆய்வுக் கட்டுரைகளை வழங்கியுள்ளார்.

இப்பணிகளேயன்றி, சுவடியியல் மாணவர்களுக்கும் சுவடியியல் பாடத்தை நடத்தி, சுவடிகளைப் படிக்கவும் படியெடுக்கவும் பயிற்சியளித்தார். அந்த வகையில் 60 மாணவர்களுக்கு அவர் பயிற்சியளித்துள்ளார். அவர்களுள் குறிப்பிடத்தக்கவர்கள் தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழக ஓலைச் சுவடிகள் துறை முன்னாள் தலைவர் முனைவர் இரா. மாதவன். தற்பொழுது அத்துறையில் பணியாற்றிவரும் பேரா.மோ.கோ.கோவைமணி, சென்னை இந்திய மருத்துவம் மற்றும் ஹோமியோபதி ஆணையரகத்தில் சுவடிகள் பிரிவில் பணியாற்றிய லயன் த.அழகப்பராசு, லயன் அ.பிரசன்னா மற்றும் கும்பகோணம் அரசு ஆடவர் கல்லூரியில் பணியாற்றிய ஓய்வுபெற்ற முனைவர் அ.ம.சத்தியமூர்த்தி, சிவகங்கை அரசு மகளிர் கல்லூரியில் பணியாற்றிய ஓய்வு பெற்ற முனைவர் கா.சத்தியபாமா (இக்கட்டுரையாசிரியர்) ஆகியோர் அவருடைய சுவடியியல் மாணவர்களே!

இந்நிறுவனத்தில் பணியாற்றிய காலத்தில் ஓலைச்சுவடிகளைக் கற்பதில் ஆர்வம்மிக்க பள்ளி ஆசிரியர், பேராசிரியர், மருத்துவர், பிறபணியாளர்களுக்கும் குறுகிய காலச் சுவடிப் பதிப்புப் பயிற்சியும் வழங்கினார்.

**ஆசியவியல் ஆய்வு நிறுவனப் பள்ளி**

சென்னை ஆசியவியல் ஆய்வு நிறுவனத்தில் 1993 ஆம் ஆண்டு முதல் 2003 ஆம் ஆண்டுவரை (66 வயது முதல் 76 வயது வரை) சுவடித்துறைத் தலைவராகப் பணியாற்றினார். அந்நிறுவனத்தில் பணியாற்றிய காலத்தில், அதுவரை அச்சேறாமல் இருந்த சுவடிகள் பலவற்றைத் தேர்ந்தெடுத்து சுவடிப்பதிப்புகளாக வெளிக்கொணர்ந்தார். அந்த வகையில் எட்டு நூல்கள் வெளிவந்துள்ளன. அவை 1.வர்ம சூத்திரம் (1994), 2.நீலியட்சகானம் (1994), 3.சாரங்கர யட்சகாணம் (1996), 4.தேரூர்ந்த சோழன் யட்சகானம் (1997), 5.கணித நூல் பகுதி-1 (1999), 6.கோலவரைத் துயிலரங்கன் சரிதம் (2000), 7.கணிதநூல் பகுதி-2 (2005), 8.கணக்கதிகாரதம் (2007) ஆகியனவாகும். இவர் பதிப்பித்தளித்துள்ள "அகத்தியர் நாடித்திரட்டு" நூல் இன்னும் வெளியிடப்படவில்லை.

மேலும் ஆசியவில் ஆய்வு நிறுவனத்தில் பணியாற்றிய காலத்தில், பல நிறுவனங்களில் பாதுகாத்து வைக்கப்பட்டுள்ள சுவடிகளைப் பற்றிய விவர அட்டவணைகள் தயாரிக்கும் பணியில் ஈடுபட்டார். நான்காம் தொகுதி - முதல் பகுதி (1996), நான்காம் தொகுதி- இரண்டாம் பகுதி (1996), ஐந்தாம் தொகுதி - முதல் பகுதி (1997), ஐந்தாம் தொகுதி - இரண்டாம் பகுதி (1997) ஆகிய நான்கு சுவடிகள் அட்டவணைகளின் பதிப்பாசிரியராக இருந்துள்ளார்.

ஆசியவியல் ஆய்வு நிறுவனத்தில் 1999 ஆம் ஆண்டு "சித்த மருத்துவச் சுவடிகள்" என்ற தலைப்பிலமைந்த கருத்தரங்கின் ஒருங்கிணைப்பாளராக விளங்கி பொது மருத்துவச் சுவடிகள் என்ற தலைப்பில் ஆய்வுக் கட்டுரையையும் வழங்கினார். மேலும் அக்கருத்தரங்கில் அளிக்கப்பட்ட ஆய்வுக் கட்டுரைகளைத் தொகுத்துப் பதிப்பித்துள்ளார். இந்நூல் அந்நிறுவனத்தால் 1999 ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது.

முனைவர் பூ.சுப்பிரமணியம் அவர்கள் சொந்த வெளியீடுகளாக ஆருட சோதிடம் (1981), மனையடி சாத்திரம் (1995) ஆகிய இரு சுவடிப் பதிப்புகளை வெளியிட்டுள்ளார்.

முனைவர் பூ.சுப்பிரமணியம் அவர்கள் தமிழ்ச் சுவடிப் பதிப்பாளராக இருந்து செய்துள்ள தமிழ்த் தொண்டினைப் பாராட்டும் வகையில், அவருக்கு டாக்டர் உ.வே.சாவின் வழித்தோன்றல், சுவடிச் சுடர் முதலான விருதுகள் வழங்கப்பட்டன. சென்னை கே.கே.நகர் கிளை நூலக வாசகர் வட்டத்தின் சார்பில் "சுவடிச் சுடர்" என்ற உயரிய விருது 2008 ஆம் ஆண்டு வழங்கப்பட்டது.

கும்பகோணத்தில் 1992 ஆம் ஆண்டில் நடைபெற்ற டாக்டர் உ.வே.சாமிநாதையரின் ஆண்டு விழாவில் "உ.வே.சாவின் வழித்தோன்றல்" விருது வழங்கப்பட்டது. மேலும் சென்னை அன்னை வேளாங்கண்ணி பள்ளியின் சார்பில் விருது வழங்கப்பட்டுள்ளது.

சுவடிப் பதிப்பு முன்னோடிகள் அனைவரும் இலக்கண, இலக்கண நூல்களையும் சிற்றிலக்கியங்களையும் பதிப்பித்து வந்த நிலையை மாற்றி, இலக்கியம், சிற்றிலக்கியம், யட்சகான நாடகம் முதலான நூல்களோடு கணிதம், கட்டடக்கலை, சோதிடம், மருத்துவத் துறையைச் சார்ந்த நூல்களைச் சுவடிப் பதிப்பாகக் கொண்டு வந்த பெருமைக்குரியவராக விளங்குகிறார்.

## சுவடிப் பதிப்பு நெறிமுறைகள்

பதிப்பாசிரியர்கள் பொதுவான சில பதிப்புமுறைகளைக் கையாளுவதோடு, தமக்கென சில தனித்த பதிப்பு நெறிமுறைகளைக் கொண்டிருப்பர். அத்தகைய நெறிமுறைகள் அவர்தம் பதிப்புகள் சிறப்புற ஏதுவாகும். அந்தவகையில் இருபதிப்பிற்கும் மேற்பட்ட சுவடிப்பதிப்புப் நூல்களை வெளிக் கொணர்ந்துள்ள முனைவர் பூ.சுப்பிரமணியம் அவர்கள் தம் பதிப்பில் சில நெறிமுறைகளைக் கையாண்டுள்ளார். அவை அவர்தம் பதிப்புச் சிந்தனைகளை வெளிப்படுத்துகின்றன.

சுவடித்துறையில் ஆழ்ந்த அறிவுமிக்க முனைவர் பூ.சுப்பிரமணியம் அவர்களின் பதிப்புகள் கற்றோருக்கு'ம் தமிழ் மீது மிகுந்த பற்றுக்கொண்ட ஆர்வலர்களுக்கும் ஆய்வு, மேலாய்வு முதலானவற்றை மேற்கொள்ள விரும்புபவர்களுக்கும் பயன்படும் வண்ணம் செம்பதிப்புகளாக விளங்குகின்றன.

## கணித நூல்களின் சுவடிப்பதிப்புகளும் பதிப்பு நெறிமுறைகளும்

கணித நூல்களின் பதிப்புகள் மிகவும் குறைவு. ஆதலின் முன்னர் இருந்த பதிப்பு நெறிமுறைகள் கையாளப்பட்டதோடு புதிதாக பதிப்புநெறி முறைகள் பலவும் முனைவர் பூ.சுப்பிரமணியம் அவர்களால் உருவாக்கப்பட்டு அவையும் கையாளப்பட்டுள்ளன.

1. பாடல் வடிவில் அமைந்த கணக்குகள், அவற்றின் உரை, எடுத்துக் காட்டிற்குரிய கணக்குகள் போன்றவற்றை தனித்தனியே பிரித்தமைக்க வேண்டும்.

2. கணிதச் சுவடிகளில் இடம்பெறும் மேல்வாய் இலக்க எண்கள், கீழ்வாய் இலக்க எண்கள், அளைவுக் குறியீடுகள் போன்றவை இன்று பயன்படுத்தப்படும் இந்தோ அராபிய எண்களாகவும் குறியீடுகளாகவும் இருக்கும் வகையில் அமைக்க வேண்டும்.

3. கூட்டல் குறி, பெருக்கல் குறி போன்ற எல்லாவற்றிற்கும் சுவடியில் ஒரு சிறுகோடு மட்டுமே போடப்பட்டிருக்கும். இடத்திற்குப் பொருத்தமான குறியீட்டைத் தக்க இடங்களில் பயன்படுத்த வேண்டும்.

4. கணக்குகள் அனைத்தையும் அ, ஆ, இ என மூன்று நிலைகளில் அமைய வேண்டும் “அ” பகுதி எழுத்தமைதியுடன் கணக்குகளை அமைப்பது. பாடல்களாயின் தக்க யாப்பமைப்புடன் அமைப்பது. “ஆ” பகுதி படிப்போருக்கு எளிமையாக இருக்கும் வகையில், கணக்குகளை எடுத்துரைப்பது. “இ” பகுதி இன்றைய கணிதமுறையில் அக்கணக்குகலை எவ்வாறு கணக்கிடுவது என்பதைக் காட்டுவதாகும்.

5. கணக்கு நூல்களில் அமையும் குறியீடுகள், கூட்டெழுத்துக்கள் முதலானவற்றை பின்னிணைப்பில் பட்டியலிட்டுக் காட்டி விளக்க வேண்டும்.

**கட்டடக்கலை பதிப்புகள்**

மனை நூல், மனையடி சாத்திரம் முதலான நூல்கள் சுவடிப் பதிப்பாக அமைந்த முனைவர் பூ.சுப்பிரமணியம் அவர்களின் நூலாகும். இவ்விரு சுவடிப்பதிப்பு நூல்களும் சுவடி நூல்களின் தொகுப்பு நூல்களாக அமைந்தவை. இவ்விரு நூல்களிலும் எழுத்தமைதி, யாப்பமைதியையன்றி பதிப்பு முன்னுரையில் பழங்கால மனிதன், வீடு, வாழ்க்கை, அனுபவத்தால் பெற்ற சிந்தனையும் செயல்பாடும் போன்ற செய்திகள் தரப்பட்டுள்ளன.

சுவடிகள் பலவற்றில் இருந்தும் தொகுத்துச் செய்யப்படும் சுவடிப்படிப்பில், பாடல்கள், உரைநடைச் செய்திகள் ஆகியவற்றைத் திரட்டி பின் பொருண்மைக்கு ஏற்ப பாகுபாடு செய்ய வேண்டும். மனையடி

சாத்திரம் நூலில், நிமித்தம், மண்சோதனை, புற்று நிமித்தம், மனை கோலுதல், தேங்காய்க்குறி, நீள அகலம், அளவுகோலும் அளக்கும் முறைகளும் முதலாகப் பொருத்தம் ஈறாக இருபது உட்தலைப்புகளில் பகுத்து அமைத்திருப்பதைச் சுட்டலாம்.

**சமயம் சார்ந்த சுவடிப்பதிப்புகள்**

கோலவரைத் துயிலரங்கன் சரிதம், நீலியட்சகானம் ஆகிய இரு சுவடிப் பதிப்புகளும் முனைவர் பூ.சுப்பிரமணியம் அவர்களின் சமயம் சார்ந்த சுவடிப்பதிப்புகள் எனலாம். எடுத்துக்கொண்ட நூல் தொடர்பான பிற நூல் செய்திகளை ஆராய்ந்து ஒப்பு நோக்கியபின் நூற்பொருளைத் தெளிவு செய்து கொள்ளுதல் பதிப்பாசிரியரின் பணி என்பதற்கிணங்க இவ்விரு நூல்களிலும் விளக்கங்களைத் தந்துள்ளார்.

நீலியட்சகானத்தில் நீலியின் வரலாறும் திருவாலங்காட்டுத் திருத்தலமும் பழையனூர் வரலாறும் மிகப்பழமையானவை என்பதற்குச் சான்று பகரும் வகையில் காரைக்காலம்மையாரின் திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகப் பாடல்களும் திருத்தொண்டர் புராணம், சேக்கிழார் புராணம், சம்பந்தர் தேவாரம் அகியவற்றில் ஒவ்வொரு பாடலும் இணைப்பில் தரப்பட்டுள்ளது. மேலும் திருவாலங்காட்டிலுள்ள பழையனூர், திருவாலங்காடு - சாட்சி பூதேசுவரர் திருக்கோயில் மண்டபத்தில் சேரன், சோழன், பாண்டியன் பாடியதாகக் கூறப்படும் பாடல்களும் இணைப்பில் தரப்பட்டுள்ளன.

கோயில்களோடு தொடர்புடைய இலக்கிய சுவடிப்பதிப்பில் கள ஆய்வினை மேற்கொண்டு செய்திகளைத் திரட்டி, சான்றாதாரங்களோடு பதிப்பு முன்னுரையை வழங்குவது பதிப்பாசிரியரின் கடின உழைப்பையும் பதிப்பின் சிறப்பையும் புலப்படுத்துவன. அந்த வகையில் கோலவரைத் துயிரங்கன் சரித நூலின் ஆய்வுரையில் "கோலவரை" என்பது இன்று வழங்கும் "செஞ்சி" என்பதனைக் கண்டறிந்து கல்வெட்டு ஆதாரத்துடன் அப்பகுதி சிங்கபுர நாடு என்பது என்பதைக் குறிப்பிடுகிறார். மேலும் சிங்கபுரம், மேலச்சேரி ஆகிய ஊர்களை உள்ளடக்கியபகுதி "விஷ்ணு செஞ்சி" எனவும் செஞ்சியும்

அதன் தென்புற ஊர்களும் அமைந்துள்ள பகுதி சிவசெஞ்சி எனவும் வழங்கப்பட்டுள்ளன என்பன போன்ற விளக்கங்களைக் கூறுகிறார். மேலும் ஒவ்வொரு அத்தியாயத் தலைப்பின் கீழ் அதில் கூறப்பட்டுள்ள செய்திகளைக் கூறியிருப்பதும் அனைத்துப் பாடல்களுக்கும் உரையெழுதி இருப்பதும் தனிச்சிறப்பு எனலாம்.

தொடக்ககாலப் பதிப்புகளில் சுவடிகளில் உள்ளதை அப்படியே அச்சேற்றினர். சுவடி நூல்களில் படியெடுத்தோரால் பிழைகள் நேர்வது இயல்பு. சுவடிப் பதிப்பின் நோக்கம் படிப்போருக்கு எளியவகையில் புரியும் வண்ணம் செய்தலாகும் என்பதை உணர்ந்த முனைவர் பூ.சுப்பிரமணியம் அவர்கள், மூலத்தில் பிழைகள் இருப்பின், திருத்தம் செய்து நூலிலும் ஏட்டின் பாடத்தை அடிக்குறிப்பிலும் தரலாம் என்ற புதிய திருந்திய பதிப்பு நெறிமுறையை எடுத்துரைக்கிறார். "சுவடிப்பதிப்புகள்; ஆய்வாளர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் பயன்படும் வகையில் வெளிவர வேண்டும். சுவடியில் உள்ளதை மாற்றக்கூடாது என்ற கொள்கையுடன் வெளியாகும் நூல்கள், பொருள் விளங்காமையால் ஆய்வாளர்களுக்கும் ஆர்வலர்களுக்கும் பயன்படாமல் போய்விடுகின்றது அவர் கருத்து. எனவே சுவடியில் உள்ள வடிவங்கள் குறித்து அடிக்குறிப்பில் அல்லது முன்னுரையில் சுட்டிக்காட்ட வேண்டும் என்ற பதிப்புக் கொள்கையே தற்காலத்திற்கு ஏற்புடையதாகும் என்கிறார். அதற்குச் சான்றாக சாரங்கதார யட்சகானப் பதிப்பில்,

"பச்செரில பலநீறால்ப் பூசனை புறிந்து
மன்னவன் சாஷிட்டாங்க வனக்கமுஞ் செய்து" (பா.13)

என்ற சுவடித் தொடர்கள்,

"பச்சிலை பலநீரால் பூசனை புரிந்து
மன்னவன் சாஷ்டாங்க வணக்கமுஞ் செய்து"

என்று திருத்திப் பதிக்கப்பட்டன என்று குறிப்பிட்டுள்ளதைக் கூறலாம்.

**வர்ம சூத்திரப் பதிப்பு**

தமிழகத்தின் தென்மாவட்டங்களில் காணப்படும் அரியதொரு கலை வர்மக்கலை. இந்த வர்மக் கலையின் மருத்துவத்தைக் கூறுவது வர்ம சூத்திரம் என்னும் நூலாகும். இந்நூலை முனைவர் பூ.சுப்பிரமணியம் அவர்கள் பதிப்பித்துள்ளார். இந்நூலுக்கு உரையையும் எழுதியுள்ளார். இந்நூலின் ஆய்வுரையில் வர்ம ஆய்வு, வர்ம வரலாறு, வர்ம நூல்கள் தரும் செய்தி முதலான பதினொரு தலைப்புகளில் விரிவாக எடுத்துரைத்துள்ளார்.

மேலும் நூலின் இறுதியில் சுவடிகள், நூல்கள், ஆய்வேடு கட்டுரைகள் ஆகியவற்றின் பட்டியலும் தொடர்ந்து சொல்லடைவும் இடம்பெற்றுள்ளது.

இந்நூலின் பின்னிணைப்பில் ஐந்து பகுதிகள் அடங்கியுள்ளன. முதலாவதாக, வர்மப் பெயர்களையும் வர்மஸ்தானங்களையும் அறியப் பயன்படும் நூல்களுள் ஒடிமுறிவுசாரி, வர்மக் கண்ணாடி, வர்ம பீரங்கி, தொடுவர்மத் திரட்டு, படுவர்மங்கள், சித்தமருத்துவத்தில் வர்மப் பரிகாரம் ஆகிய நூல்களிலுள்ள தொடுவர்மம், படுவர்மங்கள் குறித்த செய்திகளின் தொகுப்பு அமைக்கப்பட்டுள்ளது. இரண்டாவதாக , பாடவேறுபாடுகளின் பட்டியலும், மூன்றாவதாக, வர்ம நோய்களின் பட்டியலும் இடம்பெறுகிறது. சில அளவைப் பெயர்களும் இன்றியமையாத சொற்களும் நான்காவதாகவும் கிடைத்த வரையிலான 295 வர்மங்களின் பட்டியல் ஐந்தாவதாகவும் தரப்பட்டுள்ளது. இவை ஒரு வர்மச் சுவடிப் பதிப்பில் இருக்க வேண்டிய பின்னிணைப்புகள் குறித்து விளக்குவனவாகும்.

ஒரு சுவடிப் பதிப்பாசிரியர் நல்ல சுவடிப் பெயர்ப்பாளராகவும் எழுத்தமைதி அறிவு கொண்டவராகவும் மொழியியல் சிந்தனை உடையவராகவும் சிறந்த இலக்கண அறிஞராகவும் சொல்வளம் கைவரப் பெற்றவராகவும் திறனாய்வாளராகவும் இருக்க வேண்டும் என்ற முனைவர் சா. கிருட்டினமூர்த்தி அவர்களின் கருத்திற்கு இணங்க முனைவர் பூ.சுப்பிரமணியம் அவர்கள் சிறந்த சுவடிப் பதிப்பாசிரியராக

விளங்குகின்றார். சுவடிகளின் தோற்றமும் வளர்ச்சியும் என்ற தம் முனைவர் பட்ட ஆய்வேட்டினைச் "சுவடியியல்" நூலாக வெளிக் கொணர்ந்ததன் வாயிலாகச் சுவடித் துறையினருக்கு நெறியாளராக விளங்குகின்றார். சுவடியியலில் ஆர்வம் மிக்க 60-க்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு கற்பித்து, அவர்கள் உயர்நிலையை அடைந்திருப்பதன் வாயிலாகச் சிறந்த சுவடியியல் ஆசிரியராக விளங்குகிறார். சுவடிகள் அட்டவணைகளையும் தயாரித்து அளித்ததன் மூலமாகவும் சுவடியியல் குறித்த ஆய்வுக் கட்டுரைகளை வழங்கியதன் வாயிலாக ஒப்பற்ற தனி ஒருவராகத் திகழ்கிறார். பத்தொன்பதாம் நூற்றாண்டில் கல்விப் பணியுடன் சுவடிப் பணிகளையும் ஒரே நேரத்தில் மேற்கொண்ட உ.வே.சா அவர்களைப் போல, முனைவர் பூ.சுப்பிரமணியம் அவர்கள் இருபதாம் நூற்றாண்டில் கல்விப் பணியுடன் சுவடிப் பணிகளையும் ஒரே நேரத்தில் மேற்கொண்டு உ.வே.சா. அவர்களின் வழித்தோன்றலாகத் திகழ்ந்தார் என்பது உள்ளங்கை நெல்லிக்கனி.

# திரு.வை. சதாசிவப்பண்டாரத்தாரின் வரலாறும் ஆராய்ச்சிப் பணியும்

**க.சத்தியகுமாரி**
ஆய்வியல் நிறைஞர் மாணவி பகுதிநேரம்,
ஓலைச்சுவடித் துறை,
தமிழ்ப் பல்கலைக்கழகம்,
தஞ்சாவூர்.

இருபதாம் நூற்றாண்டில் தமிழகத்தில் தோன்றி தமிழ் நாட்டிற்கும் தமிழ் மொழிக்கும் தமிழருக்கும் பல அரிய பணிகளை ஆற்றிய புலவர் பெருமக்களுள் குறிப்பிடத்தக்கவர் தி.வை. சதாசிவப்பண்டாரத்தார். இவரை தமிழ்ப் புலவர் எனவும் ஆராய்ச்சி அறிஞர் எனவும் மறைந்து கிடந்த வரலாற்று உண்மைகளை அகழ்ந்தெடுத்து வெளிக்கொணர்ந்த தமிழக வரலாற்றறிஞர் எனவும் பாராட்டப்பட்டவர்.

## பிறப்பு

இவர் கும்பகோணத்திற்கு அருகில் உள்ள திருப்புறம்பியம் என்ற ஊரில் வைத்திலிங்கம் அவர்களுக்கும் மீனாட்சி அம்மையாருக்கும் ஒரே மகனாக 15.8.1892 இல் பிறந்தார்.

## கல்வி

திருப்புறம்பியத்தில் பள்ளிப் படிப்பைத் தொடங்கி புளியஞ்சேரியில் நடுநிலைக் கல்வியை முடித்தார்.பின்னத்தூர் நாராணசாமி ஐயரிடம் தமிழ் பயின்றார். குடந்தை நகர உயர்நிலைப் பள்ளியில் சேர்ந்து பள்ளியிறுதித் தேர்வு வரை பயின்று வெற்றி பெற்றார். தமிழ் கல்வியில் பெருவிருப்பம் கொண்டு தமிழ் நூல்களைத் தாமே முயன்று கற்றுச் சிறந்த புலமை பெற்றார். விரைந்து கவிதைப் பாடும் ஆற்றலுடையவராகவும் திகழ்ந்தார். தமது 22-வது வயதில் 1914-ல் கொறுக்கை என்றும் ஊரைச் சார்ந்த ஆத்மலிங்கராயர் என்பவரது ஒரே

மகனான "தையல்முத்து" என்பவரைத் தம் வாழ்க்கை துணையாகக் கொண்டார். ஏழு ஆண்டுக்கு பின்னர் இவ்வம்மையார் இறந்தார் சீர்காழி வட்டத்தைச் சார்ந்த ஏலத்தூர் சதாசிவ குருக்களின் இரண்டாம் மகள் சின்னம்மா என்பவரை மணந்தார். இவருக்கு திருஞானசம்பந்தர் என்ற ஒரு புதல்வரும் உண்டு.

இவர் எழுத்தராகவும், குடந்தை உயர்நிலைப் பள்ளியில் தலைமை தமிழாசிரியராகவும் பின்னர் 1917-1942 வரை குடந்தை வாணாதுறை உயர்நிலைப் பள்ளி தமிழாசிரியராகவும் பணிபுரிந்தார்.1942-1960 வரையிலும் அண்ணாமலைப்பல்கலைக் கழகத்தின் தமிழாராய்ச்சித்துறையில் தம் பணியை மேற்கொண்டார். மேலும் களைக்களஞ்சியத்திலும் மதிப்பாசிரியர் குழு உறுப்பினராகவும், தமிழ்ப்பொழில் இதழாசிரியர் குழு உறுப்பினராகவும் பணிபுரிந்துள்ளார்.

'ஆராய்ச்சிப் பேரறிஞர்' எனும் பட்டம் 1956-ஆண்டில் மதுரைத் திருவள்ளுவர் கழகத்தாரால் வழங்கப்பட்டது. இவரது தமிழ்த் தொண்டைப்பாராட்டிச் சென்னையில் தமிழ் எழுத்தாளர் சங்கத்தினர் கேடயம் வழங்கிச் சிறப்பு செய்தனர்.

## நூல்களும் கட்டுரைகளும்

சதாசிவப் பண்டாரத்தார் தம் ஆசிரியர் பாலசுப்ரமணியப் பிள்ளை அவர்களுடன் இணைந்த 'சைவசிகாமணிகள் இருவர்' என்ற முதன்முதலில் எழுதினார். 1930-இல் முதற்குலோத்துங்கச் சோழன், பாண்டியர் வரலாறு திருப்புறம்பியத் தலவரலாறு, பிற்காலசோழர் சரித்திரம் (3 பாகங்கள்) காவிரிப்பூம்பட்டினம் செம்பியன் மாதேவி போன்ற வரலாற்று நூல்களையும் எழுதியுள்ளார். தமிழ் இலக்கியவரலாறு (13,14,15 ஆம் நூற்றாண்டுகள்) தொல்காப்பியர் பொதுப்பாயிரம் மூலமும் உரையும் ஆகியநூல்களை இவர் எழுதியுள்ளார். ஏறத்தாழ 80க்கு மேற்பட்ட கட்டுரைகளை எழுதியுள்ளார். தமிழ்பொழில், செந்தமிழ்ச் செல்வி சுதேசமித்திரன் இதழ்களில் இக்கட்டுரைகளை எழுதியுள்ளார். சில கல்வெட்டுக்கள் கூறும்

உண்மைகள், இலக்கியமும் கல்வெட்டுக்களும் எனுந்தலைப்புகளில் நூல் வடிவம் பெற்றுள்ளன.

கல்வெட்டுக்களை ஆதாரமாகக் கொண்டு தமிழர்களின் வரலாற்றை எழுதியவர் இவர். நூல் மற்றும் கட்டுரைகளில் சோழ வரலாற்றுக்கு முக்கியத்துவம் கொடுத்து எழுதியுள்ளார்.

சதாசிவப்பண்டாரத்தார், சொற்பொழிவு, நூல், கட்டுரை இவைகளை எழுதும்போது வரலாறு இலக்கியம் கல்வெட்டுகளின் சான்றுகளுடன் எழுதும் திறம்படைத்தவர். மன்னர்கள், புலவர்கள், நாடு, இலக்கியம், சமயம் போன்றவற்றை மையக் கருவாகக் கொண்டு தமிழில் வரலாற்றை எழுதியுள்ளார்.

குறுநில மன்னர்களின் வரலாறு, ஊர் வரலாறு, தல வரலாறு, இலக்கிய வரலாறு, புலவர்களின் வரலாறு போன்ற வரலாற்று நூல்களை கல்வெட்டுச் சான்றுகளின் துணையுடன் வெளியிட்டுள்ளார்.

தாலமியின் வரலாற்றுக் குறிப்பிலும், மேனாட்டு வரலாற்று ஆசிரியன் ஒருவனால், அப்பழைய காலத்தில் எழுதப் பெற்ற 'பெரிப்ளஸ்' என்ற நூலிலும் சோழர் வரலாறு தொடர்பான குறிப்புகள் காணப்படுகின்றன. இவ்வரலாற்றுக் குறிப்புகளையும் சான்றாதாரமாகக் கொண்டு 'முதற்குலோத்துங்க சோழன்' என்ற நூலை எழுதியுள்ளார்.

பாண்டியர் வரலாறு எனும் நூலில் பாண்டிய அரசர்களின் வரலாற்றைச் சங்க இலக்கியம், கல்வெட்டு, செப்பேடுகளின் துணை கொண்டு ஆராய்ந்துள்ளார்.

இவற்றுடன் சீன நாட்டைச் சேர்ந்த யுவான் சுவாங் எழுதிய வரலாற்றுக் குறிப்புகள், சோழ வமிச சரித்திரச் சுருக்கம் போன்ற வரலாற்று நூல்களையும் ஆதாரமாகக் கொண்டுள்ளார்.

ஏற்கனவே அறிஞர்களால் கூறப்பட்டு வந்த செய்தியை மறுத்துரைப்பதும், சில வரலாறுகளை வேறு நூல்களில் காணலாம் என்றும், தெரியாத வரலாற்றைப் புலப்படவில்லை என்றும், வேறு இதழ்களில் தாம் எழுதிய கட்டுரைகளில் விளக்கம் இருப்பதையும் சுட்டிச் காட்டிச் செல்கின்ற போக்கினை இவர்தம் நூல்களில் காணலாம். பல்வேறு வரலாற்றுக் குறிப்புகள், மேனாட்டார் கடிதங்கள் போன்றவற்றின் சான்றுகளைக் கொண்டு 'காவிரிப்பூம்பட்டினம்' என்ற நூலை எழுதியுள்ளார்.

**கல்வெட்டறிஞர்**

பேரரசர்களும், குறுநில மன்னர்ளும், பிற தலைவர்களும் புரிந்து அறச்செயல்கள், வீரச் செயல்கள், உடன்படிக்கைகள், அரசியல் முறை, அரசியல் தலைவர்கள, போர் நிகழ்ச்சிகள், புலவர்கள் பற்றிய செய்தி, மண்டலம் வளநாடு, நாடு, சமயம் முதலானவற்றைக் கல்வெட்டிலும், செப்பேடுகளிலும் காணலாம். பொதுவாகக் கல்வெட்டுக்களை ஆராய்வதற்குத் தமிழ் இலக்கிய இலக்கணப் பயிற்சி மிகவும் தேவை. இத்தகைய பயிற்சியுடன் வடமொழி, ஆங்கிலப் புலமையும் பெற்றிருந்தார் என்பதை அவர் எழுதியுள்ள நூல்களும், கட்டுரைகளும் வெளிப்படுத்துகின்றன.

செம்பியன் மாதேவித் தல வரலாற்று நூலில் இவ்வூர்க் கோயிலில் எத்தனைக் கல்வெட்டுக்கள் உள்ளன. அவற்றுள் மிகப் பழமையான கல்வெட்டு எது, இக்கல்வெட்டில் கூறப்பட்டுள்ள செய்திகள் போன்றவற்றை விளக்கிச் சொல்கிறார்.

அசோகன் கல்வெட்டில் காணப்பெறும் சோழர் பற்றிய குறிப்புகள், போர் நிகழ்ச்சிகள் போன்றவற்றை ஆதாரமாகக் கொண்டு முதற் குலோத்துங்க சோழன் என்ற நூலை பண்டாரத்தார் எழுதியுள்ளார்.

இலக்கியங்களில் காணப்படும் செய்திகளைக் கல்வெட்டில் காணப்படும் செய்திகளோடு ஒப்பிட்டுக் காட்டியுள்ளார். மேலும் கல்வெட்டில்

காணப்படும் செய்திகளை அப்படியே உண்மையாக இருக்கக்கூடும் என்று நினைத்து எடுத்துக் கொள்ளாமல் வேறு பல சான்றுகளைக் கொண்டு மறுத்திருப்பதையும் காணலாம்.

**இலக்கிய அறிஞர்**

சதாசிவப் பண்டாரத்தார் இலக்கியத்தில் தோய்வுடையார் என்பதற்கு இவர் எழுதியுள்ள வரலாற்று நூல்களில் எடுத்தாண்ட இலக்கிய நூல்களே சான்று பகரும். இலக்கியத்தில் கூறப்பட்டுள்ள செய்திகளின் நம்பகத் தன்மையைப் பல்வேறு சான்றுகளின் மூலம் ஆராய்ந்து உண்மையை நிலைநாட்டியிருப்பதைக் காணலாம். பல இடங்களில் சான்றுகளின் அடிப்படையில் விளக்கிச் செல்கின்றார். சோழ மன்னர்களின் சிறப்புகள், கலிங்கத்துப்பரணியில் காணப்படும் செய்திகள், போர் நிகழ்ச்சிகள், மன்னர் வரலாறுகள் போன்றவற்றை இலக்கியங்களின் துணை கொண்டே தம் ஆய்வை நிகழ்த்தியுள்ளார். இருபெரும் புலவர்கள், இளங்கோவடிகள், இளம்பூரணார், அகத்தியர், திருவள்ளுவர் போன்ற பல புலவர்களைப் பற்றியும், கலிங்கத்துப்பரணி, திருவிளையாடற் புராணம் போன்ற நூல்களைப் பற்றியும் ஆராய்ச்சி செய்துள்ளார்.

**சமயப் பணி**

சைவ சமயத்தைச் சார்ந்த பண்டாரத்தார் 1953-ல் தாம் பிறந்த திருப்புறம்பியம் எனும் ஊரிலுள்ள கோயிலில் சமயகுரவர் மண்டபம் ஒன்றை கட்டினார். இவரெழுதிய கட்டுரைகளில் சமயம் தொடர்பான கட்டுரைகளும் அடங்கும். கல்வெட்டுக்களின் துணை கொண்டு, ஊர், கோயில் இவற்றின் பழைய வரலாற்றை ஆராய்ந்து எழுதியுள்ளார். கோயில் வரலாறு தொடர்பான கட்டுரைகளில் கோயில் அமைந்துள்ள இடம், கோயிலின் பெயர், பரப்பளவு, இறைவன், இறைவி பெயர், பிற கடவுளர்கள், தலவிருட்சம் கோயில் நிர்வாகம் போன்ற பலவற்றை விரிவாக ஆராய்வதைக் காணலாம். கல்வெட்டுக்களில் காணப்படும் கோயில் தொடர்பான பல்வேறு செய்திகளையும் ஏற்ற இடங்களில் எடுத்துக் காட்டியுள்ளார். தல வரலாற்று நூல்களில் அத்தலத்து இறைவன்

இறைவியர் திருவுருவப்படங்கள் கோயில் படம் போன்றவற்றின் நிழற்படங்களையும் அச்சிட்டுள்ளார்.

**கால ஆராய்ச்சி**

ஒரு இலக்கியத்தின் காலத்தை அறிந்து கொள்ளாமல் அவ்விலக்கியம் கூறும் பொருளை அறிந்துகொள்ள இயலாது. கம்பர் காலம், கல்லாடமும் அதன் காலமும், பல புலவர்களது காலம் போன்றவற்றின் தலைப்புகளில் கால ஆய்வை நிகழ்த்தியுள்ளார். மேலும் பாண்டியர் வரலாறு நூலில் பல்வேறு பாண்டிய மன்னர்களின் வரலாற்றைக் கூறும்பொழுது அவர்களது காலத்தைக் கூற நேர்ந்தவிடத்துச் சிலருக்கு காலம் சரிவரத் தெரியாத நிலை ஏற்படுகிறது. இத்தகைய சிக்கல்களுக்கு கல்வெட்டுச் சான்றுகளை ஆதாரமாகக் கொண்டு காலத்தை உறுதி செய்கிறார்.

**ஊர்ப் பெயராய்வு**

சதாசிவப் பண்டாரத்தார் அவர்கள், அகநானூற்றின் உரையாசிரியரது, ஊர், இடவையும் இடமருதும்,ஏர் என்னும் வைப்புத்தலம், கணம்புல்ல நாயனாரது திருப்பதி, தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி போன்ற கட்டுரைகள் ஊர்ப்பெயரை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்டவையாகும். தமது நூலில் வரலாற்று சிறப்புமிக்க ஊர் அல்லது விளக்கம் பெறப்படாமல் இருக்கின்ற ஊர்கள் ஏதேனும் வருமாயின் அடிக்குறிப்பில் அவ்வூர் பற்றிய விளக்கத்தை தருகிறார். ஒரு மன்னனின் ஆட்சி எல்லையை கூறுவதற்கும் ஊர் பெயராய்வைப் பயன்படுத்துகிறார்.

காவிரிப்பூம்பட்டினம் என்னும் நூலில் இவ்வூரின் தொன்மை, பெருமை, அமைப்பு முதலானவற்றை சங்க இலக்கிய சான்றுகள் மூலம் விளக்குவதுடன் இவ்வூரில் நெடுங்காலமாக வழங்கிவரும் செவிவழிச் செய்திகளையும் இக்காலத்தில் வழங்கும் இடப்பெயர் முதலியவற்றையும் ஆராய்ந்துள்ளார்.

**கள ஆய்வு**

கல்வெட்டுக்கள் இருக்கின்ற கோயில்கட்குப் பண்டாரத்தார் நேரில் சென்று அவற்றைப் படி எடுத்தும் தம் ஆராய்ச்சிக்குப் பயன்படுத்தியுள்ளார். இவற்றைச் சில ஊர்களுக்குச் சென்று படியெடுத்து வந்தேன். சில ஊர்களுக்கும் சென்று கல்வெட்டுக்களைப் படித்தறிந்து வந்தேன் என்று நூலிலும், கட்டுரைகளிலும், பண்டாரத்தார் குறிப்பிடுவதைக் காணலாம்.

**ஆய்வு நெறிமுறைகள்**

சதாசிவப் பண்டாரத்தாரின் படைப்புகளில் காணப்படும் ஆய்வு நெறிமுறைகள் குறிப்பிடத்தக்கதாகும். இவர் நூலின் முன்னுரையில் அந்நூல் எழுதக் காரணமாக இருந்த அறிஞர்களுக்கும், மூலச் சான்றுகளை தந்துதவியவர்களுக்கும் நன்றி கூறுவார். சிலர் கூறிய கருத்துக்களைத் தகுந்த சான்றுகளை காட்டி மறுத்துரைப்பார். கலிங்கத்துப் பரணியில் கூறப்படும் செய்திகளை அடிப்படையாகக் கொண்டு விளக்கிச் செல்லும்பொழுது கவிதை நடையை கையாண்டுள்ளார். மேலும் சில கருத்துக்களில் சரியான முடிவிற்கு வர இயலாத நிலையில் சான்றுகள் கிடைக்காத நிலையை கூறுகிறார். தாம் எழுதிய நூல்கள் கட்டுரைகளில் அடிக் குறிப்பிடும் மரபை அக்காலத்திலேயே இவர் கையாண்டிருக்கிறார். மேலும் கருத்தை முதலில் கூறி பின்னர் பாடல் வரிகளைக் கொடுத்தார். பெரும்பாலான இடங்களில் கல்வெட்டு, செப்பேடுகளில் காணப்படும் தொடர்களையே பயன்படுத்துகிறார்.

பல சான்றுகளை ஒப்பிட்டு ஆராய்வதோடு தற்கால நிகழ்ச்சிகளோடும் ஒப்பிட்டு செல்கிறார். மேலும் ஆய்வைத் தூண்டும் வகையில் தன் எழுத்து நடையைக் கொண்டு செல்வார். கல்வெட்டுக்கள், செப்பேடுகளில் காணப்படும் பல பெயர்களுக்குப் பெயர்க்காரணம் யாது என்பதையும் கூறுகிறார். தற்காலத்தில் அப்பெயருக்கு இணையான ஏதேனும் இருப்பின் அவற்றையும் குறிப்பிடுகின்றார். பின்னிணைப்பில் வரைபடங்கள், நிழற்படங்கள், செப்பேடுகள், கல்வெட்டுக்கள்

போன்றவற்றை சேர்ந்துள்ளார். இவர் ஆய்வுகள் பெரும்பாலும் சிக்கலுக்குத் தீர்வு காண கூடியவகையிலேயே அமைந்துள்ளன. பல ஊர்களுக்கு நேரிடையாகச் சென்று களப்பணியில் செய்திகளை சேகரித்ததுடன் அமையாமல் கல்வெட்டுக்களின் நம்பகத்தன்மையை ஆராய்ந்து வெளிப்படுத்தியுள்ளார்.

**மறைவு**

இலக்கிய வரலாற்றிலும், வரலாற்றுலகிலும் வாழ்ந்துவரும் தமிழப் புலவராகவும், வரலாற்றறிஞராகவும், கல்வெட்டறிஞராகவும் சிறப்புற்றுத் திகழந்தவர். தி.வை. சதாசிவப் பண்டாரத்தார். தமது 68 ஆவது வயதில் உடல் நலிவுற்று அண்ணாமலை நகரில் 2.1.1960 இல் இறைவனடி சேர்ந்தார். இவர்தம் பெயரும் புகழும் நின்று நிலவும். கல்வெட்டராய்ச்சியில் இவர்தம் கருத்துரைகள் கலங்கரை விளக்கமாக விளங்கும்.

# அடிகளாசிரியரின் வரலாறும் பதிப்புப்பணியும்

**முனைவர்.அ.சிவபெருமாள்**
பேராசிரியர்,
தமிழியில் துறை,
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்-608 002.

## முன்னுரை

**சாவைத் தொலைத்தேன் -தமிழ்த்**
**தாய்க்கு வாழ்கின்றேன்**
**பாவொன்றி னாலே - தமிழ்ப்**
**பண்பாடு காப்பேன்.**

என்று தமிழ்தாய்க்குத் தொண்டாற்றி வாழ்வாங்கு வாழ்த்து வரலாறு படைத்த மூதறிஞர் பேராசிரியர் புலவர் **திரு.அடிகளாசிரியரவர்களைத்** தமிழறிந்தோர் அறிவர். இன்றைய விழுப்புரம் மாவட்டம் கல்லக்குறிச்சி (குறிஞ்சிநிலப்பகுதி) வட்டத்தின் தென்கோடியில் சின்னசேலத்திற்குத் தெற்கில் பன்னிரண்டு கி.மீ. தொலைவில் குகையூர் என்னும் சிவத்தலம் அமைந்துள்ளது. இவ்வூரில் வீரசைவ நெறியில் மாலாங்கன் பரம்பரையில் சித்தநாதேச்சுர ஆதீனமரபில் தோன்றியவர்தான் (17.4.1910) அடிகளாசிரியர். நூற்றியொரு அகவையைத் தாண்டி(101 வருடம் - 8 மாதம் - 21 நாள்) வாழ்ந்து வரலாறு படைத்த மூதறிஞர் அடிகளாசிரியர் அவர்கள் உரைநூல்கள், பதிப்புநூல்கள், படைப்பிலக்கிய நூல்கள், இலக்கண நூல்கள் என்ற வகையில் அறுபத்தெட்டு நூல்களை உருவாக்கிய பெருமையர்.

## பதிப்பு நூல்கள்

மூதறிஞர் உருவாக்கிய அறுபத்தெட்டு நூல்களை வகைப்படுத்தி உணர்ந்ததோமானால் அவர் பலநூல்களைப் பதிப்பித்துள்ளார் என்பதை உணரமுடியும். அஃதாவது அவர் தாமே இயற்றிய

இலக்கியப்படைப்புகளையும் பதிப்பாசிரியராக அமர்ந்து பதிப்பித்துள்ளார். உரைநூல்களையும் அவ்வாறே பதிப்பித்துள்ளார். அச்சில்வந்த நூல்களையும் காகிதப்பிரதியைத் துணையாகக் கொண்டும் ஒரு நூலைப் பதிப்பித்துள்ளார். அச்சில்வந்த நூல்களையும். காகிதப்பிரதியைத் துணையாகக் கொண்டும் ஒரு நூலைப் பதிப்பித்துள்ளார்.இருப்பினும் இக்கட்டுரை, சுவடியில் இருந்து பதிப்பித்த நூல்களையும், சுவடியை அடிப்படையாகக்கொண்டு பதிப்பித்த நூல்களையும் ஆய்விற்கு எடுத்துக்கொள்கின்றது.

## சுவடியில் இருந்து பதிப்பிக்கப் பெற்ற நூல்கள்

மூதறிஞர் அடிகளாசிரியர் அவர்கள் சுவடியில் இருந்து பத்து நூல்களைப் பதிப்பித்துள்ளார்.அப்பத்து நூல்களின் கால வரிசைப் பட்டியல் வருமாறு :

1. வீரசைவப் பிரமாணம் - உரை நடை-1930
2. சிவப்பிரகாச விகாசம் -செய்யுள் -மூலம்-1939
3. ஆறகழூர்க் காமநாதர்கோவை- செய்யுள் - மூலம் -1947.
4. திருவலஞ்சுழி தேவாரப்பாடல்கள் உரை-1956
5. மேன்மைப்பதிகம்-செய்யுள்-மூலம்-1957
6. சதுர்லிங்கத் தசகோத்திர தசகம் - செய்யுள்-1958
7. காலச்சக்கரம் மூலமும் உரையும்-செய்யுள்-மூலம் - 1969 -1979
8. வராகர் ஓரா சாத்திரம் மூலமும் உரையும் - 1970-1981-1991
9. சிவஞான தீபம் உரை - 1970
10. சிவப்பிரகாச விலாசம் மூலமும் உரையும் - 1977

மேற்குறித்த பத்து நூல்களுள் வீரசைவப் பிரமாணர், சிவப்பிரகாசவிகாசம் ஆகிய இரண்டுநூல்களில் பதிப்பு நிகழ்வுகளை அறிவோம்.

## 1.வீரசைவப் பிரமாணப் முதற்குறிப்பு : 1936, மறுமதிப்பு : 2008.

மூதறிஞர் பேராசியர் அடிகளாசிரியரவர்கள் தமது இருபத்தாறாம் வயதில் நூல் எழுதிப் பதிப்பிக்கும் பணியை மேற்கொண்டவராவார்.

அவ்வாறு அவர் பதிப்பித்த முதல் நூல் வீரசைவப் பிரமாணம் என்பதாகும். இந்நூல் தோன்றிய சூழலை அவரே பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

சில நாட்களின் முன்பு சின்னசேலத்தில் சில வீரசைவப்பெரியோர்களின் இல்லத்திலே ஏடு தேடியபோது. வீரசைப் பிரமாணம் என்று முகப்பில் எழுதியுள்ள சுவடியொன்று மேலமடம் சின்னசாமி ஐயரவர்களின் வீட்டிலிருந்து எமக்குக் கிடைத்தது.எழுதப்பட்டிருந்ததாகத் தெரிந்தேன். இதைச் செப்பஞ்செய்து பதிப்பித்தால் எல்லோர்க்கும் பயன்படுமென்று எண்ணிப் பதிப்பிக்கலாயினேன். (முன்னுரை, ப.16)

மேற்கூற்றின் வாயிலாகத் தமது இருப்பத்தாறு வயதிலே சுவடி தேடும் பணியைஅவர் மேற்கொண்டிருப்பது தெரிய வருகின்றது. அத்துடன் நூலைச் செப்பஞ்செய்து பதிப்பித்தேன் என்று கூறியதிலிருந்து பதிப்பாசிரியரின் பொறுப்புணர்வையும். நம்மால் உணர்ந்துகொள்ள முடிகின்றது. மேலும் இந்நூல் பன்னிரெண்டு பக்க அளவு உடையது. என்றாலும், அடிகளாசிரியரால் எழுதப்பெற்ற நூலின் முன்னுரை பதினாறு பக்கம் உடையது என்பது குறிக்கத்தக்கது. வீரசைவ சித்தாந்த சமயநுண்பொருளை உணர்த்துவதற்காக நீண்ட முன்னுரை எழுதப்பெற்றது என்பதையும் நாம் உணர்ந்துக் கொள்ளவேண்டும்.

**சிவப்பிரகாச விகாசம் (முதற் பதிப்பு : 1939)**

கற்பனைக்களஞ்சியம் என்று போற்றப்பெறும் துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் அருளியநூல் சிவப்பிரகாச விகாசமாகும். இந்நூலின் மூலத்தைப் பதிப்பிக்க அடிகளாசிரியர் பெரும் பாடுபட்டார். அடிகளாசிரியர் 1935-ஆம் ஆண்டில் தஞ்சையில் அமைந்துள்ள சரசுவதிமகால் நூலகத்திற்குச் சென்று அங்குள்ள சுவடிகளைத் தேடிய நிலையில் சிவப்பிரகாச விகாசச் சுவடி ஒன்றைக் கண்டாராம். கண்டவுடன் சிவப்பிரகாசயே நேரில் கண்டாற்போல் உவகை அடைந்தாராம். ஆனால், கிடைத்த சுவடியோ பிழைமலிந்து சிதைந்த நிலையிலே இருந்ததால் ஒருவாறு திருத்தமான பிரதி ஒன்றை வெகு சிரமப்பட்டு

எழுதினாராம். பிறகு அப்பிரதியை மயிலம் பொம்மபுர ஆதீனம் அவர்களிடம் வழங்கி அம்மடத்து வெளியீடாக 1939 ஆம் ஆண்டில் அச்சிட்டு வெளிப்படுத்தினாராம்.

அடிகளாசிரியர் இப்பதிப்பைப் பற்றிக் கூறியுள்ள கருத்துக்களை அறிந்தால் அவரின் உணர்வைப் புரிந்துகொள்ள முடியும்.

> **“இது போழ்து கிடைத்த வரையில் இந்நூல் அச்சிற்கு வருகிறது. இதற்குச் செய்யவேண்டிய திருத்தங்கள் பலவிருப்பினும் வேறு படிகளின் ஒப்புமையின்றி ஒன்றுஞ் செய்யவியலவில்லை. இந்நூலை இந்தளவில் செம்மையுறுதற்கு என்நெஞ்சுபட்ட அல்லலை நெஞ்சையிடமாகக் கொண்ட இறைவன்தான் அறிவனல்லது வேறு யாவர் அறிவர்”.(** முன்னுரை, **பக்.3.4)**

அடிகளாசிரியரின் நெஞ்சை இறைவன்தான் அறிந்தார் என்பதை இந்நூலின் செம்பதிப்பால் உணர்க. தஞ்சாவூர் சரசுவதிமகால் நூலகத்தால் 1977-ஆம் ஆண்டில் மேலது நூலை அடிகளாசிரியர் உரையுடன் செம்பதிப்பாக வெளியிட்டனர். சிவப்பிரகாசவிகாசம் மூலத்தை 1939-ஆம் ஆண்டில் பதிப்பிக்க உதவிய அடிகளாசிரியர் அதே நூலுக்கு உரை எழுதி மிகச்சிறந்த பதிப்பாக வெளியிட்டார்; இது இறையருள் தான் எனில் மிகை இல்லை.

## சுவடியை அடிப்படையாகக் கொண்டு பதிப்பிக்கப்பெற்ற நூல்கள்

இது காறும் சுவடியிலிருந்துப் பெயர்த்தெழுதி அதனால் திருத்தம் செய்து பதிப்பித்த நூல்களைப்பற்றிச் சுருக்கமாக அறிந்தோம். அடுத்து அச்சு வாகனம் ஏறிய நூல்களைப் பதிப்பிக்கத்தொடங்கிய அடிகளாசிரியர் அப்பதிப்பிற்கு அடிப்படையாகச் சுவடிகளை வைத்துக்கொண்டு பதிப்பித்த நூல்களின் பட்டியலையும் அதன் பதிப்புச்சிறப்பையும் அறிவோம்.

1. தொல்காப்பியம் - எழுத்ததிகாரம் - இளம்பூரணர் உரை - 1969.
2. தொல்காப்பியம் - பொருளதிகாரம் - செய்யுளியல் - இளம்பூரணர் உரை - 19853.
3. சிவபுராணச் சிற்றுரை (உரைநடை) -1986-1999-2007.
4. தொல்காப்பியம் - சொல்லதிகாரம் - இளம்பூரணர் உரை - 1988
5. தொல்காப்பியம் - பொருளதிகாரம் - எட்டு இயல்கள் (செய்யுளியல் நீங்கலாக - 2008.

மூதறிஞர் அடிகளாசிரியரவர் மேற்குறித்த ஐந்து நூல்களைப் பதிப்பிக்கும் காலத்துச் சுவடிகளை அடிப்படையாகக் கொண்டு நல்ல பல திருத்தங்களைச் செய்துள்ளார்.

**தொல்காப்பியப் பதிப்புகளில் சுவடிகளில் பங்களிப்பு**

மூதறிஞர் அடிகளாசிரியர் தொல்காப்பியத்தில் எழுத்து, சொல் , பொருள், ஆகிய மூன்று பகுதிகளையும் இளம்பூரணர் உரைக்கொண்டு பதிப்பித்து வழங்கியுள்ளார். அடிகளாசிரியர் தொல்காப்பியம் எழுத்ததிகார இளம்பூரணர் உரையை 1969 ஆம் ஆண்டில் தம் சொந்தப் பொருட்செலவில் பதிப்பித்துள்ளார். தொல்காப்பியத்தின் ஏனைய பகுதிகளாகிய தொல் - சொல் - பொருள் ஆகிய பகுதிகளைத் தஞ்சாவூர் தமிழ்ப்பல்கலைக் கழகம் வழியாகப் பதிப்பித்து வழங்கியுள்ளார். அப்பதிப்புகளுள் சிலவற்றையும் சிந்திப்போம்.

அடிகளாசிரியர் தொல்காப்பிய எழுத்ததிகாரப் பதிப்பிற்குக் கருவியாக ஓலைச்சுவடித் தொகுப்புகள்-3, இலக்கியப்பதிப்புகள் -21, இலக்கண நூல்கள்-14, உரை நூல்கள்-11, நிகண்டுகள் -3, ஆகியவற்றைப் பயன்படுத்தினார் என்க. இவற்றுள் ஓலைச் சுவடிகள் மூன்று என்பதை அறிந்தோம்; அம் மூன்றாவன.

1. திருப்பாதிரிப்புலியூர் ஞானியர் திருமடத்திலிருந்து பெறப்பட்ட இரண்டு ஓலைச்சுவடிகள்.
2. அவரிடமிருந்த ஓலைச்சுவடியின் படி ஒன்று.

மேற்குறித்த பல கருவி நூல்களை அவர் பயன்படுத்தியிருந்தாலும் மூன்று ஒலைக்சுவடித் தொகுப்பை முதன்மையானதாக்க் கருதியுள்ளார் என்பதை அவர் கூற்றால அறிவோம்.

> "தொல்காப்பியம் எழுத்ததிகாரம் இளம்பூரணர் உரையினைக் கரந்தைப்புலவர் கல்லூரி மாணவர்க்குப் பலயாண்டுகட்கு முன்பு பாடஞ்சொல்லத் தொடங்கி அதனை ஆழ்ந்து படித்து வந்தேன். அப்பொழுது அதில் பல பிழைகள் இருப்பது புலனாயிற்று. அவற்றைத் திருத்துவதாயின் அ-தற்கு யான் உய்த்துணர்ந்த உணர்ச்சியேயன்றி, ஏட்டுச்சுவடி முதலிய கருவிகளின் துணையும் வேண்டும் என்று கருதினேன்."( தொல் - எழுத்து - இளம். ப.8)

அடிகளாசிரியர் அவர்கள் தொல்காப்பியச் சொல்லதிகாரப் பதிப்பைப் பதிப்பிக்கத் திருப்பாதிரிப்புலியூர் ஞானியார் மடத்துச்சுவடிகளையும், திருவாவடுதுறை ஆதீனத்து ஓலைச்சுவடியையும் ஆக ஆண்டு ஓலைச்சுவடிகளைப் பயன்படுத்தி நல்ல பல திருத்தங்களையும், நுட்பமானபாட வேறுபாடுகளையும் குறித்துள்ளார். இவ்வாறே தொல்காப்பியச் செய்யுளியலையும், தொல்காப்பியப் பொருளதிகாரத்தின் (செய்யுளியல் நீங்கலாகி) எட்டு இயல்களையும் பதிப்பித்துள்ளார்.

### திருவாசகச் சிவபுராணப் பாடல்களில் சுவடி நோக்கு

எட்டாந் திருமுறையாக விளங்கும் திருவாசகத்தில் முதல்வாசமாக விளங்குவது **சிவபுராணமாகும்.** இச்சிவபுராணத்துள் தொன்னூற்றைந்து அடிகளுள் இருபது பாடபேதங்கள் அடிகளாசிரியரால் குறிக்கப்பெற்றுள்ளன. சிவபுராணத்தில் ஏழாவது அடி "**பிறப்பறுக்கும் பிஞ்சகன்றன் பெய்கழல்கள் வெல்க.**" என்பதாகும். இவ்வடியுள் வந்துள்ள **பிஞ்சகன்** என்ற சொல் பல பதிப்புகளில் '**பிஞ்ஞகன்றன்** '

என்றே பதிப்பிக்கப் பெற்றுள்ளது. ஆனால் அடிகளாசிரியர் சுவடியையும் திவாகர நிகண்டையும் சான்றாகக் கொண்டு **பிஞ்சகன்** என்பதுதான் சரியென்று குறித்துள்ளார்.

மேற்குறித்த சிவபுராணத்துள் எண்பத்து எட்டாவது அடி "**கள்ளப் புலக்குரம்பைக் கட்டு அவிழ்க்க வல்லானே**" என்பதாகும். பல திருவாசகப் பதிப்புகளில் இவ்வடி கட்டு அழிக்க வல்லானே என்ற பாடத்தில் உள்ளது. கட்டு அவிழ்க்க வல்லானே என்பது சரியா? கட்டு அழிக்க வல்லானே என்பது சரியா? என்ற வினாவிற்கு விடையாக அடிகளாசிரியர் சுவடியைச் சான்றாகக்கொண்டு கட்டு அவிழ்க்க வல்லானே என்பதுதான் சரியான பாடபேதம் என நிறுவியுள்ளார்.

**முடிவுரை**

மூதறிஞர் அடிகளாசிரியர் பதிப்பித்துள்ள நூல்களை ஆராயின் பின்வரும் முடிபுகளைக் கொள்ளலாம்.

1. அடிகளாசிரியர் கையாண்ட பதிப்புமுறைகளைக் பதிப்புத்துறைக்கு இலக்கணங்களாகக் கொள்ளலாம்.

2. தொல்காப்பிய நூற்பாக்கங்களைப் பதிப்பிக்கும்போது இருக்கின்றபாடம், இருக்கவேண்டிய பாடம் என்று இரண்டு நிலைகளைக் கையாண்டுள்ளார்.

3. பிற பதிப்புகளில் இல்லாத உரை உத்திகளை அடிகளாசிரியர் குறித்துள்ளார்.

4. அடிகளாசிரியர் பதிப்பில் பிற துறைச் செய்திகளும் காணப்படுகின்றன.

காலங்கருதிப் பதிப்புச்செய்திகளைச் சுருக்கமாகக் குறித்துள்ளேன்: எதிர்காலத்தில் மேலும் விரிவாக ஆராய்வேன்.

# ஔவை சு.துரைசாமிப் பிள்ளையின் வாழ்வும் பதிப்பும் பணியும்

**செ. சிபிவெங்கட்ராமன்**
முனைவர் பட்ட ஆய்வாளர்
ஓலைச்சுவடித் துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர் - 613 010.

## பிறப்பும் கல்வியும்

**தோன்றின் புகழொடு தோன்றுக அஃதிலார்**
**தோன்றலின் தோன்றாமை நன்று**

என்பார் திருவள்ளுவ நாயனார்.

விழுப்புரம் மாவட்டம் திண்டிவனத்திற்கு அருகில் உள்ள ஔவையார் குப்பம் என்னும் சிற்றூரில் சுந்தரம் பிள்ளை - சந்திரமதி தம்பதிக்கு 1902 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் ஐந்தாம் நாள் நன்மகனாகப் பிறந்தார். உள்ளூரில் தொடக்கக் கல்வியையும் பின்னர் திண்டிவனத்திலிருந்த அமெரிக்க ஆர்க்காடு நற்பணி உயர்நிலைப் பள்ளியில் பள்ளி இறுதி வகுப்பையும் கற்றுத் தேர்ந்தார். பின்னர் வேலூர் ஊரிசு கல்லூரியில் இடைநிலைக் கல்வியைப் பயின்றார். குடும்ப வறுமையினால் இக்கல்வியைத் தொடர இயலாமல் போக, குடும்பத்திற்கு உதவும் நோக்கில் உடல்நலத் தூய்மைக் கண்காணிப்பாளர் பணியில் சேர்ந்தார். அப்பணியைத் தொடர மனமில்லாத காரணத்தால் ஆறே மாதத்தில் அப்பணியிலிருந்து விலகினார். பின்னர், கரந்தை உமாமகேஸ்வரனாரால் ஆசிரியராகப் பணியமர்த்தப்பட்டார். தமிழை முறையாகப் பயில வேண்டும் என்கிற நோக்கில் பணியிலிருந்துக் கொண்டே தமிழைக் கற்றுத் தேர்ந்தார்.

## தமிழ்ப்பணி

ஆசிரியப்பணி புரிந்துக்கொண்டே தமிழைக் கற்று 1903 ஆம் ஆண்டு சென்னை வித்துவான் தேர்வில் வெற்றி பெற்றார். தொடக்க

காலத்தில் துப்புரவு ஆய்வாளராகவும், பின்னர் கலவை ராணிப்பேட்டை தொடக்கப்பள்ளியில் தமிழாசிரியராகவும் பணியாற்றினார். 1929 முதல் 1941 வரை காவேரிப்பாக்கம், செய்யாறு, செங்கம், போளூர் ஆகிய இடங்களில் உயர்நிலைப் பள்ளித் தமிழாசிரியராகப் பணிபுரிந்தார். தமிழ்ப்பொழில், செந்தமிழ்ச்செல்வி, செந்தமிழ் முதலிய இதழ்களில் தமிழ் இலக்கிய இலக்கண ஆராய்ச்சிக் கட்டுரைகள் எழுதினார். 1942 இல் திருப்பதி திருவேங்கடவன் கீழ்த்திசைக் கல்லூரியில் ஆராய்ச்சியாளராகப் பணியில் சேர்ந்து ஆய்வை மேற்கொண்டார். 1943 முதல் தொடர்ந்து எட்டு ஆண்டுகளாக அண்ணாமலைப் பல்கலைக்கழக ஆராய்ச்சித் துறையில் விரிவுரையாளராகப் பணிமேற்கொண்டார். 1951 இல் மதுரை தியாகராசர் கல்லூரியில் பேராசிரியராகப் பணியமர்த்தப்பட்டார்.

## தமிழ் இலக்கியப் பணி

மணிமேகலைக் காப்பியத்திற்குப் புத்துரை எழுதும் நோக்கில் ஈடுபட்டுக்கொண்டிருந்த ந.மு.வேங்கடசாமி நாட்டார் திடீரென இறந்துப்போக, கரந்தைக் கவியரசு வேங்கடாசலம் பிள்ளையின் விருப்பத்தின் பெயரில் மணிமேகலைக் காப்பியத்தின் இறுதி நான்கு காதைகளுக்கும் விளக்கவுரை எழுதினார். அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் பணிபுரியும் போது சைவ சமய இலக்கிய வரலாறு, ஞானாமிர்தம் போன்ற பல நூல்களை எழுதலானார். அந்நூல்கள் யாவும் பல்கலைக்கழகத்தின் வெளியீடுகளாக வெளியிடப்பட்டன. உரைவேந்தர் அவர்களின் தமிழ்க்கொடைகள் பின்வருமாறு

1. ஊர்ப்பெயர் வரலாற்றாராய்ச்சி
2. ஐங்குறுநூறு உரை
3. ஔவைத் தமிழ்
4. சிலப்பதிகார ஆராய்ச்சி
5. சிலப்பதிகாரச் சுருக்கம்
6. சிவஞானபோதச் செம்பொருள்
7. சிவஞானபோத மூலமும் சிவஞான சுவாமிகள் அருளிய சிற்றுரையும்,

8. சீவகசிந்தாமணிச் சுருக்கம்
9. சீவகசிந்தாமணி ஆராய்ச்சி
10. சூளாமணி
11. சைவ இலக்கிய வரலாறு
12. ஞானாமிர்த மூலமும் பழைய உரையும்
13. தமிழ்த்தாமரை
14. தமிழ் நாவலர் சரிதை
15. திருமாற்பேற்றுத் திருப்பதிக உரை
16. திருவருட்பா மூலமும் உரையும் 9 தொகுதிகள்
17. திருவோத்தூர் தேவாரத் திருப்பதிக உரை
18. தெய்வப்புலவர் திருவள்ளுவர்
19. நந்தா விளக்கு
20. நற்றிணை உரை
21. பதிற்றுப்பத்து உரை
22. பண்டை நாளைச் சேரமன்னர் வரலாறு
23. பரணர்
24. புதுநெறித்தமிழ் இலக்கணம் 2 தொகுதிகள்
25. புறநானூறு மூலமும் உரையும்
26. பெருந்தகைப் பெண்டீர்
27. மணிமேகலைச் சுருக்கம்
28. மணிமேகலை ஆராய்ச்சி
29. மதுரைக் குமரனார்
30. மத்த விலாசம் (மொழிபெயர்ப்பு)
31. மருள்நீக்கியார் நாடகம்
32. யசோதர காவியம் மூலமும் உரையும்
33. வரலாற்றுக் கட்டுரைகள், வரலாற்றுக் காட்சிகள்
34. Introduction to the study of Thiruvalluvar.

முதலான நூல்களைத் தமிழுக்கு வழங்கிய பெருமகனார் ஔவை துரைசாமிப் பிள்ளை ஆவார்.

**பல்துறைப் புலமை**

இவர் தமிழ் மொழியைப் போன்றே ஆங்கிலத்திலும் நல்ல புலமை மிக்கவர். வடமொழியையும் அறிந்தவர். உயர்நிலைப் பள்ளி, கல்லூரி, பல்கலைக்கழகம் எனப் பல நிலைகளில் பணிபுரிந்து பல மாணாக்கர்களை உருவாக்கியவர். ஆராய்ச்சிப் பணியில் சிறந்து விளங்கியவர். கல்வெட்டு, ஓலைச்சுவடிகள், செப்பேடுகள் முதலானவற்றை ஆராய்ந்ததோடு அல்லாமல் தமிழ் இலக்கணம், இலக்கியம், வரலாறு, சைவ சித்தாந்தம் உள்ளிட்டத் துறைகளில் மிகச்சிறந்தப் பங்களிப்பை வழங்கியவர்.

**பணிமாற்றம்**

கரந்தையை விட்டு வெளியேறிய உரைவேந்தர் அவர்கள் 1929 க்குப் பிறகு உயர்நிலைப் பள்ளி, காரை, செங்கம் எனப் பல்வேறு இடங்களில் பணிபுரிந்தார் என்பதை நோக்கும் போது, அவர் இந்தி உள்ளிட்ட கொள்கைகளில் ஈடுபாடு கொண்டதன் விளைவாக அன்றைய ஆட்சியாளர்களால் பணிமாற்றம் செய்யப்பட்டுள்ளார் என்பதை அறிந்துக்கொள்ள முடிகின்றது.

**கா. கோவிந்தன்**

இவரிடம் தமிழ் கற்றவர்களுள் புலவர் கா. கோவிந்தன் அவர்கள் (செய்யாறு) குறிப்பிடத் தக்கவர். இவர் தமிழ் இலக்கண, இலக்கியங்களில் வல்லவர். இராபர்ட்டு கால்டுவெல்லின் திராவிடமொழிகளின் ஒப்பிலக்கணம் உள்ளிட்ட ஆங்கில நூல்களைத் தமிழிற்குப் பெயர்த்து வழங்கியவர். மேலும் தமிழக அரசின் சட்டப்பேரவைத் தலைவராகவும் இவர் பணியாற்றியவர்.

**சீவக சிந்தாமணி சுருக்கம்**

1939 இல் உரைவேந்தர் போளூரில் பணிபுரிந்த பொழுது மாவட்டக் கல்வி அதிகாரி ச. சச்சிதானந்தம் பிள்ளையின் வழியாக, உரைவேந்தரின் பெருமையைக் கழக ஆட்சியாளர் வ.சுப்பையாபிள்ளை அறிந்து அவருடன் தொடர்புக் கொண்டார்.

அதன்பின்னர், சீவக சிந்தாமணிச் சுருக்கம் உள்ளிட்ட நூல்கள் கழகம் வழியாக வெளிவரத் தொடங்கின.

### கல்வெட்டுப் பயிற்சி

கல்வெட்டில் நல்ல பயிற்சியும் புலமையும் இருந்ததால் தாம் வரைந்த உரைகளுக்குச் சான்றாகக் கல்வெட்டுச் சான்றுகளை எடுத்துக்காட்டி விளக்குவதில் வல்லவராய் இருந்தார்.

### புறநானூற்றுப் பதிப்பு

புறநானூற்றுக்கு உரை வரையும் பொழுது உ.வே.சா அவர்களுக்குக் கிடைக்காத படி ஒன்று பள்ளியூர்த் தமிழாசிரியர் கிருட்டிணசாமி சேனைநாட்டார் அவர்களால் படி எடுக்கப்பட்டு இருந்தது. அதனைக் கண்ணுற்றுத் தம் புறநானூற்றுப் பதிப்பைச் செப்பம் செய்தார். உ.வே.சா.வின் பதிப்புக்குப் பின் வந்த, ஔவையின் புறநானூற்றுப் பதிப்பில் 201 முதல் 400 பாடல்களில் உரைவேந்தரின் பணியைக் காணலாம்.

### நற்றிணைப் பதிப்பு

வையாபுரிப்பிள்ளை வழங்கியது உட்பட நான்கு படிகளைப் பின்னத்தூராரின் படிகளோடு ஒப்பு நோக்கி உரை வரைந்த பொழுது பின்னத்தூரார் நூலைவிட 1500க்கும் மேற்பட்ட பாட வேறுபாடுகளைக் காணமுடிந்தது. இதனையும் ஔவை துரைசாமிப் பிள்ளையே செய்து முடித்தார்.

### உரைவேந்தரைப் பாடிய பாவேந்தர்

உரைவேந்தரின் தமிழ்ப்பணிகளை நினைத்துக் கலைத்தந்தை கருமுத்து, தியாகராசனாரும், பொள்ளாச்சி அருட்செல்வர் நா.மகாலிங்கமும் இவர்தம் குடும்பத்தைப் பேணினர். பலர் உரைவேந்தரைப் பற்றிப் பாடி இருப்பினும் பாவேந்தர்,

**பள்ளிமுதல் பல்கலைச் சாலைவரை பாங்கெண்ணிக்**
**கொள்முதல் செய்யும் கொடைமழை – வெள்ளத்தேன்**

**பாயாத ஊருண்டோ! உண்டா உரைவேந்தை**
**வாயார வாழ்த்தாத வாய்**

என்று பாராட்டுகின்றார்.

## சிறப்பும் பட்டம்

❖ உரைவேந்தரின் தமிழ்ப் பணிகளைப் பாராட்டும் விதமாக மதுரைத் திருவள்ளுவர் கழகத்தில் உரைவேந்தருக்கு மிகப்பெரும் பாராட்டுவிழா அன்னாரின் மணிவிழாவாண்டில் நிகழ்த்தப் பெற்றது (16.01.1964). குதிரைப் பூட்டப்பெற்ற சாரட்டு வண்டியில் பேராசிரியரை அமர்த்தி மதுரை மீனாட்சியம்மன் கோவிலிலிருந்து நான்கு சித்திரை வழியாக இன்னிசை முழங்க அழைத்துவரப் பெற்று கலையன்னை இராதா தியாகராசனார் அவர்கள் தம் ஆசிரியரின் சிறப்புகளைப் பலபடப் புகழ்ந்துப்பாடி உரைவேந்தர் என்னும் பட்டம் பொறிக்கப் பெற்ற தங்கப்பதக்கம் ஒன்றைப் பரிசாக வழங்கினார்.

❖ பல்துறை முற்றிய புலவர் என்ற பாராட்டுப் பத்திரம் வாசித்தளித்துச் சிறப்பிக்கப்பட்டது.

❖ மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராக வ.சுப.மாணிக்கனார் பணிபுரிந்த பொழுது தமிழ்ப் பேரவைச் செம்மல் என்னும் பட்டத்தை ஆளுநர் பிரபுதாசு பட்டுவாரி அவர்கள் வழியாக வழங்கிச் சிறப்பித்தார்கள் (1980).

❖ 1981 ஆம் ஆண்டு மதுரையில் ஐந்தாம் உலகத்தமிழ் மாநாடு நடைபெற்றபொழுது உரைவேந்தருக்கு இந்தியப் பிரதமர் இந்திராகாந்தி அம்மையார் அவர்கள் வழியாகத் தமிழக முதலமைச்சர் ம.கோ.இராமச்சந்திரன் அவர்கள் பத்தாயிரம் ரூபாய் பணமுடிப்பும் பொற்கிளியும் வழங்கிச் சிறப்பித்தார்.

## இலக்கிய வரலாற்றின் குறை

தமிழ்ப்பணி தவிர வேறெந்த பணியும் அறியாத உரைவேந்தர் அவர்கள் தமது 79 ஆம் அகவையில் இயற்கை எய்தினார்.

உரைவேந்தரின் திருவருட்பா, ஐங்குறுநூறு, நற்றிணை, பதிற்றுப்பத்து, புறநானூறு உள்ளிட்ட நூல்களின் உரைகள் யாவும் அவரின் தமிழ்ப்புகழை என்றும் பேசும். ஆயினும் இவர்தம் முழுமையான வரலாறு தமிழ் இலக்கிய வரலாற்றில் அமையப் பெறாதது இலக்கிய வரலாற்றில் ஒரு குறையாகவே உள்ளது.

**உதவிய நூல்**

1. தமிழ் விக்கிப்பீடியா முனைவர் ச. சாம்பசிவனார், உரைவேந்தர் ஔவை சு.துரைசாமி பிள்ளை (இந்திய இலக்கியச் சிற்பிகள், சாகித்திய அகாதெமி வெளியீடு) 2007).

2. தமிழ் விக்கிபீடியா.காம் (இணையம்)

# செல்லரிக்கும் செப்பேடுகளும் காலத்தைக் காட்டும் கல்வெட்டுகளும்

கோவைக்கிழார் சி.ம. இராமச்சந்திரன்

**க. சீனிவாசன்**
ஆய்வியல் நிறைஞர்
ஓலைச்சுவடித் துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

## முன்னுரை

தமிழின் தனிச் சிறப்பையும் தமிழரின் தனித்தன்மையும் தமிழ் நாட்டு வரலாற்றையும் பழங்காலத்திலிருந்து வெளிப்படுத்தும் காலச்சுவடிகள், கல்வெட்டுகள், செப்பேடுகள், ஏட்டுச் சுவடிகள் ஓலைச்சுவடிகளையும் அயல் நாட்டு அறிஞர் கர்னல் காலின் மெக்கன்சி அவர்கள் தொகுத்து அளித்துள்ளதைப் போல நம் நாட்டு பேரறிஞர் பெருமக்கள் உ.வே.சாமிநாதர், மனோன்மணியம் பெ.சுந்தரனார், கவிமணி தேசிக விநாயகம் முதலியோரும் தொகுத்தனர். இவர்களின் தொடராக அய்யா கோவை கிழார் சி.ம.இராமச்சந்திரன் செட்டியார் அவர்கள் தமிழுக்காக தன்னை தானம் செய்தார் என்பதற்கான ஆவணங்களையும் அவரின் தொண்டுகளையும் சிறப்புகளையும் இந்த கட்டுரையின் வாயிலாக நாம் காணலாம்.

## பிறப்பு

கொங்கு மண்டலம் என்று வழங்கி வந்த இன்று கோவை என்று சொல்லக் கூடிய கோயம்புத்தூரில் தெலுங்கர் இனத்தைச் சேர்ந்த தாய் கோணம்மாள் தந்தை மருதாசலம் செட்டியார் இவர்களின் தவப்புதல்வனாக 30.11.1888 ஆம் ஆண்டு அவதரித்தார். இவருக்குப் பெற்றோர் இட்டப் பெயர் இராமச்சந்திரன். பின்னாளில் இவர் கோவையில் பிறந்து வளர்ந்ததினால் கோவை கிழார் சி.ம.இராமச்சந்திரன் என்று விளங்கியது.

**கல்வி**

கோவைக்கிழார் சி.ம.இராமச்சந்திரன் செட்டியார் ஆரம்பக் கல்வியை கோவை இலண்டன் மிசன் பள்ளி, நகரவைப் பள்ளி, சபாபதிப் பிள்ளை, திருச்சிற்றம்பலம் பிள்ளை ஆகியோரிடம் தமிழ்க் கல்வி; சென்னை மாநிலக் கல்லூரி; இ.க.(பி.ஏ) இயற்பியல், 1908 சட்டக் கல்லூரி இ.ச.(பி.எல்) 1912; தமிழ்க் கல்வி; உ.வே.சாமிநாதையரிடம் கல்வி பயின்று ஆய்வில் தேர்ந்த ஒரு பேராசானாக வடிவெடுத்தார்.

**பணிகள்**

கோவையில் வழக்குரைஞராகவும் தமிழக அரசு இந்து சமய அறநிலையத்துறை ஆணையராகவும் பணியாற்றி (1940-இல் ஓய்வு) கொங்குமலர் இதழ் ஆசிரியர் (1934 - 1937) சித்தாந்தம் இதழ் ஆசிரியராக (1947 - 1953)ல் பணியாற்றினார். இது போன்று பல தமிழுக்காவும் தமிழ் மக்களுக்காவும் தம் வாழ்நாள் முழுவதும் தமிழை சுவாசித்து வாழ்ந்தவர் கோவைக்கிழார்.

**சுவடிகளைச் சேகரிக்கும் ஆர்வம்**

தாய் தமிழன்னையும் அவளின் சிறப்புகளையும் உலகறியவும் பின் வரும் சந்ததியினரும் தமிழின் தொன்மைகளையும் தெரிந்துக் கொள்ள விரும்பியதால் தீர்க்கமான முயற்ச்சிகளை மேற்கொண்டார். அதற்கு அவரின் பணியே பேருதவியாக அமைந்தது.

கோவைக்கிழார் சி.ம.இராமச்சந்திரன் செட்டியார் இந்து சமய அறநிலையத்துறை ஆணையராகப் பணியேற்றார். அவர் பணியின் காரணமாக பல ஊர்களுக்கு பயணப்படும் போது ஆங்காங்கே பார்த்த கிடைத்த கல்வெட்டுகளையும், செப்பேடுகளையும் படியெடுக்க படையெடுத்தார் தொகுத்தார்.

தமிழகத்தின் கோவில்கள் இந்து சமய அறநிலையத் துறையே சார்ந்ததாக இருந்தாலும்.

**ஆரியப்பார்ப்பனர்களின் தீட்சிதர்களின் சமஸ்கிருதப் பிடியில் இருந்து பிடிங்கி,.....**

தமிழகத்தின் தென்வரலாற்றையும் பண்பாட்டையும் நாகரிகத்தையும் தெரிவிக்கக் கூடிய ஏட்டுச் சுவடிகளையும் கல்வெட்டுகளையும் செப்பேடுகளையும் ஓலைச்சுவடிகளையும் ஓவியங்களையும் கட்டடக்கலை நுட்பங்களையும் கொண்டவை என்பதை கோவை கிழார் சி.ம.இராமச்சந்திரன் செட்டியார் தம் பொன் எழுத்துக்களால் பதிப்பித்து தமிழன் சிறப்பை நிலைநாட்டினார்.

**ஏட்டுச் சுவடிகள்**

தமிழகத்தில் உள்ள கோவில்களிலும் கோவில்களைச் சார்ந்த திருமடங்களிலும் திருமடங்களைச் சார்ந்த புலவர்களின் இல்லங்களிலும் தமிழ் இலக்கண இலக்கிய ஏட்டுச் சுவடிகள் இருந்தன, இருக்கின்றன.

கர்னல் காலின் மெக்கன்சி (1753-1821) தொகுத்து பனை ஓலைச்சுவடிகள் ஆங்கில அரசு ஏற்படுத்திய சென்னைக் கல்விச் சங்கத்தாரிடம் ஒப்படைக்கப் பெற்றன. இச்சுவடிகள் நூலகம் 1858 முதல் மாநிலக் கல்லூரி நூல் நிலைத்துடன் இணைந்த அரசினர் கீழை நாட்டுக் கையெழுத்துச் சுவடிகள் நிலையம் ஆகிப் பின்னர் சென்னைப் பல்கலைக்கழகத்தில் தனித்து இயங்கத் தொடங்கியது.

இதன் ஆட்சிக்குழு உறுப்பினராக இருந்து கோவை கிழார் செயல்பட்டார்.

**பதிப்பித்த நூல்கள்**

**சோழன் பூர்வபட்டயம்**

**கொங்குதேச ராசாக்கள் கதை**

**பேரூர் கோவை**

இதனைத் தொடர்ந்து சரசுவதி மகால் நூலகக் குழுவின் செயற்குழு உறுப்பினராகச் செயலாற்றினார். அப்போது தஞ்சையில் சரபோசி மன்னர் காலத்திலிருந்து தொகுக்கப்பட்ட ஓலைச் சுவடிகளையும் பாதுக்காத்து பராமரித்ததோடு,

**இராமப்லையன் அம்மானை,**

**தமிழிசைக் கருவிகள்**

என்ற நூல்களைச் சரசுவதி மகால் வெளியீடுகளாகப் பதிப்பித்தார்.

**படைப்புகள்**

**கொங்கு நாட்டு வரலாறு சேக்கிழாரும் கல்வெட்டும், நால்வர்களும் கல்வெட்டுகளும், கல்லும் பேசுகிறது. கடலின் கண் முத்து போன்றப் படைப்புகளைத் தந்து தமிழுக்கத் தொண்டாற்றினார்.**

**மடங்களுக்குத் தமிழ் போதித்தவர்**

கரிவலம் வந்த நல்லூரில் வரகுண பாண்டியன் எழுதியவையும் தொகுத்து வைத்தவையும் இலக்கியச் சுவடிகளை பனை ஓலைச் சுவடிகளைக் கோவிலில் இருந்த ஆரியப் பார்ப்பனர்கள் தீயில் இட்டு வேள்வி செய்து விட்டனர்.

**"இலக்கிய சுவடிகளை வேள்வித் தீயில் இட்டு எரிக்கும்படி ஆகமம் சொல்லும் என்றால் அந்த ஆகமங்களையே தீயில் போடலாம்."**

என்று தமிழ்த் தாத்தா உ.வே.சாமிநாதையர் கூறினார். வடமொழியில் தான் வழிபாடு செய்ய வேண்டும் என்று ஆகமங்கள் கூறுவதாகச் சில மடத்தலைவர்கள் கூறித் தமிழில் வழிபாடு நடத்தக்கூடாது என்று பேசி வருகின்றனர். இன்று வரையிலும் ஆனால் சில இடங்களில் நமக்கு புரியாத தமிழில் வழிபாடு செய்கின்றனர். அது உணர்வோடு அல்ல சிலரின் உண(ர்)வுக்காக தமிழில் வழிபாடு நடத்த வேண்டும் என்று அவர்கள் இந்து சமய அறநிலைத் துறை ஆணையராக இருந்தபோதே பரப்பி வந்தார் கோவைக்கிழார் சி.ம.இராமச்சந்திரன் செட்டியார்.

இவர் சைவ சித்தாந்தத்தில் புலமை மிகுந்தவரும் திருமுறைகளைக் கற்றுத்தேர்ந்தவரும் ஆழ்ந்த சமயப் பற்றாளரும் ஆகியவை அறிந்த கோவைக்கிழாரின் பேச்சிற்கு பதில் எதிர்த்து பேச முடியவில்லை. இதற்கு ஆணையர் என்ற அதிகாரம் காரணம்

கோவில்களில் தமிழ்த் திருமுறைகள் ஓதப்பெறவும் தல வரலாறுகள் எழுதப் பெறவும் ஆவன செய்தவர் கோவைக் கிழார்.

**தமிழ்க் கல்லூரிகள்**

"சைவ சித்தாந்த சமாஜம் என்ற அமைப்பை சென்னையில் தொடங்கிட கோவைக்கிழார் துணை நின்றார். நீதியரசர் ஜே.எம். நல்லசாமிப்பிள்ளை மறைமலையடிகள் முதலியோர் இந்த சமாஜத்தை தொடங்கிப் பனை ஓலைச் சுவடிகளைப் படியெடுத்துப் பதிப்பித்தனர். இந்த அமைப்பின் பதிப்புகள் தரம் வாய்ந்ததாகவும் அமைந்தன. இந்த அமைப்பின் மூலம் நடத்தப் பெற்ற "சித்தாந்தம்" என்ற இதழின் ஆசிரியராகக் கோவைக்கிழார் பணியாற்றினார்.

இந்து சமய அறநிலையத் துறை ஆணையராகவும் சித்தாந்தம் இதழின் ஆசிரியராகவும் சைவ சமயத்தில் சிறந்த சொற் பொழிவாளராகவும் திகழ்ந்ததால் தமிழகம் முழுவதும் உள்ள மடங்களின் தலைவர்களுடன் நல்ல நட்புடன் நெருங்கிய பழக்கத்துடனும் கோவைக்கிழார் இருந்தார் பேரூர் சாந்தலிங்க அடிகளார் திருமடத்தில் நல்ல தொடர்பு இருந்ததால் தமிழ்க் கல்லூரி தொடங்கும்படி ஊக்குவித்தார். அக்கல்லூரி முதல்வரும் ஆனார். தன்னுடைய சொந்த நூலகத்தை அக்கல்லூரிக்கே அளித்தார். இவருடைய ஊக்குவிப்பால் தான் மயிலம் மடத்தின் சார்பில் ஒரு தமிழ்க் கல்லூரியும் தருமபுரம் மடத்தின் சார்பில் ஒரு தமிழ்க் கல்லூரியும் தொடங்கப் பெற்றன. தமிழ் வளர்ச்சிக்காகத் தமிழ் மட்டுமே தனிச் சிறப்புற கற்பிக்கப்பட்டன. "**வித்துவான்**" என்ற தமிழ்ப்பட்டத்தைப் "**புலவர்**" எனத் தமிழில் மாற்றிப் பெருமையுடன் வழங்கி வந்தனர் இன்று இதனை ஆங்கிலத்தில் பிலிட் என்ற பட்டமாக வழங்கப்படுகிறது.

**சமுதாயச் சீர்த்திருத்தப்பணி**

கோவைக்கிழார் கோவை தமிழ்ச் சங்கம் எனத் தொடங்கி அதன் செயலாளராகத் தமிழ்த் தொண்டு புரிந்தார். தமிழில் பல துறைகளைச் சார்ந்த வல்லுனர்களை அழைத்து சொற்பொழிவு ஆற்றச் செய்தார். தமிழ்ப் பற்றுள்ளவர்களையும் சைவ சமயப் பற்றுள்ளவர்களையும்

ஒருங்கிணைத்தார். கோவையின் அனைத்து மக்களையும் தமிழிலும் வரலாற்றிலும் ஈடுபாடு கொள்ளச் செய்தார். மாணவர்களை அறிவிலும் பண்பிலும் மேம்படுத்தும் வகையில் கல்வியை உருவாக்க கல்விச் சீர்திருத்தம் தேவை என்று முழங்கினார். பள்ளி அருகிலேயே ஆசிரியர்களுக்கு வீடுகள் கட்டித்தரப்பெற வேண்டும் என்றார். கோவையில் "கிராம ஊழியர்கள் சங்கம்" செயற்பட உதவிகள் செய்து தாமும் இணைந்து தொண்டாற்றினார். சென்னை "**மது விலக்குப் பிரச்சாங்கம்**" செய்த பரப்புரையில் பங்கேற்று தாமும் உறுப்பினராகிச் சிறு கிராமங்களுக்குச் சென்று ஏழை எளிய மக்களையும் சாராயத்தையும் குடித்து மதுவுக்கு அடிமையாக்கித் தங்கள் வருவாயை இழந்து கடன்காரர்களாகவும் ஆகி அழிவதைத் தடுக்கப் பாடுபட்டார்.

**பண்பாளரின் படைப்புகள்**

கோவைக்கிழார் தமிழ் மொழிக்கும் தமிழர்களுக்கும் தமிழ் நாட்டுக்கும் செய்த தொண்டுகள் அளப்பரியன. தமிழ், தெலுங்கு கன்னடம், மலையாளம், இந்தி, சமஸ்கிருதம், உருது, ஆங்கிலம் என எட்டு மொழிகளை அறிந்து எட்டுத்திசையும் தமிழின் புகழையும் பெருமையும் பறைசாற்றினார். அவர் தமிழிலும் ஆங்கிலத்திலும் கட்டுரைகள் எழுதியும் மேடையில் பேசியும் தமிழின் பெருமையும் அருமையும் வரலாற்றையும் பரப்பி வந்தார். கோவை மாவட்டத்தில் கல்விச் சங்கத்திலும் கோவை மாவட்ட நூலகக் குழுவிலும் தலைவராகி அரிய வரலாற்றுச் செய்திகளைத் தமிழில் மொழிபெயர்த்தார். கவிதையும், இலக்கியமும், புராணமும் மட்டுமே பேசி வந்த தமிழ் அறிஞர்களைக் கல்வெட்டு, செப்பேடுகள், சுவடிகள் கொண்டு தமிழக வரலாற்றை உணரத்தூண்டினார், உணரச்செய்தார். தமது இலங்கை பயணம் பற்றி 3 நூல்கள் எழுதினார். பயண நூல்கள், வரலாற்று நூல்கள், செய்யுள் நூல்கள்; எனப் பல இயற்றிய இவரது வரலாற்றையும் வரலாற்று நூல்களையும் மறந்த தமிழர்களின் நிலையை என்ன சொல்வது. இவரது நாட்குறிப்புத் தொகுப்புகள் 40 இன்னும் வெளிவராமல் உள்ளன. கல்வெட்டுகளையும், செப்பேடுகளையும் ஓலைச் சுவடிகளையும் தேடிக் கண்டுபிடித்துப் படி எடுத்து ஆங்கிலேயன் தொகுத்து அச்சில் வெளியிட்ட தமிழக வரலாற்று ஆவணங்களாகிய

புத்தகங்களைக் கர்நாடகத்திலும், ஆந்திரத்திலும் செல்லரித்து அழிந்து போகவிட்டிற்கும் தமிழகம் இவற்றை காப்பாற்றுமா ?

காலங்களை நமக்கு கணித்துக் கொடுக்கும் நம் முன்னோர்கள் விட்டுச் சென்றுள்ள சுவடிகளைத் தேடி படியெடுப்போம் பதிப்பிப்போம். தமிழ் வளரும் தலைமுறைக்கு படிக்க வைப்போம் படைக்க வைப்போம்!.

## தாய் மண்ணில் இளைப்பாறினார்

கோவையில் பிறந்து தமிழகம் முழுவதும் சுற்றுப் பயணம் செய்து உலக நாடுகளையும் அறிந்து பல அரிய செப்பேடுகளையும் கல்வெட்டுகளையும் சுவடிகளையும் தம் சொந்த செலவில் பல நூல்களை படியெடுத்துப் பதிப்பித்தார். கோவைக்கிழார் அவர்கள் நம்மை விட்டு சென்றாலும் நம் மனதில் பல அரிய கருத்துக்களை பதியவிட்டு **டிசம்பர்-03-1969** ம் ஆண்டு தமிழ் அன்னையின் மடியில் இளைப்பாறினார்.

**தமிழ் வளரும் தலைமுறைக்கு**
**படிக்க வைப்போம்!**
**படைக்க வைப்போம்!!**

# மழவை மகாலிங்கர் வாழ்வும் பணியும்

**மு.செல்வி**
முனைவர் பட்ட ஆய்வாளர்,
ஓலைச்சுவடித் துறை

பழந்தமிழ் இலக்கியங்கள் எல்லாம் ஓலைச்சுவடியில் எழுதப்பட்டவை ஆகும். அவற்றைப் பதிப்பித்து நூலாக அச்சுக்குக் கொண்டு வந்த பெருமை பதிப்பாசிரியர்களுக்கும் பதிப்பு நிறுவனங்களுக்கும் உண்டு. அந்த வகையில் சுவடியிலிருந்து படியெடுப்பது என்பது பதிப்பாசிரியரின் முதல் பணியாகும். அவற்றைத் தொடர்ந்து நூலை முறைப்படுத்தி முழுமையாக்கும் அனைத்துப் பணிகளும் பதிப்பாசிரியருக்கு உரியனவாகவே அமைகின்றது. அந்நிலையில் பழம் பதிப்பாசிரியராகத் திகழ்கின்ற மழவை மகாலிங்கயர் வாழ்வும் பணியும் பற்றி இக்கட்டுரை எடுத்தியம்புகிறது.

## வாழ்வு

மழவை மகாலிங்கையர் மதுரைக்கும் கிழக்கே உள்ள மழவராயனேந்தல் எனும் ஊரில் பிறந்தார். இவர் வீரசைவ மரபினர் ஆவார். சென்னையில் திருத்தனிகை விசாகப் பெருமாளையர், சரவணப் பெருமாளையர் என்னும் வீர சைவர்களிடம் தமிழ் பயின்றவர். இலக்கண அறிவு நிரம்பியவர், விரைந்து பயின்றவர். இயற்றும் திறம் படைத்தவர். இசைப்பற்று மிக்கவர், அஞ்சா நெஞ்சத்தினர், பெரும் புலவர்களுடன் நட்புரிமை கொண்டவர். திருவாவடுதுறை தம்பிரானுக்கு உயிர்த் தோழனாக திகழ்ந்தவர். சென்னை மாகாணக் கல்லூரியின் தமிழாசிரியராகப் பணியாற்றியவர்.

கம்பராமாயணம் தனிக்கைப்புராணம் முதலிய காப்பியங்களில் புலமை மிக்கவராகத் திகழ்ந்துள்ளார். இவ்வாறு காப்பியப் புலமையும் இலக்கண புலமையும் ஒருங்கே இவரிடத்து அமைந்திருந்தமையால் ஆசுகவி பாடுவதில் வல்லவராகவும் விளங்கினார். சென்னைப் பல்கலைக்கழகத்தின் தலைமைத் தமிழ்ப் புலவராகவும் சில காலம் பணிமேற்கொண்டுள்ளார்.

**பதிப்புப் பணி**

மகாலிங்கையர் சிறந்த பதிப்பாசிரியராகவும் விளங்கினார். முதன் முதலில் தொல்காப்பியப் பதிப்பாசிரியர் எனப் பெயர் பெற்றார். இவர் பல நூல்களுக்கு உரை எழுதியுள்ளார். மகாலிங்கையர் இலக்கணம் முதலிய நூல்கள் பலவற்றை இயற்றியுள்ளார். கல்விச் சிறப்புக்கள் குறிப்பிடத்தக்கவையாக இருந்தன. இவர் படைப்பாசிரியராகவும், உரையாசிரியராகவும் இருந்துள்ளார். மேலும் "பதிப்பிற்கு உருவாக்குதல், பதிப்பு வேலை என்று கொண்டால் அதனை வெளியிடுதல் வெளியீட்டுப் பணியாகும். பதிப்பித்தல் வேறு, வெளியிடுதல் வேறு. வெளியிடுதல் என்பது வேலைகள் முடியப்பெற்ற ஒரு படைப்பை அச்சு வடிவமேற்றி உலகோர்க்கு அளித்தலும் அளிக்கக் காரணமாய் இருத்தலுமாகும் என்று பதிப்பாளர்களின் பணியை" பற்றி இளங்குமரன் குறிப்பிடுகின்றார். மழலை மகாலிங்கையர் பதிப்புப் பணியின் நெறிமுறைகளைக் கொண்டே பதிப்புப் பணியினை மேற்கொண்டுள்ளார்.

திருக்குறள் நாலடியார் முதலிய நூல்கள் வெளிவந்து பல ஆண்டுகளுக்குப் பின்னரே தொல்காப்பியம் வெளிவந்தது. தொல்காப்பியத்தைத் துணிந்து ஆராய்ந்து வெளியிடுவதற்குப் பதிப்பாசிரியர்கள் முன்வரவில்லையாம் என்பது குறிப்பிடத்தக்கது. இந்நிலையில் முதன்முதலில் தொல்காப்பியத்தைப் பதிப்பித்த பெருமைக்குரியவராகப் போற்றப்படுகிறார்.

கி.பி.1846 இல் இவரால் பரிசோதிக்கப்பட்ட திருக்குறள் மூலம் சென்னைக் கல்விக் களஞ்சிய அச்சுக்கூடத்தில் அச்சிட்டுப் பதிப்பிக்கப்பட்டது.

தொல்காப்பிய எழுத்ததிகாரம் நச்சினார்க்கினியர் உரையை இவர் 1848 இல் பதிப்பித்து, அப்பதிப்பே தொல்காப்பியப் பதிப்புகளுக்கு முன்னோடியாகவும் உருவாக்கி காட்டினார். அருணாசலப் புராணத்திற்கு உரையும் எழுதியுள்ளார்.

1856 இல் இவரால் பாடப்பெற்ற மழவைச் சிங்கார சதகம் களத்தூர் ஆறுமுக முதலியாரது இலக்கணம் களஞ்சிய அச்சுக்கூடத்தில் அச்சிட்டுப் பதிக்கப்பட்டது. இவர் செய்த பெரியபுராண உரையும் விலாச அச்சுக்கூடத்தில் வீரணத் தோட்டம் கோவிந்த நாயகரால் அச்சடிக்கப்பட்டு சாலிவாகன சகம் பிளவங்க வருடத்தில் அச்சிட்டுப் பதிப்பிக்கப்பட்டுள்ளது.

கி.பி.1898 இல் போதவாசகம் என்னும் ஒரு நூலும் இவரால் இயற்றப்பெற்றுள்ளது. இவர் பதிப்பாசிரியராகவும், உரையாசிரியராகவும் பயிற்றாசிரியராகவும் படைப்பாசிரியராகவும் அறிஞராகவும் விளங்கினார் என்பது சிறப்பிற்குரியதாகும்.

**பதிப்பு முன்னோடி**

டாக்டர் உ.வே.சா. முதலிய தமிழ்ப் பதிப்புத்துறை அறிஞர்களுக்கு மகாலிங்கையர் முன்னோடியாகத் திகழ்ந்தார் என்று வாழ்வியல் களஞ்சியம் எடுத்துக்காட்டுகிறது. மகாலிங்கையர் போன்ற அறிஞர்களின் முன்னோடிப் பதிப்புகளும் வழிமுறைகளும் டாக்டர் உ.வே.சாவை தலைசிறந்த பதிப்பாளராக விளங்க துணைபுரிந்தன என்றும், மகாலிங்கையர் பல துறைகளில் தமக்கெனத் தனி இடத்தை பெற்றார் என்பதும் புலனாகிறது.

மகாலிங்கையர் தாம் வாழ்ந்த காலத்தில் ஆங்கிலேயரிடமும் மிகுந்த செல்வாக்குடையவராகத் திகழ்ந்தார். ஆங்கிலம் தமிழ் ஆகிய இரு மொழிப்புலமை மிக்கவராய் இவர் இருந்ததையும், இவரின் அனுமதியுடன் நூல்கள் வெளியிடப்பட்டதையும் செய்திகள் எடுத்துரைக்கின்றன.

**மொழி பெயர்ப்பு**

மொழி பெயர்ப்பு துறையிலும் இவர் நாட்டம் கொண்டவர். அக்காலத்தில் மொழி பெயர்த்து வெளியிடப்பட்ட நூல்கள் மகாலிங்கையரின் அனுமதிக்காகக் காத்திருந்தன. சென்னையிலிருந்த பார்சிவல் துறை என்பவர் எழுதிய விவிலியத் தமிழ் மொழி

பெயர்பையும் பிற மொழிபெயர்ப்பையும் ஒப்பிட்டுப் பார்த்துத் தேர்ந்து எடுக்கும் பொறுப்பு மகாலிங்கையர் இடத்தில் அக்காலத்தில் விடப்பட்டுள்ளது. இது இவரது புலமைத் திறத்தைக் காட்டுகிறது.

“சபையார் அந்தக்காலத்தில் தமிழ்ப் புலமை மிகுந்து விளங்கிய வித்துவான் மகாலிங்கையரை நடுநிலையாளராகத் தேர்ந்து இருமொழி பெயர்ப்புக்களை ஒப்படைத்துள்ளனர். மகாலிங்கையர் புலமை ஒன்றையே அளவுகோலாக வைத்து ஆராய்ந்து பார்த்துத் துறைமகனார் மொழிப்பெயர்ப்பையே சிறந்தது எனக் கூறி தீர்ப்பளித்தார் என்ற செய்தி எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

இவர் பல்துறைப் புலமை மிக்கவராகவும், பதிப்பு வழிகாட்டியாகவும், பதிப்பு முன்னோடியாகவும் திகழ்ந்து பதிப்பு துறைக்கு பெருமை சேர்த்துள்ளார் என்பதை இக்கட்டுரையின் வழி அறியமுடிகிறது.

# பாரிகாதையில் காணப்படும் திறம்

**க. தமிழ்ச்செல்வன்**
முனைவர்பட்ட ஆய்வாளர்,
ஓலைச்சுவடித் துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்-613 010.

பாரி காதை என்பது பாரியைப் பற்றிப் பாடப்பட்டவர்களின் நூல் என்று பொருள்படும். காதை என்பது பாட்டிற்கு வழங்கிய காதா என்னும் வடமொழியின் திரிபாகும், இரா. இராகவையங்கர் பாரிகாதை 753 வெண்பாக்களாலான நூலை இயற்றி 1934இல் இவரே எழுதி விளக்கவுரையுடன் செட்டிநாட்டரசர் அண்ணாமலைச் செட்டியாரைக் கொண்டு அரங்கேற்றச் செய்தார். பாரிகாதையில் காணப்படும் திறம் பற்றி கீழ்வரும் செய்திகள் அமைகின்றன. காதை, பாட்டிற்கு பெயர்பெற்ற மணிமேகலையில் ஒவ்வொரு காதையையும் பாட்டு என வரைந்து விளங்கக் கூற அறியலாம். இவ்வாறு சிலப்பதிகாரத்தின் ஒவ்வொரு பாட்டும் ஒவ்வொரு காதையாய்ப் பெரும்பாலும் வந்தன. வேனு சிறுபான்மை வழக்குரை காதை, வாழ்த்துக் காதை என்பன போலப் பல பாடல் தொகுதியையும் இப்பெயரால் இளங்கோவடிகள் வழங்கல் கண்டு. பாரி காதை பின்பற்றி வந்த இப்பாடல் தொகைக்கும் இக்குறியீடு செய்யலாயிற்று, காதையை உடையது காதையாகும் என்று கொண்டார் அடியார்க்கு நல்லார்.(சிலப். புதிக உரை)

பாரி என்பவன் தமிழ்நாட்டின் கொடைபுரிதலில் சிறந்தவனாகவும், படைவலிமை படைத்தவனாகவும், மேம்பட்ட வேளிருட் சிறந்த தலை வள்ளவனாகவும் விளங்கியவன்.

வேளிர் என்பவர், நாவலந் தண்பொழிலிற் தென்னாடு செல்வத்தாலும் கல்வியாலும் வளம் சிறந்ததற்குப் பெருந்துணையாய் விளங்கிய பெருமுடி வேந்தர்க்குப் பெண் கொடுத்ததற்கு உரியவராய், குறுமுடி குடியில் பிறந்தோர் முதலியோராய், வேள் எனவும் அரசு எனவும் உரிமை படைத்த ஒருவகைச் சிற்றரசர் ஆவார்.

இதற்கேற்ப, இவ்வேளிர்குலத்து நன்மக்களை நல்லிசைப் புலவர்பாடிய பல இனிய பாடல்களில் இவரது கொடைத்திறமும் படைத்திறமுமே பாராட்டுதலைக் காணலாம். இவ்வாறு பண்டைத் தமிழ்ப் பெரும்புலவர் அன்பு பொழிந்த இன்பப் பாட்டிற்கு இலக்காகத் தலைச்சிறந்த வேளிர்கள், வேள் பாரி, வேள் எவ்வி, வேள் ஆய், நன்னன்வேண்மான், வேள் எயினன் முதலிய பலவராவார். தமிழ்நாடு அறிவானும், அரசியலானும், வீரத்தானும், கொடையானும், அறத்தானும், பிற நலங்களானும் மூவேந்தர் அரன் எவ்வளவு மேம்பட்டதோ அவ்வளவு இவ்வேளிராலும் வளர்ந்து ஓங்கியதென்று பண்டைய நூல்களில் இருந்து அறியலாம். இவ்வேளிர் குலத்து, மூவேந்தரும் பெண்மனந்துபெற்ற பெருமுடி அரசரும் இந்நாட்டுண்மையை கேட்கப்பட்டிருக்கிறார்கள். இந்நாட்டு வளர்ச்சியில் பலவகையானும் உதவியவர் வேளிர் என்பது நன்கு தெரியப்படும். சோழன் கரிகாற்பெருவளத்தான் அழுந்தூர்வேள் மகள் மகனாவான்.

"வடதிசை யதுவே வான்றோ யிமையம்
தென்றிசை யாஅய்குடி யின்றாயிற்
பிறழ்வது மன்னோவிம் மலர்தலை யுலகே"(புறம் - 132)

இவ்வேளிருள் ஆய் என்னும் வள்ளலை உறையூர் ஏணிச்சேரி முடமோசியார் என்னும் செய்யா கூறாப் பொய்யா நாவிற் புலவர் பாடுவதன் மூலம் இயவர் பெரு நல்லுதவியைத் தமிழறிஞர் எவ்வளவாக மதித்தனர் என்பதை பின்வரும் செய்திகள் மூலம் குறிப்பிடப்பட்டுள்ளது.

**பாரி காதையின் சிறப்பு**

இப்பாரிகாதை பாயிரத்திறம் உட்பட பதினான்கு திறமாகப் பகுத்துக் கொள்ளப்படுகிறது. அனைத்து திறன்களையும் விளக்கிக் கூறுதலே இவ்வாய்வின் சிறப்பம்சமாகும்.

**திறம்-களின் வகைகள்**

1. பாயிரத்திறம்
2. வளம் பாடுதிறம்

3.தேர் முல்லைக்கு ஈத்திறம்
4. கபிலர் நட்புக் கோட்டிறம்
5. பாண்டியற்கு மணமறுத்ததிறம்
6. ஔவை பறியுண்டதிறம்
7. பொன் உறந்து புகாநல்குதிறம்
8. மூவேந்தர் தளர்ந்த திறம்
9.வஞ்சித்துக் கொன்ற திறம்
10.கையற் உரைத்த திறம்
11. பார்ப்பார்ப்படுத்த திறம்
12. மகளிர்பால் ஔவை வரவுரைத்த திறம்
13. கபிலர் தீப்பாய்ந்த திறம்
14. மகளிர் திருமணத் திறம்

**திறம்-களின் விளக்கம்**

**1. பாயிரத்திறம்**

இது கடவுள் வாழ்த்தும், துறவோர்ப் பேணலும்இ குரவாப் போற்றலும், செய்நன்றி அறிதலும், அவைகள் அடக்கமுடன் கூறுதலுடன், இந்நூல் கொடையறன் வலியுறுத்தி எடுத்துக் கொள்ளப்பட்டது என்பதும் இக்காலநிலையே இவ்வரிய பரிவேள் கொடையைப் பாடத்தூண்டியது என்பதும், இவ்வேள் கொடைச்சரிதம், பழைய சங்கப் புலவர் பெருநூல்களில் ஆங்காங்குக் குறிக்கப்பட்ட அரிய செய்திகளையே தொகுத்து தொடர்புபெற வைத்து, பாடப்படுவது என்பதும் இவ்வரலாறு பெரும்பாலும் கபிலர் என்னும் நல்லிசைப்புலவர் பாடல்களிலே தழைத்தது என்பதும், பிறவும் உரைப்பதாகும். ‘பாரிகொடை’ எனவும், ‘வேள்கொடை’ எனவும் இக்காதையை எடுத்து விளக்குவதால் இது தொல்காப்பியனார் புறத்திணையில் கூறிய,

“கொடுப்போ ரேத்திக் கொடாஅர்ப் பழித்தலும்” (சூ-35)

என்பதால் ‘கொடுப்போரேந்திய’ தென்று தெளிய வைத்தவறாம் கொடும் போர் ஏந்தியதற்கும், “பாரி பாரி யென்று பல வேத்தி.... மாரியு முண்டீண்டு உலகுபுரப் பதுவே” (புறம்-107) எனப் பாரியைப் பற்றிய கபிலர் பாட்டை இளம்பூரனாரும், நச்சினார்க்கினியரும் எடுத்துரைத்தன

மூலம் அறியலாம். இதன்மூலம் நாம் பாரியின் கொடைச் சிறப்புகளை மிகத் தெளிவாக அறிய முடிகிறது.

**2. வளம்பாடுதிறம்**

இது வேள் பாரியின் நாடும், மலையும், சுனையும், வளஞ்செய்தலைப் பண்டையோர் செய்யுள்களில் கண்டவற்றோடு பொருந்தச் சிறப்பித்துப் பாடியதாகும். நாட்டின் வளம் அதனை ஆளும் அரசனால் சிறக்க வேண்டுதலின், ஈண்டுப் பறம்ப நாடாளும் அவள் பாரியின் மேம்படும், அவன் இல்லறத்தே கற்புத் தலைமையும் அவன் குலமகளின் கல்விச் சிறப்பும், ஒழுக்கமும், பிறவும் உடன் கூறப்பட்டன.

இத்திறம் வாயிலாக அக்கால அரசர்களின் ஆட்சியில் சமுதாய, பொருளாதார, கலாச்சார முறைகளைப் பற்றி நன்கு அறிய முடிந்தது. பெண்களின் கற்புத்திறன், மேம்பட்ட கல்வியின் சிறப்புகள், பழக்க வழக்கங்கள் போன்றவற்றை நன்கு உணரமுடிகிறது.

**3. தேர் முல்லைக்கு ஈத்திறம்**

பாரி முல்லைக்குத் தேர்த்தனன் என்று முதன்முதலில் வெளியிட்டவர் கபிலரேயாவார். அவர் இவ்வரலாற்றை விச்சிக்கோ முன்னரும் (புறம்-200), இருங்கோ வேள் முன்னரும் (புறம்-201) புகழ்ந்து கூறினர். இவர் கூறியது போற்றி இவ்வரலாறு எடுத்துரைத்தவர் சிறுபாணாறு பாடிய இடைக்கழி நாட்டு நல்லூர் நத்தத்தனாரும், புறப்பொருள் வெண்பாமாலை பாடிய ஐயனாரிதனாரும், பழமொழி பாடிய முன்னுறை யரையனாரும் கூறியதிலிருந்து அறியலாம்.

**4. கபிலர் நட்புக் கோட்டிறம்**

கபிலர் வேள்பாரியோடு நட்புற்றுச் சிறந்தது 236-ஆம் புறம்பாட்டில்,

**“மலைகெழு நாட மாவண் பாரி**
**கலந்த கேண்மைக் கொவ்வாய் நீயெற்**
**புலந்தனை யாபுனை புரந்த யாண்டே**

**பெருந்தகு சிறப்பி னட்பிற கொல்லா**
**தொருங்குவரல் விடாஅ தொழிகெனக் கூறி**
**யினையை யாதவி னினக்கு மற்றியான்**
**மேயினே னன்மை யானே யாயினும்**
**இம்மை போலக் காட்டி யும்மை**
**யிடையில் காட்சி நின்னோ**
**டுடனுறை வாக்குக வுயர்ந்த பாலே"**

இத்திறம் மூலம் கபிலர் மற்றும் பாரியின் நட்பு வரலாற்றுச் சிறப்புமிக்கதாக இருந்தன என்பதை நன்கு அறிய முடிகிறது.

### 5. பாண்டியற்கு மணமறுத்ததிறம்

பெருமுடியரசன் மகட்பேசியவிடத்து, அதற்கு உடன்பாட்டால் தன்மகளிர்க்கு அரசுசட செல்வ இன்பம் துன்பத்திலும் 'உலக முழுதுடையாள்' என்னும் பெரும்பெயரும். உலகாளும் மகப்பேறும் கிடைத்ததற்கு அஃது ஏதுவாகவும் அப்பெருமை அனைத்தும் வேண்டாமைக்கு ஒருதரும விரோதமே உள்ளதென்று கருதிப் பல்பெண்டிராளற்கு மகட்கொடை நேர்ந்திலன் உதாரணம்

**"நிரப்பிடும்பை பல்பெண்டி ராள் னறியும்"**
**(நான்மணி-95)**

எனச் செந்தமிழ்ச் சான்றோர் பழித்துரைத்தது கொண்டு வதுவை முறையில் ஒருவற் கொருத்தியாய் வாழும் இல்லறவியல்பே வற்புறுத்திக் கூறப்பட்டது. இதுவே கபிலர் திருவுள்ளம் என்பது அவர் காரியை நோக்கிக் கூறிய புறப்பாட்டில்,

**"வடமீன் புரையுங் கற்பின் மடமொழி**
**ஆரிவை தோளள வல்லதை**
**நூனதென விலை நீ" (புறம்-122)**

என ஏகபத்தினி விரதத்தைப் புகழ்தல் மூலம் அறியலாம். பாரியை நல்லோள் கணவன் என்று இவர் பாடுதலின் மூலம் பலப்பெண்டிராளம் எனக் கூறாமையும் நினைக்கலாம்.

இத்திறம் மூலம் ஒருவனுக்கு ஒருத்தி என்ற தற்கால முறையும், நாம் இருவர் நமக்கு ஒருவர் என்ற தற்கால நடைமுறையில் கூட இருந்ததை காண முடிகிறது.

## 6. ஔவை பறியுண்டதிறம்

இது "பாரிபறித்த பறியும்" என்ற ஔவை பாடல் பகுதியைக் கொண்டு கூறியதாகும். 'பறித்தபறி' என்றதனால் வழிபறித்த பறி என்று துணியப்பட்டது. 'வழிபறித்த குற்றமற்ற செங்கையான்' எனவும் 'திருமாலெழுத் தெட்டும் பறித்த விடம்' எனவும், மணவாளமாக முனிவர் பாடுவதன்மூலம் உண்மையை அறியலாம். பாரி வழிபறித்தான் என்றால் அவ்வள்ளற்குப் பொருள் பறிப்பது கருத்தாகாது என்றும். ஔவையைபட பிரிதற்கு உள்ளம் இல்லாமையால் அவளைத் தன்னகத்திற்கு மீட்டுக்கொள்ளலே விருப்பமென்றும் துணிந்து கூறலாயிற்று. பறித்த பொருளால் ஔவை மீளவேண்டிய இன்றியமையாமைப் பொருட்டு ஔவைபால் பாரி பறித்த பொருள் மூத்த பிள்ளையாரை நாளும் விடா தருச்சிப்பவள் என்பது வழிவழியாகக் கேட்கப் படுதல் உண்மையான் இஃதே ஏற்பதால் உணரமுடிகிறது. இருவரையும் இயக்கத் தெய்வமே இடைநின்றதென்று கொள்ளுதல் பொருத்தம்.

இத்திறத்தில் ஔவை, பாரியை மிகுதிப்படுத்திக் கூறுதல் கேட்டுப் பாண்டிற்கு அழுக்காறு விளைதலும் உடன் கூறப்பட்டது. "அண்ணால் வேந்தர்க்கின்னாள்" (புறம்-115) என்று பாரியைக் கபிலர் பாடுதலாற் புலவர்க்கு வழங்கி வீறிய புகழால், வேந்தர்க்குப் பாரி இன்னானாதலன்றி வேறு வகையால் அவன் இன்னாமை உடையவனாகாமையை உணரமுடிகிறது.

## 7.பொன் உறந்து புகா நல்குதிறம்

" மாரியொான் றின்றி வறந்திருந்த காலத்தும்
பாரி மடமகள் பாண்மகற்கு – நீருலையுட்
பொன்றுறந்து கொண்டு புகாவாக நல்கினா
ளொான்றுறா முன்றிலோ வில்" (பழமொழி. சே. 381)

என்னும் வரலாறு பழமொழி நூலில் கண்டது. இப்பாடற்பொருள் கொண்டு இத்திறன் விளக்கப்பட்டது. இதற்குரை யிட்ட பழையோர் "ஒன்றுறா முன்றிலோவில்" என்பதற்கு ஒரு துன்ப முறாத மனையில்லை என்று பொருள் கூறிக் கொண்டே உண்மை தெளிய இயலாமையால் "உலையுட் பொன்னேப் பெய்து கொண்டு திறந்து சோறாகவே நல்கினாள்" எனவும், " சோறும் அரிதாசிய காலத்துப் பொன்னே சோறாக உதவினாள். ஆதலால் சென்றிரந்தால் ஒரு பயன்படாத மனையில்லை என்றுமாம்" எனவும் உரைத்தார். இவர் உரையால், இப் பாரி மடமகள் என்பவன் பாரியின் மனைவியோ பயந்து மகளோ என நன்கு விளங்கவில்லை, இப்பாட்டுப் புகாவாக என்பது தான் பாடமெனவும், புகர்வாக என்பது பாடமன்றெனவும் கான்டற்கு நெடுங்காலம் சென்றது அறிஞர் தெரிந்திருப்பார். நீருலையுட் புகாவாக நல்கினாள் = வெந்நீர் அடுப்பில் வைத்த உலைநீருட் சோரு ஆயின அளவிற் பாண்மகற்கு நல்கினாள் என்றும் வெறு நீரிற் சோறு எங்ஙனமாகும் என்றும் ஐயந்தீரப் பொன்தந்து கொண்டு அல்லது பொன்றுறந்து கொண்டு என்றார் அவர். தரத் தகாத மாங்கல்யப் பொன்னையும் தந்து அரி கொண்டு என்றார் என்க. இதனால் பாரி மடமகள்-பாரி மனைவியாதலும் கருதினராவர். தரத்தகாத பொன் தாலிப்பொன் என்பது "ஈகைறரிய விழையணிய மகளிரோடு சா அயின் றென்ப வா அய் கோயில்" எனச் சான்றோர் கூறுவதன் மூலம் அறியலாம்.

### 8. மூவேந்தர் தளர்ந்த திறம்

மூவேந்தரும் பகைத்துப் பறம்பு பற்றிய செய்தி "மூவிருங் கூடி யுடண்றனிராயினும்" (புறம்-110) எனவும், "நளிகொண் முரவின் மூவிருமுற்றினும்" (புறம்-109) வருவனவற்றில் அறியலாம். இவர் பறம்பை வளைத்த காலம் பலயாண்டு என்பதும், முடிவில் மூவரே தளர்ந்தனர் என்பதும் அகப்பாட்டில் நக்கீரனார்.

"யாண்டுபல கழிய வேண்டுவயிற் பிழையா
தாளிடூஉக் கடந்து வாளம் ருடிக்கி
யேந்துகோட் டியானை வேந்த ரோட்டிய
கடும்பரிப் புரவிக் கைவண் பாரி" (அகம்-78)

எனக் கூறுவதன் மூலம் அறியலாம். இதற்கேற்பவே பாரிக்கு உயிர்த் துணையாகிய கபிலர், "பகைவர், ஒடுகழற் கம்பலை கண்ட, செருவெஞ் சேஎய்" (புறம்-120) எனக் குறிப்பிடுவதைக் காணலாம். மூவேந்தரும் கூடிப் பொருதற்கு ஒரு பொதுவாகிய பகைவேண்டுதலின் மகன் மறுத்தலாகிய சினத்துடன் நாட்டுக்கு இறைவனாகிய பாண்டியற்குப் பாரி பால் அழுக்காறும் உண்டாதற்குக் காரணம் கூறி அவ்வழுக்காறே சேர சோழர்க்கும் ஏதுவாக இத்திறம் அமைத்துக் கூறப்பட்டது. மூவர்க்கும் மகன் மறுத்தல் கூறின் அம்மூவர்க்கும் கலகமே விளையும் என்றும், அது ஒருங்கு கூடுதற்கு; காரணம் ஆகாதென்றும் நினையலாம். இப்போர்க்குக் காரணம் மகன் மறுத்தல் என்பது (109,110,111) ஆகிய மூன்று புறப்பாட்டாலும் அறியலாம். நூல் தொகுத்தோ துறைவிளக்கி வைத்தவர்களால் நாம் நன்கு தெளிவுபட அறியலாம்.

## 9. வஞ்சித்துக் கொன்ற திறம்

தளர்ந்த மூவேந்தர்கள் பின்னருங் கூடிப் பொருதனர் என்பது "அவற்றைத் திங்களவ்வெண் ணிலவின்" என்றும் புறப்பாட்டால் (112) "வெண்றெறி முரசின் வேந்தர் எங்குன்றுங் கொண்டார்" எனப் பாரி மகளிர் பாடுவதால் அறிந்தது. இதனை உரைக்க பழநல்லுரையாளர் "ஒருவனை மூவேந்தகு முற்றியிருந்தும் வஞ்சித்துக் கொன்றமையின், வென்றெறி முரசின் வேந்தர் என்றது, ஈண்டு இகழ்ச்சிக் குறிப்பாய் நின்றது" எனக் கூறுதலால் பாரியை மூவேந்தரும் வஞ்சித்துக் கொன்றது புலப்படும்.

## 10. கையறவுரைத்த திறம்

இதற்கண், பாரியின் அருமைத் துணைவியாகிய கற்புடையாட்டி நல்லாள், பாரியைப் பிரிந்திருந்தாள் என்பதற்கு நூல்களில் கண்டும் மேற்கோள் காணப்படாமையாலும், கபிலர் பாரி மகளிருடன் பாரி மனைவியையும் அழைத்துச் சென்றார் என்று கேட்கப்படாமையாலும், பாரி மனைவி நல்லாள் என்றும் பெயர்க்கியைதுப் பாரியுடன் வான்புக்கனளென்று இத்திறத்தில் கூறப்படுகிறது.

புறப்பாட்டில் பாரி மகளிரும் கபிலரும் பறம்பு விடுக்கும் போது பாடியன கையறு நிலையாகப் புறப்பாட்டுத் தொகுத்தோர் வரைந்து காட்டுதலான் இக்கையறவு பெரும்பாலும் அவரை வைத்தே பாடப்பட்டுள்ளது. கபிலர் பாடிய கையறு நிலையிற் "சேறும்.... நாளிருங் கூந்தற் கிழவரைப் படர்ந்தே" என்று கூறுதலால் படையெடுத்து வரும் வேந்தர் அவர்க்குக் கிழவராகாரென்பது கருதி அவரை மறைத்து இரவினே கொண்டு பறம்பு விடுத்துப் போதல் இத்திறத்தே குறிக்கப்பட்டது. "இற்றைத் திங்க ளிவ்வெண் ணிலவின் யாமெந்தையு மிலமே" என்று குறிப்பிடுகிறது. இவர் இரவில் சென்றார் என்ற கருத்தை வலியுறுத்துதலைக் காணலாம். இரவில் சென்றதற்குத் தலையாய காரணம் பகைவேந்தர் தம்மைக் காணாமையே இப்புறப்பாட்டு வழி செய்தியாகும்.

## 11. பார்ப்பார் படுத்த திறம்

இது பார்ப்பார்கண் அடைகலம் வைத்தது பற்றிக் கூறியதாகும். படுத்தல் வைத்தல் என்றும் பொருட்டு, "நங்கைதன்னை நீர்ப்படுத்தி" (வாழ்த்துக் காதை) எனச் சிலப்பதிகாரத்தில் வருவதுபோல காண வேண்டும். பார்ப்பார் படுத்தல் பார்ப்பார்கண் அடைக்கலமாக வைத்தல் என்று குறிப்பிடுகிறது. திருக்கோவலூர் வீரட்டேசுரர் கோயில் கல்வெட்டில் "பாரி தன்னடைக்கலப் பெண்ணை மலையற்குதவி" என்று இருப்பதனால் இவர் பார்ப்பார்க்கு மணம் செய்யப்படாமையும், அடைக்கலமாக வைக்கப்பட்டதும் தெரிந்து கொள்ளலாம்.

## 12. மகளிர்பால் ஔவை வரவுரைத்த திறம்

பாரி கொடையை நன்கு துய்த்து, அவன் பேரறிவு முதலிய இனிய பண்புகளை ஔவையார் நன்கு பாராட்டுபவர் என்பது "புலங்கந்தாக விரவலர் செவினே, வரை புரை களிற்றொடு நன்கல னீயு. முரைசால் வண்புகழ்ப் பாரி" (அகம்-303) என அவர் பாடியதனால் அறியலாம். பாரியின் பெருக்கத்து அவன் அருமைக் குணங்களைத் துய்த்து மகிழ்ந்த ஔவையார், அப்பாரி வள்ளலுடைய செல்வமகளிரின் சுருக்கத்து அவர்க்கிரங்கி, அவர்பார் போந்து தம்மணத்து எல்லாம் நிறைத்தனர். இது தமிழ் நாவல் சரிதையில் கண்ட ஔவை பாடல்

பகுதிகளால் அறிந்ததாகும். ஔவைக்கு நட்பினனாகிய அதியமானுக்கும் கோவலூர் மலையமான் திருமுடிக்காரிக்கும் பகைமையுண்டு என்பது "பரணம் பாடினன் மற்கொல், முரண் மிகு கோவலூர் நூறிநின், னரணடு திகிரி யேந்திய தோளே" (புறம்-99) என அதியமானை ஔவையார் பாடல்களால் அறிந்ததாகும். இப்பகைமையை நினையாமல் ஔவையார் ஒழுகியது பாரி மகளிர்பால் அவர் வைத்த பேரன்பாலும் இயல்பாகிய பெருந்தன்மையாலும் என்று நினைத்துக் கூறலாம்.

## 13. கபிலர் தீப்பாய்ந்த திறம்

"பசைந்தாரிற் றீர்தலிற் றீப்புகு தனன்று" (நான்மணி-13) என்பது விளம்பி நாகனார் விழுமிய வாக்கு. பெருமுடியரசர் இறந்தது பொறாது அவர்பொருட்டுத் தம்முயிர் நீத்த பெருவீரரும் இத்தமிழ்நாட்டுப் புகழுடம் பின் உள்ளாராவர். இதனைப் "பொருதுபுண் ணாணிய சேரலாத, னழிகள மருங்கின் வாள்வடக் கிருந்தென, வின்னாவின்னுரை கேட்ட சான்றோர், அரும்பெறலுலகத் தவனொடு செலீஇயர், பெரும்பிறி தாகி யாங்கு" என்றும் அகப்பாட்டால் (அகம்-55) நன்கு அறியலாம்.

## 14. மகளிர் திருமணத்திறம்

இத்திருமணம், புறநானூற்றில் நம்பசலையார் பாரியைப் பாடிய பாட்டில் கோவலூர்க் காரியைக் கிளையுடன் பொலியக் கபிலர் காடினார் என்று தெளியக் கூறுதலைத் துணையாகக் கொண்டும், தமிழ் நாவலர் சரிதையில் ஔவை பாடல் வரிசையில் மூவேந்தர்க்கு விடுத்த ஓலைச் செய்யுட்களைக் கொண்டும் கூறியதாகும்.

நப்பசலையார் (புறம்-126) கூறுமாறு.

**"தெறலரு மரபின்நின் கிளையொடும் பொலிய**
**நிலமிசைப் பரந்த மக்கட் கெல்லாம்**
**புலன அழுக் கற்ற அந்த ணாளன்**
**இரந்துசெல் மாக்கட்கு இனியிடம் இன்றிப்**
**பரந்திசை நிற்கப் பாடினன்"**

பாரிக்கு உயிர்த்துணையாகிய கபிலர் காரியைக் கிளையொடும் பொலிவும், இசையொடும் பொலியவும், இசை நிற்கவும் பாடியது. இவ்வருமை மகளிரை அவன் குடியில் மணப்பித்தல் கருதியவாறே குறிப்பிடப்பட்டுள்ளது.

**நிறைவுரை**

இவ்வாறு தெய்வக் கபிலர் பாடிய தெய்வர் பாரி புகழ் நிலமிசைக் கெடாது விளங்க வேண்டுவனதென்றே கருதி அவ்வள்ளல் வரலாற்றின் வாய்மைப் புகழை ஒருவாறு தொகுத்து என் சிறு சொல்லில் யாத்துப் பெருந் தெய்வ வடிவா என்றும் உள்ள நல்ல தமிழன்னையின் திருவடிகளில் இட்டு வைத்தேன் என்று ஆசிரியர் குறிப்பிடுகிறார். நான் இந்நூலைப் பாடி நிறைவேற்றிய பின்னர், நல்லறிவாளர் அருமையாக வாய்த்த சமயங்களில் இந்நூல் ஒவ்வொர் திறத்தைப் படித்துக்காட்டி அவர்களால் அன்பு செய்யப்பெற்றதுண்டு என்றும் குறிப்பிடுகிறார்.

இதன்மூலம் பண்டைய நாளில் தமிழகத்தை ஆட்சி புரிந்த முடிவேந்தர்கள், குறுநில மன்னர்கள், படை மறவராகிய கொடை வள்ளல்கள் முதலியோரது வரலாறுகளை நாட்டு மக்கள் நன்குணர்ந்து நடக்க வேண்டும் போன்ற பல்வேறு செய்திகளை கொண்டு பாரி காதையில் காணப்படும் திறம் வழி தொகுக்கப்பட்டுள்ளது.

# முத்து சண்முகனாரின் வாழ்வும் பதிப்புப் பணியும்

**தங்கமணி**
முனைவர் பட்ட ஆய்வாளர்,
அரியவகை எழுத்துச் சுவடித்துறை

தோன்றிற் புகழோடு தோன்றுக என்கிறது வள்ளுவம். டாக்டர்.எம்.சண்முகப்பிள்ளை எனும் முத்துச்சண்முகன் அவர்கள் பல பட்டங்களையும் பாராட்டுகளையும் பெற்றவர். அயல்நாடுகளிலும் இந்தியாவிலும் பல பல்கலைக் கழகங்களிலும் பலதுறைகளிலும் பணியாற்றிவர். தமிழக அரசின் நல்லாசிரியர் விருது பெற்றவர்.

## டாக்டர் முத்துசண்முகனாரின் பிறப்பு

டாக்டர் முத்துசண்முகன் 04.01.1920-ல் குமரி மாவட்டத்திலுள்ள புருவசேரி என்னும் குக்கிராமத்தில் முத்துப்பெருமாள். திருமதி சிதம்பரவடிவு ஆகியோருக்கு மகனாகத் தோன்றினார். இவர் முத்தம்மாள் என்பவரை மனைவியாகப் பெற்று இனிதான் இல்லறம் நடத்தினர்.

## கல்வி

கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள திருப்பதிசாரம் வடசேரி, நாகர்கோவில் ஆகிய ஊர்களில் பள்ளிப்படிப்பை முடித்தார். 1943ல் கேரளப் பல்கவைக் கழகத்தில் வேதியியலின் பி.எஸ்ஸி., பட்டம் பெற்றார். சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் எம்.ஏ.பிஎச்.டி., ஆகிய பட்டங்களைப் பெற்றுள்ளார். அறிவியல் ஞானம் இவரிடம் இருந்த காரணத்தால் மொழியியல் துறையின்பால் அதிக நாட்டம் ஏற்பட்டதாகத் தெரிகிறது.

1945களில் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் தமிழ்த்துறைத் தலைவராக இருந்த தெ.பொ.மீனாட்சி சுந்தரனார்

அவர்களின் சிறந்த மாணவர்களுள் ஒருவராகத் திகழ்ந்தார். திறமையுள்ள அனுபவமுள்ள மிகச்சிறந்த பேராசியரான தெ.பொ.மீயின் அன்பும் அரவணைப்பும் கிடைக்கப் பெற்றவர். மேலும் பேராசிரியர் ஏ.சி.செட்டியார், பூவராகம்பிள்ளை, அருணாச்சலம் பிள்ளை, பேராசிரியர் வ.சுப.மாணிக்கம் செட்டியார் போன்ற பெரும் பேராசிரியர்களின் நன்மதிப்பைப் பெற்ற மாணவராகவும் முத்துச்சண்முகன் திகழ்ந்தவர்.

### வெளிநாட்டுக் கல்விப்பணி

அமெரிக்க நாட்டு ராக்பெல்லர் பவுண்டேசன் என்ற நிதிநிறுவனம் 1955-ஆம் ஆண்டின் பூனே நகரில் நடத்திய மொழியியல் கோடைகாலப் பயிலரங்கில் கலந்துகொண்டு மொழியியல் பயிற்சி பெற்றதனைத் தொடர்ந்து ராக்பெல்லர் பவுண்டேசனின் நிதியுதவியுடன் மொழியியல் தொடர்பான புலமையை மொழியியல் அறிஞர்களான பேரா.எம்.பி.எமனோ. பேரா.பேக்கேங்க்ஸ், பேரா.கும்பர்ஸ், பேரா.கார்லஸ் பெர்குஸன் மற்றும் பேரா.சார்லஸ் காக்கம் ஆகியோரிடம் பயின்று பெற்றார். மேலும் இதாகாவில் உள்ள கார்னல் பல்கலைக்கழகத்திலும், பெர்க்லியில் உள்ள கலிபோர்னியா பல்கலைக்கழகத்திலும் மொழியியல் பயிற்சி பெறும் வாய்ப்பினைப் பெற்றார்.

### தமிழ்நாட்டில் கல்விப்பணிகள்

அமெரிக்காவில் மொழியியல் பயிற்சிபெற்றுத் திரும்பிய பின்னர் அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறையில், இணைப்பேராசிரியராகப் பணியைத் தொடங்கினார். அப்போது எம்.லிட். படிப்பிற்காக ' A critical Study of Silappathikaaram' என்னும் ஆய்வினை மேற்கொண்டார். அங்குப் பணியாற்றிய தமிழ்த்துறைத் தலைவர் தெ.பொ.மீனாட்சி சுந்தரனாரும் டாக்டர் முத்துச்சண்முகன் அவர்களும் இணைந்து தமிழ்த்துறையில் பல புதிய மாற்றங்களைக் கொண்டு வந்தனர். அவற்றில் ஒன்று திராவிட மொழிகளை அறிமுகப்படுத்தியதாகும். மேலும் பொது மொழியியல் ஒலியியனியல் போன்ற மொழியியல் பிரிவுகளையும் முத்துச்சண்முகன் அறிமுகப்படுத்தினார். அதனைத் தொடர்ந்து மொழியியலில் முதுகலைப்

பட்டப்படிப்பும் தொடங்கப்பட்டது. 1967-ஆம் ஆண்டுவரை அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் இவரது பணி நீடித்தது.

1960 களில் வெளிநாட்டவர்களுக்குத் தமிழ் கற்பிப்பதற்கான தலைமைப் பொறுப்பினை டாக்டர் முத்துச்சண்முகன் ஏற்றிருந்தார். அந்தச் சமயத்தில்( GLCA)(great Lakes colleges Association) என்ற அமெரிக்கா கல்வி அமைப்பானது வெளிநாட்டவர்களுக்குத் தமிழ் கற்பிக்கும் திட்டத்தினை மதுரையில் ஆரம்பிக்குமாறு கேட்டுக் கொண்டது. இவ்வமயம் முத்துச்சண்முகன் மதுரையில் இருந்ததால் இத்திட்டத்தினைச் செயல்படுத்த முடிந்தது.

மேலும் அமெரிக்காவில் உள்ள ஊஸ்டர் கல்லூரியிலும், பென்சில் வேனியப் பல்கலைக்கழகத்திலும் ராக்பெல்லர் பவுண்டேசனிலும் மலேசியப் பல்கலைக் கழகத்திலும் வருகைதரு பேராசிரிராகப் பணியாற்றியிருக்கிறார். 1971 ஆம் ஆண்டு பெனிசில்வேனியப்பல்கலைக் கழகத்தில் உள்ள தெற்கு ஆசிய வட்டார ஆய்வுகளின் என்னும் துறையில் சேர்ந்து பணியாற்றினார். அப்போது டாக்டர் டேவிட் லட்டன் என்பவரோடு சேர்ந்து குறுந்தொகைக் கவிதைகளை மொழிபெயர்த்தார். மேலும் சமூக மொழியியல் Dialectology and Structural Linguistics, என்று மொழியியல் துறையின் மீதுள்ள அக்கறை விரிந்து கொண்டே சென்றது.

### மதுரை பல்கலைக் கழகத்தில் சிறப்புப்பணி

டாக்டர் முத்துச்சண்முகன் மதுரை காமராசர் பல்கலைக்கழகத் துறைத் தலைவராகப் பொறுப்பேற்றது தமிழ்த்துறைக்கு பெருமைசேர்த்தது. அத்துறையின் வெற்றிக்கும் விரிவாக்கத்திருக்கும் தன் உழைப்பு முழுவதையும் முதலீட்டாக்கியுள்ளார். துறையின் எதிர்கால வளர்ச்சி குறித்த புதிய பலத் திட்டங்களைத் தீட்டினார். இத்திட்டங்கள் நிறைவேறுவதற்கு உறுதுணையாக இவரது பன்னாட்டுக் கல்விப்பணி அனுபவமும் இவருடைய பேராசிரியர்களின் அனுபவ அறிவும் கல்விப்பணி அனுபவமும் இவருடைய பேராசிரியர்களின் அனுபவ அறிவும் அமைந்தன. நாட்டுப்புறவியல்துறை, நாடகம்,

இதழியல் ஆகிய துறைகளுக்கென்று தமிழியில் சார்ந்த கல்வி அங்கீகாரம் பெற வித்திட்டவர் டாக்டர் முத்துச்சண்முகன் ஆவார்.

**பன்முக அறிவு**

டாக்டர் முத்துச்சண்முகன் அவர்களின் மொழியியல் அனுபவம், தமிழின் பல்துறை சார்ந்த ஆய்வு வளர்ச்சிக்கு எல்லா நிலைகளிலும் இவருக்கு உதவியது. பன்முகப்பட்ட துறைகளில் அவரின் பார்வை விரிந்தது. தான் செல்லும் கல்விசார்ந்த இடங்களிலெல்லாம் தன் மாணவர்களின் ஆய்வுகள் பற்றி சிறப்பாகக் கூறி மாணவர்களின் எதிர்காலத்திற்கு நிகழ்காலத்திலே உரமிட்ட நல்ல பண்பாளர்.

**கோடைக்கால பயிற்சிமுகாம்**

தமிழ் இலக்கியம் பயிலும் மாணவர்கள் தமிழ் மட்டுமின்றி ஆங்கிலம் பேசவும் எழுதவும் புலமை பெறல் வேண்டுமென்ற தன் விருப்பத்தைச் செயல்வடிவமாக்கினார். இதற்காக பிரிட்ச் நாட்டு ஹோப்ஸ் (hops) என்பவரோடு சேர்ந்து கோடைக்கால விடுமுறையில் ஆங்கில மொழிப்பயிற்சி வகுப்புகள் (Bridge course) தொடங்கினார். முதலில் இதற்கு எதிர்ப்புகள் கிளம்பியது. பிறது இதன் பயன்பாட்டையும் முக்கியத்துவத்தையும் புரிந்துக்கொண்டு ஆதரவு தெரிவித்தனர். இது தொடர்ந்து சில வருடங்கள் நடத்தப்பட்டும் வந்தது. இவருடைய முயற்சியினால் எண்பதுகளில் மதுரைகாமராசர் பல்கலைக்கழகத்தில் எம்.ஏ., மொழியியல் துறை தொடங்கப்பட்டது. இக்காலத் தமிழ் இலக்கியத்தில் கருத்தரங்குத் தொடர்களைத் தொடங்கி வைத்தவரும் இவரே. கருத்தரங்குகளின் கட்டுரைகளைப் படிக்கவைத்து அது குறித்து விவாதம் எழுப்பும் பழக்கத்தை ஏற்படுத்தினார்.

அனைத்து கல்லூரி மாணவர்களும், ஆசிரியர்களும் ஆய்வாளர்களும் சேர்ந்தமர்ந்த கருந்தரங்கு நடத்துவதற்கும். விவாதம் நடத்துவதற்கும் உண்மைப் பொருள் காண்பதற்கும் ஊக்கமளித்தவர். டாக்டர் முத்துச்சண்முகன் அவர்கள். மாணவர்கள் செய்து வந்த ஆய்வுகளில் தன்னையும் ஈடுபடுத்திக் கொண்டு தன் ஆய்வுக்களத்தை விரிவாக்கியவர்.

**நூல்கள் கட்டுரைகள்**

இவர் மொழியியல் மற்றும் இலக்கிய இதழ்களின் ஆசிரியராகவும் பதிப்பாசிரியராகவும் செயல்பட்டார். மொழியியல் தொடர்பாக சுமார் 200 க்கும் மேற்பட்ட ஆய்வுக்கட்டுரைகள் எழுதியுள்ளார். அவர் வெளியிட்டுள்ள நூல்கள் மற்றும் ஆய்வுக்கட்டுரைகள் குறிப்பிடத்தக்கனவாகும்.

**நூல்கள்**

1. ஆய்வுக்கட்டுரை எழுதும் முறை
2. இக்கால மொழியியல்
3. இக்காலத்தமிழ்
4. குறவஞ்சி
5. தமிழ் இலக்கியக் கோட்பாடுகள்
6. துறவு தந்த காப்பியம்
7. நொண்டி நாடகங்கள்

என்று இவரது நூல்கள் பல்கிப் பெருகும்.

**கட்டுரைகள்**

1.1973-ல் சேம்பர்ஸ்பர்க் என்னும் இடத்தில் நடந்த தென்னிந்திய ஆராய்ச்சிக் கழகக் கருத்தரங்குகளில் சமூக மொழியியல் என்ற தலைமைக் கட்டுரையாகப் படித்த ' Code switching in a Tamil noval' என்ற கட்டுரையின் தமிழாக்கமான மொழி மாறாட்டம்- ஒரு தமிழ் நாவலில் என்ற கட்டுரையே இவரது முதல் கட்டுரையாகும்.

2.அதே ஆண்டில் பென்சில் வேனியா பல்கலைக்கழகத்தில் இவர் நடத்திய தமிழ் நாவல்கள் என்ற கருத்தரங்கில் கிடைத்த கருத்துக்களில் சிலவற்றைக் தொகுத்து முதல்மூன்று நாவல்கள்- கோணக் கோட்பாடு என்ற கட்டுரையாக வெளியிட்டிருக்கிறார். இவ்வாறு இவரது படைப்புகள் நீண்டு கொண்டே செல்லும் இதோடு 1973-80க்குள் பதினைந்து முதுநிலை ஆய்வாளர்களுக்கு மேற்பார்வையாளராகவும் திகழ்ந்துள்ளார்.

## சிறப்புப் பட்டம்

அமெரிக்காவிலும் இந்தியாவிலும் மொழியியற் கழகத்தில் ஆயுட்கால உறுப்பினராக விளங்கினார். சாகித்ய அக்காதெமி பொதுக்குழுவிலும் சிலகாலம் உறுப்பினராகப் பணியாற்றினார். மொழியியல் ஆய்வில் எம்.எஸ்.பிள்ளை என்று வெளிநாட்டவரால் அழைக்கப்பட்டார். தமிழக அரசு நல்லாசிரியர் விருதும் இவருக்கக் கொடுத்து இவரைக் கௌரவித்தது.

## ஆய்வாளர்களின் நெஞ்சங்களில் வாழ்கின்றார்

'வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்'.

என்பதற்கிணங்க, வாழ்நாளின் கடைசி எல்லைவரை ஆராய்ச்சிச் சிந்தனை, ஆய்வு பற்றிய விவாதம் ஆய்வு வெளியீடுகள் என்று இயங்கிக்க கொண்டிருந்த டாக்டர் முத்துச்சண்முகன் அவர்கள் 22.09.98 ஆம் ஆண்டு இம்மண்ணுலகை விட்டு பிரிந்தார். ஆனால் அவர் தமிழ்க் கல்வியாளர்கள். மற்றும் ஆய்வாளர்கள் நெஞ்சங்களில் உயிர்ப்புடன் இருக்கிறார்கள் என்றால் மிகையாகாது.

# எச்.ஏ.கிருஷ்ண பிள்ளையின் பதிப்பு பணிகள்

**ச. தேன்மொழி**
உதவிப் பேராசிரியர்
வரலாற்றுத்துறை
அ.வீ.வா.நி.ஸ்ரீபுஷ்பம் கல்லூரி
பூண்டி, தஞ்சாவூர்.

காலம் 1827 - 1900. இவர் சங்கர நாராயணர்க்கும் தெய்வநாயகி அம்மைக்கும் 23.4.1827 இல் பாளையங்கோட்டையில் பிறந்தவர். திருப்பாற்கடல் நாத கவிராயரிடம் தமிழ்க்கல்வி பயின்றவர். இவருடைய தந்தையார் வைணவத்தில் மிகுந்த பற்றுக் கொண்டிருந்தவர். தாயார் கேள்வியறிவாலே கம்பராமாயணப் பாடல்களைக் கேட்டுக் கேட்டு மணத்திலிறுத்திச் சொற்பொழிவாற்றும் முதிர்ச்சி பெற்றிருந்தவர். கிருஷ்ணபிள்ளை தொடக்கத்தில் மல்வித்தை பயின்று மிகவும் முரடராக விளங்கினவர். சிறப்பாகக் கிருஸ்தவரைக் கண்டால் பிடிக்காது, தொல்லை கொடுத்துவந்தவர். இவரது 14 ஆம் வயதிலே 9 வயதுள்ள முத்தம்மாவைத் திருமணம் செய்து வைத்தனர் பெற்றோர்.

நாளடைவில் மனம் மாறி 1857 இல் சென்னைக்கு வந்து கிருஸ்தவராகித் திருமுழுக்கு பெற்றார். ஹென்றி ஆல்பிரட் என்ற பெயர் அளிக்கப்பட்டது. கிருஸ்தவராகியும் தம் குடுமியை நீக்காமலும் கடுக்கனை விடாமலும் பழைய கோலத்திலேயே இவர் இருக்கலானார்.

சென்னையில் தினவர்த்தமானியில் சில காலம்வரை துணையாசிரியராகப் பணியாற்றினார். பிறகு பள்ளி ஆசிரியராகவும் தொழில் பார்த்தார். இவர் பெயர் ஹென்றி ஆல்பிரட் கிருஷ்ண பிள்ளை என்று நீளமாகச் சில காலம் அழைக்கப்பட்டு, கடைசியில் எச்.ஏ. கிருஷ்ணபிள்ளை என்று சுருக்கப்பட்டு அதுவே நிலைத்துவிட்டது.

இவர் 1865 இல் திருவேதமாணிக்க நாடார் இயற்றிய வேதப்பொருள் அம்மானை என்னும் செய்யுள் நூலைப் பதிப்பித்தார். கால்டுவெல் பாதிரியார் இயற்றிய பரதகண்ட புராதனம் எனும் நூலையும் திரு. கிருஷ்ண பிள்ளை பதிப்பித்துள்ளார். காவிய தரும சங்கிரகம் எனும் நூலையும் இவர் தொகுத்து வெளியிட்டுள்ளார்.

இவரது இலக்கணச் சூடாமணி எனும் உரை நடைநூல் 1883-லும் போற்றித் திருவகவல் எனும் 53 கண்ணிகள் கொண்ட செய்யுள் நூல் 1884லும் கிருஷ்ணபிள்ளை கிருஸ்தவரான வரலாறு- 1893 லும் இது 19 ஆம் நூற்றாண்டில் தமிழில் தோன்றிய முதல் தன் வரலாறு ஆகும். இரட்சணிய யாத்திரிகம் 1894 -லும் இரட்சணிய சமய நிர்ணயம், செய்யுளால் ஆனது. 1898-லும் இரட்சணிய மனோகரம் -1899 - லும் அச்சிட்டு வெளியிடப் பட்டுள்ளன. இரட்சணிய நவநீதம் என்ற நூலையும் இவர் இயற்றியுள்ளார். திரு. கிருஷ்ணபிள்ளை 03.02.1900-இல் காலமானார்.

கம்பராமாயணத்தில் கிருஷ்ணபிள்ளை இளமை முதலே பற்று மூழ்கித் திளைத்தாலும் தமிழ் இலக்கிய இலக்கணங்களைக் கற்றுத் தேர்ந்தாலும், இவரது படைப்புகளில் செறிவான நடையும், பல நூல்களின் சாயலும் படர்ந்து காணப்படுகின்றன. கிருஸ்தவ மதத்தில் சேர்ந்து அம்மதத்தைப் பற்றிப் பலவகைகளில் அதன் பெருமையை எடுத்துக் கூறிய சுதேககிருஷ்தவர் கிருஷ்ணபிள்ளையே ஆவார். இவரைக் கிருஷ்தவக் கம்பன் என்றே பலர் அழைத்து வருகின்றனர்.

இவரைப் பற்றி 1924 இல் பால்கடம்பவணகம் அவர்கள் எச்.ஏ.கிருஷ்ணபிள்ளை வாழ்க்கை வரலாறு என்று நூலை எழுதியுள்ளார். ஜே.எஸ்.மாசிலாமணி ஐயர் 1927 இல் மகாவித்துவான் கிருஷ்ணபிள்ளை அவர்களின் வாழ்க்கை வரலாற்றுச் சுருக்கத்தைத் தந்துள்ளார். 1958 இல் டி.ஜி. தங்கராசன் கிருஷ்தவக் கம்பன் கிருஷ்ணபிள்ளை என்று எழுதி வெளியிட்டுள்ளார்.

# ச. மெய்யப்பனாரின் வரலாறும் பதிப்பும் பணியும்

**இரா. தேவி**
முனைவர்பட்ட ஆய்வாளர்
ஓலைச்சுவடித் துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர் - 613 010.

## பிறப்பும் இளமையும்

சீறும் சிறப்பும் மிக்கச் செட்டிநாட்டுப் பகுதியில் உள்ள கடியாபட்டியில் பழ.சண்முகனார்க்கும் மீனாட்சி ஆச்சிக்கும் 21.06.1993-இல் தலைமகனாகப் பிறந்தவர் மெய்யப்பனார். இவருடன் பிறந்தவர்கள் ஐந்து பேர். அதில் இரண்டுபேர் ஆண்கள், மூன்றுபேர் பெண்கள். தந்தை குங்கிலியம் சண்முகனார் ஒரு தவச்சீலர். வள்ளலார் கழல் தொழுதவர். தம் 36 வயதிலும் கூட வள்ளலாரின் கொள்கைகளைப் பரப்பி வந்தவர். சுகபோக வாழ்வைத் தவிர்த்து இறுதி மூச்சுவரை துறவியாக வாழ்ந்தவர்.

## கல்வி

மெய்யப்பனாரின் ஆரம்பக்கல்வி கடியாபட்டியில் தொடங்கியது. கடியாப்பட்டியிலுள்ள ஸ்ரீ பூமிஸ்வரர் பள்ளியில் கல்வி பயிலத் தொடங்கினார். நான்காம் வகுப்பு வரை உள்ளூரில் பயின்றார். பின்னர் காரைக்குடியை அடுத்துள்ள அமராவதிப் புதூரிலிருக்கும் குருகுலத்தில் அவர் சேர்க்கப்பட்டார். இங்கு இறை உணர்வுக்கும் நாட்டுப்பற்றுக்கும் முதன்மை அளிக்கப்பட்டது. ஒழுங்கும் கட்டுப்பாடும் பெரிதும் வலியுறுத்தப்பட்டது. அதிகாலை நான்கு மணிக்கு இறைவழிபாடு நடத்தப்பட்டு பாரதத் தாய் வாழ்க, தமிழ்த்தாய் வாழ்க, காந்தியடிகள் வாழ்க என்று வாழ்த்திய பின்னர்தான் மாணவர்களனைவரும் உணவருந்துவார்கள். கல்வியுடன் நெசவுத்தொழிலும் பயிற்சியளிக்கப்பட்டது. இங்குதான் மெய்யப்பனாருக்குத் தேசிய உணர்வு ஊட்டப்பட்டது. குருகுலத்தில் பயின்று ஊர் திரும்பிய

மெய்யப்பனார் மீண்டும் சொந்த ஊரில் பழைய பள்ளியில் சேர்ந்து கற்கலானார். பின்னர் அழகப்பா கல்லூரியில் மாணவராகச் சேர்ந்து உற்சாகத்துடன் கல்வி கற்கலானார். இக்காலக்கட்டத்தில் இடைநிலை வகுப்பில் வரலாறு, வணிகவியல், ஆகியவற்றை விருப்பப்பாடமாகப் படித்த அவருக்குத் தமிழ்ப்பற்று அதிகமானது.

**திருமணம்**

1957இல் படிப்பு முடித்து தேர்வில் வெற்றி பெற்று பட்டம் பெற்றார். பட்டம் பெற்ற கையோடு வேலையும் கிடைத்தது. விரும்பிய தமிழாசிரியர் பணி, தாம் பயின்ற அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலேயே கிடைத்தது. பின்னர் திருமணமும் நடந்தேறியது. மெய்யப்பனாருக்கும் ஆத்தங்குடி விகடம் காசிச்செட்டியாரின் நான்காவது மகள் மீனாட்சிக்கும் 31.12.1957இல் திருமணம் நடைபெற்றது. மொழிஞாயிறு தேவநேய பாவாணரின் தலைமையில் நடைபெற்ற இத்திருமணத்தில் அண்ணாமலைப் பல்கலைக்கழக ஆசிரியர்களும் மாணவர்களும் கலந்துச் சிறப்பித்தனர்.

**ஆசிரியப் பணி**

**குலன் அருள் தெய்வம் கொள்கை மேன்மை**
**கலைபயில தெளிவு கட்டுரை வன்மை**
**நிலம் மலை நிறைகோள் மலர் நிகர் மாட்சியும்**
**உலகியல் அறிவோடு உயர்குணம் இணையவும்**
**அமைபவன் நூலுரை ஆசிரி யன்னே**

என்கிற நன்னூல் சூத்திரப்படி 1957இல் தொடங்கிய இவரது ஆசிரியப் பணி தொடர்ந்து 36 ஆண்டுகள் நீடித்தது. புலவர் இடைநிலைப் புகுமுக வகுப்பு, இளங்கலை, முதுகலை, இளம் ஆய்வியல் வகுப்பு என்று பல்வேறு வகுப்புகளுக்கும் சென்று மாணவர்களுக்குப் பாடம் கற்பித்தார்.

**சங்க இலக்கியப் பாடல்**

சங்க இலக்கியத்தைக் கற்பதும் கற்பிப்பதும் மெய்யப்பனாருக்கு விருப்பமானவை. புலவர், முதுகலை மாணவர்களுக்கு இவர் குறுந்தொகை, கலித்தொகை, புறநானூறு முதலியவற்றை மிகச்

சுவையாக நடத்துவார். சங்க இலக்கிய உவமைகளின் தனிச்சிறப்பைச் சொல்லி இன்புறுவார். சங்க இலக்கியக் களஞ்சியம் மற்றும் சங்க இலக்கியத் தொன்மக் களஞ்சியம் முறையே முனைவர் சு. அமிர்தலிங்கம் மற்றும் புலவர் வே.அண்ணாமலை ஆகியோரைக் கொண்டு வெளியிட்டுள்ளார். சங்க இலக்கியத் தொன்மக் களஞ்சியம் இரு தொகுதிகளாக வெளிவந்தது.

**பாரதி ஆய்வு**

பாரதியாரின் பாடல்களில் மிக மிகத் தோய்ந்துப் போன மெய்யப்பனார் அறுபது ஆண்டுகளில் பாரதி என்னும் நுட்பமான ஆய்வினை நடத்தியுள்ளார்.

1. **வாழ்க்கை வரலாறு,**
2. **திறனாய்வு, ஒப்பாய்வு,**
3. **பாரதியார் மகாகவியா?,**
4. **புதுச்சேரி வாழ்க்கை**

எனப் பகுத்துக்கொண்டு அரிய பல ஆய்வுக் கட்டுரைகளை எழுதியுள்ளார்.

**சொல்லாராய்ச்சி**

வேர்ச்சொல்லாராய்ச்சியில் மெய்யப்பனார் மிகுந்த ஈடுபாடு உள்ளவர். இத்துறையில், இவருக்கு அறிஞர் தேவநேய பாவாணர், வித்துவான் வி.மு.சோமசுந்தரம் பிள்ளை, மூதறிஞர் வ.சுப.மாணிக்கனார், முனைவர் இரா.இளங்குமரனார் ஆகியோர் வழிகாட்டிகளாக இருந்தனர்.

**பதவிகள்**

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் ஆளவை (06.12.80 - 05.12.83) உறுப்பினராகவும், தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் ஆளவை மற்றும் ஆட்சிக்குழு உறுப்பினராகவும் (29.01.98 - 14.01.99) பதவி வகித்துள்ளார். நூல்கள் வெளியிடுவதில் இவரது திறனையும் அனுபவத்தையும் கொண்டு இவ்விரு பல்கலைக்கழகங்களும் தம் பதிப்புக்குழுவில் இவரை உறுப்பினராக நியமித்துக்கொண்டது.

**மெய்யப்பனாரின் மாணவர்கள்**

பேராசிரியர் மெய்யப்பனாரிடம் பயின்ற மாணவர்கள் பலர் அவர்களுள் சிலர் பின்வருமாறு.

கி. நாச்சிமுத்து, இ.அண்ணாமலை, ஜி.ஜான் சாமுவேல், அரசேந்திரன், சக்திபுயல், கிருஷ்ணமூர்த்தி, அமிர்தலிங்கம், சு.கிருஷ்ணசாமி, சின்னப்பா, ஆறு.இராமநாதன், மாதையன், அறிவுமதி, அரங்கராசன் முதலானோராவர்.

**பதிப்புப் பணி**

**பதிப்பாளும் செம்மலான் பல்கலைதேர்**
**வல்லாளன் பல்லோர் நண்பன்**
**மதிப்பாளும் நிறுவனத்தான் வளர்தமிழின்**
**கரையனையான் மடிமையில்லான்**
**குதித்தாளும் பெருமாந்தன் குனித்தவடி**
**மனத்தக்கத்தான் குறிக்கோள் மிக்கான்**
**உதித்தாளும் ஞாயிறுபோல் ஒளிச்சிறந்து**
**மெய்யப்பன் உயர்ந்து வாழி!**

என வாழ்த்துவார் வ.சுப.மாணிக்கனார், தமிழ் வளர்ச்சியையே குறிக்கோளாகக் கொண்ட மெய்யப்பனார், தமிழ் இலக்கியம், கவிதை, கட்டுரைகள், புதினங்கள், சிறுகதைகள், திறனாய்வுக் கட்டுரைகள் என்று பல துறைகளிலும் எண்ணற்ற நூல்களைப் பதிப்பித்துள்ளார். இடைக்காலத்திலும் பிற்காலத்திலும் பெருகிய பிரபந்தங்கள், இடையில் பயில்வாரில்லாது போயின. அவற்றைச் சிறந்த விளக்கங்களோடு கூடிய விரிவான நூல்களாக முதன்முதலாக வெளிக்கொண்டு வந்தது மணிவாசகர் பதிப்பகமாகும். தொடர்ந்து பரணி, உலா, முதலிய சிறு பிரபந்தங்களும், அந்தாதி, கலம்பகம், பிள்ளைத்தமிழ், குறவஞ்சி நூல்களும் வரிசையாக வெளியிடப்பட்டன. சிற்றிலக்கிய மறுமலர்ச்சிக்கு மெய்யப்பனார் ஆற்றிய பணிகள் ஏராளம். செம்பதிப்பு வரிசை என்கிற சிந்தனையை விதைத்தவரே இவர்தான். பாரதியார், பாரதிதாசன், வள்ளலார், பட்டினத்தார், தாயுமானவர் பாடல்கள் முதலியன செம்பதிப்பாக வெளியானச் சில நூல்களாகும்.

நட்டம் ஏற்படுமென நினைத்துப் பிற பதிப்பகங்கள் வெளியிட முன்வராத நூல்களையும் மெய்யப்பனார் துணிந்து வெளியிடுவது வழக்கம். பரிபாடல் திறன் என்னும் நூலைச் சில பதிப்பகங்கள் வெளியிட முன்வராதச் சூழலில் விருப்பத்தோடு வெளியிட்டார். இளம் எழுத்தாளர்களைத் தாமே தேடிச் சென்று வளர்ந்து வரும் புதுத் துறைகள் பற்றி நூல் எழுதச் செய்து கைப்படிகளைப் பெற்று வந்து அச்சேற்றி அத்துறைக்கு அடிப்படையான நூல்களை உருவாக்குவார். இது தவிர வெற்றிச் சிந்தனைகள், தமிழ் இயக்க நூல்களின் வரிசைகள், பாட நூல்கள், வாழ்க்கை வரலாற்று நூல்கள், முதலானவை இவரது பதிப்பகம் வழி வெளியானவை.

**யாரிந்த மெய்யப்பனார்?**

❖ வள்ளுவ பெருமான் குறிப்பிடுவது போன்று உரைசான்ற நூல் எனப்படுவற்றை நன்கு அழகுற அச்சிட்டு வழங்கும் நண்பர் என மெய்யப்பனைப் பாராட்டியுள்ளார் திருக்குறளார் வீ.முனிசாமி.

❖ தகுதி மிக்க எழுத்தாளர்களெல்லாம் மெய்யப்பனாருக்குப் பழக்கமானவர்களாகவே இருப்பர். நூலெழுதும் ஆசிரியரின் திறமறிந்து அவ்வவர்க்கு ஏற்ற நூலை எழுதத் தூண்டும் இயல்பினர். இவரது தூண்டுதலால் பலர் நல்ல நூலாசிரியராகத் திகழ்கிறார்கள் என்பார் வித்துவான் செ.வெங்கட்ராமச் செட்டியார்.

❖ முதிய எழுத்தாளர்களுக்கு மணிவாசகர் பதிப்பகம் ஓர் அற நிலையம் இளைய எழுத்தாளர்களுக்கு ஒரு கொழுகொம்பு என்பார் மகாவித்துவான் ச.தண்டபாணி தேசிகர்.

❖ செந்தமிழ்ப் பேராசிரியராக விளங்கும் செம்மல், மெய்யப்பன் அவர்கள், நூலாருள் நூல் வல்லார் என்பதுபோல், நூலாசிரியராகவும், உரையாசிரியராகவும், பதிப்பாசிரியராகவும் முத்துறைகளிலும் தம் பெயர் நிறீஇய தன்மையாளர் என்கிறார் ஔவை நடராசன்.

### மெய்யப்பனார் ஏற்படுத்திய அறக்கட்டளைகள்

❖ சண்முகனார் - மெய்யப்பன் அறக்கட்டளை - அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
❖ மாணிக்கனார் - மெய்யப்பன் அறக்கட்டளை - புதுவைப் பல்கலைக்கழகம்
❖ மெய்யப்பன் அறக்கட்டளை - தமிழ்ப் பல்கலைக்கழகம்
❖ மெய்யப்பன் அறக்கட்டளை - திருவேங்கடவன் பல்கலைக்கழகம்
❖ மெய்யப்பன் அறக்கட்டளை - அழகப்பா பல்கலைக்கழகம்
❖ மெய்யப்பன் அறக்கட்டளை - உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

மேலும்

❖ மதுரைத் தமிழ்ச்சங்கம் - மதுரை
❖ சன்மார்க்க சபை - மேலைச்சிவபுரி
❖ பிருந்தாவன் கல்விக்கழகம் - கோவை
❖ மூதறிஞர் வ.சுப.மா நிதியம் - அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
❖ தனித்தமிழ்க் கழகம் - பாளையங்கோட்டை
❖ அண்ணா இலக்கியப் பேரவை - சென்னை
❖ கண்ணதாசன் மன்றம் - காரைக்குடி
❖ தமிழ் எழுத்தாளர் நல நிதி - எழுத்தாளர் சங்கம் - சென்னை
❖ பாடுவார் முத்தப்பர் கோட்டம் - கீழ்ச்சீவல்பட்டி
❖ கம்பன் கழகம் - காரைக்குடி

இவ்வாறாகப் பல நிலைகளில் தமிழுக்கும் தமிழ் உணர்வுக்கும் மதிப்பளித்து தமிழுக்காகவே உழைத்து அயர்ந்த நல்லோர்களுக்கு மத்தியில் ச.மெய்யப்பனாரும் தனித்த இடத்தைப் பெறுகிறார். தமிழுக்குத் தொண்டு செய்வோன் சாவதில்லை என்கிற வைர வரிகளுக்கு ஏற்ப மெய்யப்பனார் அவர்கள் 28.06.2004 இல் இவ்வுலகை விட்டுப் பிரிந்தாலும் சுடராய் ஒளிவீசிக் கொண்டிருக்கிறார் என்றால் அது மிகையல்ல.

### உதவிய நூல்

பதிப்புச் செம்மல் ச.மெய்யப்பன் ச.இராமச்சந்திரன், மணிவாசகர் பதிப்பகம், சென்னை.

# சரஸ்வதி மகால் நூலகப் பதிப்பில் நாலடியார் உரைவளம்

**மணி.மாறன்**
M.A.,(T),M.A.,(H),B.L.I.S., Dip.,in Sanskrit.
தமிழ்ப்பண்டிதர்,
சரசுவதி மகால் நூலகம் மற்றும் ஆய்வு மையம்,
தஞ்சாவூர்-9.

உலக நூலகங்களுள் பழமையும் பெருமையும் மிக்கது தஞ்சையில் அமைந்துள்ள சரசுவதி மகால் நூலகமும் ஒன்றாகும். இந்நிறுவனத்தில் ஏறக்குறைய 50,000 ஓலை மற்றும் காகிதச்சுவடிகள் பாதுகாக்கப்பட்டு வருகின்றது. இச்சுவடி நூல்களில் இருந்து அச்சு நூல்களைப் பதிப்பித்து வெளியிட்டு வரும் அரும்பெரும் பணியினை கடந்த ஐம்பது ஆண்டுகளாக இந்நூலகம் செய்துவருகின்றது. அவ்வகையில் நூலகத்தின் தமிழ் ஓலைச்சுவடிப் பிரிவில் இருக்கக் கூடிய நாலடியார் சுவடிகளை தமிழ்ப் பண்டிதர் முத்துரத்தின முதலியாரை பதிப்பாசிரியராகக் கொண்டு பதிப்பித்து நாலடியார் உரைவளம் என்ற தலைப்பில் இரண்டு பாகங்களாக 1953ஆம் ஆண்டில் வெளியிட்டுள்ளது. இந்நூலில் நானூறு பாடல்களின் மூலமும் 3 பழைய உரைகளும் அடங்கியிருக்கின்றன. பதுமனார் உரையை முதலில் அச்சிட்டு வெளிவந்த பதிப்பு இதுவேயாகும்.

**“நாலடியார் குறித்து சிறப்பித்துக் கூறப்படுவன
பாலு நெய்யு முடலுக் குறுதி
வேலு வாளு மடலுக் குறுதி
ஆலும் வேலும் பல்லுக் குறுதி
நாலு மிரண்டும் சொல்லுக் குறுதி”**

**“பழகு தமிழ் சொல்லருமை நாலிரண்டில்”**

**“நாலடி இரண்டடி கற்றவனிடத்து
வாயடி கையடி அடிக்காதே”**

என்பதாகும்.

அதுபோல,

**“நாலடி வள்ளுவ ராமேயிப் பாலை நடந்த பெருங்**
**காலடி மேலடி மானடி யேகட் டுரலிற் பட்ட**
**பாலடி சில்வெண்ணெ யுண்டோ னரங்கன் பனிவரையில்**
**வேலடி முள்ளுக் குபாயமிட் டேகும் விரகு நன்றே”**

என்பது அரங்கக் கோவைக்கண் உள்ள உடன் போக்குத்துறைச் செய்யுள். அஃதாவது தலைவன் அடிச்சுவட்டின் மீது தலைவி அடிவைத்து நடக்குங்கால் நான்கு அடியும் இரண்டடியாய்த் தோன்றியதற்கு நாலடியாரையும், திருக்குறளையும் உவமையாக எடுத்துக் கூறிய நயத்தைக் காணலாம்.

கீழ்க்கணக்கு நூல்களில் முதலாவதாக வைத்துப் போற்றப்படுவது நாலடியே ஆகும். நாலடி என்பது நான்காகிய அடிகளை உடையது. பண்புத்தொகை புறத்துப் பிறந்த அண்மொழித் தொகை காரணப்பெயராய் அமைந்து வெண்பா யாப்பால் உற்ற இந்நூலுக்கு கருவி ஆகுபெயராயிற்று. இது அளவினாற் பெயர் பெற்ற நூல் ஆகும். இந்நூலின் சிறப்புப் பற்றி டாக்டர் ஜி. யு. போப் அவர்கள் தாம் எழுதிய நாலடியார் பதிப்புரையில் கூறியுள்ளதைக் காண்போமாயின் நூலின் பெருமை தெள்ளென விளங்கும்.

கடவுள் வாழ்த்துப் பாடலைத் தவிர வேறு இடங்களில் கடவுளைப் பற்றிக் கூறவில்லை. எனினும் சில தெய்வங்களைப் பற்றியும், மக்களின் பொதுவான நம்பிக்கைகளைப் பற்றியும் கூறப்பட்டிருக்கிறது.

ஆனால் சீரிய ஒழுக்கத்தைப் பற்றிய கருத்துக்களும் மக்களாவார் நல்லொழுக்கத்தினால் ஈடுபடவேண்டிய கடமையைப் பற்றியும், மிக்க வன்மையுடனும், திருத்தமாகவும் கூறியுள்ளார். முடிவில் இத்தகைய சிறந்த ஒழுக்கத்தில் மிகப் பற்றுள்ள மக்களாவார். தனிப்பட்ட பேரின்பத்தை எய்துவர்களென நான் கருதுகிறேன். அன்னாரை இவ்வழியில் நிலைநாட்டியது திருக்குறளும், நாலடியுமே ஆகும் என்று சிறப்பித்துள்ளார்.

பாண்டியன் அவையின்கண் வீற்றிருந்து தமிழாய்ந்த எண்ணாயிரம் சமணமுனிவர் பஞ்சத்தால் வருந்தி அவையை விட்டு நீங்கும்போது தாம் இருந்த பீடத்தின் கீழ் ஒவ்வொரு பாடலை எழுதிவைத்து பாண்டியனிடம் அறிவிக்காமல் சென்றனர். மன்னன் அவர்களைக் காணாது வருத்தமுற்று அவர்கள் வீற்றிருந்த தவிசினை அப்புறப்படுத்தச் சொல்ல அதன்கீழ் ஓலையில் ஒவ்வொரு வெண்பா எழுதி வைத்திருப்பதைக்கண்டு தாம் அப்புலவர்களை பிரிந்த வருத்தத்தினால் அந்த ஏடுகளை வையை ஆற்றில் எரியும்படி ஏவினான். அவ்வாறு ஆற்றில் எரியப்பெற்ற ஏடுகளில் 400 ஏடுகள் நீர்வழிச் செல்லாது எதிர்வழிச் சென்றன. இதனை அறிந்த மன்னன் அந்த ஏடுகளை எடுத்து ஒரு நூலாக்கி நாலடியார் எனப் பெயரிட்டு வழங்கினான் என்ற செய்தியினை,

மன்னன் வழுதியர்கோன் வையைப் பேராற்றின்
எண்ணி இருநான்கோ டாயிரவர் – உன்னி
எழுதியிடு மேட்டி லெதிரே நடந்த
பழுதிலா நாலடியைப் பார்

இப்பாடல் சுட்டுகின்றது.

இந்நூலினை எண்ணாயிரம் முனிவர் பாடினர் என்பதனை,

எண்ணா யிரவ ரிசைத்த வெண்பா நானூறுங்
கண்ணாமிந் நாலடியைக் கற்றுணரத் – தண்ணார்
திருக்குருகூர் மாறனையே தேர்ந்து மறை தேர்ந்த
திருக்குருகூர் மாறனையே தேர்

எனும் இப்பாடல் சுட்டுகிறது.

ஆயினும் இக்கட்டுரையாளரான என்னுடைய கருத்து எண்ணாயிரவர் என்பது ஒரு குழுவை சுட்டக் கூடிய சொல்லாகவே விளங்கியுள்ளது. இதற்கான சான்றுகளைக் கல்வெட்டுக்களில் காணலாம். இது குறித்து விவரிக்கின் கட்டுரை நீண்டு செல்லும் என்பதால் பிறிதொரு நிகழ்வில் விவாதிக்கலாம்.

இந்நூல் நானூறு பாடல்களைக் கொண்டது என்பதனை,

**நானூறும் வேதமா நானூறு நானூறா**
**நானூறுங் கற்றற்கு நற்றுணையா – நானூறும்**
**பண்மொழியாள் பாகம் பகிர்ந்து சடைக்கரந்த**
**கண்ணுதலான் பெற்ற களிறு.**

எனும்பாடல் உணர்த்துகிறது.

இந்நூலை

**ஞாலத் துழிதரு நற்பாட்டே கொண்டடக்கி**
**நாலடி நானு றெனப்பெ யரால் – வாலிதி**
**னீடடித் தொகுத்தா னிசைசால் பதுமனே**
**கூட்டமைந்த மூன்றுபால் கொண்டு.**

என இதனைத் தொகுத்தவர் பதுமனார் என்கின்றது.

திருக்குறளுக்கு உரை எழுதிய ஆசிரியர்கள் பதின்மர். மேலும் சில ஆசிரியர்களும் உரை எழுதியிருத்தல் கூடும். அதுபோல நாலடியாருக்கு உரை எழுதியுள்ள ஆசிரியர்கள் பலர் இருத்தல் கூடும். அவர்களுள் தருமர், பதுமனார். விளக்கவுரைகாரர் எனும் மூன்று உரையாசிரியர்களின் உரைகளையும் தொகுத்து வெளியிட்டதால் சரசுவதி மகால் நூலகம் வெளியிட்ட இந்நூலிற்கு நாலடியார் உரைவளம் எனப் பெயரிடப்பட்டது.

சரசுவதி மகால் நூலகத்தில் நாலடியார் உரையுடன் அமைந்த ஏட்டுச்சுவடிகள் மூன்று உள்ளன. அவை 1) தருமர் உரையுடன் கூடிய சுவடி ஒன்று, இதில் பதவுரை முழுவதுமாக உள்ளது. 2) பதுமனார் உரையுடன் அமைந்த சுவடி ஒன்று. இது பொழிப்புரையுடன் 136 பாடல்களுக்கு மட்டும் உரையுடன் கூடிய ஒரே பிரதி. 3) உரையாசிரியர் பெயர் பொறிக்கப் பெறாமல் அமைந்த உரைப்பிரதி ஒன்று. இதில் 297 பாடல்களுக்கு மட்டும் பதவுரை அமையப் பெற்றுள்ளது. இவ்வுரையாசிரியர் பெயர் அறிய இயலாமையால் விளக்கவுரை எனப்பெயர் பெற்றுள்ளதோடு, அவ்வுரையாசிரியரை விளக்கவுரைகாரர் என்றே குறிப்பிட்டுள்ளார்.

இவற்றை ஒப்பு நோக்குதற்காக பல்வேறு இடங்களில் ஆராய்ந்து கிடைத்த பிரதிகளையும் இந்நூலின்கண பட்டியல் இட்டுள்ளார். இந்நூலின் பதிப்பாசிரியர் நூலகத் தமிழ்ப்பண்டிதர் எஸ். முத்துரத்தின முதலியார். அவருக்கு இப்பணியில் துணையாக நின்றவர் அம்பாசமுத்திரம் தீர்த்தபதி உயர்நிலைப் பள்ளித் தமிழாசிரியர் வித்வான் ஸ்ரீகந்தசாமிப்பிள்ளை ஆவார். இவர் ஒப்பாய்விற்காக எடுத்துக்கொண்ட பட்டியல்

1. டாக்டர் உ. வே. சாமிநாதய்யர் சேகரித்து வைத்தது. அடையாறு கலாக்ஷேத்திரத்தில் உள்ள பிரதி ஒன்று (தருமபுர ஆதீனத்து பிரதி நாலடி விருத்தி என்று பெயர்)

2. சென்னை அரசாங்கத்துக் கையெழுத்துப் புத்தகசாலைப் பிரதி பொழிப்புரையுடன் உள்ளது.

3. மேற்படி புத்தக சாலைப் பிரதி ஒன்று பதவுரையுடன் கூடியது.

4. நாலடியார் தேவர் உரை பிரதி ஒன்று (அண்ணாமலைப் பல்கலைக் கழகம்)

5. நாலடிப் புகழ்ச்சி பிரதி ஒன்று (இச்சுவடி நண்பர் ஒருவரிடமிருந்து பெற்றதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.)

இவற்றுள் நான்கு, ஐந்தாம் பிரதிகள் ஒப்பு நோக்குதற்கு உரியதாக இல்லை. நூலகச் சுவடிகளான பதுமனார் உரையிலிருந்த 136ஆம் பாடல்களுக்கு மேற்பட்ட பகுதிகளையும் அரசாங்கத்துக் கையெழுத்துப் புத்தகசாலை பிரதியைக் கொண்டு பூர்த்தி செய்யப்பட்டது. சரசுவதி மகால் நூலக தமிழ்ச் சுவடிகளின் விவரங்கள் அடங்கிய அட்டவணையைத் தயாரித்த தமிழ்ப் பண்டிதர் எல். உலநாகதப்பிள்ளை, தருமர் உரை பற்றி இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். இதில் முழுவதும் இருக்கிறது இவ்வுரை சிறந்ததாகக் காணப்படுகிறது. சீல முனிவர் எனும் முதற்குறிப்புடைய செய்யுளில் கண்டான், குருடான்,

பயனுரைத்தான், காதலித்து தண்டார் பொறை தருமன்தான் என்று வந்திருப்பதைக் கொண்டு இவ்வுரையினை செய்தவர் தர்மர் என்பவராய் இருத்தல் வேண்டும் என்று கருதப்படுகின்றது என்கிறார். இவ்வுரை நூல் அச்சிடப்பெறவில்லை.

அறம், பொருள், இன்பம் எனும் முப்பாலைப் பற்றிப் பேசும் அரிய பழம்பெரும் நூலான நாலடியார் சொற்சுவை, பொருட்சுவைகளில் தமிழகம் போற்றும் திருக்குறளுக்கு நிகரான ஒன்றாகும். இந்நூல் பலரால் உரையுடன் அச்சிடப்பட்டிருப்பினும் இந்நூலகத்தால் வெளியிடப்படும் மூன்று உரைகளும் முழுவதுமாக (இந்நூல் வெளியிடப்பெறும் காலத்திற்கு முன்பாக) அச்சிடப்படவில்லை. இம்மூன்று உரைகளிலும் அனைவராலும் அதிகமாகப் போற்றப்படுவது பதுமனார் உரையே ஆகும்.

இவ்வுரையாசிரியரே நாலடியாரில் உள்ள நானூறு பாடல்களுக்கும் அதிகார அடைவு செய்துள்ளதாக சொல்லப்படுகின்றது. இத்தகைய பெருமை உடையதாக இருந்தும் இவ்வுரையானது இதுவரையில் அச்சிடப்படவில்லை என்றே நூலகப் பதிப்புரையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. இருப்பினும் ஒவ்வொரு பதிப்பாளரும் தத்தமது பதிப்பில் சொல்லப்படும் உரை பதுமனார் உரையைத் தழுவியது என்று மட்டும் சொல்லத் தவறுவதில்லை.

அடுத்த உரை தருமர் என்பவரால் எழுதப்பட்டதாகத் தெரிகிறது. இவ்வுரையானது முதன்முதலாக இப்போதுதான் வெளிவருகின்றது. இது இந்நூலக வெளியீட்டின் சிறப்பினை வெளிக்காட்டுகிறது.

மூன்றாவது உரை முதல் இரண்டு உரைகளைத் தழுவி அதாவது பதுமனார், தருமர் உரைகளைத் தழுவி விளக்கமான நடையில் எழுதப்பட்டிருக்கிறது. அதன் ஆசிரியர் பெயர் அவ்வுரைச் சுவடியில் காணப்படவில்லை. அதனாலேயே அவ்வுரைக்கு விளக்கவுரை என்று பெயரிடப்பட்டுள்ளது. சரசுவதி மகால் நூலகத்தில் பாதுகாக்கப்பட்டு வருகின்ற பழைய தமிழ்ச்சுவடிகளில் இருந்து இம்மூன்று உரைகளும் எடுத்து பதிப்பிக்கப்பட்டிருக்கின்றன.

தமிழ்ப்பண்டிதர் முத்துரத்திரன முதலியார் மிகுந்த ஆர்வத்துடன் நூலின் மூலத்தையும் உரைகளையும் பதிப்பித்து வழங்கியுள்ளார். ஒவ்வொரு பாட்டின் உரைக்குப் பிறகு அச்செய்யுள் எடுத்தாளப்பட்ட இடங்களும், அதே பொருள் அமைந்த இதர நூல்களும், மேற்கோள் பகுதி ஒப்புமைப் பகுதி என்கிற பெயர்களுடன் சேகரிக்கப்பட்டிருக்கின்றன.

எடுத்துக்காட்டாக,

**நளிகடல் தண்சேர்ப்ப நாணிழற் போல**
**விளியுஞ் சிறியவர் கேண்மை – விளிவன்றி**
**அல்கு நிழற்போல் அகன்றகன் றோடுமே**
**தொல்புக ழாளர் தொடர்பு**

**தருமர்**

நளிகடல் தண்சேர்ப்ப-செறிந்த கடற்சேர்ப்பை யுடையவனே!, சிறியவர் கேண்மை- சிறியாருடன் கொண்ட நட்பானது, நாள் நிழல் போல-முற்பகலினிழற்போல, வளியும்- அடைவிலே குறைந்துவிடும்; தொல்புகழாளர் தொடர்பு-பழையதாகியே தொடர்ந்த புகழினை உடைய பெரியோருடன் கொண்ட நட்பு, விளிவு இன்றி-கேடின்றியே, அல்கு நிழல் போல்- பிற்பகல் நிழல்போல, அகன்று அகன்று ஓடுமே-அடைவிலே வளர்ந்துவரும் என்றவாறு.

பெரியோருடன் கொண்ட நட்பு பயன்தருமென்பது தோன்றப் பெரியோரைப் பிழையாமையிற் சேர்த்து, அவரைப் பிழைத்தல் ஆகாதென அறிவுறுத்தியவாறு.

**பதுமனார்**

பெருங்கடல் தண்சேர்ப்பனே! முன்பகல் நிழல்போலச் சிறியவர் கொண்ட கேண்மை நாடோறுந் தேயும் தொல்புகழாளர் தொடர்பு தேய்வின்றியே பிற்பகல் நிழல் போல வளர்ந்து செல்லும் என்றவாறு.

நாள் நிழல்-முன்பகல் நிழல், அல்குநிழல்-பின்பகல் நிழல்.

**விளக்கவுரை**

நளிகடல் தண்சேர்ப்ப-செறிந்த கடற்பரப்பையுடைய மலை நாடனே!. சிறியவர் கேண்மை-சிறியாருடனே கொண்ட நட்பு, நாள் நிழல்போல-முற்பகல் நிழற்போல, விளியும்-குறைந்து விடும். தொல் புகழாளர் தொடர்பு-பழைய புகழ்ச்சியுடையாருடனே கொண்ட தொடர்ச்சி, விளிவு இன்றி-கேடின்றி, அல்கு நிழல் போல்-பிற்பகல் நிழற்போல, அகன்று அகன்று ஓடுமே-வளர்ந்து செல்லும் என்றவாறு.

பெரியோருடன் கொண்ட தொடர்ச்சி மேன்மேலும் இனிமையுண்டாகி வளருமாதலில் அவருடனே கொண்ட தொடர்ச்சி விடலாகாது என்பது தோன்றப் பெரியாரைப் பிழையாமை என்னும் அதிகாரத்திற் சேர்க்கப்பட்டது.

**ஒப்புமைப்பகுதி**

பெரியவர் கேண்மை பிறைபோல நாளும்
வரிசை வரிசையா நந்தும் – வரிசையால்
வானூர் மதியம்போல் வைகலுந் தேயுமே
தானே சிறியார் தொடர்பு. நாலடியார்–125

நிறைநீர நீரவர் கேண்மை பிறைமதிப்
பின்னீர பேதையார் நட்பு குறள் 782

**குறிப்பு**

நளி - செறிவை யுணர்த்தும் உரிச்சொல்,

**நளியென் கிளவி செறிவு மாகும்**

என்பது தொல்காப்பியம் உரி. சூ. 85

தடவுங் கயவு நளியும் பெருமை என்ற தொல்காப்பியம் கொண்டு நளி என்பதற்கு பெருமை எனக் கொள்ளலுமாம். தருமரும், விளக்கவுரைகாரரும் நளி கடல் என்பதற்கு செறிந்த கடல் என்றதும், பதுமனார் பெருங்கடல் என்றதும் காண்க.

அல்குதல்-சுருங்குதல், ஈண்டு பகற்பொழுது சுருங்குதற்கு ஆயிற்று. அகன்று அகன்று- மிகுதி பற்றிய அடுக்கு உவமையின் உறுப்புகளாகிய உவமை, பொருள், பொதுத்தன்மை, உவமையுருபு என்ற நான்கும் அமைந்திருந்தலான் இச்செய்யுள் முற்றுவமையணி.

மேலும் இந்நூலில் கண்ட பொருள்களைப் பற்றிய விசேடக் குறிப்புகளும் அமைந்துள்ளது. எடுத்துக் காட்டாக அணிவகைகள் எங்கெல்லாம் சுட்டப்பட்டுள்ளதோ அவற்றின் எண்கள் அதுபோல ஆயுதங்கள், அளவைப் பெயர்கள், இசைக் கருவிகள், இடவகை, உணவு வகை, உடல் உறுப்புகள், உடைவகை போன்றனவும், உவமைகளாக வரக்கூடியவற்றை அறத்துப்பால், பொருட்பால், இன்பத்துப்பால் என பால்வகைப் படுத்தி சுட்டிக்காட்டலும் காலப்பெயர்கள், உறவுப் பெயர்கள், உலோக வகைகள், தெய்வப்பெயர்கள், நீர் நிலைகள், பறவையின் வகைகள், மக்கள் பெயர்கள், விலங்கு வகைகள், வழக்கங்கள் இன்ன பிறவற்றையும் விசேடக் குறிப்பில் அமைத்துக் கொடுத்துள்ளது. இந்நூலைக் கற்கின்ற மாணாக்கர்களுக்கும், ஆய்வாளர்களுக்கும் மிகு நல் பயனை விளைவிக்கும் என்பதில் ஐயமில்லை. அதுபோல செய்யுள் முதற்குறிப்பு அகராதியும் எழுதிச் சேர்க்கப்பட்டுள்ளது பயன்தருவனவாக இருக்கின்றது. இறுதியாக இந்நூலை எடுத்தாண்ட உரையாசிரியர்கள் இருபத்தாறு பெயரினையும் பட்டியலிட்டுள்ளது வெகு சிறப்பு வாய்ந்ததாக அமைந்துள்ளது.

அவர்கள் அடியார்க்கு நல்லார், அரும்பதவுரையாசிரியர், இளம்பூரணர், கல்லாடர், காளிங்கர், குணசாகரர், சரங்கர நமச்சிவாயப் புலவர், சாமிநாத தேசிகர், சிவஞான முனிவர், குருகூர் சுப்ரமணிய தீக்ஷிதர், சேனாவரையர், சொக்கப்ப நாவலர், தண்டி அலங்கார உரை ஆசிரியர், நச்சினார்க்கினியர், பரிப்பெருமாள், பரிமேலழகர், பெருங்கதை உரை ஆசிரியர், பெருந்தேவனார், பேராசிரியர், மணக்குடவர், மயிலைநாதர், மயிலேறும் பெருமாள் பிள்ளை, மாறனலங்கார உரை ஆசிரியர், முத்துவீரியம் உரையாசிரியர், யாப்பெருங்கல விருத்தி உரை ஆசிரியர், வைத்தினாத தேசிகர் (இலக்கண விளக்கம்) போன்றவர்களாவர்.

சரசுவதி மகால் நூலக எழுத்தாளர் ஸ்ரீ ராஜகோபாலன், முத்துரத்திரன முதலியாருடன் இணைந்து இந்நூலின் மூலத்தையும் உரைகளையும் சுவடிகளிலிருந்து பிழையின்றி எழுதுவதிலும், மேற்கோள் ஒப்புமை முதலியவைகளுக்கு வேண்டிய இடங்களைத் தேடிச் சேர்ப்பதிலும், விசேடக்குறிப்புகள், அகராதி போன்றவற்றை தயார் செய்தல் போன்ற பணிகளிலும் பெரிதும் உதவிபுரிந்துள்ளார். ஒரு சிறந்த பதிப்பு எவ்வாறு அமைய வேண்டும் என்பதற்கு சரசுவதி மகால் நூலகத்தின் ஐம்பத்தொன்பதாவது வெளியீடாக கௌரவச் செயலாளர் திரு. எஸ். கோபாலன் அவர்கள் ஆங்கிலத்தில் முன்னுரை வழங்க 1953ஆம் ஆண்டு வெளிவந்த நாலடியார் உரைவளம் எனும் இந்நூலே சிறந்த சான்றாகும்.

# கோ. வடிவேலு செட்டியாரின் வாழ்க்கை வரலாறும் பதிப்பு பணியும்

**முனைவர் இரா.சு. முருகன்**
உதவிப்பேராசிரியர்
மொழிப்பெயர்ப்புத்துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

இவரது காலம் 1863-1935 வரை ஆகும். இவர் சென்னையில் கோமளேசுவரன் பேட்டையில் பிறந்தவர். தந்தை சுப்பிராய செட்டியார். தாயார் தனக்கோட்டி அம்மையார் இவர் பேரிசெட்டி வகுப்பினர். தொடக்கப் பள்ளியில் கற்று வணிகத் தொழிலில் தமது 26 ஆம் வயதுவரை ஈடுபட்டிருந்தார். பின்னர் தமிழ் கற்க விரும்பி இராமநுச நாயகர் காஞ்சிபுரம் இராமசாமி நாயுடு, மயிலை சண்முகம் பிள்ளை, ஆகியோர்களிடம் தமிழ்.இலக்கிய இலக்கணங்களைக் கற்றுத் தேர்ந்தார். வேதாந்திரத்திலும் தருக்கத்திலும் சிறந்து விளங்கிய சாதுசை இரத்தின செட்டியாரிடம் வேதாந்த நூல்களை நன்கு பாடங்கேட்டறிந்தார். சென்னை இந்து தியாலாஜிகள் உயர்நிலைப் பள்ளியில் 1896-ஆம் ஆண்டு முதல் தமிழாசிரியராகவும் 37 ஆண்டுகள் வரை தொண்டு புரிந்தார். சென்னையில் பல இடங்களில் வேதாந்த சங்கங்களை அமைத்து வேதாந்த பாடங்களை நடத்தினார். இவரிடம் வேதாந்த பாடங்களையும் தமிழ் இலக்கண இலக்கியங்களையும் கேட்டுச் சிறந்தவர்களில் பன் மொழிப் புலவர் தெ.பொ. மீனாட்சிசுந்தரனாரும் டாக்டர் துரை அரங்கனாரும் குறிப்பிடத்தக்கவராவர்.

இவர் சச்சிதானந்த அச்சக உரிமையாளராகவும் இருந்தார். வடிவேலு செட்டியார் 1911 முதல் 1922 வரை லோகோபகாரி சக்கரவர்த்தினி என்னும் இரண்டு இதழ்களின் ஆசிரியராக இருந்து 5 ஆண்டுகள் வரையும் நடத்தியவர். அவைகளின் உரிமையாளராகவும் இருந்தவர். இவர் உரையாசிரியராய் பதிப்பாசிரியராய், வடமொழி

தென்மொழி நூல்களின் பரிசோதகராசிரியராய், நூலாசிரியராய் விளங்கியவர். இவர் திருக்குறள் பரிமேழகர் உரைக்கு விளக்கவுரை எழுதி 1919 - ல் வெளியிட்டுள்ளார். வேதாந்த சூடாமணி முதலிய வேதாந்த நூல்களை உரையடையாக எழுதி வெளியிட்டார். வியாசபோதினி I & II புனிதவதி நாடகம், குசேலோபாக்கியான வசனம், பகவத் கீதை வசனம் சித்தாந்த பிந்து மொழிபெயர்ப்பு மகாராசா துறவு முதலிய பல நூல்களை எழுதி வெளியிட்டுள்ளார்.

நாநாஜீவவாதக் கட்டளைக்குக் குறிப்புரை எழுதிப் பதிப்பித்தார். சிவபிரகாசப் பெருந்திரட்டு என்னும் நூலுக்கு உரை எழுதினார். இவர் வெளியிட்டுள்ள திருக்குறள் பரிமேலழகர் உரைக்கு விளக்கவுரை ஆங்கில மொழிப் பெயர்ப்புடன் மீண்டும் அண்மையில் மதுரைப் பல்கலைக்கழகத்தால் வெளியிடப்பட்டுள்ளது. இவரைப் பற்றித் தமிழ்க் கலைக்களஞ்சியத்தில் குறிப்பிடப் பட்டுள்ளதாவது, இவர் தம் வாழ்நாள்களைத் தமிழ்ப் பணிக்கே பெரிதும் பயன்படுத்தினார். சான்றாண்மையும் நட்பும் எளிமையும் இவர் பண்புகள். தருக்கமிடுவதிற் சிறந்தவர். சென்னை சிந்தாதிரிப்பேட்டையில் இவர் அமைத்த வேதாந்த சங்கம் இன்றும் சிறப்புற நடந்து வருகிறது என்று படத்துடன் சிறப்பித்துக் கூறப்பட்டுள்ளது.

இவரது மார்பளவு உருவச்சிலையைத் த.ஆ கனக சபாபதி முதலியார், அழகாய்ச் சமைத்துள்ளார். அது சென்னை வேதாந்த சங்கத்தில் வைக்கப்பட்டிருந்தது. கோ. வடிவேலு செட்டியாரவர்களால் உரை இயற்றப்பட்டுச் சோதிக்கப்பட்ட சிறந்த நூல்கள்: வேதாந்த பரிபாஷை - இது சமஸ்கிருத மொழிபெயர்ப்பு இதுவரைக்கும் தமிழில் வெளிவராதது, நவநீதசாரம் - ஒரு பெண்ணரசியின் பிரஹ்ம ஞானோபதேசம்.

திருக்குறள் - விரிவான உரையுடன் திருக்குறள் மூலமும் மணக்குடவர் உரைமுற்றும். கைவல்ய நவநீதம் மூலமும் மூலத்துக்கியைந்த வசன வினாவிடையும், விரிவுரை மேற்கோளுடன். ஸ்ரீ பகவத்கீதை - மூலத்துக்கியைந்த வசனமும் விருத்தியுரையும்

மேற்கோளுடன் நாநாஜீவ வாதக் கட்டளை - குறிப்புரையுடன் தர்க்க பரிபாஷை - விரிந்த வியாக்யானத்துடன் கந்தர் அநுபூதி மூலம் விரிவான உரையுடன் உபநிடதம் 32 ஆம் விரிவுரை, சாஸ்திர மேற்கோளுடன் கந்தர் கலிவெண்பா மூலமும் விரிவுரையுமுடன் மெய்ஞ்ஞான போதம் (1928)-52 வேதாந்தச் சொற்பொழிவு வியாச போதினி & II பரமார்த்த போத வசனம் தர்மவாசகம் என்னும் அறிவுரை (1927) சச்சிதானந்த சிவம்தானே சிவப்பிரகாசப் பெருந்திரட்டு குறுந்திரட்டு, விவேகசூடாமணி,- அரும்பதக் குறிப்புடன் சிவஞானபோத மூலமும் தெளிபொருள் விளக்கவுரையும் 1929-ல் வெளிவந்துள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

# சுவாமிநாத பண்டிதரின் வரலாறும் பதிப்புப்பணியும்

**சீ. ராணி**
பகுதிநேர முனைவர் பட்ட ஆய்வாளர்
ஓலைச்சுவடித் துறை

இவர் யாழ்ப்பாணத்து வண்ணார்பண்ணையைச் சார்ந்த கந்தர்மடம் எனும் ஊரில் வேளாளர் குலத்தில் சின்னத்தம்பி என்பாருக்கு மகனாகப் பிறந்தார். பொன்னம்பலப் பிள்ளையின் மாணவர். இவர் தேவாரம், சிவஞானமாபாடியம், திருக்கோவையாருண்மை ஆகிய நூல்களைப் பதிப்பித்துள்ளார். சைவ சமயப் பற்றுடையவர். இவர் பதினைந்து ஆண்டுகள் உழைத்து ஏறத்தாழ 30 ஏட்டுப் பிரதிகளை ஒப்புநோக்கி 3079 பாடவேறுபாடுகளைச் சுட்டித் தேவாரத்தை (தலமுறை) 1911 இல் பதிப்பித்துள்ளார். தேவாரத் திருமுறை - தலமுறை என்று தலைப்பிட்டுப் பதிப்பிக்கப்பட்டுள்ள இந்நூலின் முதற்பக்கத்தில்.

> **இது யாழ்ப்பாணத்து வண்ணைநகர்ச் சுவாமிநாத பண்டிதரால் பலதேசத்துப் பழைய பிரதிரூபங்களைக் கொண்டு பரிசோதித்து, தாம் புதிதாக எழுதிய பல விஷயங்களுடன் சென்னபட்டணம் சைவ வித்தியாநுபாலன யந்திரசாலையில் அச்சிற் பதிப்பிக்கப்பட்டது.**
>
> **சாதாரண வருடம் பங்குனி மீ** (Registered copyright) 1911

என்று காணப்படுகிறது.

திருநாரையூர்ப் பொல்லாப்பிள்ளையார் திருவுருவப்படம் முகவுரை, திருமுறைப் பெருமை, திருமுறை வரலாறு, திருமுறை கண்ட புராணம், திருப்பதிக்கோவை, திருப்பதிகக்கோவை தல அகராதி முதலியன, தேவாரத் திருவெழுகூற்றிருக்கை, மூவர் முதலிகள்

திருவுருவப்படம், தேவாரம், அதிகமாகக் காணப்பட்ட பதிகம், பாடபேதமும் அரும்பதப் பொருளும் (இவற்றை அவ்வப் பக்கத்தின் கீழே காண்க), சிவக்ஷேத்திர சிவநாமக் கலிவெண்பா திருப்பாட்டு முதற் குறிப்பகராதி, பரிசோதந பத்திரம் (பிழை திருத்தம்) என்ற தலைப்புகளில் தேவாரம் பதிப்பிக்கப்பட்டுள்ளது.

இப்பதிப்பில் காணப்படுவனவற்றைப் பின்வருமாறு வகைப்படுத்தலாம்:

1. இப்புத்தகம் காபிரைட் செய்யப்பட்டது. இதிலுள்ள விஷயங்களை யாரேனும் அச்சிடின் சட்டப்படி நட்டத்துக்காளாவார்கள். இங்ஙனம், சுவாமிநாத பண்டிதர்.

2. சுத்தபாடமாக்கிச் சைவ சமயிகள் யாவர்க்கும் எளிதிற் பயன்படும் பொருட்டு ஒருங்கேயச்சிற் பதிப்பித்து வெளிப்படுத்தல் வேண்டுமென்று பதிப்பிக்கப்பட்டது.

3. காலந்தோறும் பாணவாய்ப்பட்டுஞ் சிதல்வாய்ப் பட்டுஞ் சொரூபங்குன்றிப் பாழாதலைக் கண்டுங் கண்டும், பலர்க்கும் பயன்பட்டுத் தமக்கும் பயன்படுமாறு பரிசோதகர்களுக்குக் கொடாது வைத்திருந்தனர்.

4. திருமுறைகள் சம்பாதிக்கத் தொடங்கின கால முதல் இதுவரை ஏறக்குறையப் பதினைந்து வருடங்களாயின.

5. முன்னரச்சிடப்பட்ட புத்தகங்களின் எழுத்துப் பிறழ்ச்சி, அசைக் குறைவு, அடிமாற்றம் முதலியனவாக ஏறக்குறைய ஆயிரத்தைஞ்நூறு பிழைகள் காணப்பட்டன. அவைகள் பழைய பிரதிரூபங்களின்படி இப்புத்தகத்திற்றிருத்தப்பட்டன. ஆயிரத்துக்கு மேற்பட்ட

பாடபேதங்களும், ஆங்காங்கு விளங்க வேண்டிய அரும்பதப் பொருள்களும், திருமுறைப் பெருமை திருப்பாட்டகராதி முதலியனவும் சேர்க்கப்பட்டன. அப்புத்தகங்களோடு இதனை முற்றும் ஒத்துப் பார்த்தால் இன்ன இன்ன பிழைகள் திருத்தப்பட்டனவென்பது யாவர்க்குமினிது விளங்கும்.

6. அடிக்குறிப்பில் இடம்பெறுவன வருமாறு : 1. ஈதோ பிறவி என்றும் பாடம், 2. இத்திருப்பதிகத்தில் ஒன்பதாஞ் செய்யுள் இறந்துபோயிற்று, 3. இத்திருப்பதிகத்தில் ஏனைச் செய்யுள்கள் இறந்தன. 4. இச்செய்யுளில் பின் மூன்றடிகளும் மறைந்து போயின, 5. இத்திருப்பாட்டு சில ஏட்டுப்பிரதிகளில் பண்ணொன்ற என்னும் திருப்பாட்டிற்குப் பின்னே காணப்படுகின்றது.

7. இத்திருப்பதிகத்தில் மூன்றாந்திருப்பாட்டு நான்காந் திருப்பாட்டாகவும் நான்காவது மூன்றாவதாகவும் சில பிரதிகளில் காணப்படுகின்றன.

8. "விண்ணுளார்" என்னும் பாட்டு இரண்டு ஏடுகளில் இல்லை. 9. பாட்டுக்களே உள்ளன. 9ம் பாட்டில் 9–10 என்றது ஓரேடு. மற்றை ஏடு 9 என்றே நின்றது. நின்று, அடுத்த "பண்ணினேர்" என்னும் பதிகத்தில் இந்த "விண்ணுளார்" என்பதை 10–ம் பாட்டாகக் காட்டி, "அரக்கனை" என்பதை 22–ம் பாட்டாகக் காட்டியது.

9. பக்க எண்கள், பாடல் எண்கள், படிவ எண்கள், பதிக எண்கள் ஆகிய அனைத்தும் தமிழ் எண்களில் உள்ளன.

சில இடங்களில் விளக்கக் குறிப்பையும் பதிப்பாசிரியர் எழுதியுள்ளார். சான்றுக்கு ஒருசில வருமாறு:

1. திருச்சத்திமுற்றம் : சத்தி சிவத்துக்கு முத்தமிட்ட படியால் சத்திமுத்தம் என்பது இத்திருப்பதிகத்துக்குக் காரணப்பெயர் என்பர். சத்தி சிவத்துக்கு முத்தமிட்டபடி அமைந்த திருவுருவம் இத்திருப்பதியில் இன்றும் இருக்கின்றது. சத்திமுற்றம் என்று ஏடுகளில் இருந்தபடியே பதிப்பிக்கப்பட்டது (ப. 419).

2. அட்டபுட்பங்களை : அவை புன்னைப்பூ, வெள்ளெருக்கம்பூ, செண்பகப்பூ, நந்தியா வர்த்தப்பூ, நீலோற்பலப்பூ, பாதிரிப்பூ, அலரிப்பூ, செந்தாமரைப்பூ என்பன. இவை புறப்பூசையாகிய கிரியா பூசைக்குரியன, அகப்பூசையாகிய ஞான பூசைக்கு ஐம்பொறியடக்கன் முதலிய வட்ட புட்பங் கொள்ளப்படும் (ப.990).

3. வினைப்பிறப்பு – வினையாலாகிய பிறப்பு; வினை பிறப்பு – வினையும் பிறப்பும். சிவபெருமான் ஆன்மாக்களுக்குத் தனுகரணபுவன போகங்களை முதற்காரணமாகிய மாயையினின்றுந் தோற்றுவித்துக் கொடுத்து வினைப்பயனை நுகர்வித்துத் தொலைப்பித்து முத்தி கொடுத்தலான் "பெருவினை பிறப்பு வீடாய் நின்றவெம்பெருமான்" என்றார். பிறப்பெனவே உயிருக்கு நிலைக்களமாகிய தநுவும், அதற்கு ஆதாரமாகிய புவனமும் அவ்வுயிர் நுகர்தற்குரிய போகமும் பெறப்பட்டன. இவைகள் மாயேயமாகிய பந்தம். இக்கருத்துப் பற்றியே பந்தமும் வீடும் படைப்போன் காண்க என்றருவிச் செய்தார் (ப.1028).

இவ்வாறாக இவரின் பதிப்பின் சிறப்பை அறியமுடிகிறது.

# வேதநாயகம் பிள்ளையின் வாழ்வும் பணியும்

**ச.ராஜேஸ்வரி**
முனைவர் பட்ட ஆய்வாளர்
ஓலைச்சுவடித் துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

மாயூரம் வேதநாயகம் பிள்ளை திருச்சி குளத்தூரில் சவுரி முத்துப்பிள்ளைக்கும் ஆரோக்கிய மரியம்மைக்கும் மகனாய்ப் பிறந்தவர். தமிழும் ஆங்கிலமும் நன்கு அறிந்தவர். மீனாட்சிசுந்தரம் பிள்ளையிடம் பாடங்கேட்டவர். இவர் எளிதாகப் பாடல் இயற்றும் திறன் பெற்றவர். முன்சீப்பாகப் பணியாற்றியவர். இவர் காலத்தில் பெரும்பஞ்சம் ஏற்பட்டபோது கஞ்சித் தொட்டி வைத்து ஏழைமக்களைக் காப்பாற்றியவர். இவர் மழையை வேண்டிப் பாடியுள்ள பாட்டுகள் சுவையாகவும் சமத்காரமாகவும் அமைக்கப்பட்டுள்ளன. இவர் கத்தோலிக்ககிறிஸ்தவ சமயத்தைச் சார்ந்தவராக இருந்தார் பிற சமயத்தினருடன் சமரச மனப்பான்மையுடன் ஒழுகிவந்தார். ஆங்கிலம் அறிந்தும் இவர் காலத்திலேயே தமிழிலேயே ஆட்சி செய்ய முடியும் என்பதைக் கதைவாயிலாக எழுதியும் நடைமுறையில் சொல்லியும் செய்தும் காட்டியவர் ஆவர்.

**கல்வி**

வேதநாயகம் பிள்ளை தம் பத்தாம் வயதுவரை தாம் பிறந்த குளத்தூரில் இருந்த திண்ணைப் பள்ளிக் கூடத்தில் தமிழ் கற்றுக்கொண்டார். ஆங்கிலமொழி செல்வாக்குப் பெற்று வருவதை உணர்ந்த வேதநாயகம் பிள்ளை அம் மொழியையும் கற்க விரும்பி திருச்சிராப்பள்ளி நீதிமன்றத்தில் மொழிபெயர்ப்பாளராகப் பணியாற்றிக் கொண்டிருந்த தியாகப் பிள்ளையிடம் ஆங்கிலம் கற்றார். தம் பதினோராம் ஆண்டில் ஆங்கிலம் படிக்கத் தொடங்கிய வேதநாயகம் பிள்ளை தம் இருபதாம் ஆண்டுக்குள் ஆங்கிலத்திலும் தமிழிலும் புலமைபெற்றார்.

தமிழில் பாடல்கள் புனையும் அளவுக்கு அவருடைய புலமை முதிர்ச்சி பெற்றது.

**பணி**

தியாகப் பிள்ளையிடம் ஆங்கிலமும் தமிழும் கற்றுப் புலமைப் பெற்ற வேதநாயகம் பிள்ளை, தம் இருபத்திரண்டாம் வயதில் 1848-ஆம்ஆண்டில் திருச்சிராப்பள்ளி நீதிமன்றத்தில் ஆவணக் காப்பாளராக நியமனம் பெற்றார். 1850-ஆம் ஆண்டில் திருச்சிராப்பள்ளி மாவட்ட நீதிமன்றத்திற்கு மொழிபெயர்ப்பாளர் ஒருவரை நியமிக்க வேண்டியிருந்தது. அப்பணிக்குப் பலர் விண்ணப்பம் அனுப்பியிருந்தனர். அந்நீதிமன்றத்தில் ஆவணக்காப்பாளராகப் பணியாற்றிக் கொண்டிருந்த வேதநாயகம் பிள்ளையும் அப்பணிக்கு விண்ணப்பம் அனுப்பினார். வேதநாயகம் பிள்ளையே மொழிப்பெயர்ப்பாளர் பதவிக்குத் தகுதியானவர் என, பாயிலோ என்னும் ஆங்கில நீதிபதி முடிவு செய்தார். வேதநாயகம் பிள்ளை தம் இருபத்து நான்காம் ஆண்டில் அவர் இப்பணியில் அமர்ந்தார்.

ஆவணக் காப்பாளராகவும் மொழிப்பெயர்பாளராகபும் ஏறத்தாழ ஒன்பதாண்டுகள் திறமையாகப் பணியாற்றிய பிறகு, 1857 - ஆம் ஆண்டில் வேதநாயகம் பிள்ளைக்கு உரிமையியல் நீதி மன்ற நீதிபதி பதவி கிடைத்தது. தம் முப்பத்தொன்றாம் வயதில் அவர் இப்பதவியினைப் பெற்றார். அதுவரை நீதிபதி பதவிக்கு இந்தியர் எவருமே நியமிக்கப்படவில்லை. முதல் சுதந்திரப் போர் என வருணிக்கப்படும் சிப்பாய்க்கலகம் நடைபெற்ற 1857-ஆம் ஆண்டில் வேதநாயகம் பிள்ளை பதவி பெற்றார். தமிழகத்தில் முதல் இந்திய நீதிபதி என்னும் பெருமை வேதநாயகருக்குக் கிடைத்தது. வேதநாயகம் பிள்ளை தம் முப்பதொன்றாம் வயதில் தரங்கம்பாடியில் மாவட்ட உரிமையியல் நீதி மன்ற நீதிபதியாகப் பதவியேற்றார். தரங்கம்பாடியில் ஓராண்டுகாலம் பணிபுரிந்தார். 1858 - ஆம் ஆண்டில் அவர் சீர்காழிக்கு மாற்றப் பெற்றார் இங்கு தான் வேதநாயகருடைய இலக்கியப்பணி தொடங்கியது. அவருடைய முதல் இலக்கியமான நீதிநூல் சீர்காழியிலிருந்து வெளியிடப்பட்டது.

இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு 1860 - ஆம் ஆண்டு மயிலாடுதுறைக்கு மாற்றப்பட்டார். மாயூரம் முன்சீப் வேதநாயகம் பிள்ளை என்ற இவருடைய வரலாற்றோடு இரண்டறக் கலந்துவிட்ட மயிலாடுதுறையில் தான் வேதநாயகரின் நீதிப்பணியும் சமூகப்பணியும் ஒளிவீசின. மாவட்ட உரிமையியல் நீதிமன்றப் பதவியிலிருந்து ஓய்வுப் பெற்றுக்கொண்ட பின்னரும் அவர் மயிலாடுதுறையிலேயே தம் இருப்பிடமாகக் கொண்டு தம் இறுதிகாலம் வரை வாழ்ந்தார். சீர்காழியில் வாழ்ந்த போது தாம் பாடி வெளியிட்ட நீதி நூலில் கூறப்பட்ட உயர்ந்த கொள்கைகளைத் தம் அலுவல் வாழ்க்கையிலும் தனி வாழ்க்கையிலும் கடைபிடித்தார் தம்மிடம் உதவி கேட்டு வந்தவர்களுக்கெல்லாம் முடிந்த வகையில் கைம்மாறு கருதாமல் உதவினார். இதனால் அவருடைய புகழ் நாளுக்கு நாள் வளர்ந்தது.

## குடும்ப வாழ்க்கை

நீதி மன்றப் பணிகளில் வேதநாயகருடைய வாழ்க்கை ஒரு சோதனைக் களமாக இருந்தது போல, அவருடைய குடும்ப வாழ்க்கையும் சோதனைகள் நிறைந்ததாக இருந்தது. இல்லற வாழ்வில் அவர் மணந்து கொண்ட பெண்கள் அடுத்தடுத்துக் காலமாகிக் கொண்டிருந்ததால், அவர் ஐந்து பெண்களை மணக்க நேரிட்டது. மூன்றாவது மனைவி மாணிக்கத்தம்மாளுக்கு மட்டுமே ஓர் ஆணும் இரண்டு பெண்களும் பிறந்தனர். அவர்களின் வம்சத்தினர் வேதநாயகம் பிள்ளையின் மரபினராகப் பல இடங்களில் இன்று வாழ்ந்து வருகின்றனர்.

## தொண்டு வாழ்வு

வேதநாயகர் நீதிபதி பதவியிலிருந்து ஓய்வு பெற்று மயிலாடுதுறையில் வாழ்ந்துகொண்டிருந்த காலத்தில் கொடிய பஞ்சம் ஒன்று வந்தது. இதனைத் தாது - ஈசுவர வருடப் பஞ்சம் என்று வரலாறு குறித்துள்ளது. 1876-78 ஆண்டுகளில் ஏற்பட்ட இம்மாபெரும் பஞ்சத்தில் காரணமாக மக்கள் பட்டினியால் வாடினர். பட்டினிச் சாவுகள் ஏற்பட்டன. உண்ண உணவின்றி இலை, தழைகளைத் தின்று மக்கள் பசியைப் போக்க முயன்றனர். அதனால் அவர்கள் நோய்நொடிகளுக்கு இலக்காகி மடிந்தனர். மென்மையான உள்ளம் கொண்ட வேதநாயகம் பிள்ளை

மக்கள் படும் துன்பங்களைக் கண்டு பதறினார். மக்களின் பட்டினியைப் போக்க பம்பரம் போல் சுழன்று பணியாற்றினார். பஞ்சத்தால் வாடும் மக்களுக்குக் கருணை காட்டுமாறு செல்வர்களுக்கு வேண்டுகோள் விடுத்தார்.

தம் சொந்தச் செலவில் மயிலாடுதுறையில் கஞ்சித் தொட்டியைத் தொடங்கினார்.பசித்து வந்த மக்களுக்கெல்லாம் அன்னம் பாலித்தார். பசிப்பிணி மருத்தவனாகப் பணியாற்றினார். வேதநாயகம் பிள்ளையிடம் அன்பு கொண்டிருந்த கோபால கிருஷ்ண பாரதியாரின் தூய உள்ள, வேதநாயகம் பிள்ளை பஞ்ச காலத்தில் செய்த அறச் செயல்களால் "நீயே புருஷ மேரு" என்னும் கீர்த்தனைப் பாடியுள்ளார்.

ஓய்வு பெற்று மயிலாடுதுறையில் நிலையாகத் தங்கிய போது 1873 ஆம் ஆண்டில் வேதநாயகம் பிள்ளை மயிலாடுதுறை நகராட்சிக்கு நியமனத் தந்தையாகத் தேர்ந்தெடுக்கப் பெற்றார். அப்போது நகருக்குத் தேவையான குடிநீர், குடியிருப்பு, பூங்கா போன்ற வசதிகளைப் பெருக்கினார். இவருடைய நகரமன்றப் பணிகளில் மிகவும் குறிப்பிடத் தக்கது பெண்களுக்குக் கல்வி கற்பிக்கப் பள்ளிகூடம் ஒன்றைத் தொடங்கிதாகும். பெண்கல்வி பற்றி நூல்களில் வலியுறுத்திய வேதநாயகருக்கு அதனைச் செயல்படுத்திக்காட்டவும் வாய்ப்புக் கிடைத்தது. மயிலாடுதுறையில் பட்ட மங்கலத் தெருவில் பழைய காவிரியின் மதிலிக்கு எதிர்புறம் உள்ள இடத்தில் இப்பெண்கள் பள்ளி துவங்கப்பட்டது. தமிழ் நாட்டில் பெண்களுக்காகத் தனியாக அமைக்கப்பட்ட முதல் பள்ளிக்கூடம் இதுவே என்று கூறப்படுகிறது.

இன்றைய தலைமுறையினர்க்கு முதல் தமிழ் நாவல் ஆசிரியர் என்னும் அளவில் தமிழ் மக்களிடையில் வேதநாயகம் பிள்ளை நன்கு அறிமுகமாகியுள்ளார். ஆனால் அவருடைய இலக்கியப் பணி உரைநடை, இலக்கியம், கவிதை இலக்கியம், சமய இலக்கியம், இசை இலக்கியம், மொழிபெயர்ப்பு எனப் பல்வேறு வகைகளில் அவருடைய பணிகள் காணப்படுகிறது.

## உரைநடை இலக்கியங்கள்

உரைநடை இலக்கியங்களாக வேதநாயகம் பிள்ளை நான்கு நூல்களைப் படைத்துள்ளார். அவற்றுள் பெண் கல்வி, அவருடைய கவிதை நூலான பெண்மதி மாலையுடன் சேர்த்து 1869-ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டது. இரண்டாம் பதிப்பில் பெண் கல்வி என்ற உரைநடை நூலை மேலும் விரிவாக்கினார். அத்துடன் பெண்மானம் என்னும் உரைநடை நூலையும் சேர்த்து மூன்றையும் ஒரே தொகுதியாக பெண்மதிமாலை என்னும் பெயரில் 1870-ல் வேதநாயகம் பிள்ளை வெளியிட்டிருக்கின்றார். வேதநாயகம் பிள்ளைக்குத் தமிழில் நிலையான புகழைத் தேடித் தந்த பிரதாப முதலியார் சரித்திரம் அவருடைய உரைநடை இலக்கியங்களில் முதல் இடத்தைப் பெறுகின்றது. 1878 - ஆம் ஆண்டில் பிரதாப முதலியார் சரித்திரம் தமிழ் மொழியில் முதல் நாவலாக வெளியாயிற்று. நாவலில் இடம்பெறும் தலைமைப் பாத்திரங்கள் தஞ்சாவூர் மாவட்ட சைவ வேளாளர் மரபினைச் சேர்ந்தவர்கள். உயர்ந்த மரபினைப் பற்றி இந்நாவல் அமைந்தாலும். சமூகத்தின் எல்லாத் தரப்பு மக்களும் படித்து இன்புறும் வகையில் நாவல் சுவையாகப் படைக்கப்பட்டுள்ளது. முதல் நாவலுக்கு பிள்ளைக்கு மேலும் உற்சாகத்தைக் கொடுத்தன. அவர் 1887- ஆம் ஆண்டு சுகுணசுந்தரி என்னும் இரண்டாவது நாவலை வெளியிட்டார்.

## கவிதை இலக்கியங்கள்

கவிதை இலக்கியங்களாக வேதநாயகம் பிள்ளை படைத்தனவற்றுள் முதல் இடத்தை நீதிநூல் பெறுகின்றது. இந்நூல் பழமையான தமிழ் மரபுகளை நினைவூட்டுகின்றன. 1858 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டது. இவருடைய மற்றொரு கவிதை இலக்கியமான பெண்மதி மாலை சந்தச் செய்யுள்களும் கீர்த்தனைகளும் அடங்கிய சிறு நூலாகும். இதனைச் சற்று விரிவுபடுத்தி அத்துடன் பெண்கல்வி என்ற சிறு உரைநடை நூலையும் சேர்த்து 1870 - ஆம் ஆண்டு வெளியிட்டார். பெண்மதி மாலையில் பெண்கள் முன்னேற்றம் பற்றியும், அறுபது எழுபது ஆண்டுகளுக்கு சக்தியாக விளங்கின.

### சமய இலக்கியம்

தமிழ்ப் பண்பாட்டின் அடிப்படையில் தமிழ் மொழியில் கிறித்து பெருமானையும் தேவமாதாவையும் வழிபட முடியும் என்று அவர் மக்களுக்கு விளங்கினார். அதன் விளைவாக தேவமாதா அந்தாதி, திருவருள் அந்தாதி, திருவருள் மாலை என்னும் நூல்களை 1873-ல் வெளியிட்டார். 1889 - ஆம் ஆண்டு தேவ தோத்திர மாலை, பெரியநாயகி அம்மை பதிகம். என்னும் நூலையும் வெளியிட்டுள்ளார். இவை அனைத்தும் கிறித்தவ சமயம் தொடர்பான கவிதை நூல்கள்.

### இசை இலக்கியம்

சமயங்களுக்குள் வேறுபாடுகள் இல்லை என்பதைத் தெளிவாக உணர்ந்திருந்த வேதநாயகர் மக்கள் அனைவரும் ஒருசேர இறைவனைப் பாடி மகிழ்வதற்காகப் பல கீர்த்தனைகளை அவ்வப்போது எழுதினார். அவை 1878-இல் சர்வசமய சமரசக் கீர்த்தனைகள் என்றும் பெயரில் வெளியிட்டார். தமிழ்நாட்டுக் கிறித்தவர்கள் தம் தாய்மொழியில் தங்கள் இறைவனைப் பாடி மகிழும் சத்திய வேதக் கீர்த்தனைகள் என்னும் நூலை 1889-ஆம் ஆண்டில் வெளியிட்டார். பிற்காலத்தில் தமிழிசை இயக்கம் தோன்றி வளர்ச்சி பெற்றபோது, வேதநாயகம் பிள்ளையின் கீர்த்தனைகள் அவ்வியக்கத்தின் வளர்ச்சிக்கும் பயன்பட்டன.

### மொழிபெயர்ப்பு

ஆங்கிலக் கல்வி பெருமளவில் பரவாத அந்தக் காலத்தில் வேதநாயகர் வழக்கறிஞர்களுக்கும் பொதுமக்களுக்கும் பயன்படும் முறையில் ஆங்கிலத்தில் இருந்த நீதி, நிர்வாகம் தொடர்பான சட்டங்களைத் தமிழில் மொழிபெயர்த்து, சித்தாந்த சங்கிரகம் என்னும் பெயரில் 1862-இல் வெளியிட்டார். நீதி மன்றங்களில் தமிழே ஆட்சி மொழியாக இருக்கவேண்டும் என்று விரும்பிய வேதநாயகம் பிள்ளை, 1850-61 ஆம் ஆண்டுகளில் அளிக்கப்பட்ட நீதிமன்றத் தீர்ப்புகளை தமிழில் மொழிபெயர்த்து 1863 - ஆம் ஆண்டில் வெளியிட்டார். இவ்வாறாக வேதநாயகப்பிள்ளையின் படைப்புகள் காணப்படுகின்றன.

**நிறைவாக**

தமிழ் நாவல் இலக்கியத்திற்கு அவர் தந்தை என்று கருதப்படுவதைப் போன்று, சட்டத் தமிழ்த் தந்தையாகவும் வேதநாயகரை மதிப்பிட இயலும். வேதநாயகம்பிள்ளை கத்தோலிக்க கிறித்தவராயினும் தம் நாவல்களுக்கு இந்து சமூக வாழ்க்கையைக் கருப்பொருளாக எடுத்துக்கொண்டார். இந்து சமூகத்தின் சாதி வேற்றுமைகள், மூடநம்பிக்கைகள், குழந்தை மணம், பெண்ணடிமை போன்றவைகளால் சீர்குலைந்து கொண்டுவந்தது. தம்முடைய கீர்த்தனைகள், நாவல் வழியாக புதுச்சிந்தனைகளை அவர் மக்களிடம் பரப்பினார். அவருடைய எழுத்துக்கள் தமிழ்ச் சமுதாயச் சீர்திருத்தத்தின் முன்னோடியாகவே விளங்கின.

# கதைப்பாடல் பதிப்பாசிரியர் த.நடராஜனின் வரலாறும் பதிப்புப் பணியும்

**திருமதி முனைவர் க.ரெஜினா**
கௌரவ விரிவுரையாளர்,
வரலாற்றுத் துறை,
அரசினர் மகளிர் கல்லூரி,
கும்பகோணம்.

தமிழ் உலகிற்கு அருள்தொண்டாற்றிய ஆராய்ச்சி அறிஞர்கள் பலர் உள்ளனர். இவர்களுள் சிலரின் தமிழ்ப்பணி பற்றிய பல நூல்கள் வெளிவந்துள்ளன. இன்னும் பலர் செய்து கொண்டிக்கின்ற தமிழ்ப் பணி வெளி உலகிற்கு அறியப்படாமல் உள்ளன. இவர்களுள் ஒருவர் தி. நடராஜன் இவர் மதுரை காமராசர் பல்கலைக்கழகத் தமிழியல் புல சுவடியியல் துறையில் இலக்கணம் பேராசிரியராகப் பணியாற்றியவர். இவர் வாய்மொழியாக வழங்கி வருகின்ற நாட்டுப்புறக்கதைப் பாடல் ஓலைச் சுவடியினைத் நாட்டுப்புறக்கதைப் பாடல் ஓலைச்சுவடியினைத் திரட்டும் முயற்சியில் ஈடுபாடு கொண்டு அவற்றைப் பதிப்பித்தும் வந்தவர். இவருக்கு இலக்கணம் மொழியியல் இலக்கியம் மற்றும் பிற துறைகளிலும் புலமை உண்டு ஆங்கில மொழியையும் நன்கு அறிந்தவர். இவருடைய இலக்கண இலக்கிய மற்றும் பணியினைப் கூறும் வகையில் இக்கட்டுரை அமைகிறது.

### கல்வியும் கல்விப்பணியும்.

பேராசியர் தி.நடராசன் அவர்கள் நாகர் கோவிலுக்குப் பக்கத்தில் உள்ள கோட்டாறு அருகில் வைத்தியநாதபுரம் என்னும் சிற்றூரில் 3.4.1945 ஆம் ஆண்டில் பிறந்தார். திருமாலைப்பெருமாள் மற்றும் திருமதி வள்ளியில் இவர்தம் பெற்றோராவர் இவர் தொடக்கக் கல்வியைத் தம் வீட்டுக்கு பக்கத்தில் உள்ள அரசுப் பள்ளியில் பயின்றார். பின்னர் சேது லெட்சுமிபாய் மேனிலைப் பள்ளியில் பயின்றார். கல்லூரிப்படிப்பு அனைத்தும் நாகர் கோவிலில் உள்ள தென்திருவிதாங்கூர் இந்துக்

கல்லூரியில் பயின்றார். பின்பு மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் ஆய்வு மாணவர், பின்பு தமிழியற்புல இலக்கணத்துறையில் இசரயேல் அவர்களின் மேற்பார்வையின் (The language of Sangam Litrature and Tolkappiyam) கீழ் சங்க இலக்கிய மொழியும் தொல்காப்பிய ஒப்பீடும் (எழுத்து, சொல்) என்னும் தலைப்பில் ஆய்வினை மேற்கண்டார். இவர் சங்க இலக்கியத்தை முதல்முறையில் இலக்கணத்தோடு மொழியியல் பார்வையில் ஒப்பிட்டு ஆய்வு செய்தவர், ஆய்வேடு ஆங்கிலத்தில் அளிக்கப்பட்டது. பின்பு விரிவுரையாளராக 1973 ல் பணியாற்றினர். 1975ல் ஆய்வுபட்டம் பெற்றார். பின்னர் இணைபேராசிரியர் பணியாற்றி பின்னர் பேராசிரியராக ஆனார். இவருக்கு மரபு இலக்கணத்திலும் இக்கால மொழியியலிலும் சிறப்பான ஈடுபாடு உண்டு.

**இலக்கணப் பணி**

இவர் முதன்முதலில் எழுதிய இலக்கணநூல் சங்ககால எழுத்தியல் இந்நூலில் தம்முடைய ஆய்வேட்டின் ஆங்கிலத்தில் கூறப்பட்ட செய்திகளை மேலும் விரிவுபடுத்தி தமிழ்மொழியில் எழுதினார். இவர் இரண்டாவதாக எழுதியது இலக்கணக் கட்டுரை பயன்பாட்டுத் தமிழ இலக்கணம் இது சிங்கப்பூரில் உள்ள தமிழ் ஆசிரியர்களுக்காக நடைபெற்ற ஐந்து நாள் பயிலரங்கிற்காகத் தயார் செய்து நிகழ்த்திய விரிவுரையாகும். இவர் 40க்கும் மேற்பட்ட கட்டுரை எழுதினார். Group - I(I.A.S) போன்ற தேர்வுகளுக்கு பயன்படும் வகையில் கட்டுரைகளை எழுதியுள்ளார். தமிழ் வளர்ச்சிக் கழக உதவி இயக்குநர் பசும்பொன் அவர்கள் நடத்திய தமிழ் கற்றல், கற்பித்தல் என்னும் பயிலரங்கத்தில் ‘தமிழ் இலக்கணம் எப்படிக் கற்பிக்கப்பட வேண்டும்’ என்று விரிவுரை நிகழ்த்தியுள்ளார். கோயம்புத்தூரில் உள்ள கௌமார மடத்தில் தண்டபாணி சுவாமிகளின் அறுவகை இலக்கணத்தின் மெய்மயக்கத்தையும், தொல்காப்பிய மெய்மயக்கத்தையும் பற்றி ஒப்பீடு செய்யப்பட்டு அவற்றின் சிறப்பம்சத்தினை எடுத்து கூறினார். நன்னூல் பதவியலில் உள்ள இருநூற்பாக்களை தவறு என்று சுட்டிக்காட்டி நன்னூலாரை இடித்துரைக்கும் வண்ணம் ஆய்வுக்கட்டுரைகள் வரைந்துள்ளார். அவை அண்ணாமலைப் பல்கலைகழகத்தாரால் நடத்தப்பட்ட ‘இலக்கணக்

கருவூலங்கள்' எனும் தலைப்பில் வெளிவந்துள்ளன. தனக்கு தவறு என்று தெரிந்ததை எங்கு வேண்டுமானாலும் எந்த சூழ்நிலையிலும் தவறு என்று சுட்டிக்காட்டத் தயங்காதவர். தமிழ் இலக்கண ஆராயச்சி அறிஞர்களிடம் இவருக்கென்று தனி முத்திரை உண்டு.

### இலக்கியப் பணி

இலக்கண, மொழியியல் துறைகளில் ஈடுபாடு இருப்பது போல இலக்கியத்திலும் அதிக ஈடுபாடு கொண்டவர். தமிழ் மொழிக்கல்வியும் நாட்டுப்புறவியல் கல்வியும் இரு கண்கள் என்பது இவர் கோட்பாடாகம். தொல்பொருள் துறையில் ஈடுபாடு கொண்டு நீதிவாணன் என்பவருடன் சேர்ந்து மதுரைக்குப்பக்கத்தில் உள்ள கொந்தகை என்னும் ஊரில் முதுமக்கள் தாழியைப் பற்றிய கட்டுரை எழுதினார். இவை பல்கலைக்கழக இதழில் வெளிவந்தன. சடுகுடு, கபடி போன்ற விளையாட்டுக்கள் பற்றியும் கட்டுரை எழுதியுள்ளார். நாட்டுப்புறப்பாடல் தொகுப்பாக நாட்டுப்புறச் சிறுவர் பாடல்கள் என்னும் நூல் எழுதியுள்ளார். நாட்டுப்புறவியலின் ஆணாதிக்கம் என்னும் தலைப்பில் ஆய்வுரையும் இன்னும் பல இலக்கியப்படைப்புகளும் வெளிக்கொண்டு வந்துள்ளார்.

### பதிப்புப்பணி

வாய்மொழியாக வழங்கி வந்து நாட்டுப்புறக் கதைப்பாடல்கள் தென்மாவட்ட கோயில்கள் வில்லுப்பாட்டாகவும், உடுக்கையடிப்பாட்டாகவும் பாடப்பட்டு வந்தன. அவை வெறும் பாட்டாகவே இருந்துவிடக்கூடாது என்று எண்ணி அடுத்துவரும் சந்ததியினருக்கு பயன்பட வேண்டும் என்று கருதி ஓலைச்சுவடியினைத் திரட்டும் பணியில் பெரும் முயற்சிக்கொண்டு அவற்றை பதிப்பித்து வந்தார். இவர் பதிப்பித்தக் கதைப்பாடல்கள் 17 நூல்கள் வெளிவந்துள்ளன. 40க்கும் மேற்பட்ட கதைப்பாடல்கள் அச்சில் வெளிவராமல் உள்ளன. பதிப்பாசிரியரின் நூல்கள் நாட்டுப்புறக் கதைப்பாடல்கள் பதிப்பு நூல்களாக விளங்குகின்றன.

குருசாமி கதை, தம்பிமார்கதை, வன்னியடி மறவன்கதை, உடையார்கதை, கட்டப்பொம்மு கும்மிப்பாடல், ஞான சவுந்தரி

அம்மானை, கோவலன் கர்ணணகை கதை, உலகுடைய பெருமாள் கதை, பத்திரகாளியம்மன் கதை, கன்னடியன் போர், அயோத்தி கதை (இராமாயணம்), நாதரம்மன்கதை, ஓட்டக்கார சுவாமிகதை, இவை வெளிவந்த பதிப்புகளாகும். பொன்னர் சங்கர் கதை இன்னும் வெளிவரவில்லை. ஏட்டினைப் பெயர்த்தெழுதி நூலாக்கும் பொழுது எந்தவித மாற்றமும் பதிப்பாசிரியரால் செய்யப்படவில்லை. ஆனால் நூலுக்குள் காணப்படுகின்ற உட்தலைப்புகள் பதிப்பாசிரியரால் கொடுக்கப் பெற்றனவாகும். வாசகர்களின் வசதிக்காக அவை அமைக்கப்பட்டவையாகும். அயோத்திக்கதை என்ற பெயரில் இராமாயணக் கதைக் காவியத்தைப் படைத்துள்ளார். பேச்சுவழக்கு ஒரு காப்பியத்தை ஆக்கவும் பயன்படுத்தப்பட முடியும் என்பதை இந்நூல் தெளிவாக்குகிறது. கோவலன் கர்ண்ணகை கதை, தாதரம்மன் கதை இந்த இரண்டும் கல்லூரியில் பாடத் திட்டங்களாக வைக்கப்பட்டுள்ளது. வரலாற்றுக் கதைப்பாடல்களைப் பதிப்பிக்கும் போது வரலாற்று நிகழ்ச்சிகளில் சில மாறுபாடுகள் இருந்தால் அவற்றை வரலாற்றுத்துறைப் பேராசிரியர் சர்வேஸ்வரன் என்பவரிடம் எடுத்துக்கூறி உண்மைச் சம்பவம் எவை என்பதனை அறிந்து அந்நூலை இருவரும் சேர்ந்தே பதிப்பித்துள்ளனர். இருவரும் சேர்ந்த பதிப்புக்களாக வெளிவந்தவை தம்பிமார்கதை, கன்னடியன்போர் என்பனவாகும். ஓட்டக்கார சுவாமி கதையை தேரியப்பன் என்பவருடனும் பத்திரகாளி அம்மன் கதையை இரா.சோதிமணி என்பவருடனும் சேர்ந்து பதிப்பித்துள்ளார். இவருடைய பதிப்புக்கள் அனைத்தும் ஓலைச்சுவடிப் பதிப்புக்களாகும். ஓலைச் சுவடியிலிருந்து ஏடு பெயர்த்தெழுதும்போது மூலப்பாடத்தைச் சிதைக்காமல் அப்படியே கொடுத்துள்ள இவர் பாராட்டுக்குரியவர் ஆவார். மொழி வரலாற்றைப் புரிந்துகொள்ள இம்முறை பெரிதும் துணைசெய்கிறது. இவருக்குக் கிடைத்த கதைப்பாடல்கள் தென்மாவட்டங்களைச் சேர்ந்தவையாகும். குறிப்பாக நாகர்கோவில், கன்னியாகுமரி பகுதியைச் சேர்ந்தவையாகும். இத்தகைய இலக்கியங்கள் இந்த நூற்றாண்டின் பிற்பகுதியில் நாட்டுப்புற இயலில் ஈடுபாடு கொண்ட ஆய்வாளர் கவனத்தை ஈர்த்தது என்றாலும் இம்மாதிரியான நூல்கள் நாட்டுப்புற இயல் உணர்வோடும் பதிப்புக்கலை அனுபவத்தோடும் பதிப்பிக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

## சிறப்பு ஈடுபாடு

வெளிநாட்டவர்களுக்கு 30 வருடங்களாக அடிப்படைத் தமிழையும் சிறப்புத் தமிழையும் கற்றுக்கொடுத்து கொண்டிருக்கிறார். ஜெர்மனி மாணவர் ஒருவருக்கு முனைவர் பட்டத்திற்கு மேற்பார்வையாளராகச் செயல்பட்டுள்ளார். உலகளாவிய நிலையில் வெளிநாட்டவர்களுக்குத் தமிழ் கற்றுத்தந்து உயர்க் கல்விக்கும் ஆராய்ச்சி கல்விக்கும் வழிவகுத்துள்ளார். தமிழ் இலக்கண இலக்கியங்களை அவர்களுக்குத் தெரிந்த ஆங்கிலமொழி கல்வி வழியாகவே பயிற்றுவித்தார். இவரிடம் படித்துச் சென்ற மாணவர்கள் ஜெர்மனி, ஜப்பான், ரஷ்யா, அமெரிக்கா, போலந்து, மொரிசியஸ், பெல்ஜியம்போன்ற நாடுகளைச் சேரந்தவர்கள்,இன்றும் இப்பணியினைச் செய்து கொண்டுதான் இருக்கிறார்கள். இவர் பெரியார் இயக்கத்தைச் சேர்ந்தவராகையால் பக்தியிலக்கியத்தில் ஈடுபாடு இல்லை. ராபர்ட் மேத்யூ என்னும் பாதிரியார் இவரிடத்தில் வந்து தமிழ் பயின்று தமிழை அவர் மொழியிலான (Dutch) மொழியின் தெரிந்துகொண்டு Tamil என்னும் அகராதி ஒன்றை உருவாக்கினார். அந்நூலை முன்னாள் தமிழ்க்குடிமகன் தமிழ் வளர்ச்சித்துறை அமைச்சராக இருந்தபோது கலைஞர் மு.கருணாநிதி அவர்கள் வெளியீட்டார். இவர் தன்னைப் பற்றிய விளம்பரத்தை விரும்பாதவர்.

## ஆராய்ச்சியின் ஈடுபாடு

இவர் மேற்பார்வையின்கீழ் 70க்கும் மேற்பட்ட எம்ஃபில் மாணவர்களும் 18 பிஎச்.டி., ஆராய்ச்சி மாணவர்களும் ஆய்வினை மேற்கொண்டனர்.

இவர் ஆராய்ச்சியினை தனி உலகமாகவே கருதுபவர் ஆராய்ச்சியில் ஈடுபாடு இல்லாத எவரும் ஆராய்ச்சிப் பணியினை முழுமையாக மேற்கொள்ள முடியாது என்பது இவருடைய கருத்தாகும்.

# கா.ர.கோவிந்தராச முதலியாரின் பதிப்பு பணிகள்

**வே. ரேகா**
முனைவர் பட்ட ஆய்வாளர்
ஓலைச்சுவடித் துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

இவரது காலம் 1874 - 1949. இவர் காஞ்சிபுரம் பெரும்புலவர் அருணாசல முதலியார் பரம்பரையில், அரங்கசாமி முதலியார் மகனாய் 31.10.1874இல் பிறந்தவர். முதலில் செங்கல்வராயப் பள்ளியில் சேர்ந்து பொதுக்கல்வி பயின்றார். பின்னர் இராமலிங்கத் தம்பிரான், வித்துவான் இராமசாமி நாயுடு, கனகசுந்தரம் பிள்ளை, சுப்பன் செட்டியார் முதலிய தமிழ் ஆசிரியர்களிடம் இலக்கிய இலக்கண நூல்களை முறையாகப் பாடங்கேட்டு தேர்ச்சி பெற்றார்.

1895இல் அரசாங்கப் போதனை முறைப் பள்ளியில் சேர்ந்து ஆசிரியர் தேர்வில் முதல்வராய்த் தேறினார். அரசாங்கப் பள்ளிகளில் இவர் ஆசிரியர் பதவியேற்று, ஏறக்குறைய 50 ஆண்டுகள் வரை சீருஞ்சிறப்பும் பேரும் புகழும் பெற்று 1936இல் தம் பதவியிலிருந்து ஓய்வு பெற்றார். இவர் பாடப்பகுதிகளில் வரும் செய்யுள்களின் பொருளை உணர்த்தி இசையோடு பாடஞ்சொல்லி மாணவர்களைப் பயிற்றுவிப்பாராம். இலக்கண நுட்பங்களையும் விளக்குவாராம்.

இவர் நன்னூல் இராமானுஜ விருத்தியுரை யாப்பிருங்கலக்காரிகை இறையனாரகப் பொருளுரை நேமிநாதம், தொல்காப்பியமுதற் சூத்திர விருத்தி தொல்காப்பிய எழுத்ததிகாரம் இளம்பூரணருரை முதலிய இலக்கண நூல்களுக்குக் குறிப்புரை இயற்றிப் பதிப்பித்துள்ளார்.

இனியவை நாற்பது, இன்னா நாற்பது, கார் நாற்பது, திரிகடுகம், ஏலாதி, நான்மணிக்கடிகை, பன்னிரு பாட்டியல், அரங்கசாமிப் பாட்டியல், அரிசமய தீபம், நளவெண்பா முதலிய நூல்களை இவர் அச்சிட்டு வெளிப்படுத்தியுள்ளார்.

மேலும் இவர் சரஸ்வதி மீது ஒருபா ஒருபஃது, வெண்பா பத்து கலிவிருத்தப் பத்து, வஞ்சி விருத்தப்பத்து, சந்திரகலாமாலை, என்றும் திருமகள் மீது வெண்பாப்பத்து, கலித்துறைப் பத்து என்றும் திருவேங்கடப் பதிற்றுப் பத்தந்தாதியும், ஆழ்வார்கள் உயிர் வருக்கமாலையும், நம் படுவார்சரிதம், தனிச் செய்யுள்கள் முதலிய செய்யுள் நூல்களும் இயற்றியுள்ளார்.

இவர் திருப்பாவை ஆராய்ச்சி முல்லைப் பாட்டாராய்ச்சி ஆகிய ஆராய்ச்சி நூல்களையும் செய்து வெளியிட்டிருக்கிறார். இவர் அறிந்தார்க்கினியன் இயற்றியுள்ள சர்தார் வல்லபாய் பட்டேல் சரிதம் (1955) என்னும் செய்யுள்களான நூலுக்கும் இவர் உரை செய்து தந்துள்ளார்.

ஆழ்வார்கள் வழிக்குரவர், ஆழ்வார்கள் வரலாறு, இந்திய வீரர், சங்க நூல்கள், கோவலன் சரிதை, அம்பிகாபதியும் அரசிளங்குமாரியும் என்னும் உரைநடையாலான நூல்களையும் இவர் ஆக்கியுள்ளார்.

இவரது இலக்கண நுணுக்கம், இலக்கியத் தேர்ச்சி, யாப்பின் நுட்பம் அனுபவ ஞானம் முதலிய பேராற்றல்கள், அறிந்தார்க்கினியன், சொல்லியுள்ளதுபோல் மலைமிசை ஒலியென இயங்கினதால், பல பதிப்பாளர்களும் மாணவர்களும் இவரை அண்டி இவரது திறமையைப் பயன்படுத்திக் கொண்டனர். அச்சு நுணுக்கம் அனைத்தும் தெரிந்த இவரது உதவியால் பவானந்தர் கழக நூல்கள் பல ரசப்பமுற்றுப் பதிப்பிக்கப் பெற்றுள்ளன. மகாவித்துவான் மே.வீ.வேணுகோபாலப் பிள்ளை இவருடைய மாணிக்கர்களில் சிறந்து விளங்கியவர்.



திருவள்ளுவர் ஆப்செட், தஞ்சை. செல் : 98424 91204.